

நெஞ்சில் தமிழும் நினைவில் தேசமும்

ஞானி - கட்டுரைகள்

அபுதாபி தமிழ்ச் சங்கம் வெளியீடு

நெஞ்சில் தமிழும் நினைவில் தேசமும்

(கட்டுரைகள்)

ஞானி

அபுதாபி தமிழ்ச் சங்கம்

நூலின் பெயர்	நெஞ்சில் தமிழும் நினைவில் தேசமும்
வெளியீடு	ஆகஸ்ட் - 2009
நூலாசிரியர்	ஞானி 24, வி.ஆர்.வி. நகர், ஞானாம்பிகா ஆலை அஞ்சல், கோவை - 641 029. தொலைபேசி : 0422 - 2648119
வெளியீடு	அபுதாபி தமிழ்ச் சங்கம் முபாரஸ் தீவு அபுதாபி (UAE) அலை பேசி : 0508189769 , 0501209704 email: rdeepak27@gmail.com
முகப்பு அட்டை நிழல் படம்	பாரி வள்ளல்
அச்சாக்கம்	திலகா ஆப்செட் பிரஸ் 169, 6ஆவது வீதி தொடர்ச்சி காந்திபுரம், கோவை -12 தொலைபேசி : 0422 - 2526005 email: thilagaoffsetpress@gmail.com
விலை	ரூ. 80/-

முன்னுரை

என் இனிய நண்பர்களுக்கு வணக்கங்களோடு இந்த முன்னுரையை எழுதுகிறேன். தமிழகத்தில் சிறந்த தமிழறிஞரும், தமிழியச் சிந்தனையாளருமாகிய ஞானி அவர்களின் படைப்பு மூலமாக உங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். எமது முந்தைய வெளியீடாக மேலாண்மை பொன்னுசாமி அவர்களின் ‘மானாவாரிப்பூ’ சிறுகதைத் தொகுப்பு உங்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது.ஞானி அவர்களின் இந்தக் கட்டுரைத் தொகுப்பு அபுதாபி தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது வெளியீடு. கடல் கடந்து வந்து தமிழ்த்தாயைப் பிரிந்து ஏங்கிக் கிடக்கின்ற இலக்கிய அன்பர்களுக்கு இந்தக் கட்டுரைத் தொகுப்பு பாலைவனச் சோலையாய் , சிந்தனைச் சுரங்கமாய் நமக்குள் இருக்கின்ற நம்மை வெளிக் கொணரும்.

உலகெங்கிலும் தமிழினம் இன்று சொல்லொணாத இன்னல்களை அனுபவித்து வருகிறது. நமக்கென்று ஒரு நாடும் தனி அரசும் இல்லை என்பது தமிழினத்தின் இன்றைய இன்னல்களுக்கு முதற்காரணம். தமிழீழத்தில் நம் இனத்தவர் அனுபவிக்கும் கொடுமைகள் தீர இன்னும் வழி பிறக்கவில்லை. அரசியல்வாதிகள் தம் ஆதிக்கம் மற்றும் செல்வக்குவிப்பில் முனைப்போடு செயல்படுகின்றனர். தமிழுணர்வற்ற இளைஞர்கள் சில நூறு ஆயிரம் ரூபாய்களுக்கு விலைபோகின்றனர். இந்தச் சூழலில் ஞானி அவர்களின் இந்தப் படைப்பு, உணர்வு மழுங்கிப் போன நம் மூளையைப் பட்டை தீட்டும்.

தமிழ் மக்களாகிய நம் தொன்மை, வரலாற்று மேன்மை, நம் தமிழ் வாழ்வியல் ஆகியவற்றை நமக்கு நினைவுபடுத்துவதோடு இன்றைய உலகச் சூழலில் நமக்கான அங்கீகாரத்தை நாம் பெறுவதற்கு ஞானியின் இந்தப் படைப்பு நம்மைத் தூண்டுவதாக அமையும். சாதியோ, மதமோ நம்மைச் சிதைக்க வேண்டியதில்லை. சமத்துவமும் சமதர்மமுமே நம் வாழ்வுக்கான அறமாக இருக்க முடியும். ஞானியின் இந்தத் தொகுப்பு தமிழ்வாழ்வை நாம் பெறுவதற்கு உதவி செய்யும்.

பெரியாரியம். மார்க்சியம், பெண்ணியம், தமிழியம், என்பனவற்றை இடைவிடாது வற்புறுத்தும் அவரது கருத்துலகம் மிக விரிவானது. மனிதவிடுதலையை மையமாகக் கொண்ட ஞானியின் படைப்புகள் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ச் சிந்தனை உலகில் தன் முத்திரையைப் பதித்து வருகிறது.

சிற்றிதழ் இயக்கத்தோடு இடைவிடாது தொடர்பு கொண்டுள்ள ஞானி அவர்களின் 'தமிழ்நேயம்' இதழ் ஞானி அவர்களின் உரத்த சிந்தனைக்குத் தக்க சான்றாகத் திகழ்கிறது. தமிழகம் தழுவிய படைப்பாளிகள், சிந்தனையாளர்கள். திறனாய்வாளர் ஆகியவர்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் தமிழ்ப்பணி ஆற்றுவதில் தளர்ச்சியில்லாமல் செயல்பட்டு வருகிறார். அரசாள்பவரும் மாளிகை வாசிகளும் தமிழை மாற்றான் தாய் மனப்பான்மையோடு ஒதுக்கிவரும் இன்றைய நிலையில், ஞானி அவர்கள் போன்ற ஒரு சிலர் தமிழுக்காக உரத்த குரல் எழுப்பும் உள்ளங்களினால் தான் தமிழ் இன்றும் வாடாமல் புது மலர்ச்சி பெற்று வருகிறது என்பதில் அய்யமில்லை.

அபுதாபியில் முபாரஸ்தீவில் பணிபுரியும் சக தோழர்கள் ஞானி அவர்களின் படைப்பை வெளியிட வேண்டுமென்று பேரார்வம் கொண்டிருந்தனர். ஞானி அவர்களின் "நெஞ்சில் தமிழும் நினைவில் தேசமும்" தொகுப்பு வெளிவர வேண்டும் என்று முனைப்பு காட்டிய எமது அபுதாபி முபாரஸ் தீவு தோழர்கள் சுதாகரன் , சீமான், சுவாமி, ஹமீது, தென்னரசு, கார்த்திக், ராஜ்கர், கிருபா, மணிக் குமார், அண்ணாதுரை, மணிகண்டன், தியாகு, ரமேஷ் , சாலைக்குமார், மணிவண்ணன், பாஸ்கர், அனைவருக்கும் என் கரம் குவிந்த நன்றிகள்.

இத்தொகுப்பிற்கு விரிவான முன்னுரை எழுதி, நூலைச் செம்மைப் படுத்தித் தந்த அருமைத் தோழர் பாவலர் இரணியன் அவர்களுக்கும், அச்சிட்ட கோவை, திலகா மறுதோன்றி அச்சகத் தோழர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி!

தமிழ் காப்போம்! தமிழோடு வாழ்வோம்,

அன்புடன்

பொறியாளர் **தீபக் சின்னவன் பாரதி,**

ஜப்பான் ஆயில் கம்பெனி
முபாரஸ் தீவு
அபுதாபி, அமீரகம்.
15.8.2009

*

இரணியன்

தமிழ் உள்ளங்களில் ஏற்றும் ஒளி

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியினதும் இருபத்தொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியினதும் கொங்கு மண்டலத்தின் இலக்கியப் புலத்தை நோக்க முற்படுவார் முதலில் சந்திக்கும் ஒரு சிலரில் கோவை ஞானி குறிப்பிடத்தக்கவர்.

இலக்கியத்திற்கும் சமூகத்தொண்டிற்கு'ம் தம்மை முழுமையாகவும் உண்மையாகவும் ஒப்படைத்துக் கொண்டவர்கள் கோவை மண்ணில் பற்பலர் வாழ்ந்தனர்; வாழ்ந்து வருகின்றனர்.

தத்தம் துறைகளில், வரலாற்றில் இவர்கள் பதித்துள்ள சுவடுகள் மிக ஆழமானவை.

இவர்களில், சமூக, இலக்கியத்தளத்தில், மெய்வருத்தம் பாராமல் கண் துஞ்சாமல் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருக்கும் தமிழ்ச் சான்றோராக ஞானி அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

தொல்லிலக்கியங்கள் முதல், இக்கால, இந்நாளின் இலக்கியங்கள் வரை அனைத்திலும், ஆழ்ந்தகன்ற புலமை, உலக இலக்கியங்களை நயந்து கற்ற தெளிவு, மனித குல வரலாறு, சமூக அறிவியல், அரசறிவியல் முதலியவற்றில் ஆழ்ந்த நாட்டமும் கல்வியும், சமூக மாற்றத்திற்காக இலக்கிய வழியிலும் இயக்கங்களின் வழியிலும் தொடர்ந்து உழைக்கும் மன உறுதி என இப்படி எண்ணற்ற சிறப்பியல்புகள் ஞானி அவர்களுக்கு உரியவை.

அவரோடு உரையாடித் திரும்பும் ஒவ்வொரு முறையும் அவர் ஒரு பல்கலைக்கழகமாக நம் மனத்தில் பதிவார்.

நாம் படித்தவற்றையும் பார்த்தவற்றையும் தம் திறனாய்வால் பிரித்துப் போட்டு, அவற்றின் புதிய பரிமாணத்தை, புதிய பண்புகளை, புதிய கூறுகளை நமக்குப் புலப்படுத்துவார்.

நூற்றுக்கணக்கான இளைஞர்களோடு தோழமை பூண்டு, அவர்களின் மனங்களில் ஆசானாய் அமர்ந்த பெருமைக்குரியவர் ஞானி.

"புதிய தலைமுறை" ஏட்டின் மூலம் தம் எழுத்தில் முத்திரை பதிக்கத் தொடங்கியவர்; வானம்பாடிக் கவிஞர்களில் ஒருவராய் வலம் வந்தவர்; 'பரிமாணம்' 'நிகழ்' 'தமிழ்நேயம்' என்னும் இதழ்களின் ஆசிரியர். இருபத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர்; ஆழமான மார்க்சிய அறிவு வாய்க்கப் பெற்றவர்; தொழிற்சங்க மார்க்சியத்தில் மயங்கிக் கிடந்தவர்களுக்கு மக்கள் விடுதலைக்கான மார்க்சியத்தை அடையாளப்படுத்தியவர்; மாவோவியச் சிந்தனைகளைத் தமிழ் மண்ணுக்கு வழங்குவதில் பங்காற்றியவர்; பெரியாரியத்திற்குப் புதிய வெளிச்சம் வழங்கியவர். தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர்; தமிழுணர்வை இயற்கையோடும் மண் நலத்தோடும் வாழ்வுரிமையோடும் இணைத்துக் காட்டியவர்; தமிழ் இலக்கியங்களுக்கு நுட்பமான புதிய புதிய பார்வைத் தெளிவுகளை வழங்கியவர்; ஈழவிடுதலையின் ஞாயங்களை அறிவார்ந்த தளத்திலிருந்து உலகிற்குப் புலப்படுத்தி வந்தவர்; உலக மயமாதல், முற்றதிகார வல்லரசியல் போன்றவற்றின் கொடிய தன்மைகளைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருபவர்; முற்றாளுமைகளையும் மக்களுக்கெதிரான அடக்குமுறைகளையும் எதிர்த்துப் போரிடப் பின்வாங்காதவர்; பெண்ணியத்திற்காகவும், பெண் விடுதலைக்காகவும் பாடாற்றி வருபவர். இப்படிப் பல்வேறு தனிச் சிறப்புகளைப் பெற்று, விரிவான செறிவான அறிவுத் தளங்களில் இடைவிடாது செயலாற்றி வரும் ஞானி ஒரு நல்ல நூலை நம் கைகளில் வழங்கியிருக்கிறார்.

அபுதாபி முபாரஸ் தீவுத் தோழர்களால் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் உரிமை, தமிழிலக்கியச் சிந்தனைச் செழுமை, பாரதி, பாரதிதாசன், பெரியார், சமன்மை அறம், பெண் விடுதலை, மதங்களுக்கிடையிலான பூசல், மதங்களுக்குள் இடம் பெறவேண்டிய மனித நேயம், மண் விடுதலை, நமக்கான கலை ஒழுக்க மரபுகள், தமிழர்

மெய்யியல், மார்க்சிய மெய்ம்மை எனப் பவற்றை இந்நூலில் பேசுகிறார்.

நூல் முழுவதும் செறிவான சிந்தனைகள் கவிச் சுவைசெறிந்த வரிகளால் திரண்டு வருகின்றன.

உள்ளத்தைச் சுடும் உண்மைகள் நூலைத் திறந்தவுடன் கண்களில் படுகின்றன.

இன்றைய நமது சமூகத்தில் அடக்குமுறை அதிகாரம் செய்பவர்கள் ஒரு பக்கம்; அடங்கிப் பணி செய்பவர்கள் மறுபக்கம். இந்த இரு பக்கத்தார்க்கும் இன்று தமிழ் பயன் படுகிறதா?

ஞானி கூறுகிறார்: "ஆதிக்கவாதிகளுக்குக் கூலிகள் வேண்டும். ஆதிக்கம் செய்வதற்கு உகந்தது அந்நிய மொழி ; கூலிகளுக்குத் தமிழ் இருந்தால் போதும்" எனவே தமிழ் இன்று கூலிகளின் மொழியாக அடங்கிவிட்ட அவலம் நம் நெஞ்சைச் சுடுகிறது.

தமிழை ஒதுக்கும் ஆதிக்கவாதிகளுக்கு, கல்வியின் நோக்கம் என்பது பணம், பதவி, இன்பம், பெருமை இவையே. சுதந்திரம், சமத்துவம், சமதர்மம் என்பன தேவையற்றவை.

தமிழுக்கு ஏன் இந்த நெருக்கடி? ஞானி கூறுகிறார். தமிழருக்கு நேர்ந்த நெருக்கடியின் ஒரு கூறுதான் தமிழுக்கு நேர்ந்த நெருக்கடி. ஆதிக்கவாதிகளுக்குத் தேவையில்லை என்பதால், தமிழை ஆட்சி மொழியாக்கவில்லை ; கல்வி மொழியாக்கவில்லை.

ஆனால், தமிழ்ச் சமூகத்தின் வாழ்வாதாரமாகவும், உயிர்ப்பாகவும் தமிழ் உள்ளதை இந்த நூலில் மிக ஆழமாக விளக்குகிறார்.

தமிழின் பேரியக்கம் பன்முகப் பரிமாணங்களுடன் இயங்குவதை உணர்துகிறார். நீண்ட நெடிய வரலாறு கொண்ட தமிழ்க் கவிதைக்கு உள்ளடக்கம் எது?

"தமிழனே தமிழ்க் கவிதையின் உள்ளடக்கம். தமிழ்ச் சான்றோர் விழைந்த ஒப்புரவு இதன் உள்ளடக்கம்; அறம் உள்ளடக்கம்; சமத்துவமே தமிழரின் இயக்கம்" என எடுத்தியம்புகிறார்.

நம் முன்னோரின் இலக்கியங்கள் நமக்கு எதை உணர்த்துகின்றன? ஞானி கூறுகிறார் :

"அறம் பிறழும் போது மாமன்னர்களும் தரையில் வீழ்ந்து அழிவார்கள். நீதி தவறிய தேசத்தில் தெய்வம் இராது; சான்றோர் இரார்; கற்புடைப் பெண்டிர் இருக்க இயலாது.

மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர்விட்டால், பேரரசுகளின் பெருஞ்செல்வமும் அழிந்து போகும்.

(பொது வாழ்வில்) மலைபோல் உயர்ந்தவர்களும் தவறு செய்யும் போது, சிறுமைச் செயல்களில் ஈடுபடும்போது நிலை குலைந்து அழிவார்கள்.

முறை கேடர்களை அழிப்போர் வெகுமக்களின் நேசத்தைப் பெறுவார்கள்; அத்தகையவர் வருகையைச் சமுதாயம் எதிர்பார்த்திருக்கும்.

மேலுலகம் இல்லாவிடினும் பிறர்க்குக் கொடுத்து உதவவேண்டும். உலகைச் சீர்செய்யும் ஒரே மருந்து ஒப்புரவுதான். இதைத்தான் நாம் சமதர்மம் என்கிறோம்.

சான்றோர் இருப்பதால்தான் உலகம் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. உலக இயக்கத்திற்கு அச்சாணியாய் இருப்போர் உழவர்களே. உழுவோர் கை மடங்கினால் உலகம் இல்லை.

அன்புதான் உலகை இணைக்க முடியும். அறச் செயல்களுக்கு மட்டுமல்ல, (ஆயுதம் ஏந்திய) மறச் செயல்களுக்கும் (மக்கள் மீதான) அன்பே காரணமாகும்"

சமூகவியல் கண்ணோட்டத்துடன் இலக்கியங்களை அவர் கற்றதால் நாம் பெற்ற பயன்கள் இவை. புராண இலக்கியங்களில் அரக்கர் புரிந்த அழிம்புகளைப் படிக்கும் போது, இன்று வாழும் அரக்கர்களைப் பற்றிச் சிந்திக்கச் சொல்கிறார். கள்ளும், சூதும், பரத்தமையும் பரவிய காலத்தில் சமணர் அறம் உரைத்த சமூக வரலாற்றைச் சுட்டிக் காட்டுகிறார்.

வாழ்க்கையையும் கவிதையையும் பற்றிப் பேசும் போது, ஞானி சொற்கள் கவிதைகளாய் விரிகின்றன! மெய்ம்மங்களாய் மணம் பரப்புகின்றன.

"மனிதனுக்குள் ஆதிமனிதன் உள்ளான்.
உழைப்பும் பகிர்வும் உயிர்க்குணம், போட்டி, பொறாமை
வம்பு, வழக்கு மனிதனைச் சிறுமைப் படுத்தும்.

போர் கூறு போடும். இழக்கவும் பெறவும் இவன் வல்லான்.
வரலாறு துண்டு துண்டாகச் சிதறிக்கிடக்கிறது.
புள்ளிகளில்தான் நாம் வாழ்கிறோம்.
எல்லாவற்றையும் இனி உடைத்துப் பார்க்கவேண்டும்.
பின்னங்களில் கிடக்கிறது வாழ்க்கை.

மலர்கள் இன்னும் அழகாகத்தான் மலர்கின்றன.
பட்டாம் பூச்சிகள் இன்னும் பறக்கின்றன.
தரை இன்னும் நமக்குத் தட்டுப்படுகிறது.
அவலம் நம்மை ஆட்கொள்ள வேண்டியதில்லை.

நம்மிடமிருந்து தேசத்தை, நிலங்களை, இயற்கையை, கல்வியை, பண்பாட்டை, தொழில் திறன்களைப் பறித்துக்கொள்வதன் மூலம் ஆதிக்கங்கள் தம்மை வலுப்படுத்திக் கொள்கின்றன".

✵

பாரதியைப் பற்றிய கட்டுரைகள் ஆழ்ந்து கற்பதற்குரியவை. "பெருங்கவிஞனின் தோற்றத்திற்குப் பிறகு பழைய கவிதைகள் புதிய வெளிச்சம் பெறுகின்றன "என்னும் டி.எஸ்.எலியட் கூற்றின் உண்மையைப் பாரதியிடம் காண்கிறார் ஞானி.

விவேகானந்தர், நிவேதிதா, முதலியோரிடமிருந்து பெற்ற உயிர்மையும், காளிதாசர், ஷெல்லி, தாகூர், வால்ட்விட்மன், வள்ளுவர், இளங்கோ, கம்பர், சித்தர்கள் முதலியோரிடம் பெற்ற கவிதை ஊற்றும், உருசியப் புரட்சியின் ஆதிர்வலைகளும் ஒன்று திரண்ட வடிவமாகப் பாரதியைக் காண்கிறார்.

பாரதி கூறும் பாரத தேவியும் பராசக்தியும் இந்தியாதான் என்கிறார்.

வேடிக்கை மனிதனாய் வாழவிரும்பாத புரட்சிக்காரனின் விடுதலைக் குரல்தான் பாஞ்சாலி சபதம் என்கிறார்.

பாரதியைத் தமிழ்த் தேசியத்தின் முதல் கவிமுழக்கமாகக் காண்கிறார்.

தமிழச் சாதி நிலைபேறு (அமரத்துவம்) வாய்ந்தது என்று, பாரதியைப் போலவே ஞானி அவர்களும் நம்புகிறார்.

வள்ளுவம், சிலம்பு முதலாக எல்லாத் தமிழ் இலக்கியங்களுக்குள்ளும் கொடுங்கோன்மை எதிர்ப்பும், அநீதி அழிப்பும், அறம் வலியுறுத்தலும், ஒப்பரவை உயர்த்தலும், பெண்மை போற்றலும் தொடர்ந்துவருவதால் அறத்தின்பக்கம் நிற்கும் தமிழச் சாதி நிலைபேறுடையது என நம்புகிறார்.

இன்று தமிழ்பறிபோவதையும், தமிழரின் நிலம், இயற்கை, காடு, மலை, கடல், ஆறுகள் பறிபோவதையும் கண்டு குமுறுகிறார்.

தமிழன் போக்கிலியாய், கோழையாய், குடியனாய், அடிமையாய், ஊமையாய் எப்படி மாறினான் எனக் கேள்வி எழுப்புகிறார்.

நம் விடுதலை வாழ்வைப் பறித்தவர்களையும், நமக்குள் ஏற்பட்ட காயங்கள், சிதைவுகள், சீரழிவுகள், ஓலங்களுக்குக் காரண மானவர்களையும் அடையாளப்படுத்துகிறார்.

பாரதியின் கண்ணன் பாட்டைப்பற்றிய மதிப்பீடு வாழ்வின் புலப்பாடாகிறது.

"தாய் தந்தை, காதலி, குரு, தோழன், சேவகன் என உறவுகளின்
ஒத்திசைவில் தொடர்வது வாழ்க்கை.
சீடனும் குருவுக்குக் கற்பிக்க முடியும்.
சேவகனும் தலைவனை ஏவல் செய்ய முடியும்.
குழந்தையும் நம்மைப் படைப்பதில் பங்குவகிக்கிறது
அன்பின் வசப்படலில் சமத்துவம் விளைகிறது.
ஆசிரியனாக இருக்கும் போதே என்னை மாணவர்களோடு
பகிர்ந்து கொள்கிறேன்.
ஏவல் செய்வதால் நிர்வாகம் சிறப்புறுவதில்லை.
தோழமையால்தான் நிர்வாகம் சிறப்புறும்.
சமத்துவத்தின் விரிவில் சமதர்மம் மலரும்."

இது கண்ணன் பாட்டுக்கு விளக்கம் மட்டுமா? வாழ்க்கையின் மெய்யியலும் இதுதான்.

'பாரதி சாதி மறுத்தவர்! சடங்கை மறுத்தவர்! பிறவி ஏற்றத் தாழ்வில் உடன்படாதவர்! பெண்விடுதலை வேண்டியவர்! அவர் ஒரு சித்தர். இதயமற்ற உலகின் இதயம்! ஆன்மா அற்ற உலகின் ஆன்மா' என்கிறார்.

புரட்சிப் பாவேந்தரைப் போலவே மெய்யான துலாக்கோலில் பாரதியை மதிப்பிட்டவர் ஞானி.

ஒரு பக்கம் சாதிச் சண்டைகளும், மதச் சண்டைகளும் மலிய, மறுபக்கம் தேசமே அடகு வைக்கபட்டுக் கொண்டிக்கும் இன்றைய காலச் சூழலில் பாரதியின் உயிராற்றல் புதிய பாரதிகளைத் தோற்றுவிக்கும் என நம்புகிறார்.

பாரதிதாசனைப் பற்றிய கட்டுரையில், அவரது அரசியல் பரிமாணங்கள் பலவற்றை உரசிப்பார்த்து, அவர் தமிழ்த் தேசியக் கவிஞரே என முடிவுக்கு வருகிறார். பெரியாரியத்திற்குள் புரட்சிப் பாவேந்தர் கொண்டிருந்த தாக்கத்தைப புலப்படுத்துகிறார்.

பொதுவுடைமை, புரட்சி உணர்வு அவரிடம் செறிவாக இருந்ததை எடுத்துரைக்கும் போதே பாரதிதாசனை மார்க்சியரல்லர் என்று மதிப்பிடுகிறார். அவர் மார்க்சியர் இல்லையென்றாலும், மார்க்சியர் வியக்குமளவிற்கு பொதுவுடைமை மற்றும் புரட்சி உணர்வுடன் அவர் செறிவான கவிதைகள் படைத்ததைச் சுட்டிக் காட்டுகிறார்.

தமிழ்த் தேசிய உணர்வைப் புரிந்திருக்காத மார்க்சியர்களைச் சாடுகிறார். தமிழ்த் தேசியம் பிரிவினையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை ; அது கூட்டாட்சிக்கான குரலாகவும் இருக்கலாம் என்கிறார்.

பெரியாரியம் பற்றிய சிந்தனைகளில், 'பெரியாரியத்தின் மையம் எது' என்று ஆய்வு செய்கிறார்.

பெரியாரின் அடிப்படையான உயிர்க்கோட்பாடு தன்மானம், அதாவது சுயமரியாதைதான் என்கிறார்.

"பகுத்தறிவு என்பது ஓர் ஆய்வு முறை மட்டுமே.

சுயமரியாதைத் தத்துவம் சகோதரத்துவத்திற்கு வழிவிடும். சகோதரத்துவம் சமதர்மத்திற்கு இட்டுச் செல்லும்" என உறுதிப்படுத்துகிறார். "சமதர்மத்தில்தான் மனிதன் சுயமரியாதையை நிறைவாகப் பெறுவான்" என்று பெரியார் கூறியதை மேற்கோள் காட்டுகிறார்.

பெரியார் வழியில் மார்க்சியத்தையும், மார்க்சியத்தின் வழி பெரியாரியத்தைம் கற்றுத் தெளிவது தமிழ்ச் சமூக விடுதலைக்கு வழி திறக்கும் என்கிறார்.

பெரியாரியமும் மார்க்சியமும் விலகி நிற்பன அல்ல, கை கோப்பன என்கிறார்.

மனிதன் கடவுளின் படைப்பா? இல்லை, கடவுள் மனிதனின் படைப்பா என்ற வினாவை எழுப்பி, " கடவுள் மனிதனின் படைப்பே என்கிறார்.

தன் வாழ்நிலைக்கும் சூழ்நிலைக்கும் தேவைகளுக்கும் ஏற்பவே மனிதன் கடவுளைப் படைத்துக் கொண்டான் என்கிறார்.

மதத்துக்குள் இருக்கும் மனிதத்தை நாம் விடுவித்துப் பார்க்கவேண்டும் என்கிறார்.

மதம் மனிதனுக்கு ஒளியை வழங்குவதற்கு மாறாக இருளை வழங்குகிறது என்கிறார்.

மதவாதம் முன்னுக்கு வரும்போது மனிதம் தடுமாறுகிறது; சீர்குலைகிறது என்கிறார்.

பெண்ணுரிமையும் பெண் விடுதலையும் பற்றிக் கருத்துரைக்கும் போது, ஞானி அவர்களின் சிந்தனை உயிரோட்டத்துடன் இயங்குவதைக் காண்கிறோம்.

" பெண்தான் இயற்கையின் இன்னொரு வடிவம்.
=தாய்மை என்பது, அன்பு என்பது, பகிர்ந்து கொள்வது என்பது பெண்ணுக்குத்தான் சரியாகப் புரியும். பெண்ணின் அரவணைப்பில்தான் உலகம் பத்திரமாக இருக்கும். பெண்ணுக்குப் போர் தேவையில்லை. ஆயுதங்கள் , இராணுவம் தேவையில்லை. அன்பான குழந்தைகள் வளர்வதற்கான உலகத்தைப் பெண்தான் படைக்க முடியும். ஆண்கள் செய்த அதிகாரத்தால் காயப்பட்ட உலகத்தைப் பெண்தான் மருந்திட்டு ஆற்ற முடியும். பெண் உரிமை என்பது ஒரு வாய்ப்பு; பெண்விடுதலை என்பது இலக்கு. பெண் விடுதலையின் மூலமே மண் விடுதலை ஆகும்"

✲

மார்க்சியத்திற்கு அழிவில்லை என்னும் கட்டுரை சிந்தனை ஆழம் கொண்டது.

மாபெரும் இராணுவமும், 'தொழிற்கட்டுமானமும்' பேரரசும் தொழிலாளர் உழவர் மீது அடக்குமுறைகளையே விதிக்கும் என்பது சோவியத்தால் விளக்க முற்றதை எடுத்துக்காட்டுகிறார்.

"இயற்கையை அழித்து, தொழில்களையும் படைகளையும் பெருக்கி, பேரரசாக வளர்த்தெடுக்கப்பட்ட மாயச் சோசலிசம் 15 விழுக்காடு பேருக்கு நன்மைபுரியும்; 80 விழுக்காடு மக்களுக்குக் கேடுதான் பயக்கும்; நுகர்வியப் பெருக்கம் சோசலிசத்திற்குப் பொருந்தாது" என்கிறார்.

எந்தவகை அடக்குமுறை அதிகாரத்திற்கும் எதிரானது மார்க்கியம் என்கிறார்.

மார்க்சியத்தின் இலக்கு மனித விடுதலை எனத் தெளிவுபடுத்துகிறார். வர்க்கப் போராட்டத்தின் வழியே வர்க்கப் போராட்டத்தைக் கடந்து செல்வது மார்க்சியம் என்கிறார்.

மனித விடுதலைக்கான மார்க்சியமே நமது பாதை என்கிறார். உலகளாவிய சுரண்டல் முறைக்கு மரண அடிதரக் கூடிய மார்க்சியத்தை, நாம் தமிழ் மண்ணில் தமிழ்ச் சூழலிலிருந்து கற்க வேண்டும் என்கிறார். சாதி, மத, சடங்கு மறுப்புச் சித்தர்கள் வழியில் மார்க்சியத்தைக் கற்க அறிவுறுத்துகிறார். இந்தச் சிந்தனை மரபு கணியன் பூங்குன்றனார், வள்ளுவர், பெரியார் என நீள்வதைச் சுட்டிக்காட்டுகிறார்.

அன்பும், எளிமையும், அறமும் தமிழர் வாழ்வறம் என்றும், சமதர்மம் தமிழர் வாழ்வுரிமை என்றும் தீர்மானம் செய்கிறார்.

தமிழின் தனி நிறத்தை எடுத்துக்காட்டி, தமிழ் உள்ளங்களில் ஒளியை ஏற்றும் இந்நூலை, புலம்பெயர்ந்து அபுதாபியில் வாழும் தமிழ் உள்ளங்கள் வெளியிட முன்வந்திருப்பது நன்றியுடன் போற்றத்தக்க ஒரு தொண்டு என்றே நாம் கருதுகிறோம்.

*



ஞானி வாழ்வும் பணியும்

ஞானியின் இயற்பெயர் கி. பழனிச்சாமி, கோவை மாவட்டம் பல்லடம் வட்டம்- சோமனூரில் 1.7.1935இல் கிருஷ்ணசாமி - மாரியம்மாள் ஆகிய பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். கிராமச் சூழலில், உழவர்கள், நெசவாளர்கள் மத்தியில் கல்வி கற்றார். கோவை அரசு கலைக்கல்லூரியிலும் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழிலக்கியம் கற்றார். இவருக்கு வாய்த்த ஆசிரியர் மற்றும் பேராசியரியப் பெருமக்கள் என்றும் இவர் வணக்கத்திற்குரியவர்கள். பி. ஓ. எல். எம்.ஏ. பி. எட். என்பன இவர் கல்வித் தகுதிகள்.

கோவையில் சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக 28 ஆண்டுகள் பணிபுரிந்தார். கண்பார்வை பெரிதும் பாதிக்கப் பட்டதால் 1988இல் விருப்ப ஓய்வு பெற்று, பின்னர் உதவியாளர் மற்றும் நண்பர் ஒத்துழைப்போடு விடாப்பிடியாகப் படித்தும் எழுதியும், நூல்கள் வெளியிட்டும் இதழ்கள் நடத்தியும் வருகிறார். இதுவரை இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் 25. மணிவாசகர் நூலகம், காவ்யா, கவிதா, பொன்னி, விஜயா, புதுமலர் ஆகிய பதிப்பகங்கள் இவரது நூல்களை வெளியிட்டுள்ளன. புதிய தலைமுறை (1968- 70) பரிமாணம்(1979 82), நிகழ் (1983- 1996) ஆகிய இதழ்களோடு தொடர்புடையவர் மற்றும் ஆசிரியராகச் செயல்பட்டவர்.

'வானம்பாடி' கவிதை இயக்கத்திலும் பங்கு பெற்றவர். 1998 முதல் 'தமிழ் நேயம்'இதழை இன்றுவரை வெளியிட்டு வருகிறார். இவரது நூல்களின் பெருந்தொகுதிகள் காவ்யாவால் வெளியிடப் படுகின்றன. இவரது துணைவியார் திருமதி இந்திராணி. மக்கள் இருவர்- பாரி வள்ளல், மாதவன்.

தமிழிலக்கியத்தில் மட்டுமல்லாமல் மார்க்சியத்திலும் தேர்ந்த அறிவுடையவர். சிற்றிதழ், இயக்கத்தோடு பெரும் ஈடுபாடுடையவர். தமிழுணர்வும் மார்க்சியமும் தனக்குள் ஒரு புள்ளியில் இணைகின்றன. என்று கருதுபவர். மார்க்சியம் பற்றிய ஆழ்ந்த புரிதலோடு தமிழிலக்கிய திறனாய்வில் இடைவிடாது ஈடுபட்டு நூல்கள் பலப் படைத்தவர். கட்சி மார்க்சியரிடமிருந்து இவர் பெரிதும் வேறுபடுகிறார். என்றும் தன்னை ஒரு தமிழ் மாணவன் என்ற மன நிறைவோடு சொல்லிக் கொள்கிறார். விருது, பாராட்டு முதலியவற்றை இவர் பொருட்படுத்துவதில்லை.

சிற்றிதழ் இயக்கத்தோடு 1965 முதலே நெருக்கமான உறவு கொண்டதோடு, கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக சிற்றிதழை நடத்தியும் வருகிறார். மார்க்சியத்தின் நெறிப்படுத்தல் இல்லாமல் தமிழிலக்கிய ஆய்வை மேம்படுத்த இயலாது என்று நம்புவதோடு இக்கருத்தைச் செயல் முறையிலும் மெய்ப்பித்து வருகிறார். தமிழகச் சூழலில் பெரியாரியமும் மார்க்சியமும் கைகோர்த்துக் கொண்டாலொழிய தமிழ் மக்கள் வாழ்வுக்கு மேன்மை இல்லை என்று நம்புகிறார். தலித்தியம் பெண்ணியம், பின் நவீனத்துவம், பெரியாரியம் ஆகிய புதுவகையான ஆய்வு முறைகள், உண்மையில் மார்க்சியத்தின் அறிவுத் தளத்தை விரிபுபடுத்துவதாக இவர் கருதுகிறார். இவ்வகை அனைத்து அணுகுமுறைகளும் மனித விடுதலை என்ற ஒரு புள்ளியில் இணைகின்றன என்கிறார். உலக மயமாதல் முதலிய உலகளவிலான நெருக்கடிகள் தமிழையும் தமிழ் நிலத்தையும் தமிழ் மக்களையும் கடுமையாக பாதிக்கும் தற்காலச் சூழலால் தமிழ்த் தேசியம் என்ற அரசியல் மட்டுமே தமிழ் மக்களைக் காக்க முடியும் என்கிறார். தமிழ்த் தேசியம் என்ற அரசியலின் ஆதார தளம் தமிழ் மெய்யிலாகத்தான் இருக்க முடியும் என்கிறார்.

எழுபத்தைந்தாவது வயதிலும் இடைவிடாது உழைக்கிறார். தமிழிலக்கியங்களில் பங்கு பெறுகிறார். தானே முன்னின்று தமிழ் அமைப்புக்களை உருவாக்கியும் நெறிப்படுத்தியும் வருகிறார். தமிழ்தான் தன் வாழ்வுக்கு அர்த்தமும் ஆற்றலும் தருகின்றன என்கிறார். இன்று தமிழகத்திலுள்ள அசலான தமிழறிஞர்களில் ஞானியும் ஒருவர் என்பதில் ஐயமில்லை.

பொருளடக்கம்

1

வேண்டும் தமிழுக்கு தமிழனுக்கு விடுதலை

தமிழ் அழியக்கூடாது. தமிழை அழிய விடக்கூடாது என்று நாம் நம்புகிறோம். தமிழினம் அழியக் கூடாது. தமிழ் வாழ்வு அழியக்கூடாது. தமிழ் வரலாறு அழிந்துவிடக்கூடாது என்றெல்லாம் நாம் விரும்புகிறோம்.இதற்கான சூழல் இன்றுள்ளதா? இல்லையென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? தமிழ் நமக்கு உயிர் என்கிறோம். உயிரை இழக்க நாம் விரும்புவோமா?தமிழாகிய உயிரைக் காப்பாற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?

தமிழ் அழிந்துவிடக்கூடாது என்று சிலர் சொல்லுகிறார்கள். உண்மைதான். தமிழகத்தில் 6 கோடி மக்கள் இருக்கிறோம். ஆங்கிலத்தோடு தொடர்பு உடையவர்கள். ஆங்கிலத்தால் தம்மை வாழ்வித்துக் கொள்ளமுடியும் என்று நம்புகிறவர்கள், ஆங்கிலத்தை வைத்து வணிகம் செய்பவர்கள், ஆங்கில ஆதிக்கத்திற்குத் தரகு மற்றும் கூலிகளாய் இருப்பவர்கள் இவர்களின் தொகை என்னதான் உயர்த்திச் சொன்னாலும் ஒரு கோடிக்கு மேல் தேராது. மீதியுள் ஐந்து கோடிப் பேரும் தமிழோடுதான் வாழ வேண்டும். இவர்களில் ஒரு பகுதியினர் வீட்டில் தெலுங்கோ, கன்னடமோ, மலையாளமோ வேறு எந்த மொழியில் பேசினாலும் வெளியில் இவர்கள் தமிழோடுதான் வாழ்ந்தாக வேண்டும்.

இவர்களிலும் பள்ளிக் கல்வி பெறாதவர் மூன்றில் ஒரு பகுதியினர். தமிழை விட்டால் இவர்களுக்கு வேறு கதி இல்லை. பெண்களுக்கு, பட்டியல் சாதியினருக்கு, ஆதிவாசிகளுக்கு அதிக எண்ணிக்கையில்கல்வி தரப்படவில்லை. இவர்களெல்லாம் தமிழை விட்டு நீங்கிவிடவும் முடியாது.

இந்த 5 கோடிப் பேரும் மேலே உள்ள ஒரு கோடிப் பேருக்கு வாழ்நிலையில் தாழ்ந்தவர்கள். இவர்களில் பெரும் பகுதியினர் உழைக்கும் மக்கள். இவர்கள் தமிழில்தான் பேசுகிறார்கள். இவர்களுக்குத் தரப்பட்ட கல்வியின் தரம் பற்றிப் பெரிதாகப் பேச முடியாது. தமிழ் வரலாறு இவர்களுக்குத் தெரியாது. தமிழின் தொன்மை மற்றும் மேன்மை இவர்களுக்குத் தெரியாது. இவர்கள் படிக்கும் ஒரு சில பத்திரிக்கைகள் மூலம் இவர்கள் இன்று உலகளவிலான அறிவியல் மற்றும் பொருளியலை, உலகளவிலான அறிவியல் ஆக்கங்களைக் கற்க முடியாது. பத்திரிக்கைகள் மூலம் இவர்கள் பெறும் அரசியல் அறிவு இங்கு செயற்படும் ஆதிக்க அரசியலுக்கு இவர்களைச் சேவகம் செய்ய வைக்கின்றது. தமிழ்த் திரைப்படங்கள் மூலம் இவர்கள் பெறும் அறிவோ, கலையுணர்வோ இவர்களின் வாழ்க்கையை மலினப்படுத்தவே செய்கிறது. நுகர்வு வெறிக்கு ஆளாக்கப்படும் இந்த மக்களுக்குத் தொல்காப்பியரையோ, திருவள்ளுவரையோ தெரிந்து கொள்ள இயலாது. வாழ்வியல் விரிவு இவர்களுக்கு இல்லை. இந்த விரிவு அறிவுறுத்தப்படவோ, அனுமதிக்கப்படவோ இல்லை. எனினும் இவர்கள் மூலம்தான் தமிழ் இங்கு பேசப்பட வேண்டும்.

தமிழக அளவில் மட்டும் சுருங்கிவிட்டதாக, பெருமை அழிவதாகத்தான் இந்தத் தமிழ் இங்கு இருக்கும். இந்தத் தமிழ் உயர் வட்டாரங்களில் மதிக்கப் பெறுவதில்லை. உலகாண்ட தமிழ் அல்ல இது. ஆதிக்கவாதிகளுக்குக் கூலிகள் வேண்டும். ஆதிக்கம் செய்வதற்கு உகந்தது அந்நிய மொழி. கூலிகளுக்குத் தமிழ் இருந்தால் பேதும்.

இந்த ஆதிக்கவாதிகள், இதுவரை தமிழை என்ன செய்தார்கள்? தமிழை இவர்கள் ஆட்சிமொழி ஆக்கவில்லை ; கல்விமொழி ஆக்கவில்லை. அறிவியல் கல்விக்கு த் தமிழ் பயன்படாது என்று சொல்லுபவர்கள் இவர்கள்தான். கல்வியை தனியார் துறைக்கு ஒப்படைப்பவர்கள் இவர்கள்தான். தனியார்மயப்படுத்தல் என்பதன் மூலம்தான் உலகம் உருப்படும் என்று தத்துவம் பேசுபவர்களும் இவர்கள்தான். தமிழை வைத்து இவர்கள் அரசியல் நடத்தினார்கள். தமிழை வைத்து இவர்கள் தமக்குப்

பெருமை தேடிக் கொண்டார்கள். கவியரங்குகள்,பட்டி மண்டபங்கள், கோவில் திருவிழாக்கள் மூலம் தமிழை வளர்ப்பதாகச் சொல்லித் தமிழை மலினப்படுத்தியவர்கள் இவர்கள்.

தமிழுக்கு இவர்கள் ஆக்கம் செய்யவில்லை. கல்விநிலையங்களில் தமிழ் புறக்கணிக்கப்பட்டது. தொழில் மற்றும் மருத்துவ மேற்படிப்பிற்கான தேர்விற்குத் தமிழில் பெறும் மதிப்பெண்கள் கணக்கில் கொள்ளப்படவில்லை. கல்வியை கணிதம் மற்றும் அறிவியல் மயப்படுத்தினார்கள்.இலக்கியம், வரலாறு சமூகவியல், முதலியவற்றைப் புறக்கணித்தார்கள். உயர்கல்வியின் நோக்கம் பணம் மற்றும் பதவி என்றார்கள். இன்பம், பெருமை ஆகியவற்றைத் தான் வாழ்வின் நோக்கம் என்றார்கள். சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை இவர்கள் பொருட்படுத்தவில்லை. சமதருமம் இவர்களுக்குத் தேவையில்லை. இயற்கையோடு ஒத்து வாழ்தல் கலையுணர்வை வளர்த்துக் கொள்ளல் ஆகியவை இவர்களுக்குத் தேவையில்லை.

தொகுத்துச் சொன்னால் மனிதன் சமூகம், மனிதநேயம், வரலாறு, விடுதலை என்பனவற்றையெல்லாம் இவர்கள் தம் வாழ்க்கை எல்லைக்குள் அனுமதிக்வில்லை.

தமிழிலக்கியம் இவர்களுக்கு வேண்டாம். நூலகங்களை இவர்கள் புறக்கணித்தார்கள். கலைகளையும் கைவினைஞர்களையும் இவர்கள் பொருட்படுத்தவில்லை. இவர்கள் பெரும் பகுதியினர் மத்தியதர வர்க்கத்தினர். இவர்களில் ஒரு பகுதியினர் இலக்கியவாதிகள். இவர்கள் தமிழில்தான் எழுதினர்; எழுதுகின்றனர். குமுதம், குங்குமம் என்று வணிகப் பத்திரிக்கைகளோடு இவர்கள் வாழ்கிறார்கள். தமிழ் மரபு பற்றி இவர்களுக்கு எதுவும் தெரியாது. வரலாற்றில் தமிழனை எந்தச் சக்திகள் அழித்தன என்பது குறித்து இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. இன்றும் தமிழனை அழிக்கும் சக்திகள் குறித்து இவர்கள் இலக்கியம் படைப்தில்லை. தமிழ்க் கல்வியை இவர்கள் ஆதரித்து எழுதுவதில்லை. சந்தைப் பொருளாதாரம் தமிழ் மக்களின் நலன்களை அழிப்பது குறித்து இவர்களுக்கு அக்கறையில்லை. இயற்கை நாசமாவது குறித்துக் கூட இவர்கள் அக்கறை கொள்ளவில்லை. பரிசுகளும் பாராட்டுகளுக்கும் அலைகிறவர்கள் இவர்கள். தாங்களும் தமிழிலக்கியம் படைப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.அரசியல்வாதிகளோடு இயன்ற பொழு தெல்லாம் கைகோர்த்துக் கொள்ளும் இவர்களாலும் தமிழ் வளராது என்பது உண்மை.

தமிழை அரசியலாக்கி வைத்திருக்கும் இந்தச் சக்திகள் தமிழின் பெருமை சொல்லி வாழ்பவர்கள் . உலகளவில் செவ்வியல் மொழிகளின் வரிசையில் சேர்வதற்கான எல்லாத் தகுதிகளையும் உடையது தமிழ்மொழி. இந்தியாவில் சமஸ்கிருத மொழி மட்டுமெல்லாமல் , உருது, பாரசீகம் ஆகிய மொழிகளைக் கூட செவ்வியல் மொழி என இந்திய அரசு ஒப்புக் கொள்கிறது. இவற்றின் ஆக்கத்திற்குப் பரிசுகள் தருகிறது. பலகோடி ரூபாய் செலவழிக்கிறது. தமிழுக்கு இந்தத் தகுதியைப் பெறத் தமிழ் அரசியல்வாதிகள் முனைப்புறும் பொழுது உலகளவில் தமிழ் தனக்கான இடத்தைப் பெறும். பண்பாட்டுச் செழுமைமிக்க தமிழ் மொழி உலகளவிலான நாகரிக உலகத்தை அழித்து வரும் இன்றைய சூழலில் அழிவிலிருந்து உலகைக் காப்பாற்றத் தமிழ் உதவும். வள்ளுவரும் இளங்கோவும் தமிழ்ச் சித்தர்களும் வாழ்வில் அறம் தழைக்க உதவுவார்கள். இதற்கான தகுதி தமிழுக்கு உண்டு. தமிழனுக்கென ஒரு தனி நாடு என்று நாம் பேசுவதற்கு இதுவும் ஒரு காரணம். ஈழத்தமிழகத்தின் விடுதலையை நாம் வேண்டுவதும் இதற்காகத்தான். ஆதிக்கவாதிகளுக்குத் தமிழ் மக்களை அடிமைப்படுத்தியவர்களை நாம் காய்வதும் இதற்காகத்தான்.

தமிழின் ஆக்கம் கருதி இவர்கள் செயற்படவில்லை என்பதை இன்னும் சொல்ல வேண்டும். பல்கலைக்கழகங்கள், தமிழாய்வு நிறுவனங்கள் என்று இங்கு எவ்வளவோ இருந்தாலும் தரமான தமிழாய்வுகள் இங்கு பெரும்பாலும் இல்லை. தமிழக அரசு தரும் பரிசுகளும்,விருதுகளும் அவர்கள் சார்ந்திருக்கும் இயக்கத்தினருக்கே போய்ச் சேருகின்றன. நவீனத் தமிழ் இலக்கியத்திற்குத் தம் படைப்புகள் மூலம் ஆக்கம் தருபவர்களை அரசு கண்டு கொள்ளவில்லை. தமிழக அரசின் சார்பில் செயற்படும் பொது நூலகம் குறித்து நாம் மரியாதையோடு சொல்வதற்கு எதுவுமில்லை.

மேலும் ஒன்றைச் சொல்லலாம், உலகில் தரமான இலக்கிய நூல்கள், அறிவு நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இந்த முறையில் தான் நவீன கால மொழிகளில் ஒன்று என்ற தகுதியைத் தமிழ் பெற முடியும். தத்துவத்தின் கதை என்ற வில்டியுரெண்டின் எழுதிய நூல் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. சேக்ஸ்பியர் குறித்து ஒரு தொகுப்பு நூல் தமிழில் இல்லை. இந்த வரிசையில் எத்தனையோ நூல்களை இங்கு குறிப்பிட முடியும். இவை இல்லாத தமிழை நாம் எப்படிக் கொண்டாட முடியும்? இதைச் செய்யாத பல்கலைக் கழகங்களையும், தமிழ் வளர்ச்சிக் கழகங்களையும் நாம் எவ்வாறு மதிக்க முடியும்?

தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தான் இன்று தமிழின் வளர்ச்சிக்கான நாற்றங்கால்கள். தமிழுணர்வை இந்தப் பள்ளிகள் மூலம் தான் இனி வளர்க்க முடியும். தமிழ்த் தேசியம் தான் இனி தமிழ் மக்களின் வாழ்வுக்கான அரசியலாக இருக்க முடியும். தமிழ் மக்களை முதன்மைப்படுத்தித்தான் நாம் எதையும் இனி சிந்திக்க முடியும் .

வாழ்நிலையில் என்னதான் முன் குறிப்பிட்ட 5 கோடி மக்கள் தாழ்ந்திருந்தாலும் இவர்கள் தான் அசலான தமிழர்கள். உழவர்களாகவும், கைவினைஞர்களாகவும் உழைக்கும் இவர்களைக் கொண்டு தான் தமிழ் வரலாறு தமிழ் அரசியல் முதலியன இயங்குகின்றன. இவர்களுக்குத் தான் முதல் உரிமை உடையது இந்த தமிழ்த் தேசம். இவர்களிடமிருந்து தான் இந்தத் தேசத்தை அரசியல்வதிகள் அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள். உழைப்பதிலும், பகிர்வதிலும் அயராதவர்கள் இந்தத் தமிழ் மக்கள். இவர்கள் இயற்கைக்கு நெருக்கமானவர்கள். இயற்கையை நேசிப்பவர்கள், வேளாண்மை, கட்டிடக் கலை முதலிய எத்தனையோ தொழில்களில் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சாதனை விளைவித்தவர்கள் இந்தத் தமிழ் மக்கள். இவர்கள் வாழ்வியலில் இருந்துதான் திருக்குறளும், சிலப்பதிகாரமும் தோன்றின. இவர்களில் இருந்துதான் சித்தர்கள் தோன்றினர். இவர்களைத் தொடர்ந்து அடிமைப்படுத்துவதன் மூலம் தான் ஆதிக்கங்கள் வளர்ச்சி பெற்றன. இன்னும் வளர்ச்சி பெறுகின்றன. எந்தவகை ஆதிக்கமும் இந்த மக்களின் வாழ்விற்கு எதிராகத்தான் செயற்பட்டன. இவர்களின் தமிழை தமிழ் வாழ்வை அழிப்பதும் இந்த ஆதிக்கங்கள்தான். இவர்களை இன்று கூலிகளாக , அடிமைகளாக, நாகரிகம் அற்றவர்களாக, தாழ்ந்தவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக மாற்றியிருப்பது ஆதிக்கங்கள்தான். அரசியல் என்றும் பொருளியல் என்றும் நவீனத் தொழில் என்றும் நவீன நாகரிகம் என்றும் பல்வகையான பெயர்களில் செயற்படும் ஆதிக்கங்கள்தான் தமிழ் மக்களை அழித்து வருகின்றன.

மைய அரசின் ஆதிக்கத்திற்கும் சீர் கெட்ட முதலாளியத்திற்கும் அந்நிய சக்திகளின் ஊடுருவலுக்கும் இடங்கொடுத்து தமிழகத்தில் செயற்படும் அரசியல் கட்சிகளையும் தமிழினத் தலைவர்களையும் இன்று நாம் பெருமைப்படுத்த முடியாது. தமிழ் மக்களை தொடர்ந்து அடிமைப்படுத்துபவர்கள் இவர்கள். இவர்களுக்கு ஆதிக்கங்கள் வேண்டும். ஆங்கிலம் வேண்டும், கூலிகள் வேண்டும், அடிமைகள் வேண்டும். இவர்கள் உருவாக்கும் கட்சிகளிலும் கூலிகளைத்தான்

உருவாக்குகிறார்கள். தமிழ் மக்களைத் தொடர்ந்து கொள்ளையடிப்பதன் மூலம் தமிழ் மக்களை வறுமைக்கும் நோய் நொடிகளுக்குப் உள்ளாக்குபவர்கள் இவர்கள்தான். இவர்கள்தான் ஆங்கில ஆதிக்கத்திற்கு ஆதரவாக இருப்பவர்கள். இவர்கள்தான் தமிழை, தமிழ் நிலத்தை, இயற்கையை, மக்களின் தன்மானத்தை அழிப்பவர்கள். இவர்களிடமிருந்துதான் தமிழ்த் தேசத்தை, தமிழ் வரலாற்றை, தமிழ் வாழ்வை, தமிழை விடுவிக்க வேண்டும். தமிழை இப்படித்தான் இனி நம்மால் காப்பாற்ற முடியும். உழைக்கும் மக்கள்தான் இனி தமிழுக்கு உயிர் வழங்க வேண்டும். தமிழ் வாழ்வையும் விடுதலையையும் இனிப் பிரித்துப் பேச முடியாது. தமிழ்த் தேசியம் இன்றித் தமிழுக்கு, தமிழனுக்கு விடுதலை இல்லை.

2

பழைய இலக்கியங்கள் புதிய பார்வை

நவீனகாலம் அதற்குரிய எல்லா இயல்புகளோடும் - குணங்களோடும் குற்றங்களோடும் வெகுவாக விரைந்து வந்து நம்மைச் சூழ்ந்து - நம்மைத் தனக்கு உட்படுத்தி - நமக்குள்ளும் நுழைந்து நம்மை நாம் யார் என்றே புரியாத நிலையில் மாற்றி வருகிறது. நம் ஆர்வங்களும், ஆசைகளும் நம் பழக்கவழக்கங்களும் முற்றாக மாறி வருகின்றன. நாம் புதுமை மனிதர்களாகிறோம். உலகத்தை நம்மால் கைக்குள் அகப்படுத்த முடியும் என்று கருதி - நம்பி - நாம் உலகியல் சக்திகளுக்கு இடங்கொடுத்து வருகிறோம். நம் அறிவும் - குணங்களும் - நம் ஆளுகையும் நம் உருவாக்கத்தில் இல்லை. நமக்கான திசைகளை நோக்கி நாம் பாதை இட முடியவில்லை. திசைகள் அடைக்கப்பட்ட மாதிரி ஒரு நிலையில் நாம் திண்டாடுகிறோம். இது பொதுவான வர்ணனை. இதை வகைப்படுத்திச் சொல்வதானால் அரசியல், பொருளியல், அறவியல், கலாச்சாரம், அறிவியல், தொழில் நுட்ப இயல், சமயம் என்று பலவகைப்படுத்தி நாம் எதிர்கொள்ளும் நிலைமைகளை நாம் வர்ணிக்க இயலும். உலக அளவில் இந்திய அளவில் தமிழக அளவில் என்று வகைப்படுத்திச் சொல்ல வேண்டும். முதலில் கூறிய பொது வர்ணனைகளை இவ்வாறு வகைப்படுத்திக் கூறுவதன் மூலம் வலுப்படுத்த முடியும்.

இப்படி ஒரு வர்ணனையைத் தரும்போதே நாம் அறவே நம்பிக்கை அற்றுப் போய்விடுகிறோமா என்றுகேட்டுக் கொண்டால் நம் பதில் என்னவாக இருக்க முடியும்? நம்பிக்கை அற்றுப் போவதற்கான நிலைமைகள் பெரும்பான்மையாக இருந்த போதிலும் - நமக்கு வலிமையும், ஒருமையும் தரக்கூடிய சக்திகள் புறத்திலும், அகத்திலும் அறவே இல்லாமல் போய்விடவில்லை. உலக நிலைமை சீர்குலைந்து கிடக்கிறது என்பதை உணரும் நாம் இன்னும் உயிர்ப்புடன்தான் இருக்கிறோம். நம்மைக் கொடுத்து - நம் வலிமையைக் கொண்டு சீர்குலைந்த நிலைமைகளை மாற்ற முடியுமா என்று உயர் அளவில் நாம் முயற்சி செய்து பார்த்துவிட வேண்டும். இதற்கான முறையில் நம் சக்திகளைத் திரட்ட வேண்டும். அனைத்து இடங்களிலிருந்தும் நாம் நம் சக்திகளைத் திரட்டிக் கொள்ள வேண்டும் - வேறு விதி நமக்கு இல்லை.

நம் பழந்தமிழ் இலக்கியங்களைப் புதிய பார்வையில் பார்க்க விரும்பும் நாம், நம்மைச் சற்றிலும் உள்ள நிலைமைகளையும், நம் நிலைமைகளையும் பார்த்துக் கொள்ளும் நோக்கம் பற்றிச் சில கூறிக் கொள்ள வேண்டும். அசுர வேகத்தில் முன்னேறும் உலகில் நாம் நம் பழமையை - குறிப்பாகப் பழைய இலக்கியங்களை என்ன செய்யப் போகிறோம்? சுமை என்று கருதித் தூக்கி எறிந்து விடப்போகிறோமா? சுமை என்று நாம் கருதினால் தூக்கி எறிந்து விடுவதில் தவறில்லை.
நாம் தமிழர்கள்; உலகமே வியக்கத்தக்க நாகரிகம் நமக்கு ஒரு காலத்தில் இருந்தது. சேர, சோழ, பாண்டியர்கள் - கங்கை வரை வென்றவர்கள்; இமயத்தில் நம் கொடி பொறித்தவர்கள்; கடல் வாணிகத்தில் தேர்ந்தவர்கள்; உலகம் வியக்கத்தக்க பண்பாட்டு இலக்கியப் பாரம்பரியம் பெற்றவர்கள். அந்தப் பழம்பெருமை நமக்கு மீண்டும் வேண்டும். அதனை நினைவுபடுத்திக் கொள்வதற்காகப் பழம் இலக்கியப் படிப்பு நமக்குத் தேவை.

இப்படி ஒரு நோக்கத்திற்காக நாம் பழம் இலக்கியங்களைப் படிக்க முடியாது. கடந்த ஒரு 50/60 ஆண்டுக்கால அளவில் நமக்கு இத்தகைய நோக்கத்தோடுதான் தமிழ் இலக்கியக் கல்வி தரப்பட்டிருக்கிறது. நாம் தமிழர்கள் என்ற உணர்வைப் பெறுவதற்கும் உலகத்தில் நமக்குத் தனி வரலாறு இருந்திருக்கின்றது என்ற நம்பிக்கை உணர்வு பெறுவதற்கும் தமிழ் இலக்கியக் கல்வி பயன்பட்டிருக்கிறது. இந்த உணர்வை நாம் என்ன செய்யப் போகிறோம்? என்ற கேள்விக்கு இப்பொழுது பதில் இல்லை. தமிழ் இலக்கியப் படிப்பு இன்றைய நிலையில் நமக்குச் சுமையாயிருக்கிறது! அல்லது சுமை மட்டும் தந்து

நம்மை எளியவர்களாக்கியுள்ளது. தமிழ்ப்பண்பாடு என்பது இன்று கேள்விக்கு உரியதாகிவிட்டது. தமிழனின் அரசியல் வெற்று ஆரவாரமாகிவிட்டது. உலக இலக்கியப் பாரம்பரியத்தில் தமிழன் இன்று தலை நிமிர்ந்து நிற்கக் கூடிய ஆற்றல் உடையவனாக இல்லை.

நவீன காலத்தில் - நவீன உலகில் - தமிழ்ப் பெருமை நம்மை வாழவைத்து விடாது. தமிழ்ப் பெருமை - தமிழ்ப்பண்பாட்டுப் பெருமை என்ற தற்பெருமை, ஆரவாரம் சுமை. நவீன காலத்துக்குப் பயன்படாது. தமிழ் இலக்கியப் பார்வையை, ஆய்வை வெறும் தொழிலாக்கிக் கொள்வது வணிகமுறை; வயிற்றுப் பிழைப்புக்கான முறை. இதனால் தமிழ் தாழும்; தரம் குன்றி அழியும்.

'நாம் என்ன செய்யப் போகிறோம்' என்ற கேள்வி - ஆற்றலுடன் நம்முன் எழுகிறது. இலக்கியத்தின் உள்ளார்ந்த ஆற்றல்களை நாம் தேடிச் செல்ல வேண்டும். அவை மனிதனின் ஆக்கத்தோடு இன்றியமையாத முறையில் உறவு கொண்டிருப்பதை நாம் அறிய வேண்டும். மனிதன் தன்னை மேலும் மனிதனாக்கிக் கொள்வதற்காக ஆக்கத் திறன்களோடு இலக்கியம் உறவு கொண்டிருபபதைக் கண்டு இலக்கியத்தை - அதே சமயம் மனிதனைக் கற்க வேண்டும். நவீன உலகியல் நிலைமைகளில் கேள்விக்கு உள்ளாகியிருக்கும் ஒரு அடிப்படைப் பிரச்சனை இது. நாம் தமிழர்கள் என்பதையும், நமக்குத் தனிப் பாரம்பரியம் உண்டு என்பதையும் இவ்வகைப் படிப்பின் இயக்கம் சார்ந்தே புரிந்து கொள்ள வேண்டும்.

வரலாறு, மெய்யியல் முதலிய துறைகளிலான அறிவு, இத்தகைய படிப்புக்கு உறுதுணை புரியும்.

அதாவது, நம் இலக்கியத்துக்குள் மனிதன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதையும், எத்தகைய நோக்கங்களோடு மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்பதையும், மனிதராக வாழ்வதற்கு அவர்கள் எவ்வாறு பாடுபட்டார்கள் என்பதையும், ஓர் இலக்கிய உருவாக்கம் என்பதற்குள் அவர்கள் எதைப் பொதிந்து, திரட்டி வைத்தார்கள் என்பதையும்,வரலாற்று முறையில் நாம் அறிகிறோம். அறியும்போதே - நவீன காலத்தில் வாழும் நாம் அவற்றால் எவ்வாறு பாதிக்கப்படுகிறோம்? என்பதையும், பழங்கால இலக்கியங்களைப் படிக்கும்போதே நமக்குள் திரளும் உணர்வுகள் எது என்பதையும், நவீன காலத்தில் ஒரு சமூக மாற்றத்தின் தேவையை உணர்ந்து நிற்கும் நாம் அவ்விலக்கியங்கள் மூலம் பெற்றதைத் திரட்டிக் கொள்கிறோம் என்பதையும் இத்தகைய படிப்பின் போது அறிந்து கொள்கிறோம்.

குறைந்தது 2000 ஆண்டுக்கால வாழ்வுடையது தமிழ் இலக்கியம். சில உச்ச கட்டங்களை நாம் சுருக்கமாகப் பார்ப்பதன் மூலம் பழந்தமிழ் இலக்கியத்தின் தற்காலத் தேவையைப் புரிந்து கொள்ள முடியும். தற்கால - நவீன கால - மனிதர்கள் என்ற முறையில் - நம் காலக் கண்ணோட்டத்துடன் நம் காலத் தேவைகளுக்கு ஏற்றவாறு எதனைப் பழங்கால இலக்கியம் தர முடியும் என்ற பார்வையோடுதான் பார்க்கிறோம். பழங்காலத்துக்குள் அல்லது இலக்கியச் சுவைக்குள் நாம் மூழ்கிவிட முடியாது. இலக்கியம் ஒரு சக்தி; நம் கால மனிதர்களுக்கு அச்சக்தி வந்துசேர வேண்டும் என்ற முறையில்தான் பழந்தமிழ் பற்றிய பார்வையைச் செலுத்துகிறோம். தமிழ் இலக்கியத்தின் சில உச்ச கட்டங்கள் நம் பார்வைக்கு உரியன.

சங்க இலக்கியம்

சங்க காலத்தில் மருத நில வாழ்க்கை ஓங்கியிருப்பதை அறிகிறோம். வேந்தர்கள் - சேர, சோழ, பாண்டியர்கள் நிலை பெற்றுவிட்டார்கள். வேளிர்கள் எனப்படும் குறுநில மன்னர்கள் பெரும்பாலும் அழிந்து கொண்டிருக்கிறார்கள் அல்லது அழிந்து விட்டார்கள். பாரி முதலியவர்கள் இனக்குழுத் தலைவர்கள் என்ற முறையில் தம் செல்வம் முதலியவற்றைப் புலவர், கலைஞர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். இவர்களின் அளவு புகழ் பெறாத வேந்தர்களின் படையெடுப்புக்கு உள்ளாகி அழிந்தார்கள். நால்வகைப் படைகளுடன் திகழும் அரசின் புதிய வலிமையோடும், செல்வச் செருக்கோடும் வரும் ஒரு புதிய சமூக நிலைகளில் வள்ளல்களுக்கு இடம் இல்லை. பாரி முதலியவர்களைத் தலைவராகக் கொண்ட சமூகத்தில் பாணர்கள் முதலிய கலைஞர்கள், சமூகத்தில் தமக்கான பங்கை இயல்பாக உரிமையோடும் பெறத்தக்கவர்கள். அதியன் இறந்தபோது அவ்வை படும் வேதனை இன்றும் நம்மைத் துன்புறுத்த வல்லது; 'இனிப் பாடுநரும் இல்லை பாடுநர்க் கொன்று ஈகுநரும் இல்லை.

இந்தச் சமூகச் சூழ்நிலையில் எத்தனையோ சோக நாடகங்கள், அவற்றுள் ஒன்று கோப்பெருஞ்சோழனின் குடும்ப நிகழ்ச்சி.

எல்லார்க்கும் கொடுத்து வாழ்ந்தவன் கோப்பெருஞ்சோழன். அவனது மகன்களுக்கு அது பொறுக்கவில்லை. போர் தொடுக்கிறார்கள். போரில் யார் வெற்றி பெற்று என்னாவது? புல்லாற்றூர் எயிற்றியனார் தலையிடுகிறார். செல்வம் தங்களுக்கே என்பது மைந்தர்கள் கொள்கை. அதனை எதிர்த்து நின்று கோப்பெருஞ்சோழன் வென்றுவிட

முடியவில்லை. புலவர் கூற்றை ஏற்றுத் தன் ஆட்சிச் செல்வத்தை மகன்களுக்கே ஆக்கி - இனி வாழ்வது தேவையில்லை என்ற கருத்தோடு - வடக்கிருந்து உயிர் துறந்தான். புலவர்கள் பலரும் உடன் நீத்தார்கள்.

புதிய உலகம் உடைமையை - உடைமை சார்ந்த அதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு பேராற்றலுடன் வருகின்றது. கணியன் பூங்குன்றன் பாடலில் கூறியது போல, - பேரியாற்று வெள்ளத்தில் அகப்பட்ட தெப்பம் போல - தெப்பம் தனது போக்கைத் தீர்மானிக்க முடியாத நிலைமை.

இந்த நிலையில்தான் அகப்பாடல்கள், அன்பைப் பாடுகின்றன. புதிய சமூகம் ஏற்றத்தாழ்வை ஏற்கும் சமூகம். அன்பால் மனம் ஒத்த தலைவன் தலைவியின் காதலை ஏற்க முடியாத சமூகம். பெற்றோர், தகுதி பல பார்க்கிறார்கள். தலைவியின் காதலைத் தடுக்கப் பல முயற்சிகள் செய்கிறார்கள். இவற்றை மீறித்தான் காதல் வெற்றிபெற வேண்டும். நால்வகைச் சமூக மக்களும் நெருங்கி வரும்பொழுது நிலைமை கடுமையாகிறது. ஏற்றத்தாழ்வை (செல்வத்தை) அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் திருமணங்கள் - குடும்ப உறவுகளைச் சான்றோர் ஏற்கவில்லை. அன்பையே சான்றோர் மதிக்கின்றனர். அந்த அன்பின் வெற்றியை வேண்டியே சான்றோர் அகப்பொருள் இலக்கியம் படைத்தனர்.

காலவெள்ளம் அன்பை அநாதை ஆக்கிவிட்டுச் சென்றது. நகரங்கள், நாகரிகங்கள், வணிகங்கள் பெருகின. அன்புக்கு இடம் அருகியது. பாணர்களுக்கு வாழ்வில்லை. வாழ்வுக்கு வகை தேடிப் புலவர்கள் அலைகிறார்கள். சங்க இலக்கிய ஆக்கம் அறுபடுகிறது.

நீதி இலக்கியம் - திருக்குறள்

மன்னர்கள் வலிமை பெற்று படை, அமைச்சர், ஒற்றர்கள் முதலிய அமைப்புகளோடு நிலைபெற்ற காலம்; வேலொடு நின்றான் இடு என்றது போல வரி வசூலிக்கும் நிலைமை. அல்லற்பட்டு ஆற்றாது மக்கள் கண்ணீர் சிந்தும் நிலைமை. பொருளாதிக்கம் வலிமை பெறுகிறது. பொருளல்லவரைப் பொருளாகச் செய்கிறது பொருள். தொடர்ந்து பல காலம் நடைபெற்ற போர்களின் விளைவு, மக்கள் மத்தியில் வறுமை. முன்னைய சமூகத்தில் இனக் குழுக்களின் செல்வம் மக்கள் அனைவருக்குமுரிய பொதுச் செல்வம். அது மாறிய நிலையில் விதி வலியது. விதியை வெல்ல மனிதர்கள் முயன்றால், கூலி மட்டும் கிடைக்கும் நிலைமை ; வறுமையைத் தெய்வங்கள் மாற்ற முடியாது.

கொடை நல்லது; விருந்தோம்பல் நல்லது. முன்னைய சமூகத்தின் பொதுமை அறம், மாறிய சமூக நிலைமைகளில் கொடையாக, விருந்தோம்பலாக அறிவுறுத்தப்படுகிறது. பொருளாதிக்கம் கொடுமையானது. பொருளை அடித்தளமாகக் கொண்ட வாழ்க்கை தேவையில்லை. பற்றற்ற நிலையே சிறந்தது. ஆகவே துறவறம் தேவை. பொருளும், இன்பமும் ஆதிக்கம் பெற்ற உலகில் துறவில் போலித்தனம் புகுவது தவிர்க்க இயலாதது. துறவில் மறைந்து - வேட்டுவன் பறவை பிடிப்பது மாதிரிப் பிடிக்க வேண்டும். பொருளுலகம் வலிமை உடையது. ஆயினும் நிலையில்லாதது. அன்பே நிலையானது. அன்பின் வழியே உயிர் நிலைபெறும். செல்வம் தீமைக்கே வழிகோலும். வறுமை நல்லது. மேலுலகம் இல்லை என்றாலும் கொடை நல்லது. அன்பற்ற அறிவால் பயனில்லை. அறிவு அறத்தோடு பொருந்தியிருக்க வேண்டும். தாயின் பசி கண்ட நிலையிலும் தீமை செய்யாமை நல்லது. வறுமை கொடியது. வறுமை மிக்க உலகைப் படைத்த இறைவன் கொடியவன். அவனும் இங்கு வந்து இருந்து துன்புற வேண்டும். நடுவு நிலைமை இன்றியமையாதது. வணிகர்க்கும் அது நல்லது. சமூக நிலைமை இத்தகையது.

சமூக நிலைமைகளில் - அறம் மறம் குழம்பிய நிலைகளில் - வள்ளுவர் அறம் பற்றி ஆய்கின்றார். அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம், செவ்வியான் கேடு பற்றிச் சிந்திக்கச் சொல்கிறார். எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் மெய்ப்பொருள் காணும் அறிவை வேண்டுகிறார். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் நிலைமை மற்றும் கொலைத் தொழில் இல்லாத நிலைமையை விரும்புகிறார். மன்னராட்சியின் மக்கட்சார்பை விரும்புகிறார்.

வள்ளுவர் நூலில் - இன்றைய நிலையிலிருந்து பார்க்கும்போது கடவுள், மேலுலகம், கீழ்உலகம், அறம், மறம், விதி, மன்னராட்சி, படைவலிமை, துறவு முதலியவை வள்ளுவர் சிந்தனையின் - கருத்தாக்கத்தின் - முக்கிய முனைகளாகத் தோன்றினும், இவற்றிற்கு எதிரான போக்கும் நூல் முழுவதும் அழுத்தமாக ஓடுவதைக் காண முடியும். அறத்தின்பால் வள்ளுவர் கொண்ட பற்று, உண்மை பற்றிய தேட்டம் அற்புதமானது. சமூகத்தில் முரண்பாடுகள் முற்றிய நிலையில், சமூகத்தின் முரண்பாடுகள் மிகுவது இயல்பு. இத்தகைய ஒரு சமூகச் சூழலில் வைத்துப் பார்க்கும்போது, வள்ளுவரின் மக்கட்சார்பை, நீதியிடம் கொண்ட பற்றை, அன்பிடம் கொண்ட நேயத்தை நாம் விளங்கிக் கொள்ள இயலும். இன்றைய நிலையிலும் புறக்கணிக்க முடியாத ஆற்றல் இலக்கியம் வள்ளுவர் நூல்.

காவிய காலம் :

சிலப்பதிகாரம், மணிமேகலை

வணிகம் மேலோங்கி வரும் காலம். மன்னராட்சி நிலைபெற்ற போதும் கட்டுமையான முரண்களால் தன்னைக் காத்துக் கொள்ள முடியாத காலம்.

சிலம்பின் மையப் பிரச்சினை - வெளிநாட்டிலிருந்து பிழைக்க வழிதேடி வரும் ஒருவனிடம் விலை உயர்ந்த சிலம்பு இருக்க முடியாது. இருந்தால் அவன் கள்வன். கொலைத் தண்டனைக்கு உரியவன். நீதி விசாரணை கூடத் தேவையில்லை. காவலனே கூடத் தண்டனையை நிறைவேற்றி விடலாம். இந்த நிலையில் தான் கோவலன் கொல்லப்படுகிறான். நீதி பிழைபட்ட நிலையில் இன்னொரு நீதியை உயிர்ப்பிக்கக் கண்ணகி கிளம்புகிறாள். தெய்வங்கள் உதவிக்கு வரவில்லை. சான்றோர் வாய் திறக்கவில்லை. கற்புடைப் பெண்களும் கண் திறக்கவில்லை.

கண்ணகியின் அவலம் கொடியது. அவள் கோபம் நியாயமானது. தேரா மன்னனிடம் நீதி கேட்டுத் தன் நியாயத்தை நிறுவுகிறாள். நீதியை அழித்த மன்னன் உயிர் துறக்கிறான். அரசியும் அவனுடன் உயிர் துறக்கிறாள். நீதியைக் காக்க நினைக்காத மதுரை சாம்பலாகிறது. கண்ணகி மனத்தில் கருணை அறவே அற்று விடவில்லை. மதுராபதித் தெய்வத்தின் வேண்டுகோளை ஏற்று மதுரைக்குச் சாப விடுதலை அருள்கிறாள். மேலும் கதை வளர்கிறது; கண்ணகி சேர நாட்டில் விண்ணுலகடைகிறாள்.

பாண்டியன் நீதி தவறியதற்குக் காரணம் கூற வருகிறார் இளங்கோ. கோப்பெருந்தேவி கொண்ட ஊடல்; ஊடலுக்குக் காரணமும் கூறுகிறார். நடனமாடும் பெண்ணிடம் அரசன் மனம் சென்றது, கோப்பெருந்தேவியின் ஊடலுக்குக் காரணம். ஊடல் தீர்க்க காணாமல்போன சிலம்பைக் கண்ட நிலையில் ஊடல் தீர்க்கும் ஒரே எண்ணத்தில் மதி மயங்கினான் மன்னன்.

இத்தகைய சமூகம் - நாகரிகம் அழிதற்குரியது; அல்லது அழித்தற்குரியது. கண்ணகி இதைச் செய்து தெய்வமாகிறாள். காவல் தெய்வங்கள் கண்மூடி இருக்கும் போது, இவள் புதிய தெய்வம். மனித ஆற்றலை - நீதியை நிலைநாட்டும் ஆற்றலைத் தன் மூலம் புதுப்பித்துக் கொண்ட புதிய தெய்வம். மனித தெய்வம். மனிதனிடமிருந்தே தோன்றி உயரும் தெய்வம்.

சிலப்பதிகாரத்தின் மையம் இதுதான். இன்றைக்கும் - இக்கால நிலையிலும் சிலப்பதிகாரம் நம்மைப் பாதிப்பது இக்காரணத்தினால் தான். நீதியற்ற சமூகம் அழிய வேண்டும். நீதியைக் காப்பாற்றாத - அநீதியை அடித்தளமாகக் கொண்ட அதிகாரம் அழிய வேண்டும். அழிக்கப்பட வேண்டும். பழங்கால நிலைமைகளில் இப்படி அழிக்க முடியுமா? என்ற கேள்விக்குப் பதில் முடியாது என்பதுதான். அப்படியானால் - மதுரை அழிவது முதலியவை கவிஞன் கற்பனை, ஆசை. இளங்கோவின் இந்தக் கற்பனை சமூக நோக்கில் தேவையானது. இன்றைய நிலையிலும் வரவேற்கத் தகுந்தது. இன்றைய சமூகத்தில் நாமும் கோவலன் மாதிரி, கண்ணகி மாதிரிதான். எந்த நேரத்திலும் எதுவும் நேரலாம். களவு முதலியவற்றிற்குத் தேவையில்லாத புதிய சமூக நிலையில் தான் நமக்குப் பாதுகாப்புக் கிட்டும். அதுவரை நமக்குக் காத்திருப்பது தூக்குமரம்; பலிபீடம்; துப்பாக்கிக் குண்டுகள்.

ஆண்டான் அடிமை என்ற வகையிலான ஏற்றத்தாழ்வைக் கொண்ட சமூகம் உள்ள காலம் முழுவதும் சிலப்பதிகாரங்கள் நடைபெறுவது விதி. இதைத் தடுக்க முடியாது. எப்பொழுதோ தொடங்கிய இந்த ஏற்றத்தாழ்வு - வர்க்க வேறுபாடு - வர்க்கப் போராட்டம் இன்றும் தொடர்கிறது. இக்காலம் முழுவதும் விதி யாக வருவது கோவலன் கொலையும், கண்ணகியின் எழுச்சியும். கோவலன் கொலைக்கான காரணம் அவனது வாழ்வுக்குள் மட்டும் தேடினால் கிட்டாது. இளங்கோ தேடுவதை இப்படி, சமூக நிலைமைகளுக்குள் வரலாற்று வழியே தேட வேண்டும். இளங்கோ கற்பனையில் காண்பது ஒரு கலகம். வரலாற்றுக் காலம் முழுவதும் கலகங்களும் தேவைப்படுகின்றன.

மணிமேகலையின் மையம் பசிக் கொடுமையும், அதற்கான தீர்வும். சங்க காலம் முதற்கொண்டு, தொடர்ந்து நடைபெற்ற போர்களின் விளைவாகவும், அரசு அதிகாரம், வாணிகம் சார்ந்த சமூக நிலைமைகளின் காரணமாகவும் வறுமை பெருகியது. திருக்குறள் முதலிய நூல்கள் வழியேயும் வறுமை தொடர்ந்து பெருகியதைப் பார்க்கிறோம். மன்னர்கள், செல்வர்கள் தரும் கொடை, வறுமையை ஒழிக்க முடியாது. சரிவரச் சொன்னால் வறுமைப் பெருக்கத்துக்கு அவர்களின் சுரண்டல் முறையே காரணமாக இருக்கும்போது அவர்களது கொடை முதலிய செயற்பாடுகள் புண்ணுக்குப் புனுகு தடவும் வேலைதான்.

வறுமை மிக்க நிலையில் - நோய் நொடிகள் பெருகிய நிலையில் அறம் எது, மறம் எது என்று தெரியாத குழப்பம் மிக்க நிலையில் - மன்னர்களை நம்பிப் பயனில்லை. செல்வர்களை நம்பியும் பயனில்லை. தெய்வ நம்பிக்கை இக்கால நிலையில் மேலோங்குகிறது. வறுமை ஒழிப்பில் தெய்வங்களே பங்கு பெற்றால் ஒழிய வறுமை ஒழிய வழியில்லை.

அமுதசுரபி என்ற பாத்திரம் எடுக்க எடுக்கக் குறையாமல் உணவு சுரக்கும் பாத்திரம். ஆபுத்திரனுக்குத் தெய்வம் அருளிய பாத்திரம் மணிமேகலை கைக்கு வந்து சேர்கிறது. மக்கள் பசிப்பிணி தீர்ப்பதே பேரறம் என்று இப்பணியில் ஈடுபடுகிறாள்.

அமுதசுரபி, கற்பனைப் பாத்திரம். இத்தகைய கற்பனை ஏன் எழுகிறது என்பது தேவையான கேள்வி. பசியால் பலநாள் வாடியவன் என்ன கனாக் காண்பான்? கொஞ்சம் கற்பனை செய்து கொள்ளுங்கள். மலை போலப் பெருகிய சோறு. அந்தச் சோற்று மலைக்குள் இறங்கித் தின்று தின்று தீர்க்க முடியாமல் அதற்குள்ளே மூழ்கிச் சாவது கூட ஒரு பேரின்பம் என்பது மாதிரி காண்பான் இல்லையா? அதுபோல வறுமை என்ற சமூகக் கொடுமை சமூகத்தில் எங்கும் நிலைபெற்று - யாரும் இதனைத் தீர்க்க முடியாது என்ற நிலை நிலவும் காலத்தில் வேறு என்ன கற்பனை எழும்? தெய்வங்களே இப்பணியில் ஈடுபட்டாலொழிய வறுமை தீராது என்ற நம்பிக்கை சேரும் போது, அமுதசுரபி என்ற கற்பனைப் பாத்திரம் தோன்றுகிறது.

மணிமேகலை முழுவதும் இத்தகைய பசிக்கொடுமையைப் பல்வேறு இடங்களில் பார்க்கிறோம். காயசண்டிகையின் யானைப் பசி, விருச்சிகனின் தவம் முதலிய நிகழ்ச்சிகளிலும் பசிக்கொடுமையைப் பார்க்கிறோம். ஆபுத்திரன் கதை அற்புதமான கதை.

பசிக்கொடுமை தீர்க்கும் அற்புதமான அறப்பணியில் ஈடுபட முற்றான துறவு மனம்தேவை. மணிமேகலைக்குச் சில சோதனைகளுக்குப் பிறகு இத்தகைய துறவுள்ளம் வாய்க்கிறது. உதயகுமாரனிடத்தில் மணிமேகலையின் உள்ளம் செல்கிறது. ஆனால் இன்னொரு கட்டத்தில் உதயகுமாரன் கொல்லப்படுகிறான். காதல் உணர்வை அறவே தியாகம் செய்ய வேண்டிய நிலை மணிமேகலைக்கு. இனி அவள் துறவி - புத்தரின் பல பிறப்புகள் பற்றிய நம்பிக்கை முதலியனவும் சேர்ந்து மணிமேகலைக் காவியம் உருவாகிறது. வறுமை ஒழிய வேண்டும் என்பது சாத்தனார் தரும் செய்தி. அவரது கற்பனையை இன்றைய சமூக இயல்

அறிவு நோக்கில் நாம் புரிந்துகொள்ள முடியும். அன்றும் இன்றும் சமூகத்தில் எரியும் பிரச்சனைகளில் ஒன்று வறுமைக் கொடுமை. மணிமேகலைக் காவியக் காப்பியக் கல்வி, இன்றைய நிலையில் வறுமை ஒழிப்பைப் பற்றிச் சிந்தனை தரவேண்டும். புதிய மணிமேகலைகள் போதா. புரட்சி மணிமேகலைகள் தேவை.

பக்தி இலக்கியம்

தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் முதலிய பக்தி இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்தில் முக்கியமானவை. இவற்றில் மனித வாழ்க்கை நேர்முகமாக இடம் பெறவில்லை. இறைவன், அவன் கருணை, ஆற்றல், இறைவனை அடைய விரும்பும் மனித ஆன்மாக்களின் ஆர்வங்கள், தவிப்புகள் முதலியவை பக்தி இலக்கியத்தின் கருப்பொருட்கள். இறைவனுக்கும் மனிதனுக்கும் இருக்கும் இன்றியமையாத உறவு எங்கோ துண்டிக்கப்பட்டது போலவும், அவரோடு இணைந்து இருக்கும்போது பேரின்பத்தில் ஆழ்ந்து விடுவது போலவும், அவரைப் பிரிந்து இருப்பது நரக வாழ்க்கை போலவும், அவரே நாயகன் - தலைவன், அவரே பேரின்பத்தின், தூய்மையின் இருப்பிடம். அவரை அடைதலே முக்தி, விடுதலை என்பன போலவும் பக்தி இலக்கியங்கள் பாடுகின்றன.

மனித வாழ்க்கை நேர்முகமாகப் பக்தி இலக்கியம் பாடுவதில்லை என்று கூறும்போது, மனித வாழ்க்கை மனிதர்களின் வசத்தில் இல்லாதபோது - அதாவது - மனித வாழ்க்கையின் வேதனைகள் முதலியவற்றைத் தம் முயற்சிகளால் மாற்றிக் கொள்ள முடியாது என்ற நிலையில் இறைவனே கதி என்ற உணர்வில் பக்தி இலக்கியம் எழுகின்றது. மனித வாழ்க்கை மனிதர்க்கு அந்நியப்பட்டு - அந்த

இடத்தில் இறைவன் மையப் படுத்தப் படுகிறான். மனிதன் தனக்கு - தன் சமூகத்திற்குப் பலவற்றை இலட்சியமாகக் கொள்கிறான். அவை அவனுக்குக் கிட்டாத நிலை சமூகத்தில் நிலவுகிறது. இன்பங்கள் இல்லை. பாதுகாப்பு இல்லை. அன்பு இல்லை. ஆதரவு இல்லை. எதிர்காலம் இல்லை. வாழ்க்கையிலிருக்க வேண்டிய ஒழுங்கு முதலியவை இல்லை. மனித வாழ்க்கை சீரழிந்துவிட்டது. திரும்ப இதை இணைக்க முடியும் என்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. இந்த வாழ்க்கையை இனி மனிதர்கள் வசப்படுத்தி மாற்றி அமைக்க முடியும் என்ற நிலைமை கைகடந்து போய்விட்டது. வாழ்க்கைக்கு உலகியல் வகையில் பொருள் இல்லை. பிறப்பே பெருந்துன்பம். தொட்டவை

அனைத்தும் தீமையாகிவிடுகின்றன. தீமையில் பிணிக்கின்றன. நல்லவை பற்றிய நாட்டம் சாத்தியம் இல்லை. தன்னை விட்டால்தான், தன்னைக்கூடத் துறந்தால்தான் நிம்மதி.

இத்தயைதொரு சமூகநிலை எப்படி ஏற்பட முடியும் என்று கேட்டுக் கொண்டால் இதற்கான விடையை சமூக நிலைமைகளிலிருந்துதான் தரமுடியும். மக்களுக்கான ஆட்சிமுறை இல்லை. மக்களை அரசு காக்கவில்லை. தன் உழைப்பின் விளைவு தங்களுக்கு இல்லை. எங்கோ போய்ச் சேர்ந்து, அவை திரண்டு பலப்பட்டு உறுதியிட்டு இறுதியில் தம் மேலேயே சுமையாக அமர்ந்து அவை தங்களை மேலும் பாதுகாக்க, வளர்த்துக் கொள்ள மனிதர்களையே மேலும் மேலும் பலி கேட்கின்றன. அரசியல், பொருளியல் முதலிய எல்லாத் துறைகளிலும் இந்தநிலை ஆதிக்கம் கொள்கிறது. ஏற்கனவே தோன்றி வளர்ந்த இறைக்கருத்து, இறை உணர்வு இந்தச் சூழலில் மேலும் மேலும் வலிமை பெறுகிறது. இறைவன் பெரியவன், எல்லாம் வல்லவன். உலகம் அவன் இயக்க, இயங்குகிறது. அவன் கருணையால்தான் மழை பெய்கிறது. கதிரவன் காய்கிறான். அவனே நன்மைக்கும் தீமைக்கும் அதிபதி. அவன் தீமைகள் - தண்டனைகள் - துன்பங்கள் தந்து மனிதர்களை - தீ வினைகளிலிருந்து - பாவங்களிலிருந்து காப்பாற்றுகிறான். அவன் மறக்கருணையிலும் துலங்குவது அவன் அளப்பரிய கருணையே. அவனே நம்மைப் படைத்து - படைப்பும் நோக்கத்ததோடுதான் - காத்து இறுதியில் பிறப்பற்ற நிலையைத் தருகிறான். அவனது நோக்கங்களுக்கு முற்றாக மனிதர்கள் இசைந்து கொடுக்க வேண்டும். துன்பங்களில் மனம் உருகியே அவனது அருளைப் பெற முடியும். அழுதால் அவன் கருணையைப் பெறலாம். அவன் கிடைத்தால் உலகின் அரசு போல் வளர முடியும். பிறப்புக்கள் பல அனுபவிப்பதில் தவறு இல்லை. பல பிறப்புக்கள் இறைவனை அடைவதற்கான படிகள். பற்றே உலகத் துன்பங்களுக்குக் காரணம். இறைவனையே பற்றி - முழுமையாகப் பற்றினால் உலக பற்று அறுபடும். பற்றற்ற நிலையே பேரின்பம். அதுவே இறைநிலை.

இப்படி ஒரு பேரின்ப நிலை சாத்தியப்படுகிறதா? சில கணங்கள், சிறிது நேரம், இறை உணர்வில் மூழ்கிவிட முடியும். அப்பறம் புற உலகத் தாக்கம். ஒருமை நிலை - இன்ப நிலை சிதைகிறது. புலன்கள் பற்றுஅற்ற நிலை சில நேரம்; அப்புறம் புலன்களின் தாக்குதல். இறைவனக் கண்டது மாதிரி ஒரு தோற்றம்; தோற்றம் சிதைந்த நிலையில் புறஉலகம் கொடுமையாகிறது. ஊர் வேண்டாம். பேர்

வேண்டாம். உற்றார் வேண்டாம் - இப்படிச் சில பொழுதுகள். அப்புறம் உலகம் வேண்டும்; உறவு வேண்டும். இப்படி அக உலகத்துக்கும், புற உலகத்துக்கும் இடையறாத மோதல்; முரண்பாடுகள்; இதன போக்கில் இன்பங்களும், துன்பங்களும். பக்தி இலக்கியப் பரப்பு முழுதும் இதே வேதனைகள், இன்பங்கள்; உலகத்தை - தன்னை - இழந்து விட முடியாத நிலை.

நேர்முகமாகச் சமூகம், பக்தி இலக்கியத்தில் இல்லை. மனிதன் தன்னை இழந்த - இழக்கும் முயற்சியிலிருக்கும் ஓர் எதிர்முக நிலையில், பக்தி இலக்கியம் மனிதனைக் காட்டுகிறது. திரிபுகள் கொண்ட ஒரு கண்ணாடிக்குள்ளிருந்து உலகைப் பார்ப்பது மாதிரி, பக்தி இலக்கியம். யதார்த்த உலகம் அதன் மாயத் தோற்றங்களில் பிரதிபலிக்கிறது - யதார்த்த உலகம் யதார்த்தம் அற்றுப் போன நிலையில்.

மனிதனிலிருந்து பிரிந்த இறைநிலை இல்லை. விண்ணும், மண்ணும், நீரும் நெருப்பும், வளியும் ஒளியும், ஊனும் உயிரும் இன்றியமையாதவை. இவற்றின் உறவில்தான் மனிதன். இவற்றின் நல்லுறவில் மனிதன் ஒன்றியிருப்பது இறை நிலை. இவற்றின் பிரிவில் அவலம். உண்மையாகத் தோன்றியவன் இன்மையுமாகிறான். உறவுகள் இனியவை. பற்றற்ற மனநிலை, உயிர்நிலை ; இறைநிலை. இவை சாத்தியப்படாத நிலையில் அவலம். இப்படிச் செல்கிறது பக்தி இலக்கியம்.

தேவார காலச் சூழலில் கோயில்கள், சிற்பங்கள், இறைவன் பற்றிய கதைகள், திருவிழாக்கள், வழிபாடுகள், இறைவனைப் பற்றிய இசைப்பாடல்கள் முதலியவை பெருகிய நிலையையும் சேர்த்துப் பார்த்தால் - பக்தி இலக்கியத்தின் இயக்கம் புலப்படும். ஆன்மாவற்ற உலகுக்கு ஆன்மாவாகவும், உயிரற்ற உலகின் உயிர்ப்பாகவும், வேதனை மிக்க உலகின் அழுகையாகவும், வேதனை தரும் சூழல்களுக்கு எதிர்நிலையாகவும், அவல மிக்க உலக வேதனைகளுக்கிடையில் அமுதமாகவும், நஞ்சாகவும் - அதாவது அபினாகவும் - பக்தி இருந்ததைப் பக்தி இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

பெருங்கதை, சிந்தாமணி

பொதுமக்கள் வாழ்க்கையிலிருந்து விலகி இலக்கியம் அரண்மனைகளுக்குள் - அந்தப்புரங்களுக்குள் - பிரவேசித்த மாதிரியான தோற்றமே ஏற்படுகிறது. மன்னர்கள் போக வாழ்க்கையில் மூழ்கிவிட அமைச்சர்களின் - படைத்தலைவர்களின் - அதிகாரம் வலுப்பெறுகிறது.

சச்சந்தனின் காம வாழ்க்கை கட்டியங்காரனுக்கு அரசியல் அதிகாரத்தைத் தருகிறது. உதயணன் வாசவதத்தையோடு கூடிய காம வாழ்க்கை அவனை அரசியலுக்குத் தகுதியற்றவனாக்குகிறது. சச்சந்தனின் வாரிசு சீவகன் சுடுகாட்டில் பிறந்து வணிகரால் வளர்க்கப்பட்டு, நாடுகள் பலவற்றில் திரிந்து சாகசங்கள் பல புரிந்து திரும்பவும் தனக்குரிமையாகிய நாட்டை மீட்கிறான். உதயணனும் இதுபோலப் பல்வேறு இடங்களில் திரிந்து நாட்டைப் பெறுகிறான் - யூகியின் அறிவாற்றலால்.

மன்னர் வாழ்க்கையில் திருமணங்கள் - போர்கள் - வெற்றி விழாக்கள் முக்கியமாகின்றன. அந்தப்புர இன்பங்கள் காவியங்களில் பலபடப் பேசப்படுகின்றன. இவை இலக்கியத்தில் முக்கிய இடம் பெறும்போது தற்காலத்தில் சாண்டில்யன் கதைப்பாணி இலக்கியம் -பொழுதுபோக்கு எழுத்து ஆக்கத்தின் நோக்கம் புரிகிறது. மன்னர்களின் வெற்றியில் அவர்களின் இன்ப அனுபவங்களில் மக்கள் தாம் அனுபவிக்க இயலாத இன்ப வாழ்க்கையைக் கற்பனையிலாவது கண்டு இரசித்து இன்புற்று விட வேண்டுமென்று இலக்கிய ஆசிரியர் கருதுவது தெரிகிறது. இலக்கியம் மக்கட் சார்பிலிருந்து விலகி மன்னர் சார்பாகிவிட்ட நிலையைப் பார்க்கிறோம். கூடவே இன்னொரு உண்மையையும் அறிகிறோம். மன்னர்களின் வாழ்க்கையில் இன்பம்போலவே சூழ்ச்சி - சதி - படைவலிமை ஆகியவை மிக அதிக அளவில் இடம் பெறுவதை அறிகிறோம். பல மனைவியர் திருமணம் தோற்றுவிக்கும் பிரச்சனைகளும் இலக்கியத்தில் இடம் பெறுகின்றன. இவை பற்றிய விமர்சனம் அவ்விலக்கியங்கில் இல்லை.

சிந்தாமணியை இன்று நாம் படித்து இரசிக்க முடியாது. சிந்தாமணியின் கதைப் போக்கில் ஓர் இலக்கியவாதி என்ற முறையில்திருத்தக்க தேவர் தன்நோக்கத்தை காவியச் சித்தரிப்பில் சரிவரக் கொண்டு வராத குறை முனைப்பாகத் தெரிகிறது. சீவகன் அனாதை போல வாழ்ந்து தன் அறிவாற்றலால் போர்த்திறத்தால் கட்டடியங்காரனை வெற்றி கண்டு தன் உரிமையைப் பெறுகிறான். இறுதியில் துறவு மேற்கொள்கிறான். திருத்தக்கதேவர் சமணர், துறைவைப் போற்றக் கூடியவர். நல்ல ஆட்சியைப் போற்றுவது போலவே துறவையும் போற்றக் கூடியவர். சீவகன் துறவு மேற்கொள்வதற்கான காரணம் அதற்குரிய தீவிரத்துடன் கூறப்படவில்லை. குரங்கு - பலாப்பழக் கதை, ஒரு காரணமாக வலிமையின்றி சித்தரிக்கப்படுகிறது. மன்னர் மரபில் பிறந்தவன்,

அநாதையாகி - பிறரிடம் வளர்ந்து கட்டியங்காரனின் பகை வந்து தாக்க, நாடு நாடாக அலைகிறான். இடையில் பல்வேறு அனுபவங்கள், வெற்றிகள், பல திருமணங்கள், தொடர்ந்து அலைதல், பல மனைவியருடன் உறவின்போது எத்தனையோ சிக்கல்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். திரும்ப நாட்டைப் பெறப் போர். போர் என்றும் கொடியதுதான். நாட்டைப் பெற்று அரசாளும்போதும் ஆட்சி என்பது சிரமம் மிக்கதுதான். இப்படிப் பல்வேறு அனுபவங்கள் படிப்பினையாகித் துறவு மேற்கொண்டான் என்று சித்திரித்திருந்தால் இது காவியத்தின் மையக்கருத்தாகி, பாவிகமாகிக் காவியம் சிறந்திருக்கும், திருத்தக்க தேவருக்கு இப்படி ஒரு பார்வை இல்லை. காவிய ஆக்கம் முதலிலிருந்து இறுதிவரை - ஓர் இறுக்கமான கட்டுமானமாக அமையவேண்டும். வாழ்வியலில் ஒருபெரு நோக்கம் காவியத்தை இயக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் ஓர் இன்பநூல் - மணநூல் போலச் சிந்தாமணி அமைந்து விடுகிறது. பெருங்கதை, சிந்தாமணி முதலிய காவியங்களிலிருந்து நிகழ்கால நோக்கில் உடன்பாட்டு முறையில் பெறக்கூடியது எதுவும் இல்லை. மன்னராட்சிக் கால நிலைமைகளில் மன்னர்களைத் திருமம்பவும் அரியணையில் அமர்த்தவே இலக்கிய வாணர் விரும்புகிறார். இலக்கியத்தின் மக்கட்சார்பைக் கணிக்க விரும்பும் நமக்கு எதிர்மறை அனுபவமே தருகின்றன இவ்விலக்கியங்கள்.

கம்பராமாயணம்

இராமாயணம் கம்பரால் பாடப்படுவதற்கு முன்பே தமிழகத்தில் மக்கள்மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பது உலகில் அக்கிரமங்கள் பெருகும்போதெல்லாம் திருமால் மனிதனாக அவதாரம் கொள்வான் என்று கீதை கூறியபடி திருமால் இராமனாக அவதாரம் தாங்கி இராவணனை அழித்தான் என்பது கம்பர் இராமாயணக் கதையைத் தமிழில் விரிவாகப் பாடுவதற்கான உந்து சக்திகள் என்று கூறலாம். கம்பராமாயணம் பாடப்பட்ட காலம் முதல் மக்கள் மத்தியில்-படிக்காதவர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருப்பதன் காரணம், அக்கதையின் மக்கட் சார்பு என்று கூறுவது தவறாகாது.

இராவணன் ஒரு ஆதிக்கவாதி, தனதுதேவைக்காக பல நாடுகளை வெற்றி கொண்டான் . தேவர்களாயினும் யாவராயின் அவர்களை ஏவல் கொள்வான். தன் பெருமை அவனுக்கு முக்கியம். அடுத்தவனின் மனைவி அழகாயிருந்தால் அவள் தனக்கு உரிமையாக வேண்டும். இப்படிப்பட்ட இராவணர்கள் இந்தியாவெங்கும் தமிழகத்திலும் மன்னர்களாக

மட்டுமல்ல எல்லா ஊர்களிலும் காட்டின் உட்பிரிவுகளிலும் பற்பலர் வாழ்கின்றனர். இவர்களை அழித்தொழித்தால்தான் மக்கள் நலமாக வாழ முடியும்.

இத்தகைய ஆதிக்கவாதிகளை மற்ற ஆதிக்கவாதிகள் வெல்ல முடியாது. அல்லது வென்றாலும் மக்களுக்குப் பயன் இல்லை. ஆகவே ஆட்சியதிகாரம் துறந்து மக்கட்ச் சார்பில் காடு மேடுகளில் அலைபவனால்தான் இது சாத்தியப்படும். இராமன் இப்படி அரசு துறந்து காடுகளில் திரிகிறான். ஏழைகளை - வேடர்களைத் தோழமை கொள்கிறான். அவன் அன்பால் எல்லாவற்றையும் தம்பியாய்த் தாங்குகிறான். வாழ்வின் ஏற்ற இறக்கங்களால் அலைச்சல்களால் பக்குவப்படுகிறான். மனைவி இழந்து தவிக்கிறான். தன் மாதிரியான நிலைமையிலுள்ளவனுக்கு உதவி செய்து குரங்குக் கூட்டத்தைத் தோழமை கொள்கிறான். இறுதியாக இத்தனை பேர்களின் துணையோடு பேராதிக்கவாதியாகிய இராவணனை வெல்கிறான்.

கதையினூடாக நாம் புரிந்து கொள்ளும் சமூக இயல் உண்மை இது.

அக்கால நிலைமைகளில் மக்கள் ஆட்சி போன்ற கருத்தாக்கம் இல்லை. மக்கள் திரண்டு மன்னனை வீழ்த்துவது சாத்தியமாகவும் இல்லை. ஊர்கள்தோறும் வல்லமையோடு ஆதிக்கம் செய்கிற இவர்களை அழித்தொழிக்க இறைவனே மனிதனாக அவதாரம் தாங்கி வந்ததால்தான் சாத்தியம் என்ற கருத்து இராமனை திருமாலின் அவதாரம் ஆக்கி விடுகிறது.

மக்கள் மத்தியியல் நெடுங்காலமாக உலவி, காலந்தோறும் புதிய கிளைக்கதைகள் உண்மைகள் முதலியவற்றைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு மேலும் மேலும் மக்களைக் கவர்வதாகிய ஒரு கதையின் சமூகச் சார்பான தன்மையை இராமகாதையில் காண்கிறோம். இராமகாதையின் சமூக உண்மையை இவ்வாறு நாம் தொகுத்துக் கொள்ள முடியுமானால், இத்தகைய கதையின் நிரந்தரத் தன்மையை - சமூக ஏற்றத்தாழ்வுகள், வர்க்கவேறுபாடுகள் நிலவும் காலந்தோறும் இவ்வகைக் கதைக்கான செல்வாக்கை நாம் புரிந்து கொள்ள முடியும். ஒரு மனிதனைப் பற்றிய கதையில் புராணவியல் கற்பனைகள் வந்து இணைவதையும் நாம் புரிந்து கொள்ள முடியும். யதார்த்த உலகம் பற்றிய அறிவியல் உண்மையான உண்மைகள் வெளிச்சத்துக்கு வராத - அறிவுக்கு அகப்படாத காலநிலை அது. வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால் என்று பாடிய கம்பரின் இவ்வகை மக்கட் சார்பை நாம் புரிந்து கொள்ள முடியும்.

'உடையாரும் இல்லை இல்லாரும் இல்லை' என்று ஓர் இலட்சிய நாட்டைக் கம்பர் கனவு காண்கிறார். 'உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினன்' என்ற பாட்டில் அரசன் மக்கட்கு உடல் என்று கம்பர் தசரதனைக் கூறினாலும், அரசு எவ்வாறு இயங்க வேண்டும் என்று கம்பர் கருதியதைக் குறிப்பதாக இதனைக் கொள்ள முடியும். 'மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ' என்று தன்காலச் சோழ மன்னனை நோக்கிக் கம்பரே ஒரு சமயம் பாட நேர்ந்தது என்ற கதையையும் இவற்றோடு சேர்த்துப் படிக்க முடியும்.

சித்தர் பாடல்கள்

பழந்தமிழ் இலக்கியப் பரப்பை பார்த்துவரும் போது சித்தர் பாடல்கள் என்ற அற்புதக் கலைச் செல்வத்தை நாம் புறக்கணித்து விட முடியாது. திருமூலரைச் சித்தர் மரபின் முதல்வராகக் கூறிக் கொண்டாலும் இம்மரபு அதற்கும் முற்பட்டது என்பதை நாம் மறுக்க இயலாது. வாழையடி வாழையாகத் தொடரும் திருக்கூட்டம் என்று சித்தர் மரபைக் குறிப்பிடுவது பொருத்தம். சாதி, சமயம், சடங்குகள் என்று சமூகம் இறுகி விடக் கூடிய காலங்களில் சாதி, சமயச் சடங்குக் கட்டுக்களை உடைத்தெறிந்து விட்டுச் சுதந்திர வெளியில் உலவியவர்கள் சித்தர்கள். மக்களுக்கு மிக மிக நெருக்கமானவர்கள் சித்தர்கள். மருத்துவம், வானவியல் முதலிய பல்வேறு துறைகளில் பேரறிவு வாய்க்கப் பெற்றவர்கள் இவர்கள். யோகம் முதலியவற்றில் சாதனைகள் இவர்களுக்குச் சாதாரணம் என்று கூறி விடலாம். ஆற்றல்கள் பலவற்றைத் தமக்குள் அடக்கிக் கொண்டு எளிய கோலத்தில் 'தாவாரம் இல்லை தனக்கு ஒரு வீடில்லை தேவாரம் ஏதுக்கடி' என்ற திரிந்தவர்கள். உண்மை காணத் தேர்ச்சி உடையவர்களாகிய இவர்கள் பேய்போல் திரிந்தனர்; பிணம் போல் கிடந்தனர்; பிச்சையெல்லாம் நாய் போல் தின்றனர்; நரி போல் உழன்றனர்; நன்மங்கையரைத் தாய் போல் கருதினர். அனைவர்க்கும் தாய்மை சொல்லிச் சேய்போல் இருந்தனர்; ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கினர்; சாத்திரங்கள் கோத்திரங்கள் முதலியவற்றை அவற்றின் இறுதி பார்த்து உதறியவர்கள்; நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் என்று கண்டவர்கள்; கோயிலும் மனத்துள்ளே குளங்களும் மனத்துள்ளே என்றவர்கள்; கட்டையாலும் கல்லினாலும் மட்டையாலும் மஞ்சளாலும் சட்டையாலும் சாணியாலும் செய்யப்படும் தெய்வ உருவங்களை உதறியவர்கள்; வெட்ட வெளியே தெய்வம் என்று கண்டவர்கள்; அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார், அன்பே சிவம் ஆவதை அறிந்தவர்கள்;

தேகமே சிவலாயம் என்று கொண்டாடியவர்கள்; காசிக்கு ஓடில் வினைபோமோ? கங்கை ஆடில் கதிதானுண்டோ? என்று கேள்வி எழுப்பியவர்கள்.

இவ்வகையில் சித்தர்கள் கலகக்காரர்கள். புரட்சிக்காரர்கள். நிறுவன வடிவில் எழுந்த சமயங்களுக்கு இவர்கள் சாவு மணி அடிக்கக் கிளம்பினார்கள். மனிதனைச் சாதி சமயக் கட்டுகளில் தளையிட்ட காலந்தோறும் அத்தளைகளைத் தகர்த்து மனிதனை விடுவிப்பவர்கள் இவர்கள். சமயக்கோலம் தாங்கிய எவரும் இவர்களுக்கு முன்னிற்க அஞ்சுவர். கூர்ந்து பார்த்தால் உலகில் அன்பு நேர்மை மனிதர்களுக்கிடையில் சமத்துவம் சமரசம் முதலியவற்றைக் காப்பாற்றத் துணிவு கொண்டவர்கள் இவர்கள் தாம் என்பதை அறிய முடியும். செல்வம் அதிகாரம் இவர்களிடம் அறவே செல்லுபடியாகா. இறைவனை இவர்கள் மறுத்தவர்களில்லை. இறைவனை எங்கும் கண்டவர்கள். எல்லாவற்றையும் இறை நிலையில் வைத்துக் கண்டவர்கள். இறைவன் மகிழ்ந்துறையும் இடம் தங்கள் இதயம் என்றும் கண்டவர்கள். இவர்கள் கண்ட தெய்வத்திற்கு உருவம் இல்லை. பெயர் இல்லை. குடும்பம் குழந்தைகள் இல்லை. அன்பே தெய்வம். தங்கள் உள்ளுணர்வே தெய்வம். நெடுங்காலமாகச் சமயங்கள் கூறிவரும் இறைமை முக்தி நிர்வாணம் முதலியவற்றை மனிதர்கள் நுண்ணிலைக்குக் கொண்டு வந்து - மனித மேன்மையில் தூய்மையில் அன்பில் இவற்றைக் கரைத்தவர்கள் சித்தர்கள். அடுத்தவர்க்கு அன்புசெய்; தூய்மையோடு இரு; உறவில் மகிழ்ச்சி கொள்; அதுவே இறைமை என்று கூறி இறைமைக்கும் தேவையில்லை என்று ஆக்கி விடக் கூடியவர்கள். தெய்வத்தை மனிதன் தனக்குள்ளிருந்துதான் தோற்றுவித்தான். அதே தெய்வத்தைத் தனக்குள் சேகரித்துக் கொண்டு, தெய்வத்திற்குக் கூறப்பட்டதாகிய அனைத்து ஆற்றல்கள், குணங்கள் முதலியவற்றை உடையவனாகி உயரும்போது மனிதன் நிமிர்ந்து நிற்கிறான். தெய்வங்களை இல்லையென்றாக்கி - தேவையில்லை, உண்மையில்லை என்றாக்கி இத்தகைய சாதனை நோக்கி உயர்ந்தவர்கள் சித்தர்கள்.

இவர்கள் எல்லாச் சமூகங்களிலும் காலந்தோறும் உள்ளவர்கள். இவர்கள் எந்தச் சமூகத்திற்கும் உப்பாக வித்தாக ஒளியாக விளங்கக் கூடியவர்கள். கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகச் செய்பவர்கள் இவர்கள்.

பழந்தமிழ் இலக்கியப் பரப்பில் ஒருபாதிப் பகுதியை - சில உன்னத சிகரங்களைச் சுற்றி வந்த பிறகு

எளிய வாழ்க்கையில் தொடங்கினோம். அந்த வாழ்க்கை போதியதாக இல்லை என்று கருதி அரண்மனை வாழ்க்கை, காடுறை வாழ்க்கை, மறைவு வாழ்க்கை என்று பலவற்றை மேற்கொண்டோம். இடையிடையே நமக்குள்ளும் வெளியிலும் உள்ள பகையைக் கண்டோம். அதைக் களையும் போராட்டத்தில் ஈடுபட்டோம். உண்மை அறிய உண்மையாக வாழ அயராத முயற்சியுடன் அலைந்தோம். எல்லாம் முடிந்த பிறகு - திரும்ப நம் இருப்பிடங்களுக்கு - நம் மூலங்களுக்குத் திரும்புகிறோம் - பயணம் போராட்டம் பற்றிய அனுபவங்களோடும், உண்மை பற்றிய செறிவோடும், நாம் கண்டவை என்ன? கற்றுக் கொண்டவை என்ன?

ஓர் எளிய வாழ்க்கை. உண்மையை நேருக்கு நேர் கண்டு அனுபவிக்கும் வாழ்க்கை. நமக்கு என்று இந்த வாழ்க்கை இல்லை. எல்லோருக்குமான வாழ்க்கை. அரண்மனை வாழ்க்கை நமக்கு வேண்டாம். எல்லோர்க்கும் எளிய வீடு. சுத்தமான வீடு. கூறை. அக்கிரமக்காரர்களின் உறவில் ஒரு வாழ்க்கை வேண்டாம். அவர்களை உரமாக்கித் தழைக்கும் ஒரு எளிய சிறு பூங்கா மாதிரி வாழ்க்கை - காடு மலைகள் சுற்றி நாம் கண்டது என்ன? எங்கே சென்றாலும் நம்மை - நம்மை நாமே தான் இழுத்துக் கொண்டு-சுமந்து கொண்டு செல்கிறோம். நமக்கு நாமே சுமையாகி விடுகிற வாழ்க்கை வேண்டாம். ஆதிக்கம்- அநியாயங்களுக்குத் துணைபோதல் - அறிவு அற்றுமயங்குதல் நமக்கு வேண்டாம். அந்த வாழ்க்கை நிறைவு தரக்கூடியதல்ல. நமது மதியில் அமுதத்தை விளைவிப்போம். இந்த அமுதம் எங்கோ - என்ற ஏமாற்றம் நமக்கு இனி இல்லை.

அறிவு வேண்டும். கூர்மையான அறிவு. அத்துடன் மக்கட் பண்பும் வேண்டும். இரண்டும் இரண்டறக் கலந்துவிட வேண்டும். யாதும் ஊர் யாவரும் கேளிர், நம்மைச் சுற்றி நடைபெறும் தீமைகள் நிலைப்பதிலும் அழிவதிலும் நமக்குப் பங்குண்டு. தீமைகள் ஒழிய தேரா மன்னா என்று திரண்டு நம்மைக் கொடுத்தாவது - இழந்தாவது சமூக நீதியை நிலை நாட்ட வேண்டும். மேற்கு வாயில் வறியேன் பெயர்கேன் என்று கண்ணகி பொருமிய அவலத்தில் பெருமிதம் உண்டு. தீமைகள் அழிந்த பிறகு - பகை என்று கருதப்பட்ட பாண்டியனும் தன் தவறு உணர்ந்த பிறகு தென்னவன் தீதிலன், யான்

அவன் தன் மகள் என்று கண்ணகி கூறுவதில் மேன்மை உண்டு. இராவணனாக சில சமூகச் சூழல்களே ஒருவனை உற்பத்தி செய்து விடுகின்றன. தன் மனத்தில் ஏறி இறுகிய சுமைகள் இராமன் அன்பினால் தன்னை விட்டுக் கழிந்த நிலையில் - இராவணன் முகம் மும்மடங்கு பொலிந்தது எனக்கூறும் கம்பர் கூற்றில் உண்மை உண்டு. ஆதிக்க உணர்வு அழிந்து ஓர் எளிய உண்மையானமனிதனாகி விடுவதில் பேரின்பம் - விடுதலை சாத்தியம். முத்தநாதன் பகைவன் - ஆயுதங்களால் வெல்லப் புறப்பட்டு முடியாத நிலையில் - வஞ்சகமாக முகம் மறைந்து வந்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான். தத்தா இவர் நமர் என்று தடுத்து பாதுகாப்பாக அவனைக் கொண்டு போய் விட்டுவா என்று கூறி, தத்தன் திரும்பிவரும் வரை உயிர் காத்து, முத்தநாதன் பாதுகாப்பாகச் சென்ற செய்தி அறிந்து மெய்ப்பொருள் நாயனார் உயிர்விடுகிறார். முத்தநாதன் வெற்றி இப்பொழுது சிறுமையாக ஆகிவிடுகிறது. மெய்ப்பொருள் நாயனார் மெய்ப் பொருள் அறிந்தவர் ஆகிறார்.

மன்னன் கட்டிய கோயில் குடமுழுக்கு விழாவுக்குச் செல்லாமல் பூசலார் என்ற எளிய பக்தர் கட்டிய மனக்கோயிலுக்கு இறைவன் எழுந்தருள வருகிறார். அரண்மனை அல்ல; பெருங்கோயிலும் அல்ல; ஏழையின் எளிய - தூய உள்ளம் இறைவன் வந்து தங்குதற்கேற்ற இடம் என்று கூறும் சேக்கிழார் கூற்றில் வாய்மை உண்டு. கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென் எங்கும் ஈசன் எனாதவர்க்கு என்று கேட்கும் கேள்வி முக்கியமானது. ஆ உரித்து தின்று உழலும் புலையரேனும் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே என்று கூறும் சமயம் மனித நேயம் பொருந்தியது.

சீவகன் வெற்றிகளை விட அவன் துறவு பெருமைக்குரியது. தன்னைக் காத்த யானை உயிர்விடும் தறுவாயில் அதன் காதில் மந்திரம் ஓதி அந்த யானைக்கு முக்தி வழங்கிய உதயணன் நல்லவன். இலக்கியம் முன் வைக்கும் கற்பனைக்குள் மேலும் செறிவான உண்மைகள் உண்டு. இறுதியில் நாம் எங்கே வந்து சேர்கிறோம்? நாம் மனிதர்கள்; வரலாற்றில் நாம் வளர்ந்து விரிந்து வருகிறோம். தீமைகள் கொடுமைகளில் நாம் சிதைகிறோம். தீமைகளோடு ஒத்துழைப்பதில் சிதைகிறோம். உழைப்பு நமக்கு இன்பம் தரும். உழைப்பு நமக்கு உயிர்ப்புத் தரும் காற்றுப் போல; அது போல உரிமை, சுதந்திரம். நாம் உலவ விரும்பும் வானைப் போல, நமக்குத் தளைகள் வேண்டாம். தளைகளைத் தயாரிப்பவர் நமக்கு வேண்டாம். சடங்குத் தளைகளிலிருந்து வெட்டி. அதிகாரத் தளைகள் வரை நமக்கு எதுவும் வேண்டாம். நாம் ஏழைகள் என்றாலும் தோழமை

நமக்குச் சுகம். இதற்கான சமூகச் சூழல் தேவை. நமக்கான வாழ்க்கை. தேவைகள் தூயனவாக இருக்கட்டும். இதில் யாரும் நஞ்சைச் கலக்க வேண்டாம். நஞ்சைக் கலப்பவர், தளைகளைத் தயாரிப்பவர் வலியவர். அவர்கள் கையில்தான் அதிகாரம். அப்படியானால் சுதந்திரமான தூயதான இசைநயம் பொருந்தியதான ஒரு உயர்வகை எளிய வாழ்க்கைக்காக வலியவரை எதிர்த்துப் போராடுவது நமக்கு இன்று வாழ்க்கையாகிறது. சிலுவைகள் சுமத்தப்படும் அந்தப் பெருமித வாழ்க்கை நமக்கு வாய்க்கட்டும் - எதிர்காலம் இனியதாக இருக்க.

இலக்கியங்களில் வேறு என்ன கற்று கொள்ளப்போகிறோம்? நாம் மனிதர்கள்; மனிதர்களாக இருக்க - இயங்கப் பாடுபடுவோம். அது இப்போதைக்குப் போதும். எதுகை மோனை அலங்காரங்கள் ஆணவத் தோரணைகள் இல்லாத அந்தக் கவிதை வாழ்க்கை என்று சாத்தியப்படும்?

முடிவுரையாகச் சில குறிப்புகள்

1. கட்டுரை தொடங்கியதிலிருந்து ஒரு கட்டத்தில் முடிக்கும் வரை என் பயணம் பற்றி முன்கூட்டியே திட்டம் எதுவும் இல்லை. சித்தர் பாடல்களைப் பற்றி எழுதும்போதுதான் திடீரென எனக்குள் ஒரு வெளிச்சம் - சங்க இலக்கியத்திலிருந்து தொடங்கிய பயணம் நிறைவுற்றது மாதிரி. தொடக்கம் - சில பல விளைவுகள் - ஏற்ற இறக்கங்கள் - இவற்றின் மூலம் சில அனுபவச் சேகரிப்புகள்- இறுதியாக ஒரு நிறைவில் எல்லாம் வந்து இணைந்த மாதிரி. அதாவது சங்க இலக்கியம் முதல் சித்தர் பாடல்கள் வரை, பல்வேறு பகுதிகளைக் கொண்ட ஓர் இலக்கிய அனுபவம் முழுமையாவதை உணர்ந்தேன். இது போதும் - இனிப் பயணம் தொடர்வதானால், திரும்பவும் பிரபந்தங்கள் வழியே சுற்றி வந்து இறுதியாகப் பாரதி பாடலில் வந்து கரையேற வேண்டும். அப்போதும், நிறைவு பிரச்சனைதான்.

எனக்குள் இப்படி ஒரு பயணம் செய்யத் தமிழ் இலக்கியம் - சங்க இலக்கியம் முதற் கொண்டு சித்தர் பாடல் வரையிலான தமிழ் இலக்கியம் பயன்பட்டிருக்கிறது என்றுதான் கூற வேண்டும். எனக்குள் இருக்கும் ஒரு வட்டம் - என்னை அறியாமல் அந்த வட்டத்தில் என் இலக்கிய உணர்வுகள் பொருந்தியிருக்கின்றன என்றுதான் கூறவேண்டும். நான் தமிழ் இலக்கிய வரலாறு எழுதினேனா என்றால் உறுதியாகக் கூறிவிடுவேன் - இல்லை என்று.

2. இலக்கியத்தின் சாரம் அறிந்து இரசித்திருக்கிறேன். இதனை உருவாக்கிய வரலாற்றுப் பின்னணியில் வைத்துப் பார்த்திருக்கின்றேனா? சுவையாக இருக்கிறது. ஆகவே, நான் நன்றாகச் சமைத்திருக்க வேண்டும். சமையல் இலக்கணம் எனக்குள் செறிந்திருக்க வேண்டும். இலக்கணம் பற்றிக் கேள்விகள் கேட்டால், சொல்லத் தெரியாத சமையல்காரன் மாதிரிதான்.

இலக்கியத்தில் சாரம், மாறி மாறி வந்திருக்கிறது. வரலாற்று நிலைகளுக்கேற்பத்தான இந்த மாறுதல் நிகழ்ந்திருக்க வேண்டும். மாறுதல் கால கட்டங்கள் பற்றி திட்டவட்டமான ஆய்வுகள் இல்லை. இல்லாத போது என்ன செய்ய முடியும்? ஆள் கிடைக்கவில்லை. கையெழுத்து கிடைக்கிறது. கையெழுத்தைக் கொண்டு ஆளைக் கண்டுபிடிப்பது மாதிரி, குறிப்பிட்ட இலக்கியம் வெளிப்படுத்தும் உச்சங்கள் கொண்டு பயணம் செய்யும் பரப்பை வரைய வேண்டும்.

தவிர, பல்வேறு இலக்கியங்களைப் பற்றிய படிப்பின்போது... எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துக் தொகுத்துப் பார்த்தால் இலக்கியத்தில் மிஞ்சுவது பார்வை மட்டுமே.50/60 ஆண்டுகள் வாழ்ந்த பிறகு, வாழ்க்கையைத் திருப்பிப் பார்க்கும் போது மிஞ்சும் உணர்வு மாதிரிதான் இது. இலக்கியத்தில் பல்வேறு உறுப்புக்களைப் பிரித்துப் போட்டுத் தனித்தனியாக இரசித்து முடித்து - தனித்தனி இரசனைகளின் சுவை குறைந்த பிறகு, மிஞ்சுவது ஓர் அனுபவம் மட்டும். அந்த அனுபவம்தான் சமூகநீதி - அதிலிருந்து பிரியாத சுவை உணர்வு. இதுவே வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் உரமாகிறது. எனது தமிழ் இலக்கிய இரசனையின் விளைவு இக்கட்டுரை.

3. மீள நினைத்துப் பார்க்கும் போது, தமிழ் இலக்கியப் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு இன்று மக்களின் குரல் வளையை நெரிக்க முடியாது. ஆர். எஸ். எஸ். இயக்கமோ வறட்டுத்தனமான தி.க. இயக்கமோ மக்களை வளைத்துக் கொள்ள முடியாது. சமயத்தில் மக்களை மூழ்கடிக்க முடியாது. முற்போக்குச் சக்திகள் நிதானமாகச் செயல்படமுடியுமானால் அவர்களின் நெறிக்கே தமிழ் இலக்கியம் பயன்பட முடியும். திருக்குறள் முதலிய நீதி நூல்களைச் சமதர்மக் கோட்பாட்டுக்கு எதிராக நிறுத்திவிட முடியாது. ஆரிய திராவிடப் பிரச்சனையை வைத்துக் கம்பராமாயணத்தை மக்களுக்கு எதிராக நிறுத்திவிட முடியாது. இது காவியம், வரலாறு அல்ல. தமிழ் இலக்கிய, தமிழ்ப் பண்பாட்டு ஆக்கத்துக்குச் சமணம், பௌத்தத்தின் பங்கை

மரியாதையுடன் அங்கீகரித்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாகப் பழங்காலம் முதற்கொண்டு தமிழ் இலக்கியத்திற்குள் மக்கள் சார்பான நெறி வலுவாகச் செயல்பட்டிருப்பதை அறியமுடியும்.

இடையில் ஒரு காலம் - தேசிய இன உணர்வெழுச்சி தேவைப் பட்ட நிலை. இந்து மத - ஆரியச் சார்பில் காங்கிரஸ் இயக்கம் செயல்பட்டபோது, தமிழ்த் தேசிய இன உணர்வெழுச்சி தி.க, தி.மு.க வினர்க்குச் சாதகமாகப் பயன்பட்டது. வரலாற்றுச் சக்தி இவர்களுக்குச் சாதகமாக இயங்கியது. காங்கிரஸ் இயக்கம் சாதி எதிர்ப்புச் சக்தியாக ஏற்றத்தாழ்வை ஒழிக்கக் கூடியதாக இல்லை. தமிழ் இலக்கியம் வெளிப்படுத்தும் பல ஆக்கக்கூறுகள் தி.க. தி.மு.க. வினர்க்கே சாதகமாயிற்று.

தி.க.வின் கடவுள் மறுப்புக் கோட்பாடு கூட, தமிழ் நெறியிலிருந்தே - சித்தர் நெறியிலிருந்தே வகுக்க முடியும். பெரியாருக்கு இம்முறையில் முன்னோடி - முன்னவர் இராமலிங்கர்தான். இந்த நெறியைத் தமிழக வரலாற்றில் நெடுந் தொலைவு கொண்டு செல்ல முடியும். சமணம், பௌத்தம், ஆகியவை தமிழர்களின் முதற்கால நெறிகள். நிச்சயம், சமயவாதம் பேசி, அதுவே தமிழர் நெறி என்று சாதிக்க முடியாது. கடவுள் மறுப்புக் கூடத் தமிழர் நெறி என்று சாதிக்க முடியாது. மக்கட் சார்பில், மனிதனுக்குள்ளிருந்தே கடவுள் என்பதைத் தமிழர் நெறியாகக் காட்ட முடியும்.

கூர்மையான சில விமர்சனங்கள் மூலம் தமிழர் நெறி என்பதை சோசலிசம் நோக்கிய நெறியாக நாம் உருவமைத்துக் கொள்ள முடியும்.

தமிழகக் கோவில்கள், சிற்பங்கள், இசைப்பாடல்கள் தமிழர்கள் எல்லோருக்கும் சொந்தம். சைவர்களுக்குத்தான் என்பது உண்மையில்லை. இந்தக் கோவில் சிற்பங்களை உருவாக்கியவர் எங்கள் முன்னோர். புதுக்கவிஞர் ஒரு கவிதையில் கூறியபடி, இந்தக் கோவில்களுக்கு வாணம் தோண்டியவர் எங்கள் முப்பாட்டன். தமிழ்க் கடவுளர்களுக்குள் திரண்டிருக்கும் சக்தி எங்கள் முன்னோர்கள் சக்தி. இவர்களுக்கு நேர் வாரிசு நாங்கள்தான். எங்கள் சக்திகளை நாங்கள் மீட்டுக் கொள்ள வேண்டும். சுரண்டல்காரர்களை - ஆதிக்கவாதிகளைக் காப்பாற்ற முனைபவர்களுக்கு எங்கள் கோயில்களும், கடவுளர்களும் கோட்பாடுகளும் ஆதாரமாக - ஆதரவாக இருக்க முடியாது. வாழ்க்கையைத் தேடி அலைந்த எங்கள் முன்னோர்களின் அழுகையே திருவாசகமும் தேவாரமும் எங்களை எங்களிடமிருந்தே பறிக்கும் முயற்சி, இந்த நூற்றாண்டில் செல்லுபடி ஆகாது.

எல்லாக் கவிதையும் - பழங்கவிதை, புதுக்கவிதை எதுவாயினும் இறுதியில் எங்களுக்குள் கலந்து, கரைந்து - இரண்டென இல்லாமல் ஒன்றாகிறோம். எங்கள் கவிதையில் எங்களைப் பார்த்துப் பரவசப்படுகிறோம்; வேதனைப்படுகிறோம்; கிளர்ந்தெழுகிறோம். எங்களுக்கான வாழ்க்கையை - உலகத்தைப் படைத்துக் கொள்வது நோக்கி நாங்களும் எங்கள் கவிதைகளும் இயங்குகிறோம்.

3

தமிழின் தனி நிறம்

கவிஞர் வைரமுத்து அவர்களின் கவிதைத் தொகுப்புகளில் ஒன்று தமிழுக்கு நிறமுண்டு. 1997-இல் வெளிவந்த இந்தக் கவிதைத் தொகுப்பில் தமிழைப் பற்றிக் கவிஞர் பாடிய பாடல்கள் சில என்றாலும், இத்தொகுப்பில் உள்ள பிற கவிதைகளும் தமிழ்க் கவிதைகளின் தனிநிறம் பற்றியவைதான் என்பதில் அய்யமில்லை. தமிழ்க் கவிஞன் சாதியை ஒப்புக் கொள்ள முடியாது. மதங்களின் பெயரால் நடைபெறும் வம்பு வழக்குகளை ஏற்க முடியாது. மனித நீதியோடு ஒத்தியங்கும் தெய்வங்களைத்தான் மனிதன் மதிக்க முடியும். தனி உடைமையின் கொடுமைகளைத் தமிழன் ஏற்க முடியாது. சகோதரத்துவம் மற்றும் சமத்துவம் தான் தமிழின் உயிர் மூச்சாக (இலக்காக) இருக்க முடியும். இம்முறையில் தமிழன் வள்ளுவரின் அறத்தைத் தழுவிக் கொள்ளுகிற பொழுதே மார்க்சோடும், நபிகள் நாயகத்தோடும், காந்தியோடும் உறவு கொள்ள முடியும். இத்தகைய உறவின் மூலம் தான் தமிழன் தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ள முடியும். மேற்குலத்திற்குக் கீழை உலகம் அடிமைப்பட வேண்டியதில்லை. புறம்போக்கு நிலத்தில் ஏழைகள் கட்டியுள்ள வீடுகளை அதிகாரிகள் அழிக்கும் கொடுமையைத் தமிழன் ஏற்க மாட்டான். பாபர் மசூதித் தகர்ப்பைத் தமிழன் என்றும் ஏற்க முடியாது. சேரிகளை வைத்துக் கொண்டு தாஜ்மகாலின் அழகைத் தமிழன் போற்ற முடியாது. மூடநம்பிக்கைகளை எதிர்ப்பதாகச்

சொல்லும் தமிழன் மந்திரிகளிடம் மனுக் கொடுப்பதை ஏற்க முடியாது. சமதர்மம் இல்லாமல் மனிதனுக்கு நல்வாழ்வு இல்லை. இவற்றையெல்லாம் கவிஞர் வைரமுத்து அவர்களின் இந்தக் கவிதைத் தொகுப்பில் பெரும்பாலான கவிதைகளில் நாம் காணுகிறோம். இவை தமிழின் தனிநிறங்கள் என்று கவிஞர் சொல்வதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். தமிழின் தனிநிறத்தில் மேலும் சில வண்ணங்களைச் சேர்க்கிற கவிஞரை நாம் பாராட்ட முடியும்.

இந்தத் தொகுப்பில் இடம் பெறும் கவிஞரின் முன்னுரை குறித்து நாம் முக்கியமாய்ச் சிலவற்றைச் சொல்ல வேண்டும். தமிழின் இலக்கிய வரலாறு குறித்து எத்தனையோ அறிஞர்கள் எழுதியுள்ளனர். இலக்கிற வரலாறு எழுதும் அறிஞர் ஒவ்வொருவரும் தமிழின் சில அரிய தடங்களைக் கண்டறிந்து சொல்கின்றனர். தமிழனுக்குச் சாதி இல்லை, மதம் இல்லை என்றெல்லாம் இவர்கள் தமிழின் வரலாறு எழுதுகின்றனர். வரலாறு என்ற முறையில் நூற்றுக்கணக்கான பக்கங்கள் எழுதித்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒரு சிறிய கட்டுரையில் தமிழின்/ தமிழ் இலக்கியத்தின் வரலாற்றை அதன் தனித்தன்மையைக் கவிஞர் இந்த முன்னுரையில் அழுத்தமாககக் கூறியுள்ளார். இந்த முன்னுரைக்காகவும் இந்த நூலைத் தமிழார்வலர்கள் விரும்பி வாசிக்க முடியும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழின் வரலாற்றுக் காலம் முழுவதிலும் தமிழின் தனிநிறம் அழியவில்லை என்கிறார் கவிஞர். அரசியல் என்ற வடிவத்திலும், பண்பாட்டுக் களத்திலும் தமிழின் மீது எத்தனையோ படையெடுப்புக்கள் நடைபெற்றன. படையெடுப்புகளின் போது தாழ்ந்திருந்த தமிழனின் தலை மீண்டும் நிமிர முடிந்தது என்கிறார் கவிஞர். தமிழுக்குள் இருக்கிற தனி ஆற்றல் இதற்குக் காரணம். வள்ளுவர், இளங்கோ முதலியவர்கள் தமிழின் வித்துகளாக, வேர்களாகத் தமிழ் வரலாற்றில் ஆழமாகப் பதிந்துள்ளனர். இத்தகையர்வகள் இருக்கும் வரை தமிழுக்கு அழிவில்லை என்பது கவிஞர் கருத்தாகலாம். சமணம், பவுத்தம் வருகையினால் சற்றுத் தாழ்ந்த தமிழனின் தலை சைவசமய எழுச்சியின் வழியே நிமிர்ந்தது என்ற முறையில் கவிஞர் சொல்லும் பொழுது நமக்குள் கொஞ்சம் நெருடுகிறது. ஆரியர்களின் ஊடுருவலால் வர்ணங்களும், சாதிகளும் தமிழனின் தன்மானத்தையும் தனிவாழ்வையும் அழித்தன என்று கவிஞர் உரத்துச் சொல்லுகிறார். தமிழன் வரலாற்றைப் பெரியாரியம் இப்படித்தான் நமக்குக் கற்பித்துள்ளது.

'தீதும் நன்றும் பிறர் தரவாரா' என்பதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தந்த விளக்கம் நம்முள் ஏறவில்லை. நான் மிக நல்லவன் அடுத்தவன் தான் என்னைக் கெடுத்தான் என்பது சந்தர்ப்பவாத வெற்றுரை. மேலும் ஒன்று : இரண்டாம் குலோத்துங்கன் காலம் முதல் தெலுங்கர் ஆட்சி தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவித் தமிழனின் அரசியல், பொருளியல் முதலியவற்றைச் சிதைத்தது என்பது ஒரு முக்கியமான வரலாற்று உண்மை என்று அறிஞர் பலர் இன்று பேசுகின்றனர். இது குறித்துக் கவிஞர் வைரமுத்து அவர்களின் கருத்து என்ன என்பது இந்த முன்னுரையில் இல்லை. எனினும் இன்னொரு அரிய உண்மையினைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர். சுந்தரபாண்டியன் வடக்கில் தலைவைத்தான். மாலிக்காபூரை அழைத்தான். அன்று வடக்கு நோக்கிச் சாய்ந்த தமிழன் தலை இன்று வரை நிமிரவே இல்லை என்று கவிஞர் சொல்லும் பொழுது நாம் அதிர்ச்சிக்கு ஆளாகிறோம். இஸ்லாமியர் - தமிழன் சேகரித்து வைத்த செல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போயினர். எதிர்க்க இயலாத தமிழன் தற்கொலை செய்து கொண்டான். தமிழனின் வரலாற்றில் இது மாபெரும் களங்கம். எனினும் இஸ்லாம் மூலம் தமிழனுக்குள் மீண்டும் சகோதரத்துவம் தழைத்தது என்கிறார் கவிஞர். சித்தர்களின் தோற்றத்தை இந்தச் சூழலில் வைத்துச் சொல்லுகிறார் கவிஞர். தமிழ் இலக்கிய வரலாற்றின் தடம் இங்கு நேர்படுகிறது என்பதில் அய்யமில்லை.

பாரதியைப் பற்றிக் கவிஞர் அற்புதமாக ஒன்றைச் சொல்லுகிறார். 20 நூற்றாண்டுகளின் தமிழ் இலக்கியம் பாரதியை எதிர்பார்த்து நின்றது என்கிறார். பாரதத் தாய் தவம் இருந்தாள் என்று சொல்லுவதும் பொருந்தும். பாரதியின் மூலம் தமிழ் இலக்கியம் மாபெரும் புத்துயிர்ப்பைக் கண்டது என்பது கவிஞரின் கருத்துரை. வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும், பாரதிக்குள் மீண்டும் உயிர்ப்புக் கொண்டனர். 20 நூற்றாண்டுகளின் தமிழ் இலக்கிய வரலாற்றின் உண்மைப் பொருளைப் பாரதி மூலம் கற்றுக் கொள்கிறோம் என்பதில் அய்யமில்லை.

இந்த முன்னுரையில் இடம் பெறும் இன்னொரு முக்கியக் கருத்தை இறுதியாகக் குறிப்பிட வேண்டும். தமிழின் இலக்கிய வரலாற்றுப் பற்றிச் சொல்லும் பொழுது கவிஞர் வைரமுத்து அவர்களுக்குள் விரிவு பெறும் உலகப் பார்வை குறித்து இங்கு சொல்ல வேண்டும். மேற்குலக வரலாற்றுலகப் போக்கையும், கிழக்குலக

வரலாற்றுப் போக்கையும் ஒப்பிட்டுத் தொடர்ந்து சிலவற்றைச் சொல்கிறார். மேற்குலகின் மேன்மை, கிழக்குலகின் தாழ்ச்சி என்பதில் கவிஞர் தன்னை இழந்து விடவில்லை. கிழக்குலகின் வெற்றி குறித்தும் பேசுகிறார். ஞானத்தீ என்ற கவிதையிலும் இது குறித்துச் சொல்லுகிறார். மேற்குலகின் நெருப்பு தொழிற்புரட்சியைத் தோற்றுவித்தது. கிழக்குலகின் நெருப்பு வருணாசிரம வேள்விகளுக்குப் பயன்பட்டது. தமிழர்களை எரியில் இட்டது. இப்படிச் சொல்லி வரும் கவிஞர் கண்ணகியின் நெஞ்சில் இருந்த கனல் குறித்துச் சொல்லுகிறார். இன்னும் நமக்குள் எரியும் ஞானத்தீ குறித்துச் சொல்லுகிறார். தமிழின் வரலாற்றுக்குப் புது வெளிச்சம் பாய்ச்சியவர் என்ற வகையில் வைரமுத்து அவர்கள் மேன்மைக்கு உரியவர் என்பதில் அய்யமில்லை.

தமிழ் மன்னர்கள் என்ற முறையில் ராஜராஜ சோழன் முதலியவர்களை வைரமுத்து பாராட்டுவது குறித்து இங்கு இறுதியாக ஒன்றைச் சொல்லலாம். மன்னர்களைப் பாராட்டும் மரபை நாம் கடந்து வந்து விட்டோம். ராஜராஜ சோழனுக்கு விழா எடுக்கும் நம்கால மன்னர்கள் குறித்து நமக்கு மரியாதை இல்லை. ராஜராஜ சோழன் முதலியவர்களை வரலாற்றுச் சூழலில் வைத்து மதிப்பிட நமக்குத் தெரிய வேண்டும். வரலாற்றுச் சூழலுக்கு வெளியில் கொண்டுவந்து நம்கால வரலாற்றை நாமே பார்க்கத் தவறி விடக்கூடாது. இது சமத்துவ உலகம். ஜனநாயக உலகம். இங்கு எல்லோரும் ஓர் நிறை. ஏற்றத்தாழ்வுகளை இன்று நாம் மதிக்க முடியாது. வைரமுத்து அவர்களுக்கும் இந்த உண்மை புரியும். வலங்கை, இடங்கை மோதல்கள் குறித்தும் கவிஞர் குறிப்பிடுகிறார்.

இத்தொகுப்பில் இடம் பெறும் கவிதைகள் குறித்து இங்கு சிலவற்றைச் சொல்ல வேண்டும். இன்றைய தமிழகச் சூழலில் கவிஞர் அவர்கள் கடுமையான திறனாய்வுக்கு உள்ளாகி வருகிறார் என்பதை இங்கு நாம் நினைக்க வேண்டியதில்லை. காலங்காலமாய்த் தமிழ் இலக்கியம் சொல்லாதது எதைக் கவிஞர் சொல்லிவிட்டார்? என்று கேட்கிறார்கள். தமிழ் இலக்கியத்திலிருந்து அங்கங்கே சில வரிகளைக் கவிஞர் எடுத்துக் கொண்டு விரிவுரை தானே செய்கிறார் என்று கூறுகிறார்கள். கவிஞர் கண்ணதாசன் அவர்களிடமும் இத்தகைய குறைகளைச் சில நண்பர்கள் கண்டனர். வள்ளுவர் சொல்லாததை இன்று எவன் சொல்லி விட்டான்? என்று கேட்பது மாதிரி இந்தக் கேள்விகள். சாதி, மதங்கள் மற்றும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் வரை சமத்துவப் பாடலை மீண்டும், மீண்டும் புதிய புதிய வடிவங்களில், புதிய

புதிய ராகங்களில் சொல்லத்தான் வேண்டும். எத்தனையோ இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மூலிகைச் செடிகள் இன்றும் நம் நோய் தீர்க்கின்றன. வள்ளுவர் நெஞ்சத்தை ஈர்த்த நிலா இன்றும் நம் நெஞ்சைக் கவராமல் இல்லை. இலக்கியம் இப்படித்தான் ஒவ்வொரு தலைமுறையிலும் புதியதாகத் தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது. வைரமுத்து அவர்களும் பழந்தமிழ்க்கவிதைக்கு உயிர் தருகிறார். புதிய உயிர் தருகிறார். இந்தத் தொகுப்பில் எத்தனையோ கவிதைகள் இந்த உண்மையை மெய்ப்பிக்கின்றன. தமிழ்த்தாய் வாழ்த்து என்ற முதல் கவிதை எத்தனை வித்தியாசமான, ஆனால் அழகிய கவிதை. அதேபோல் இத்தொகுப்பில் மேலும் பல கவிதைகள்.

கவிஞர் எழுத்தில் ஆபாசம் கொப்பளிக்கிறது என்பது இன்னொரு குற்றச்சாட்டு. இந்தத் தொகுப்பிலிருந்தும் இரண்டொரு கவிதைகளை இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக்க முடியும். குழந்தையோடு தாய் கொஞ்சுவதாக முடிவு பெறும் கவிதையில் சில வரிகளை இப்படிச் சொல்லலாம்.

இப்பொழுது நேரடியாகப் பேசலாம். ஆபாசம் இல்லாத மனிதன் என்று எவனும் இல்லை. ஆபாசம் வெளிப்படையாக இருக்க வேண்டாம் என்பது இவர்கள் குரல். மறைத்துச் செய்யலாம் என்பது இவர்கள் உள்ளூறை. எதை மறைக்க வேண்டும் வெளிப்படையாகப் பேசுங்கள் என்பது நம் காலத்தின் புதிய குரல். துறவிகள் மறைத்துச் செய்கிறார்கள். கம்யூனிஸ்ட்கள் மறைவாகச் செய்கிறார்கள். எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசத்தான் வேண்டும். காமத்தை மட்டும்தான் வெளிப்படையாகப் பேச வேண்டும் என்பது இல்லை. துறவிகளும் கொள்ளையடிக்கிறார்கள். சொத்து சேர்க்கிறார்கள். சாதி பார்க்கிறார்கள். கம்யூனிஸ்ட்களும் இதையே செய்கிறார்கள். இவையெல்லாம் ஆபாசம்தான்: முதலாளியம் தான் இதற்கெல்லாம் மூலவித்து. காமம் முதலியவற்றை வளர்ப்பதன் மூலம் தன் வணிகத்தை விரிவுபடுத்துகிறது முதலாளியம். புரட்சிகர உணர்வை இளைஞர்கள் பெறாமல் ஆபாசங்களுக்கு விளம்பரம் தந்து அரசியல் நடத்துகிறது முதலாளியம். வைரமுத்து அவர்களின் பல புதிய வடிவங்கள். கேட்டேன் கேட்டேன் என்று தொடர்கிறது ஒரு கவிதை. கவிதைகளில் வெளிப்படும் ஆபாசம் முதலாளியம் ஊக்குவிக்கிற ஆபாசம். ஆபாசம் மட்டும்தான் கவிஞரின் கருப்பொருள் என்பது உண்மை இல்லை. காதல் உணர்வை இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மனிதன் இழந்து விட முடியாது. ஆயிரம் வகைகளில்

பாடினாலும் புதிது புதிதாகத் தழைக்கிற காதலுக்கு மேலும் புதுப்புது வடிவங்கள் தேவை. காதலின் நுட்பங்கள் அளவில்லாதவை. கம்பர் பாடி முடிக்காததை பாரதி பாடுகிறார். பாரதிதாசன் பாடுகிறார். கண்ணதாசனும். வைரமுத்துவும் பாடுகிறார்கள்.

காதலைப் பாடுவதோடு எந்தக் கவிஞனும் நிற்பதில்லை. காதலைப் பாடும் பொழுதும் கவிஞனுக்குள் செழித்துள்ள தத்துவப் பார்வை அங்கங்கே கிளை விரிக்கும். வைரமுத்து அவர்களின் கவிதைக்குள் இந்தக் கிளைகளும் அடர்த்தியாகவே பூத்துள்ளன. எங்கோ மனம் வைத்து இதையெல்லாம் திறனாய்வு என்ற பெயரில் நாம் இழந்துவிட வேண்டியதில்லை. முதலாளியத்தை நிலப் பிரபுத்துவத்தை, மதம் முதலிய ஆதிக்கங்களை நமக்குள்ளிருந்து களைந்தெறிவதில்தான் நம் கவனம் இருக்க வேண்டும். வைரமுத்து அவர்களைக் குற்றம் சொல்லி நம் குற்றங்களை நாம் மறைக்க வேண்டியதில்லை.

இடையில் வந்த தடைகளை நீக்கிய பிறகு கவிதைகளைக் காண்பது நமக்கு இனிய அனுபவம். தமிழ்க் கவிதைகளில் தொடர்ந்து புதிய வடிவங்களைச் சேர்க்கிறார் கவிஞர் வைரமுத்து. சின்னச் சின்ன ஆசை என்று இவர் படைத்த கவிதை வடிவத்தை இளம் கவிஞர்கள் பலர் பின்பற்றுகிறார்கள். எல்லா மலரினுள்ளும் வாழ்க்கை எத்தனையோ புதிய புதிய அனுபவங்களை வழங்கியுள்ளது. இந்தப் புதுமையின் நுட்பங்களைச் சொல்வதற்குப் புதிய வடிவங்கள் தேவைப்படுகிறன்றன. இந்தத் தொகுப்பிலும் மேலும் சில புதிய வடிவங்கள். "கேட்டேன் கேட்டேன்" என்று தொடர்கிறது ஒரு கவிதை. இருபது கட்டளைகள் என்று ஒரு கவிதை. இன்னும் இவை போன்ற கவிதைக்கான புதிய வடிவங்கள் ஒவ்வொரு வடிவத்தையும் திரும்பத் திரும்பப் பயன்படுத்தும் பொழுது சடங்காகி விடும் என்ற எச்சரிக்கை உணர்வை நாம் இழந்து விடக்கூடாது.

ஒவ்வொருவரின் அறிவு வளம், கலையுணர்வு வளம் ஆகியவற்றிற்கு ஏற்ற வகையில் கோடி நுட்பங்கள் கூடிவரும். இந்த நுட்பங்கள் ரைவமுத்து அவர்களிடம் கொள்ளை, கொள்ளையாகச் சேர்ந்திருக்கினறன. நம் காலச் சூழலில் வைரமுத்து அவர்களை இன்றியமையாத கவிஞர் எனச் சொல்லுவதற்கு இதுவே காரணம்.

நதிகள் காணாமல் போவது நம் காலத்து வரலாறு. 20 - 30 ஆண்டுகள் கழித்துச் சொந்த ஊருக்குச் செல்லும் பொழுது நமக்குள் ஏற்படும் சோகங்களுக்கு அளவில்லை. நண்பர்கள், உறவினர்கள்

தொலைந்து போய்விட்டனர். நம் பார்த்த ஆறுகள் இல்லை. முன்னர் பார்த்த ஆறு இடையில் கால்வாய் ஆகி இப்பொழுது வாய்க்காலாகி விட்டது. முன்னர் பார்த்த பாலைப் புதர்கள் இல்லை. பட்டாம்பூச்சி இல்லை. முன்னர் பாடிய பறவைகள் இல்லை. எல்லாம் எங்கே போயின? யார் கொண்டு போனார்கள்? இந்தச் சோகம் கவிஞருக்கும் உரியதுதான். சில கவிதைகள் இந்தச் சோகத்தை வெளிப்படுத்துகின்றன. நம் கால வரலாறு மற்றும் சமூக நெருக்கடிகளிலிருந்து இன்னும் இவை போன்ற பல கவிதைகள் பிறப்பெடுக்கின்றன. கவிஞர் வைரமுத்துவும் வாழ்வியல் அனுபவங்கள் சிலவற்றை அங்கங்கே பதிவு செய்துள்ளார். மாஸ்கோ ரயிலில் ஓர் அனுபவம். காரல் மார்க்சு கல்லறையை லண்டனில் பார்த்த போது ஒரு அனுபவம். இப்படி மேலும் பல அனுபவங்கள். 25 அண்டுகளாகத் தம் மனத்தில் பதிந்திருந்த காதலியை மீண்டும் பார்க்கிற அனுபவம்.

எந்த ஒரு கவிஞனுக்குள்ளும் கவிதை எங்கிருந்து பிறக்கிறது? எப்படிப் பிறக்கிறது? என்பதை அறிந்து கொள்ள அவரது கவிதைக்குள் தேடுகிறோம். கவிஞனோடு அல்லது கவிதையோடு நாம் இப்படித்தான் உறவு கொள்கிறோம். நமக்குள்ளும் ஒரு கவிஞர் உண்டு. இந்தக் கவிஞன்தான் இன்னொரு கவிஞனுக்குள் தன்னைத் தேடுகிறான். நாமும் இப்படித்தான் தேடுகிறோம். வைரமுத்து எங்கிருந்து தன் கவிதைகளைத் தேர்ந்தெடுக்கிறார். ஆலமரத்தடியில் கவிஞர் அமர்ந்திருக்கிறார். மேலிருந்து விழும் ஓர் இலை தன் கதை சொல்கிறது. கவிதை சொல்கிறது. மரணம் இந்த நிலையை வாட்டவில்லை. எல்லா வகை இன்பங்களையும் பார்த்தது இந்த நிலை. இப்பொழுது தரையில் விழுகிறேன். மிண்டும் மண்ணோடு இணைந்து மரத்திற்கு உரமாவேன். மீண்டும் மரத்தில் இலையாய்த் துளிர்ப்பேன். எனக்கு மரணம் இல்லை என்கிறது இலை. இலை சொல்வது கவிதை மட்டுமல்ல; தத்துவமும். கவிதையும், தத்துவமும் இங்கு இரண்டறக் கலந்துவிட்டன. ஆன்மாவுக்கு அழிவில்லை என்று நாம் படித்திருக்கிறோம். இங்கு பார்க்கிறோம்.

பயணங்கள் குறித்து வைரமுத்து ஒரு கவிதை எழுதுகிறார். பயணங்களின் போது நீங்கள் தகவல்கள் வாசிக்கிறீர்கள். ஒலி நாடாக்களில் இசைப் பாடல்கள் கேட்கிறீர்கள். பலர் சேர்ந்து செல்கிறீர்கள். நான் தனித்துச் செல்கிறேன். எதையும் எடுத்துச் செல்வதில்லை. நதியின் ஓட்டம் கண்டு வியந்து நிற்கிறேன். மொட்டுக்கள் மலர்ந்து நிற்பதில் திளைத்து நிற்கிறேன்.

தொடுவானத்தில் மனம் பதிக்கிறேன். புல் நுனி இலையில் பனித்துளிகள் பார்க்கிறேன். புற்களை என்னால் மிதிக்க முடியாது. மலர்களை நான் வாசிக்கிறேன். பறவையின் பாடல் கேட்கிறேன். இற்று விழுந்த ஈசலின் சிறகுக்குள் தவிக்கிறேன். - இப்படியெல்லாம் கவிஞர் சொல்லும் பொழுது எங்கிருந்து எப்படிக் கவிதைகளைக் கவிஞர் எடுக்கிறார் என்பது புரிகிறது.

புறம் போக்கில் கட்டிய வீட்டை அதிகாரிகள் இடிக்கிறார்கள். தாய் கதறுகிறாள். உதவிக்குத் தந்தை இல்லை. மகன் இல்லை. அதிகாரிகள் வீட்டை இடிப்பது உறுதி. கடைசியாகத் தாய் கெஞ்சுகிறாள். கொல்லைப்புறத்தில் என் மகள் மல்லிகைக் கொடி வைத்து வளர்க்கிறாள். அருள் கூர்ந்து அதை அழித்து விடாதீர்கள். அந்த மல்லிகைக் கொடியின் பூ யாருடைய தலையிலாவது ஏறி அழகு பூக்கட்டும் என்கிறார். இன்குலாப்பின் பாடல் நம் நினைவிற்கு வருகிறது. தாயின் மனம் நமக்குப் புரிகிறது. தாய்க்குள் இருக்கும் ஒரு கவிஞன் நமக்குத் தெரிகிறான். இப்படி எல்லாம் கவிஞனுக்குள் கவிதை தேடிப் பார்க்க வேண்டும். நமக்குள் இருக்கும் கவிஞனை உயிர்ப்பிக்க வேண்டும். நாமும் நமக்கான கவிதை எழுத வேண்டும். தமிழ் நமக்குள்ளும் தழைக்கும். தனிநிறத்தோடு தமிழ் வளரும். பெரியாருக்குத் தமிழ்க் கவிதைகள் அதிகம் பிடிக்கும் என்று நாம் சொல்ல முடியாது. பாரதிதாசனுக்குக் கம்பரைப் பிடிக்கும். குமரகுருபரரைப் பிடிக்கும். தேவார திருவாசகங்களை யாராவது குறைத்துப் பேசினால் பாரதிதாசன் சினம் கொள்வார். பாரதிதாசனிடம் தமிழ் இவ்வாறு கனிந்திருந்தது. கடவுளைத் தமிழ் பாடியிருக்கிறது என்பதற்காகத் தமிழைப் பாரதிதாசன் நொந்து கொள்ளவில்லை. தமிழிலிருந்து தமிழ்க் கடவுளர்களை விலக்கி வைக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் பெரியார் நமக்குள் அழுத்தம் பெற்ற போது கடவுளர்களை விலக்கி வைத்தோம். கேலி செய்தோம். தமிழை இகழ்ந்தும் நம்மவரால் சொல்ல முடிந்தது. வள்ளுவருக்குள்ளும் தெய்வம் உண்டு. தெய்வத்தின் குணமும், குறையும் வள்ளுவருக்குத் தெரியும். மனினுக்குள்ளும் தெய்வத்தைக் கண்டார். புரோகிதர்களிடமிருந்து தெய்வங்களை நாம் தான் மீட்க வேண்டும். தெய்வங்களுக்குள் மனிதனை, வரலாற்றை, உண்மையை, பொய்யை, அறத்தை நாம்தான் காண வேண்டும். கவிஞர் வைரமுத்து தெய்வங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார். விநாயகனைக் கோபிக்கிறார். தந்தத்தை இரண்டாகப் பிளந்து எல்லோருக்கும் கற்றுத் தருவாயானால் உன் கோயிலுக்கு வருவேன். இப்படியே பல

தெய்வங்களோடு சண்டை பிடிக்கிறார். கவிஞரின் உணர்வை நாம் புரிந்து கொள்கிறோம். இராமர் தெய்வம் என்றால் பாபர் மசூதி இடித்ததை ஏற்றுக் கொள்வானா என்றும் நமக்குள் கேட்டுக் கொள்கிறோம். மனிதர்களோடு பிடிக்க வேண்டிய சண்டையைத் தெய்வங்களோடு நாம் பிடிக்க வேண்டியதில்லை. உண்மை தெரியாதவர் இப்படிச் சண்டைபோடலாம். இங்கெல்லாம் கவிதை சிறுத்துப் போகிறது. கவிதைக்குள் ஈரம் இல்லை. கவிதைக்குள் நேயம் இல்லை. கவிஞர் வைரமுத்து அவர்கள் கவனிக்க வேண்டும். பெரியாருக்குள் ஈரம் உண்டு. கருணை உண்டு. பெரியாருக்கும் கவிதை தெரியும். இது குறித்தும் கவிஞர் சிந்திக்க வேண்டும்.

வைரமுத்து மக்கள் கவிஞராகிவிட்டார். அவரை இனி மறுத்துப் பயனில்லை. என்னதான் மக்களின் எதிரிகள் பக்கம் வைரமுத்து அவர்களை நம் நண்பர்கள் சிலர் தள்ளினாலும், மக்களின் எதிரிகளோடு அவரால் வாழ முடியாது. வாழ்ந்து கவிதை செய்ய முடியாது. மக்களோடுதான் தமிழ் என்றும் இயங்கும். தமிழோடுதான் கவிஞர் வைரமுத்து அவர்களுக்கும் வாழ்வு. எதிரிகளோடு அவ்வப்போது கைகோர்த்துக் கொள்கிற வைரமுத்து அவர்களை நாம் வேண்டிக் கொள்கிறோம். எப்பொழுதும் எங்களோடு இரும்.

குறிப்பு: காவ்யா பதிப்பகத்தின் 'கவிஞர் வைரமுத்து இலக்கியத்தடம்' என்ற நூலில் இடம்பெற்ற கட்டுரை.

4

இருபத்தொன்றைத் தமிழ்க் கவிதை எப்படி எதிர்கொள்ளும் ?

1. இருபது நூற்றாண்டுகளுக்கு மேல் பலவகைப் பரிமாணங்களோடு வளர்ச்சி பெற்ற தமிழ்க் கவிதையை, இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் வைத்து நாம் சுவைக்கிறோம், புரிந்து கொள்கிறோம், பாராட்டுகிறோம், மதிப்பீடு செய்கிறோம். இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் தமிழியம் என்றும், பகுத்தறிவு என்றும், சமதர்மம் என்றும் நாம் பெற்றிருக்கும் பார்வைகளின் வழியே முந்திய நூற்றாண்டுகளின் கவிதையை நாம் படிக்கிறோம். பக்தி இலக்கியமும், புராண இலக்கியங்களும், பிரபந்தம் என்று சொல்லப்படும் பலவகை இலக்கியங்களும் நமக்கு எப்படியோ உவப்பாக இல்லை. யமகம், திரிபு என்ற முறையில் எழுதப்பட்ட கவிதைகளையும் நம்மால் சுவைக்க முடியவில்லை. எதுகை, மோனை, சீர், தளை, யாப்பு என்ற முறையில் எழுதப்பட்ட கவிதைகள்கூட நமக்குள் கேள்விகளை எழுப்பின. புதுக்கவிதை என்ற முறைக்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம்.

கவிதை குறித்து இப்பொழுது கூடுதலாக அறிந்திருக்கிறோம். கவித்துவம் பற்றி இப்பொழுது பேசுகிறோம். கவிதை இல்லாமல் மனிதன் இல்லை. ஒற்றைப் பரிமாணத்தில் மட்டும் கவிதைகள் வெளிப்படுவதில்லை. மனிதனின் ஆக்கத்திறன்களில் ஒன்று கவிதை.

கண், காது, நுரையீரல், இதயம் போலவே கவிதையும் மனிதனுக்கு ஓர் உறுப்பு. காலந்தோறும் கவிதைக்குரிய இலக்கணம் மாறுபட்டு வந்திருக்கிறது. பகுத்தறிவு என்ற பார்வையை முன்நிறுத்தினால் தமிழ் நெடுங்கவிதையில் சில அற்புதங்கள் வெளிப்படும் என்பது உண்மைதான். ஆனால் அதேசமயம் தமிழ்க் கவிதையில் ஒரு பெரும் பகுதியை நாம் இழக்க நேரும். மனிதன் என்ற கருத்தாக்கத்தை முதன்மைப்படுத்தி புராணங்கள் முதலியவற்றையும் இன்று நம்மால் வாசிக்கமுடியும், புரிந்து கொள்ள முடியும். யமகம், திரிபு முதலியவற்றையும் ஒதுக்க வேண்டியதில்லை. பக்தி ஒரு பேருணர்வு. எல்லாக் காலங்களிலும் என்ன என்னவோ வடிவங்களில் பக்தி என்ற பேருணர்வு மனிதனுக்குள் செயல்பட்டுள்ளது? கடவுள், பல்வகைப் பிறப்பு, மேலுலகம், கீழுலகம், பாவ, புண்ணியங்கள் முதலியனவும் வரலாற்றுச் சூழலில் மனிதனுடைய படைப்புக்கள். எந்தச் சூழலில் இவ்வகைக் கருத்தாக்கங்கள் முன்னுக்கு வந்தன என்று இன்று ஆராய முடியும். இன்றைய சமகால உணர்வுகள் தேவைகள் முதலியவற்றை முன்நிறுத்தி பழங்கவிதைகள் கற்பது தவறில்லை. இப்படிக் கற்கும்பொழுது நம் உணர்வுக்கு ஒத்துவராத கருத்துக்கள், செய்யுட்கள், கலை முதலியவற்றை மனித வரலாற்றிலிருந்து ஒதுக்கி வைப்பதற்கான நியாயங்கள் இல்லை. நிதானமாகத்தான் இவற்றை எல்லாம் பார்க்க வேண்டி இருக்கிறது. நமது அவசரத் தேவைகள் எல்லாவற்றுக்குமான அளவுகோல்களாக இருக்க முடியாது.

2. நாட்டார் வழக்காற்றியல், தலித்தியம், பெண்ணியம், சூழலியம், நவீனத்துவம், பின்-நவீனத்துவம் என்றெல்லாம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நமக்குள் புதிய பார்வைகள் எழுந்துள்ளன. இவை எல்லாம் காலத்தின் தேவைகள் என்பதில் ஐயமில்லை. கவிதைக்குள்ளும் இவ்வகைப் பார்வைகள் பேசப்படுகின்றன. நெடுங்காலத் தமிழ்க் கவிதைக்குள்ளிருந்து இப்புதுவகைப் பார்வைகளின் வழியே சிலவற்றைப் பாராட்டுகிறோம். சிலவற்றை ஒதுக்கவும் செய்கிறோம். ஓர் அரசியல்வாதிக்கு இவ்வகை ஒதுக்கல்கள் தேவையாக இருக்கலாம். ஓர் இலக்கிய மாணவனுக்கு இவ்வகைப் போக்குத் தேவை இல்லை. இப்படிச் சொல்வதனால் நமக்குச் சமகால உணர்வு தேவை இல்லை என்பது பொருள் அல்ல. சமகால உணர்வின் இன்றியமையாத தேவையை இங்கு நான் வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை.

நாம் வாழும் உலகம் மிகச் சிக்கலான உலகம். பல திசைகளிலிருந்தும் நம்மை ஊடுருவி நம்மைப் பிளக்கிற உலகம். இப்படிப் பிளவுபட்ட நிலையில் நமக்கான தளம் எது என்றுகூட நம்மால் தீர்மானிக்க முடியவில்லை. முன்னைய உலகம் நம்மைக் கைவிட்டுப் போகிறது. முன்னைய உலகம் சார்ந்த எல்லாமே இன்று கேள்விக்குரியனவாக மாறிவிட்டன. இருபத்தோராம் நூற்றாண்டுக்குள் நாம் நுழைந்திருக்கிறோம்.

உலகமயமாதல், சந்தைப் பொருளாதாரம் என்றெல்லாம் இப்பொழுது பேசுகிறோம். உயிரித் தொழில் நுட்பங்கள் உயிரினங்களை மட்டுமல்லாமல் மனிதனையும் இனி என்னவோ செய்யமுடியும். கணிணி, இணையம் முதலியவை தொலைதூர உலகங்களையும் நம் கண்முன் ஒரு புள்ளியில் கொண்டுவரும். உலகமயம் என்ற முறையில் இனி மூலதனத்திற்குத்தான் உலகம் சொந்தம். நாடுகளுக்கு இடையில் எல்லைக் கோடுகளுக்கு இனி அர்த்தம் இல்லை. எந்த ஒரு நாட்டின் இறையாண்மையும் தன்னளவில் முழுமையான இறையாண்மையாகவும் இருக்க முடியாது.

உலகளவில் நடைபெறும் தொழில் பெருக்கம், வர்த்தகம், நவீன அறிவியல் தொழில் நுட்ப ஆய்வுகள் முதலியவற்றில் ஏழை நாடுகள் பெருத்த முதலாளிய நாடுகளோடு போட்டிபோடுவது எந்த வகையிலும் சாத்தியமில்லை. கணிதம், கணினி முதலிய கலைகளில் தேர்ந்த இளைஞர்களை தொழில் துறையில் மேம்பட்ட நாடுகள் ஈர்த்துக் கொள்கின்றன. அந்த நாடுகள் மேலும் மேலும் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. நம்மை அறியாமல் நாமும் ஒத்துழைக்கிறோம். பொருளியல் முதலியவற்றில் இதுவரை வளர்ச்சி பெற்ற நாடுகளின் ஆதிக்கம் இனியும் அதிகரிக்கும் இந்தக் கடுமையான போட்டிச் சூழலில் தாக்குப் பிடிக்க முடியுமென்று நாம் கனவுகள் காண முடியாது.

தமிழுக்கு இன்று கடுமையான நெருக்கடி நேர்ந்துள்ளது. தமிழ் மக்களுக்கு இன்று நேர்ந்துள்ள நெருக்கடிகளில் ஒரு கூறுதான் தமிழுக்கு நேர்ந்துள்ள நெருக்கடி. இந்த நெருக்கடி தீவிரப்படுவதற்கான காரணங்கள் நிறையவே உள்ளன. அந்நியர்களுக்கு நாம் அடிமைப்படுவது இப்பொழுது அதிகரித்திருக்கிறது. நம்மவர்களும் நம்மை அடிமைப்படுத்துவதில் முந்துகின்றனர். இந்தியாவில் கூட்டாட்சிக்கு இடம் இல்லை. மைய அரசே எல்லாவற்றையும் நிர்ணயம் செய்கிறது. மைய அரசைத்

தட்டிக் கேட்கும் மன உறுதியை நாம் இழந்துவிட்டோம். நம் தலைவர்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள். நமக்கு எதிர்காலம் உண்டு என்று கூசாமல் பொய் சொல்லுகிறார்கள். இந்தப் பொய்யை நம்பாதவர்களும் அவர்களோடு சேர்ந்து கொள்வதில் தம்மை வாழ்வித்துக் கொள்ள முடியுமென்று நம்புகிறார்கள். இந்தச் சூழல்பற்றி இன்னும் விரிவாகச் சொல்வதற்கில்லை.

3. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டுச் சூழலில் வைத்து தமிழ் பற்றி, தமிழ் இலக்கியம் பற்றி, தமிழ் வரலாறு பற்றி, தமிழ் மெய்யியல் பற்றி, தமிழ்க் கவிதை பற்றி நாம் பேச வேண்டி இருக்கிறது. கவிதைகள் இல்லாமல் நமக்கு முடியாது. இலக்கியம் இல்லாமல் முடியாது. சமூகப் பார்வை, சமதர்மப் பார்வை என்றெல்லாம் இல்லாமல் முடியாது. தமிழ் இல்லாமல் நமக்கு வாழ்வு இல்லை. தமிழைப் போலவே தமிழ் வரலாறு, தமிழ்க் கவிதை முதலியவற்றையும் நமக்குள் காப்பாற்றி வைக்க வேண்டும்.

கவிதை இல்லாமல் மனிதனுக்கு வாழ்வில்லை என்று கூறுவதன் அர்த்தம் என்ன என்று கொஞ்சம் ஆராய்வோம். மனிதனின் எந்தப் பண்பிலிருந்து, எந்தத் தளத்திலிருந்து, எந்தப் பார்வையிலிருந்து, எந்த மூலத்திலிருந்து கவிதை பிறக்கிறது என்று ஆராய்வோம். மனிதனுக்குள் வானமும், பூமியும் கலந்திருக்கின்றன என்பதைக் காட்டிலும் கரைந்திருக்கின்றன என்று சொல்வது பொருந்தும். உயிர்களோடு மனிதன் நெருக்கமான உறவு கொண்டுள்ளான். நீரோடும், நிலத்தோடும், காடுகளோடும், மலைகளோடும், கடல்களோடும் மனிதன் உறவு கொண்டுள்ளான். மனிதர்களோடு, சமூகத்தோடு அப்புறம் வரலாற்றோடு மனிதன் உறவு கொண்டுள்ளான். கதிரவனும், நிலவும் இல்லாமல் மனிதன் இல்லை. மழையும், வெய்யிலும், காற்றும், கனலும் இல்லாமல் மனிதன் இல்லை. பறவைகளோடு சேர்ந்து பாடுகிறான். தனக்குள் பறக்கிறான். குழந்தைகள் இல்லாமல் இவனுக்கு முடியாது.

தன்னைத்தானே கடந்து செல்பவன் மனிதன். இன்னும் இவனுக்குள் ஆதிமனிதன் இருக்கிறான். உழைப்பும், பகிர்வும் இவனது உயிர்க் குணங்கள். போட்டி, பொறாமை, வம்பு, வழக்குகள் இவனைக் கூறுபடுத்துகின்றன. போர்கள் இவனை அழிக்கின்றன. அடிமைத்தனம் என்றும் இவனுக்கு உவப்பாக இல்லை. உலகிற்கு அழகு தருபவன் இவன். வாழ்வுக்கும், வரலாற்றுக்கும் அர்த்தம் சொல்பவன் இவன். கற்பனைகள், இலட்சியங்கள் இல்லாமல் வாழ்ந்ததில்லை. உலகைத் தொடர்ந்து

புதியதாகப் படைக்கிறான். ஆதிக்கத்தை இவன் ஒப்புக் கொண்டதில்லை.

வரலாறு இவனுக்குள் வாழ்கிறது. பேரண்டம் தழுவிய உயிரியக்கத்தின் ஒரு கூறு இவன். அண்டத்தோடு இவன் சிலசமயம் கரைந்து விடுகிறான். காலங்கள் இவனுக்குள் கரைந்து விடுகின்றன. காலமற்றதை இவன் தனக்குள் உணர்கிறான். உள்ளொளி என்றும், தரிசனங்கள் என்றும் இவன் பேசுகிறான். பேருணர்வு, பேரறம் என்றெல்லாம் இவன் பேசமுடியும். இவன்தான் காவியங்கள் படைத்தான். மதங்களைப் படைத்தவனும் இவன். பிறகு எல்லாவற்றையும் இவனே கலைத்துப் போடவும் செய்கிறான். இயக்கத்தில் இவன் இருக்கிறான். ஆதிக்கங்களோடு அடிமைப்பட்ட நிலையில் இவன் புழுங்குகிறான். எப்பொழுதும் இவன் இப்படியே இருந்ததில்லை. பிறகு தனக்குள் வெடித்துக் கிளம்புகிறான். உலகத்தை மாற்றுகிறான். இயற்கையைத் தழுவிக் கொள்கிறான். இவனுக்கு அன்பு இல்லாமல் முடியாது; அருள் இல்லாமல் முடியாது; அறம் இல்லாமல் முடியாது. தன்னை இழக்கவும் இவனுக்குத் தெரியும். இதன்மூலமே தன்னை இவன் பெறுவதையும் செய்கிறான்.

4. இப்பொழுது கவிதை பற்றிப் பேசலாம். இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் பொருளியல் முதலிய ஆதிக்கங்களுக்கு இவன் வசப்பட்டு அழிந்து போகமுடியாது. தமிழன் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஆற்றல்களைத் தமிழ்க் கவிதைகளுக்குள்ளிருந்தும் பெறமுடியும். சங்க இலக்கியம் இவனுக்குள் என்றைக்கும் சாகமுடியாது. வள்ளுவரின் அறம், இளங்கோவின் புரட்சி மணிமேகலையின் தவம் முதலியவற்றை இவன் எதற்காகவும் விட்டுத்தர முடியாது.

அன்பும், சிவமும் ஒன்று எனக் கண்டவன் இவன். சாதி மதங்கள் கடந்த சித்தர்களை இவன் தனக்குள் தாங்கி இருக்கிறான். இவனுக்குள் படைப்பியக்கம் பெருமளவில் செயல்பட்டிருக்கிறது. பாரதி கூறியதுபோல வள்ளுவரையும், இளங்கோவையும் கம்பனையும் தனக்குள் கொண்டிருக்கும் இவன் அமரத்துவம் வாய்ந்தவன். இறைவனைச் சாடவும், நேசிக்கவும் கற்றவன் இவன். எளிய வாழ்க்கை இவனுக்குப் போதும். எத்தகைய சக்திகள் உலகத்தை அழித்தாலும் உலகை வாழ்விக்கும் மகத்துவம் தெரிந்தவன் இவன். இவன்தான் தமிழ்க் கவிதையின் உள்ளடக்கம். சமத்துவம் இல்லாமல், சமதர்மம் இல்லாமல்

இவனுக்குள் இயக்கம் இல்லை. கவிதை என்பது சொற்களில் இல்லை; வரிகளில் இல்லை, யாப்பில் இல்லை, கதை சொல்வதில் இல்லை. இவற்றை எல்லாம் உள்ளடக்கி அப்புறம் இவற்றையும் கடந்த கவித்துவத்திலிருந்து பொங்குவது கவிதை. அந்தக் கவித்துவம் என்பது இந்த மனிதனின் படைப்பியக்கம். எல்லாவற்றையும் புதியதாக அழகுபடுத்துவது, அர்த்தப்படுத்துவது, படைப்பது இந்தக் கவித்துவம். ஒரு விஞ்ஞானிக்குள் இயங்குவது இந்தக் கவித்துவம். ஒரு தச்சனுக்குள்ளும் கவித்துவம் உண்டு. கோலமிடும் பெண்ணுக்குள் இருப்பதும் இந்தக் கவித்துவம், குழந்தைக்குள்ளும் கவித்துவம் உண்டு. இது அழியாது. அதை அழியவிடக் கூடாது. கவிஞன் தனக்குள் செயல்படும் கவித்துவத்தின் மூலம் இதைக் கண்டுகொள்ள முடியும். உயிரியக்கம் இந்தக் கவித்துவம். பேரண்டத்தை நிறைத்திருப்பது இந்தக் கவித்துவம். கடவுள் என்று இதைக் குறைத்துப் பேசுகிறது மதம்.

புராணங்கள் என்னதான் பொய்க்கதைகள் சொன்னாலும் இந்த உயிரியக்கத்தை மறைத்துவிட முடியாது. இந்தக் கவித்துவம் என்ற பேரியக்கம் தமிழுக்குள் நிறைந்து வழிகிறது. தமிழ் அறிந்தவன் / தமிழாய்ந்தவன் பேறுபெற்றவன். தமிழின் பேரியக்கம் பன்முகப் பரிமாணங்கள் உடையது. இந்தப் பேரியக்கத்தைச் சாதி முதலிய குறுகிய எல்லைகளில் முடக்கிவிட முடியாது. பெண்ணுக்கு நீதி வழங்குவது இந்தப் பேரியக்கம். இது எப்பொழுதும் தன்னை நவீனப்படுத்திக் கொள்ளும்.

நாட்டார் குடிசைகளில், வயல் வெளிகளில் கைவினைஞர்களின் கைகளில் நடமிடுவது இந்தப் பேரியக்கம். காலந்தோறும் இந்தப் பேரியக்கத்தை தம் நலன்களுக்காக வகை, வகையான ஆதிக்கங்கள் முடக்கிவைத்தன. ஆதிக்கங்கள் இன்றும் அழியவில்லை, பெருகவும் செய்கின்றன. வள்ளுவர், இளங்கோ வழியில் வந்தவன் இந்த ஆதிக்கங்களுக்குச் சேவை செய்யமுடியாது. வள்ளுவரை நெஞ்சில் குடிவைக்க வேண்டும். கைகளில் இளங்கோவை ஏந்த வேண்டும். இத்தகைய உரத்தினைத் தமிழ்க் கவிதை நமக்குத் தரும். இந்த உரத்தைக் காண்பதற்காகத்தான் நாம் கவிதைகள் கற்கிறோம், புரிந்து கொள்கிறோம். வள்ளுவரும், இளங்கோவும் நமக்குள் வாழ்கிறார்கள். பாரதியும், பாரதிதாசனும் நமக்குள் வாழ்கிறார்கள். இவர்களைத் தான் நாம் மீண்டும், மீண்டும்

நமக்குள் புதுப்பித்துக் கொள்கிறோம். புதுமைப்பித்தனின் ஒரு கூறு புதுக்கவிதை, இன்னொரு கூறு திறனாய்வு, இன்னுமொரு கூறு உலகைப் புதுப்பித்தல்.

5. அண்மைக் காலத்தில் தமிழில் பேரலையாக வளர்ந்துவரும் நவீன கவிதைகள் குறித்து இங்கு சுருக்கமாகச் சொல்ல வேண்டும். உலகம் நொறுங்கிவிட்டது. மனிதன் தனக்குள் பல துண்டுகளாகச் சிதைந்து விட்டான். இவனுக்குள் பல "நான்"கள், பல குரல்கள் செயல்படுகின்றன. இவன் தன்னை இழந்து விட்டான். வாழ்வுக்கு அர்த்தம் இல்லை. வாழ்க்கையை மீண்டும் ஒரு முழுமை என்ற முறையில் திரட்டிக் கொள்ள முடியாது. எந்த ஒரு தத்துவமும் இவனுக்கு இனி வழிகாட்ட முடியாது. தற்கொலைகள் கூடத் தவறில்லை; வாழ்க்கையில் சீர்மை இல்லை. ஒழுங்கு இல்லை. அறம் இல்லை இப்படிப் பேசுபவர்கள் இவற்றை வைத்துத் தமக்கான ஆதிக்கத்தைக் கட்டமைத்தார்கள். கலகங்கள் மட்டுமே இனி சாத்தியம் மற்றும் தேவை. பேய்த்தன்மை உடையது இந்த உலகம். பதற்றத்தோடு தான் நாம் வாழ வேண்டி இருக்கிறது. மரபு நம்மைக் காப்பாற்ற முடியாது. வரலாறு துண்டு துண்டாகத்தான் சிதறிக் கிடக்கிறது. நெடுங்காலத்தை உள்ளடக்கி வாழ்வென்றும், வரலாறென்றும், வளர்ச்சி என்றும் பேசுவதில் அர்த்தமில்லை. புள்ளிகளில்தான் நாம் வாழ்கிறோம். வாழ்வென்பதற்கு வரையறை சொல்வதும்கூட ஒரு வகையில் ஆதிக்கம் ஆகிவிடும். இனி எல்லாவற்றையும் உடைத்துப் பார்க்க வேண்டும். பின்னங்களில் கிடக்கிறது வாழ்க்கை.

நவீன கவிதையின் ஆற்றல் மிக்க குரல் இப்படித்தான் கவிதைகளில் வெளிப்படுகிறது. கதைகள், நாவல்கள், திறனாய்வுகளிலும் இக்குரல் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இந்தக் குரலின் வீரியத்தை நாம் ஒப்புக் கொள்ள முடியும். உலகளவில் பெருகிவரும் ஆதிக்கங்கள் நமக்குள்ளும் புகுந்து நம்மைச் சிதைக்கவே செய்கின்றன. நம்மிடமிருந்து தேசத்தை, நிலங்களை, இயற்கையை, கல்வியை, பண்பாட்டை, தொழில் திறன்களைப் பறித்துக் கொள்வதன் மூலம் ஆதிக்கங்கள் தம்மை வலுப்படுத்திக் கொள்கின்றன. இப்போக்கின் விளைவுதான் நமக்குள்ளான தகர்வுகள், மரபு நாசங்கள். தகர்வுகளுக்கு உட்பட்ட மனிதன் துடிக்கிறான், துயரப்படுகிறான். பசிக்கொடுமையால் அவதிப்படுகிறவனுக்கு வானம் தெரியாது. சாதி முதலிய சகதிக்குள் அமிழ்த்தப்பட்டவனுக்குக் கடவுள் இல்லை, அறம்

இல்லை. இந்த மனிதனை - இவன் மனிதனாகவும் இல்லை என்று நாம் புரிந்து கொள்ளவும் முடியும். ஆதிக்கங்களுக்கு உலகத்தை விட்டுத்தர முடியாது. ஆதிக்கவாதியும் தனக்குள் அழிந்து கொண்டுதான் இருக்கிறான். எதுவும் என் கையில் இல்லை என்று கூறி நம்மை நாமே இழந்து விடமுடியாது. இந்த பூமி நமக்குச் சொந்தம். பல்லாயிரம் ஆண்டுகளாக நாகரிகங்களைப் படைத்தவர்கள் நாம். இயற்கை இன்னும் மிச்சமிருக்கிறது. மரபு நமக்குள் வாழத்தான் செய்கிறது. இழந்த உலகத்தை நம்மால் கைப்பற்ற முடியும்.

நாம் நமக்குள் நம்பிக்கை அற்றுப் போக வேண்டியதில்லை. சிதைவுகளிலிருந்தும், நம்மைத் திரட்டிக் கொள்ள முடியும். வள்ளுவர், இளங்கோ, பாரதி முதலியவர்களை நாம் இழந்துவிடவில்லை. மலர்கள் இன்னும் அழகாகத்தான் இருக்கின்றன. பட்டாம் பூச்சிகள் இன்னும் பறக்கின்றன. தரை இன்னும் நமக்குத் தட்டுப்படுகிறது. அவலம் நம்மை ஆட்கொள்ள வேண்டியதில்லை.

நவீனக் கவிதையின் வெளிப்பாடுகளை நாம் மறுக்க வேண்டியதில்லை. மொழியை இந்தக் கவிஞர்கள் புதுப்பிக்கிறார்கள். இவர்கள் கவிதைகளில் நுட்பங்கள் கூடியிருக்கின்றன. தமிழ்க் கவிதையில் இவர்களது சாதனை அற்புதமானவை. இவர்கள் இளைஞர்கள். இவர்கள் பழமையை, வரலாற்றை, வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கிறார்கள். வாழ்வுக்கான அர்த்தங்களை இவர்களும்தான் தேடுகிறார்கள். தகர்க்கப்பட்ட நிலையில் வாழ்வின் அர்த்தங்கள் உடனடியாகக் கைகளுக்குக் கிட்டுவதில்லை. இன்னும் ஆழத்தில் இவர்கள் தேடமுடியும். விளிம்புகளில், எதிர்நிலைகளில் இருந்தும் வாழ்க்கையை இவர்கள் பார்க்கிறார்கள். வாழ்க்கையைப் பற்றி இதுவும் ஒரு புதிய கோணம், நாமும் கற்றுக் கொள்ள முடியும். மறு ஆய்வு என்பது வரலாற்றின் சில முக்கிய கட்டங்களில் தேவைப்படத்தான் செய்கிறது. அப்படி ஒரு கட்டத்தில் இன்று நாம் வாழ்கிறோம். மீண்டும், வரலாறென்றும், மரபென்றும், கவிதைகள் என்றும் பேசுகிறோம்.

6. தமிழுக்கு மட்டும்தான் இந்த மரபு சொந்தம் என்று நாம் கருதுவதற்கில்லை. இந்த மரபு மனித மரபு. உலகில் எந்த மொழி பேசுபவனும் இந்த மரபுக்குள் தான் இருக்கிறான். இது ஆதிக்கவாதியின் மரபு அல்ல. இது உழைப்பவனின் மரபு.

வரலாற்றை வாழ்விக்க காலந்தோறும் செத்தவனின் மரபு. வரலாற்றுக்கு இவன் தான் உரம் சேர்த்துள்ளான். எந்த ஒரு மொழியினுள்ளும் இந்த வரலாற்றைக் காணமுடியும், கண்டடைய முடியும். மனிதனுக்குள் செயல்படும் இந்தப் பேரியக்கத்தைக் கண்டுகொண்டவர்கள் பெருங்கவிஞர்கள், மெய்யியலாளர்கள். 21-ஆம் நூற்றாண்டு, நமக்கு ஒரு பெரும் சவாலை முன் நிறுத்துகிறது. மனிதனின் வரலாற்றைத் தீர்மானிப்பது இந்த நூற்றாண்டு. மனிதர்களுக்கு இயற்கை தேவையா? இல்லையா? மனிதனுக்கு வரலாறு தேவையா இல்லையா? மனித வாழ்வுக்கு அர்த்தம் உண்டா இல்லையா? என்பதை எல்லாம் தீர்மானிப்பது இந்த நூற்றாண்டு. இந்த மாபெரும் போராட்டத்தில் நாம் இணைந்திருக்கிறோம்.

நம்மை அழிக்கும் சக்திகள் நமக்குள்ளும், வெளியிலும் ஊடுருவி இருக்கின்றன. இவர்களை நாம் இனம் கண்டு கொள்ளமுடியும். பணம்தான் வாழ்வு, அதிகாரம் தான் வாழ்வு என்று அலைபவர்கள் இன்று தமிழுக்கு மட்டுமல்ல, மனித வாழ்வுக்கு எதிரிகள், இயற்கையின் எதிரிகள். இவர்களோடு நாம் சமரசம் செய்து கொள்ள முடியாது. இவர்கள் தமக்குள் மனிதப் பண்பை இழந்தவர்கள், அறத்தை இழந்தவர்கள், இவர்கள் அரக்கர்கள்.

இவர்கள் எத்தனையோ வடிவங்களில் செயல்படுகிறார்கள். அரசியலில், நிறுவனங்களில் இறுக்கமாக அமர்ந்திருப்பவர்கள் இவர்கள். நம் சமூகத்தின் வறுமை, கல்லாமை தொடங்கி எல்லாவகை நோய்களுக்கும் இவர்கள்தான் மூலங்கள். இவர்களுக்குள் கவிதை இல்லை, இசை இல்லை, கலைகள் இல்லை. இவர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொண்டவர்கள். மனிதனை இவர்கள் தமக்குள் புதைத்துக் கொண்டவர்கள். மதங்கள் இவர்களுக்குள் புதைக்கப் பட்டிருக்கும் மனிதனை உயிர்ப்பிக்க முடியாது. இவர்கள் இராவணர்கள். இவர்கள் எதையும் தமக்காக அபகரித்துக் கொள்வார்கள். கம்பனோ, வள்ளுவனோ இவர்களுக்குச் சேவகம் செய்யமுடியாது.

திரும்பவும் சொல்லலாம். நமக்குள் கவிதை இருக்கிறது. கவிதை இயக்கம் இருக்கிறது. இது தமிழுக்கு மட்டும் சொந்தமில்லை. எந்த மொழிக்கும் இது சொந்தம். மனிதனுக்கு இது சொந்தம். மனிதனை இந்த இயக்கம் தான் வாழ்விக்கிறது, உயிர்ப்பிக்கிறது. இந்த உயிரியக்கத்தின் தூண்டுதலில் நாம்

படைப்பது கவிதை. இந்தக் கவிதை நாம் வாழும் மட்டும் நமக்குள் தழைப்பது அமரத்துவம்.

குறிப்பு : சாகித்திய அகாடமியும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் 2001 மார்ச்சு இறுதியில் சென்னையில் நடத்திய மலையாளம் - தமிழ்க் கவிதைக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

5

பாரதி கவித்துவம்

நானும் என் பாரதியும்

தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையினர் இந்த ஆண்டு பாரதி அறக்கட்டளைச் சொற்பொழிவை நான் நிகழ்த்த வேண்டும் என்று என்னைக் கேட்டபொழுது, என் உடல் நலக்குறைவு கருதி நான் முதலில் மறுத்த போதிலும் பிறகு ஒப்புக்கொண்டேன். பாரதியின் கவிதைகளோடு நானும் வாழ்ந்து இருக்கிறேன். பாரதியின் கவிதைகள் குறித்து முப்பதாண்டுகளுக்கு மேலாக எனக்குள்ளும் சில அனுபவங்கள் உண்டு. இவற்றைப் பதிவு செய்வதற்கு ஒரு வாய்ப்பு என்ற முறையில் அறக்கட்டளை சொற்பொழிவு நிகழ்த்த பெரும் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டேன். என் நன்றிகள் அனைவருக்கும் உரியவை.

பாரதியின் வாழ்க்கையில் சில ஏற்றத்தாழ்வுகள் இருந்ததைப் போலவே அவரது கவிதை வரலாற்றிலும் ஏற்றத்தாழ்வுகள் இன்றளவும் தொடர்கின்றன. பாரதியைத் தமிழ்ச் சமூகம் ஏற்றுக் கொண்டது என்பதில் ஐயத்திற்கு இடம் இல்லை. இதற்காக வ.ரா. திரிலோக சீத்தாராம் முதற்கொண்டு எத்தனையோ அறிஞர்கள், கவிஞர்கள் போராடியிருக்கின்றனர். பாரதியாரை தமிழ்ச் சமூகத்தில் நிலைநிறுத்துவதில் பாரதிதாசன் அவர்களின் பங்கு பெரியது.

1936 வாக்கில் பாரதி ஒரு மகாகவியா? இல்லையா? என்ற விவாதம் எழுந்தது. கு.ப.ரா. சிட்டி போன்றவர்கள் சில சான்றுகளை முன்வைத்து 'மகாகவி' தான் என்றனர். இந்த விவாதத்தில் பிறிதொரு சமயம் சி.சு. செல்லப்பாவும் கலந்து கொண்டார். ஜீவா முதலிய முற்போக்காளர்கள் மீண்டும் பாரதியைப் பற்றி அழுத்தத்தோடு பேசியபொழுதுதான் பாரதி ஒரு 'மகாகவி' என்ற சித்திரம் முழுமை பெற்றது என்று சொல்லமுடியும்.

தொடக்கத்தில் பாரதி ஒரு 'தேசிய கவி' என்ற அளவில் தான் ஏற்றுக் கொள்ளப்பட்டார். மணிக்கொடிக் காலத்தில்தான் பாரதியின் இலக்கியம் ஏற்கப்பட்டது. பாரதியை ஒரு வேதாந்தக் கவி என்ற அளவில்தான் இராஜாஜி மதிப்பிட்டார். டி.கே.சி.யின் பார்வை பாரதி பக்கம் திரும்பவே இல்லை. தமிழ்ப் புலவர்களும் பாரதியை நெடுங்காலம் ஏற்கவில்லை. பாரதியைப் பெருங்கவிஞர் என்று பாராட்டிய முதல் தமிழ் அறிஞர் வையாபுரியார். மார்க்சியர்களாகிய பெரியவர் ஜீவா, ஆர்.கே. கண்ணன், தா. பாண்டியன் ஆகியவர்களின் கைக்கு பாரதி வந்தபொழுதுதான் பாரதியின் சமூக உணர்வு புரட்சிகரமான பார்வை முதலியவை முன்னுக்கு வந்தன.

பாரதியின் கவிதை வரலாற்றில் இன்னொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். திராவிட இயக்கத்தவர் பாரதியைக் கொண்டாடவில்லை. பாரதியின் தீவிரமான சமயச்சார்பு திராவிட இயக்கத்தவருக்கு உடன்பாடாக இருக்கமுடியாது. விடுதலைப் போரில் பாரதியின் சார்பு, திராவிட இயக்கத்தவருக்கு ஒரு நெருடல். இவற்றோடு பாரதி பார்ப்பனர். இக்காரணங் களையும் மீறி இன்னொன்றும் முக்கியக் காரணமாக இருந்தது. பாரதியாரை பொதுவுடமை இயக்கத்தினர் வசப்படுத்திக் கொண்டனர் என்பது இந்தக் காரணம்.

பொதுவுடமை இயக்கத்தினரும், திராவிட இயக்கத்தினரும் தமிழகச் சூழலில் வக்கிரத்தோடு முரண்பட்டனர். இந்தப் போக்கு தமிழகத்திற்கு அன்றும் நன்மை செய்யவில்லை, இன்றும் நன்மை செய்வதாக இல்லை. திராவிட இயக்கத்தினர் தமிழின் பெருமை முதலியவற்றை விரிவாகப் பேசினர். தமிழ்த்தேசிய இனம் என்ற உட்கிடக்கையோடு இவர்கள் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றெல்லாம் முழங்கினர். இந்திய தேசத்தோடு, இந்திய தேசியத்தோடு தொடக்கம் முதலே தம்மைப் பிணைத்துக் கொண்ட பொதுவுடமையரால் தமிழ்த்தேசியத்தை ஏற்க இயலவில்லை.

தேசிய இனம் என்ற கருத்து மார்க்சியத்தோடு ஒத்த கருத்துத்தான் என்றபோதிலும், இந்த வக்கரிப்பிலிருந்து இவர்களால் விடுபட முடியவில்லை.

பாரதிதாசன் திராவிட இயக்கத்தின் கவிஞர். பாரதியார் பொதுவுடமை இயக்கத்தின் கவிஞர் பாரதியை பாரதிதாசன் என்றும் கொண்டாடியதில் தவறவில்லை. இருந்தபோதிலும் பாரதியார் ஒரு பக்கம், பாரதிதாசன் இன்னொரு பக்கம் என்ற இழுபறி நிலை ஏற்பட்டது. பாரதிதாசன் குறித்து சரஸ்வதி இதழில் ஆர்.கே. கண்ணன் எழுதிய கட்டுரைகள் இடையில் நிறுத்தப்பட்டன. பாரதிதாசன் நூற்றாண்டு விழாவுக்குப் பிறகு நிலைமைகள் மாறி இருக்கின்றன. பாரதிதாசனை இப்பொழுது பொதுவுடமை இயக்கத்தின் ஒரு பகுதியினர் அவரது அசலானப் புரட்சிகர உணர்வுக்காகப் பாராட்டத் துவங்கி உள்ளனர்.

இந்த இடத்தில் **1968-69** ஆண்டுகளில் கோவையிலிருந்து நாங்கள் வெளியிட்ட "புதிய தலைமுறை" இதழில் பாரதிதாசன் பற்றி, அவரது ஆழ்ந்த தமிழ் உணர்வு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, புரட்சிகர உணர்வு ஆகியவை குறித்து நாங்கள் வெளியிட்ட கட்டுரைகள் குறித்துச் சொல்லவேண்டும். ஜீவா முதலியவர்களிடமிருந்து பாரதிக்குள் செயல்பட்ட பேருணர்வுக்கு நாங்களும் வசப்பட்டு இருந்தோம் என்பது உண்மைதான். ஆனால் அன்று இருந்த பொதுவுடமை இயக்கத்தினரின் மார்க்சியம் பற்றிய புரிதலில் இருந்து நாங்கள் பெருமளவு வேறுபட்டோம். "புதிய தலைமுறை" ஆசிரியர் குழுவில் இருந்த நாங்கள் முறையாகத் தமிழ் கற்றவர்கள். ஆழ்ந்த தமிழ் உணர்வுடையவர்கள். பாரதிதாசனை எங்களால் ஒதுக்கி வைக்க இயலாது. **1960** களின் தொடக்கத்தில் நாங்கள் எப்படி இருந்தபோதிலும் **1970**-களுக்கு வரும்பொழுது தமிழை முதன்மைப்படுத்துவதில் நாங்கள் முன்னிலையில் நின்றோம். பொதுவுடமையரில் ஒரு பகுதியினர் இன்றளவும் பாரதியை மட்டுமல்லாமல், பாரதிதாசனையும் ஏற்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களின் மார்க்சியம் இப்படி ஒரு எதிர்நிலையை எடுக்க வைத்திருக்கிறது. திடீரெனத் தமக்குள் தமிழுணர்வை அண்மைக் காலத்தில் கண்டு கொண்டவர்கள் குறித்தும் நம் அனைவருக்கும் தெரியும்.

இன்னொரு அனுபவத்தையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கக்கூடும். பாரதி பற்றிய ஆய்வுகள் இன்றளவும் தொடர்கின்றன. பாரதி பற்றிய வாழ்க்கை வரலாறு,

கவிதை வரலாறு முதலியவை பற்றி ஏராளமான விவரங்களோடு தொடர்ந்து நூல்கள் வெளியாகின்றன. பாரதி பற்றிய நய உரைகள், விளக்க உரைகள் கூடுதலாகவே வெளியிடப்படுகின்றன. சில திறனாய்வுகளும் இல்லாமல் இல்லை. எங்கள் மரியாதைக்குரிய அறிஞர் கோ. கேசவன் பாரதி குறித்து ஆய்வு நூல் ஒன்றையும் சில கட்டுரைகளையும் வெளியிட்டார். கடலூரில் பாரதி சிறைப்படுத்தப்பட்டபோது பாரதி, பாரதியாகவே நடந்து கொள்ளவில்லை. ஒரு கோழையைப் போல சிறை அதிகாரிகளுக்கு அவர் எழுதிக் கொடுத்தார். சென்னையில் காந்தியடிகளை பாரதியார் சந்தித்தார் என்பதற்கு ஆதாரம் இல்லை. பாரதியின் பாட்டனார் ஒரு நிலக்கிழார். தந்தையார் ஒரு தொழில் அதிபர். பாரதி தெய்வ நம்பிக்கை உடையவர் இப்படி இருக்க அவர் எப்படி சோசலிசவாதியாக இருக்கமுடியும். அவரிடம் எப்படி விஞ்ஞான சோசலிசத்தை இனம் காணமுடியும். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற இரஷ்யப்புரட்சியை மட்டுமே அவர் பாடியிருக்க முடியும்.

இப்படி எல்லாம் கேசவன் எழுதினார். "நிகழ்" இதழில் நான் மறுப்பு எழுதினேன். கேசவன் ஒப்புக்கொள்ளவில்லை. வியக்கத்தக்க முறையில் ஓர் அற்புதமான சான்று எனக்குக் கிடைத்தது. இரகுநாதன் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றில் பாரதியார் ஆங்கிலத்தில் எழுதிய "தி நியூ ஏஜ்" என்ற கட்டுரையை சொற்பொழிவில் மேற்கோள் காட்டியிருந்தார். இந்தியாவின் நிலச்சிக்கலைத் தீர்க்க கர்னல் வெஜ்வுட் ஒரு கருத்துரையை முன் வைத்திருந்தார். கிராமத்தில் உள்ள நிலக்கிழார்கள் விவசாயக் கூலிகளுக்கு உணவு உடை முதலியவற்றுக்கு உறுதி தரவேண்டும். இம்முறையில் நிலக்கிழார்கள் தர்மகர்த்தாக்களைப் போலச் செயல்பட வேண்டும் என்பது அவர் கருத்துரை.

நிலச்சிக்கலைத் தீர்க்க பாரதி ஒரு கட்டுரையில் இந்தக் கருத்துரையை ஆதரித்து எழுதியிருந்தார். சிக்கல் இதனால் தீராதென்பது வெளிப்படையான உண்மை. வெஜ்வுட் கருத்தை ஆதரிக்கும் பாரதியார் எப்படிச் சமதர்மவாதியாக இருக்கமுடியும் என்று கேசவன் எழுதினார். இரகுநாதன் அவர்கள் மேற்கோள் காட்டிய "தி நியூ ஏஜ்" கட்டுரையில் பாரதியார் எழுதியிருந்தார். "சிக்கலைத் தீர்க்க ஒரு சமரசத்திற்கு முயற்சி செய்வோம். சிக்கல் தீராதென்றால் நிலக்கிழார்களிடமிருந்து நிலத்தை பறிமுதல்

செய்வோம்". இக்கருத்தை "நிகழ்" இதழில் மொழிபெயர்த்து முன் அட்டையில் வெளியிட்டேன். நண்பர் கேசவனிடமிருந்து பதில் இல்லை. நண்பர் கேசவன் அவர்களை நான் குற்றம் சொல்வதற்கில்லை. புரட்சிவாதிகள் என்றுத் தம்மைக் கருதிக்கொள்பவர்கள் வட்டாரத்தில் இப்படிச் சில கருத்துக்கள் இன்றளவும் நீடிக்கின்றன.

பாரதி கவிதை குறித்து எனது சில அனுபவங்களையும் இங்குச் சுருக்கமாக குறிப்பிடலாம். விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் நான் தொடக்கப் பள்ளியில் மாணவனாக இருந்தேன். எங்கள் தலைமை ஆசிரியர் எங்களுக்கும் விடுதலை உணர்வை ஊட்டினார். என் தந்தையாருக்கும் இத்தகைய உணர்வு உண்டு. விடுதலை பெற்ற நாளில் நாங்களும் கொடி ஏந்தி ஊர்வலம் வந்தோம். காந்தி, நேரு, சுபாஷ் சந்திரபோஸ் முதலியவர்கள் எங்கள் நெஞ்சில் பதிந்திருந்தனர். நேருவின் சோசலிசக் கொள்கைக்கு நான் வசப்பட்டிருந்தேன். பொதுத்துறை நிறுவனங்கள் முதலியவை இந்தியாவை பொருளியல் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்குமென எங்கள் தலைமுறையினர் நம்பினர். சோவியத் உதவியை மனமாறப் பாராட்டினோம். இபபொழுதெல்லாம் பாரதியோடு நாங்கள் நெருக்கமாக இருந்தோம். அதன்பிறகுதான் நிலைமைகள் தலைகீழாக மாறின. பாரதியாரின் கனவுகள் நிறைவேறுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. எனினும் பாரதியின் கனவுகளோடுதான் நாங்கள் வாழ்ந்தோம். ஜீவா முதலியவர்களின் பேச்சுக்கள் எங்களுக்குள் கனல் ஏற்றின. தொடக்கத்தில் பெரியார் இயக்கத்தோடு நாங்கள் முரண்பட்டதன் காரணமாகவும் பாரதியை எங்கள் நெஞ்சில் நிறைத்துக் கொண்டோம். பாரதிக்குள் இருந்த கவிதை ஊற்றுக்கள் எங்களுக்குள்ளும் சுரந்தன.

பாரதி வழியாகத்தான் தேசமென்றும், விடுதலையென்றும், சமதர்மமென்றும், பெண் விடுதலையென்றும், சாதி ஒழிப்பு என்றும் எத்தனையோ உண்மைகளை எங்கள் தலைமுறையினர் செரித்துக் கொண்டோம். பாரதிதான் எல்லாவற்றுக்கும் வாயிலாக இருந்தார். பழைய வேதங்களை நம் காலத்துக்கு ஏற்றபடி பாரதி பொருள்படுத்தினார். பாரதியின் கிருதயுகம், சமதர்மம் அன்றி வேறு இல்லை. பாரதியின் தமிழ்ப்பற்று அற்புதமானது. பாரதியின் ஆவேசம் எல்லோரையும போல எங்களையும் கவர்ந்தது. வாராதுபோல் வந்தமாமணியாகிய பாரதியைக் குறை சொல்வதற்கு

எங்கே இடம்? பாரதி எங்களுக்குள் நிறைந்திருந்தார். பாரதியை எத்தனை முறை கற்றிருப்போம். பாரதியால் எங்கள் வாழ்வு அழகுபெற்றது.

என்னுடைய இன்னொரு அனுபவத்தையும் இங்குக் குறிப்பிட வேண்டும். தொடக்க காலம் முதலே கடவுள் நம்பிக்கையோடு நான் போராடிக் கொண்டிருந்தேன். தாகூர் என்றும், விவேகானந்தர் என்றும் தேடித் தேடிப் படித்தேன். அரவிந்தரையும் கற்றேன். அத்வைதம் ஒரு பேருண்மை என்று எனக்குத் தோன்றியது. கல்லூரியில் படிக்கும்பொழுது தியானத்தில் ஈடுபட்டேன். அற்புதமான சில அனுபவங்களைப் பெற்றேன். பிரபஞ்சமும் நானும் ஒன்று என்ற அனுபவம் எனக்கு வாய்த்தது. எல்லாமே பிரம்மம். பிரம்மம் அன்றி வேறெதுவும் இல்லை. ஒரு மூன்று மாதங்கள் மட்டும் இந்த அனுபவத்திற்குள் ஆழ்ந்திருந்தேன். அப்புறம் இதிலிருந்து விடுபட நேர்ந்தது. இந்த அனுபவத்தை பொருளியல், வாழ்வியல் சூழலில் வைத்துப் புரிந்து கொள்ள சில ஆண்டுகள் நான் முயன்றேன்.

பாரதி எனக்கு மேலும் நெருக்கமானார். இந்த அனுபவத்தின் திறவுகோலாக விவேகானந்தர் தென்பட்டார். பரமஹம்சர் முன்னிலையில் விவேகானந்தருக்கும் இந்த அத்வைத அனுபவம் ஏற்பட்டது. பரமஹம்சர் கேட்டுக் கொண்டபடி இந்த அனுபவத்திலிருந்து கீழ் இறங்கி மக்கள் பணிக்கென அவர் சென்றார். இந்தப் பேரனுபவத்தைச் சமூகம் மற்றும் பொருளியல் சூழலில் வைத்து அவர் பொருள்படுத்தினார். எல்லாமே ஒன்று என்றால் ஆங்கிலேயன் ஏன் இந்தியாவை ஆளவேண்டும். பிராமணனுக்கு ஏன் தலைமையிடம்? வைசியர்கள் ஏன் அரசாள வேண்டும். இனிப் பாட்டாளிகள் அரசாளட்டும். சாதிகளுக்கு அர்த்தம் இல்லை. சமதர்மம் தவிர பேரறம் என்று இன்னொன்று இருக்கமுடியாது உண்மை தான். தியான நிலையில் அத்வைதம் எனத் தொடங்கினால் அப்புறம் அந்த அனுபவத்தைச் சமுதாயச் சூழலில், பொருளியல் சூழலில் வைத்துப் பொருள்படுத்த வேண்டும். இதுதான் அறிவாளர் செயல். சமூகத்தின் மேல் அக்கறையுடையவனின் செயல். இதைத்தான் பாரதியும் செய்தார். இந்தப் பேரனுபவம் பாரதிக்குள் எத்தகைய அற்புதங்களைப் படைத்திருக்கிறது. தன்னை மகான் நிலைக்கு உயர்த்திக் கொண்ட அரவிந்தரை இவரால் மதிக்க இயலவில்லை. ஏழைகளோடு பாரதியார் தோழமை கொண்டார்.

யாருக்குள்தான் பிராமணத் தனித்தன்மை இல்லை. இந்தப் பூணூலை யாரும் தரிக்கலாம். சாதி உயர்வு சொல்லும் பார்ப்பனன் வெறுக்கத்தக்கவன். நந்தன் ஒரு பார்ப்பனன். இப்படியெல்லாம் பாரதி எழுதினார், பேசினார், வாழ்ந்தார். மேலும் பாரதி ஒரு சித்தர். நம் தமிழர் மரபின் மையம் என சித்தர்களைத்தான் சொல்லமுடியும். இதன் காரணமாகவும் பாரதி எனக்குள் வசப்பட்டார். பாரதிக்கு நான் வசமானேன்.

இன்னொன்றையும் இப்பொழுது இங்கு குறிப்பிட வேண்டும். பாரதியை பார்ப்பனர் தான் என்று சாதிக்கும் போக்கு இன்று திராவிடர் இயக்கத்தவர் மத்தியில் உச்சத்தில் இருக்கிறது. இது எந்தளவுக்குச் சரி என்று நாம் ஆராயவேண்டும். அன்றியும் உலகமயமாதல் முதலிய போக்குகள் தீவிரப்பட்டுள்ள இன்றைய நிலையில் பாரதியின் இடம் என்ன என்பதையும் நாம் ஆராய வேண்டும். இவ்வகை ஆய்வுகளை இறுதியில் பார்க்கலாம்.

பாரதி பெருங்கவிஞர்

பாரதியார் மகாகவி என்பதைத் தானும் மெய்ப்பிக்கும் முறையில் சி.சு. செல்லப்பா எழுதிய கட்டுரையில், குறிப்பிட்ட திறனாய்வுக் கருத்தொன்றை இங்கு குறிப்பிடலாம். தமிழில் திறனாய்வு இன்னும் வளரவில்லை என்றும், தமிழ் இலக்கியத்தில் பாரதியின் இடம் என்ன என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும், பாரதியின் இடம் பற்றித் தீர்மானிக்கும்பொழுதுதான், தமிழ் இலக்கியத்தின் நெடுங்காலப் பாரம்பரியம் பற்றியும் சில தீர்மானங்களுக்கு வரமுடியும் என்றும் செல்லப்பா குறிப்பிட்டார். தேர்ந்த திறனாய்வாளர் என்று செல்லப்பாவை இனம்காண இவரது கருத்து அருமையானது என்பதில் ஐயமில்லை. அன்றியும் தமிழ் இலக்கிய ஆய்வுக்கு இவர் வழிதிறந்து வைக்கிறார் என்பதையும் நம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

மகாகவி என்ற சொல்லை விடுத்து இக்கட்டுரையில் இனி பெருங்கவிஞர் என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். தமிழில் பாரதி ஒரு பெருங்கவிஞர். இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் தமிழில் பாரதியின் எழுச்சியை நாம் பார்க்கிறோம். இருபதாம் நூற்றாண்டு உலக வரலாற்றில் மட்டுமல்லாமல், இந்தியா மற்றும் தமிழகத்திலும் மிக முக்கியமான நூற்றாண்டு.

பத்தொன்பது நூற்றாண்டுகளின் வரலாற்று வளர்ச்சியின் இன்னொரு பாய்ச்சலை நிகழ்த்தியது இருபதாம் நூற்றாண்டு. அறிவியல் துறையிலும், சமூகவியல் களத்திலும் எத்தனையோ சாதனைகள் இந்த நூற்றாண்டில் நிகழ்ந்தன. இவை குறித்து இங்கு விரிவாகப் பேசுவதை தவிர்த்துக்கொண்டு பாரதி பற்றிய ஆய்வுக்குள் வருவோம்.

இருபதாம் நூற்றாண்டின் குழந்தை என்று பாரதியை நாம் குறிப்பிடலாம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழியல் ஆய்வு, தமிழக வரலாறு, அரசியல் வரலாறு முதலியவற்றில் பல மேதைகளை இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் நாம் காண்கிறோம். உ.வே.சாமிநாத அய்யர் என்று தொடங்கி, மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், மனோன்மணியம் சுந்தரனார் என்று இன்னும் பலரைக் குறிப்பிடலாம். வரலாற்று ஆய்விலும் சீனிவாச அய்யங்கார், இராமச்சந்திர தீட்சதர் என்று தொடங்கி இன்னும் சிலரைக் குறிப்பிடலாம். வையாபுரி மட்டுமல்லாமல் கா.அப்பாத்துரை போன்றவர்களையும் இந்த நூற்றாண்டுதான் தோற்றுவித்தது. பெரியார் என்ற பேரெழுச்சியை இந்த நூற்றாண்டுதான் கண்டது. விடுதலை இயக்கத்தில் வ.உ.சி. முதலியவர்களோடு பாரதியார். இலக்கியத்தில் மணிக்கொடி இயக்கம். இத்தகையவர்களின் பேரெழுச்சி காரணமாகத்தான் தமிழகத்தின் எல்லாக் களங்களிலும் புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. **1960**-கள் வரை இந்தப் பேரெழுச்சியின் தாக்கங்களை நாம் பார்க்கிறோம். பிறகு இந்த எழுச்சி வற்றியது, தமிழக வரலாற்றில் ஒரு பெரும் அவல நாடகம்.

பாரதிக்குள் வந்து சேர்ந்த பலமுனைப்பட்ட ஆக்கங்கள் குறித்துச் சுருக்கமாகப் பார்க்கலாம். இந்தியாவில் எழுந்த விடுதலை இயக்கத்தின் பாதிப்பு இவருக்குள் திலகர் வழியே ஏற்பட்டது. ஆன்மீகமும், அரசியலும் கலந்த பேருணர்வை இவருக்குள் விவேகானந்தரும், நிவேதிதாவும் ஏற்படுத்தினர். இவருக்குள் எழுந்த கவிதை ஊற்றை வடக்கிலிருந்து காளிதாசர், மேற்கிலிருந்து ஷெல்லி, கிழக்கிலிருந்து தாகூர் முதலியவர் திறந்து வைத்தனர். அப்புறம் இவர்களோடு வால்ட்விட்மன், தமிழ் இலக்கிய மரபில் வள்ளுவர் முதலியவர்கள். அப்புறம் சித்தர்கள். சமகாலத்தில் அரவிந்தர் முதலியவர்கள். இதழியல் துறையில் பாரதி ஈடுபட்டதன் காரணமாக உலகளாவிய அரசியல்

இயக்கங்கள் பற்றி இவருக்கு ஆழ்ந்த பிடிப்பு. இரஷ்யப் புரட்சி இவருக்குள் ஏற்படுத்திய அதிர்வலைகள், பெண்களுக்குள் சக்தியை இவர் தரிசனம் செய்தது, பொதுவுடமைக் கொள்கை. சாதிகள் தேவை இல்லை. அறிவே தெய்வம். இந்தியா இவருக்கு பாரததேவி என்றும் பராசக்தி என்றும் பெருங்காட்சியாக விளைந்தது. உலகளவிலான அறிவியல் ஆக்கங்கள் வழியே இவரது சக்தி தரிசனம். இப்படி பலதிசைப்பட்ட, பன்முகப்பட்ட பேராற்றல்கள், பார்வைகள் முதலியவற்றின் குவிமையமாக பாரதியார் இயங்கினார்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர் இப்படியொரு குவி மையம் நமக்கு வாய்க்கவில்லை. அளவுகடந்த இந்த ஆற்றல்களைத் தாங்கும் வல்லமை பாரதியின் உள்ளத்திற்கு இருந்தது என்பது உண்மைதான் ஆனால் உடலுக்கு இல்லை. வறுமை முதலிய எத்தனையோ தொல்லைகள். முப்பத்தெட்டு வயதுவரை அவர் வாழ்ந்ததேகூட பெரும் வியப்புத்தான்.

இருபதாம் நூற்றாண்டுச் சூழலில்தான் பாரதியார் ஒரு பெருங்கவிஞராக எழுச்சி பெற்றார் என்பதை இப்படித்தான் நம்மால் புரிந்து கொள்ள இயலும். இருபதாம் நூற்றாண்டில்தான் தெய்வங்கள் கேள்விக்குள்ளாயின. சமயங்கள் தம்மைப் புதுவிளக்கம் செய்துகொண்டன. மன்னர்கள் இனித் தேவையில்லை. மனிதர்கள் தம்மை நிர்வாகம் செய்து கொள்ளமுடியும். பொருளியல் சக்திகளுக்குள் இருந்த புதிர்கள் அவிழ்ந்தன. தொழில் வளர்ச்சி இல்லாமல் சமூக வாழ்வின் முன்னேற்றம் இருக்க முடியாது. ஒட்டுமொத்தமாகப் பழங்காலத்தில் இருந்து மனிதர்களுக்கு விடுதலை தேவை. ஒடுக்கப்பட்ட மனிதர் அனைவருக்கும் விடுதலை தேவை. தேசங்களுக்கு மட்டுமல்லாமல், தெய்வங்களுக்கும் விடுதலை. சமதர்மம் இந்த நூற்றாண்டின் புதிய வேதம். மனிதனுக்குள் இருக்கிற கவித்துவ ஊற்றுக்கள் திறந்து கொள்கிற காலம் இந்த நூற்றாண்டு. உலகம் முழுவதையும் உறவுக் கயிற்றால் இணைக்க முடியும். அறிவியல் இதற்கு வழி திறக்கிறது.

பெருங்கவிஞர் பாரதியை இந்தச் சூழலில் வைத்துத்தான் அவரை இனம் காண்கிறோம், மதிப்பீடு செய்கிறோம். பாரதி ஒரு பெருங்கவிஞர் என்று மெய்ப்பிப்பதற்கு மேலும் சான்றுகள்

தேவையில்லை. பாரதிக்குள் பொங்கிய கவித்துவ வீச்சை அவரது கவிதைகள் அனைத்திலும் நாம் காண்கிறோம். ஊழிக்கூத்து என்ற ஒரு கவிதைபோதும் என்று சில திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து பாரதேவி என்ற புதிய தெய்வத்தை அவர் படைத்தார். அவருக்குள் கண்ணனும், புத்தரும், இயேசுவும், அல்லாவும் ஒரு தெய்வத்தின் பல்வேறு திருமுகங்கள். விநாயகரைப் பற்றிப்பாடும்பொழுதும் கிருதயுகம் பற்றி அவர் எழுச்சி கொள்கிறார். உலகில் வறுமை முதலியவை இல்லாமல் செய்வேன் என்கிறார். முப்பத்து முக்கோடி மக்களுக்கும் பொதுவுடமை என்று கூறுகிறார். அவருக்கு எல்லாமே சக்தியின் வடிவங்கள் மற்றும் இயக்கங்கள். மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தால் ஆஹா என்று எழுந்ததுதான் யுகப்புரட்சி என்று இரஷ்யப் புரட்சியை வரவேற்கிறார். பாரதக் கதையைப் புதுமை செய்கிறார். பாஞ்சாலிக்குள் இந்தியர் ஏற்க வேண்டிய சபதத்தைச் சொல்கிறார். குயிலின் காதல் கதையை அற்புதமாய்ப் பாடுகிறார். பாரதி கவிதையின் உச்சம் என்று கண்ணன் பாட்டை நாம் பொருள்படுத்தமுடியும். இப்பாடல்களில் வரும் கண்ணன் நம் காலத்திற்குரிய கண்ணன்.

பாரதி ஒரு பெருங்கவிஞர் என்று சொல்லுவதற்குரிய முறையில் பெரும் காவியம் என ஒன்றை அவர் பாடவில்லை. ஆனால் காவியப் பரிமாணத்தோடு அவருக்குள் பெரும் காட்சிகள் கவிதைகளாய் விளைந்துள்ளன. கண்ணன் பாட்டை, நம்மால் ஆழ்ந்து நோக்கமுடியுமானால் ஒருங்கிணைந்த கோலத்தின் ஒரு காவியமாக பார்க்க முடியும். பாஞ்சாலிக்குள் புதிய பாரதம் பொங்கி எழுகிறது. பாரதியின் கவிதைகளில் பாரத தேசம் ஒரு பெருங்காட்சியில் ஒன்றாகிறது. கங்கையும் காவிரியும் இணைகின்றன. நந்தன் பார்ப்பனன் ஆகிறான். புதுமைப் பெண் புதிய கீதை முழங்குகிறாள். வேடிக்கை மனிதனாய், கூற்றுக்குத்தான் இரை ஆக மாட்டேன் என்று பாரதி முழங்குகிறார். விடுதலை பெற்ற இந்தியா அவருக்குள் தரிசனம் பெறுகிறது. ஏழை என்றும், அடிமை என்றும் இனி எவரும் இல்லை என்கிறார். இவருக்குள் எழும் அக்னி குஞ்சு பெருங்காட்டை எரித்து அழிக்கிறது. இப்படி எத்தனை சான்றுகளை நம்மால் தொகுக்க முடியும். உறுதியாகச் சொல்லமுடியும் பாரதியார் ஒரு பெருங்கவிஞர்.

உலகத்துப் பெருங்கவிஞர் வரிசையில் பாரதி எளிதாக இடம்பெறமுடியும். மீண்டும் ஒன்றை இங்கு நினைவுபடுத்திக்

கொள்ளலாம். இருபதாம் நூற்றாண்டின் எத்தனையோ ஆக்கக் கூறுகள் வழியே நாம் பாரதியைப் பார்க்கிறோம். பாரதி ஒரு பெருங்கவிஞர் என்பதற்கும் இருபதாம் நூற்றாண்டு மனிதரைத்தான், சமூகத்தைதான் நாம் ஆதாரமாக்குகிறோம். இத்தகைய வரையறைகளிலிருந்துதான் பாரதியாரை பெருங்கவிஞர் என்கிறோம். இருபதாம் நூற்றாண்டில் நாம் திரட்டிக்கொண்ட பார்வையில் இருந்துதான் முன்னைய வரலாற்றை, மெய்யியல்களை, பண்பாடுகளை, பொருளியலை கவிதைகளை / இலக்கியங்களை மதிப்பீடு செய்கிறோம். இப்படி ஒரு பார்வையை இருபதாம் நூற்றாண்டு சூழலிலிருந்து நாம் வரித்துக் கொண்டதன் விளைவாகத்தான் சங்க இலக்கியங்களைப் போற்றுகிறோம். வள்ளுவர் என்றும், இளங்கோ என்றும் சொல்லுகிறோம். புத்தரை நெருக்கமாகக் காண்கிறோம். இயேசு ஒரு விடுதலைப் போராளியாகிறார். ஷேக்ஸ்பியர் நமக்கு நெருக்கமாகிறார். இப்படித்தான் நம்மை நாமே பார்த்துக் கொள்கிறோம். படைத்துக் கொள்கிறோம்.

ஒரு பெருங்கவிஞருக்குள் வரலாறு தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. பழைய வரலாறு, புதிய வரலாற்றுக்கு இடம் கொடுக்கிறது. சமூகம் தன்னை இன்னொரு முறை புரட்டிக் கொள்கிறது. இருட்காலம் விலகி புதிய வெளிச்சங்கள் தெரிகின்றன. சமூகத்தில் புதிய பண்பாடு உருக்கொள்கிறது. மனிதன் தன்னைப் புதியதாய் படைத்துக் கொள்கிறான். இந்த வகையில் ஒரு பெருங்கவிஞனின் தோற்றத்திற்குள் புதிய வரலாற்றை, புதிய எழுச்சிகளை, புதிய வெளிச்சங்களை நாம் இனம் காண்கிறோம். வரலாற்றின் திருப்பங்களை மதிப்பிடுவதற்குக்கூட ஒரு பெருங்கவிஞன் அளவுகோல் ஆகிறான். டி.எஸ். எலியட் கூறியது போல் ஒரு பெருங்கவிஞனின் தோற்றத்திற்குப்பிறகு பழைய கவிதைகள் புதிய வெளிச்சங்களைப் பெறுகின்றன. இனிப்பழங்கவிதையை, அந்தப் பழங்காலத்திற்குச் சென்று வாசிக்க முடியாது. நமக்குள் வந்துவிட்ட புதிய பார்வைகள் வழியேதான் இனிப் பழங்கவிதைகள் புதிய பொருள்களை நமக்கு வழங்கும். இந்த வகையிலும் தமிழின் நெடுங்காலப் பாரம்பரியத்தைப் புரிந்து கொள்வதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் பெருங்கவிஞர் பாரதி நமக்கு ஓர் அளவுகோலாக வாய்க்கிறார்.

பாரதி நெறியில் வள்ளுவர், இளங்கோ, கம்பர்

தமிழிலக்கியத்தில் பாரதியின் இடம் என்ன என்று தீர்மானிப்பதன்மூலம் தான் தமிழிலக்கியப் பாரம்பரியம் பற்றி மதிப்பீடு செய்ய முடியும் என்று செல்லப்பா கூறியதை மேலும் இங்கு ஆராய்வோம். தமிழிலக்கிய மரபில் வள்ளுவரையும் இளங்கோவையும் கம்பனையும் பாரதி பலபடியாகப் போற்றினார் என்பதை நாம் அறிவோம்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கனுமே கண்டதில்லை
உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை"

என்று பாரதியார் பாடினார்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் - மணி
ஆரம் படைத்தத் தமிழ்நாடு" என்றும்
"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும்

பாரதி இன்னொரு சமயத்தில் பாடினார்.

"விதியே விதியே தமிழச்சாதியை என்செய நினைந்தாய்" என்று தொடங்கும் இன்னொரு கவிதையில் கம்பனையும், வள்ளுவரையும் இளங்கோவையும் தோற்றுவித்த தமிழச்சாதி அமரத்துவம் உடையது என்று நம்பியிருந்தேன் என்று பாரதி பாடினார்.

(நம்பிக்கை என்ன ஆயிற்று என்பது பற்றி பாரதியின் வேதனையைப் பிறகு பார்ப்போம்)

இந்த மூவரைத்தவிர தமிழின் நெடுமரபில் வேறு யாரையும் பாரதி கொண்டாடவில்லை. பாரதி இவர்களிடம் தான் தன்னைக் கண்டார் என்று நாம் உறுதியாகக் கூறமுடியும். பாரதியை இவர்கள் எப்படி கவர்ந்தனர் என்பது குறித்துப் பாரதி சில குறிப்புக்களையே தன் கவிதைகளில் தந்திருக்கிறார். எனினும் பாரதி வழியே இந்த மூவரையும் நம்மால் பார்த்து மதிப்பிட இயலும். தமிழ்க்கவிதை வரலாற்றில் பாரதி ஒரு பெருங்கவிஞர்.. இவரைப் போலவே இவர் கொண்டாடிய வளளுவர் முதலிய மூவரும் பெருங்கவிஞர்கள்.

இருபதாம் நூற்றாண்டில் நமக்குக் கிடைத்த பாரதியின்

வழியேதான் இவர்களை நாம் பார்க்கிறோம் மற்றும் இருபதாம் நூற்றாண்டில் பாரதி வழியே நமக்குள் வந்து சேர்ந்த, நாம் வரித்துக் கொண்ட பார்வையின் வழியேதான் வள்ளுவர் முதலியவர்களை நாம் பார்க்கிறோம்.

முதலில் இளங்கோவை எடுத்துக் கொள்வோம். இருபதாம் நூற்றாண்டில்தான் சிலப்பதிகாரம் நமக்கு வந்து சேர்ந்தது என்பது மட்டுமல்ல, நமக்குள் வந்து சேர்ந்தது என்று சொல்வதும் பொருந்தும். இடைக்காலத்தில் சைவம் மேலோங்கி இருந்தபொழுது இளங்கோ அடிகள் என்ற சமணர் படைத்த காவியத்தை நம்மவர் கண்டுகொள்ளவில்லை. அன்றியும் இருபதாம் நூற்றாண்டில்தான் மன்னராட்சி கேள்விக்குரியதாகிறது மற்றும் வீழ்த்தப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் தான் இலக்கியத்தில் மன்னர்கள், கடவுளர்கள் முதலியவர்களை ஓரத்திற்கு ஒதுக்கிவிட்டு இலக்கியத்தின் தலைமக்களாக மக்கள் வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டில்தான் புரட்சிக்கு வாய்ப்பு நேர்கிறது.

இவை மட்டுமல்லாமல் அரசனின் நீதிமுறை சிலப்பதிகாரத்தில் கேள்விக்குள்ளாகிறது. மதுராபுரித் தெய்வம் நீதியை நிலைநிறுத்தவில்லை. மன்னனைக் காப்பாற்ற முடியவில்லை. சிலம்போடு புறப்பட்ட கண்ணகி உரத்துக்கேட்கிறாள். "நீதி தவறிய இந்த நகரத்தில் தெய்வம் இருக்கமுடியுமா? சான்றோர் இருக்க முடியுமா? கற்புடைய மகளிர் வாழமுடியுமா" உண்மைதான் நீதி தவறி அநீதியே அறமாகிவிட்ட சமூகச் சூழலில் கோவில்களில் அடைபட்டு வழிபாடு பூசை முதலியவற்றை ஏற்றுக்கொண்டு தெய்வங்கள் அடக்கமாய் இருந்து விடுகின்றன. தெய்வங்கள் புரோகிதர்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன.

பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பது போல சான்றோர்கள் தெருவுக்கு வருவதில்லை. மகளிர் தம் கற்பைக் காத்துக் கொள்ளமுடியவில்லை. கண்ணகியின் இந்த ஆவேசக் குரல் நம் காலத்தில் பொருள் நிறைவு பெறுகிறது.

தமிழ் உணர்வு இருபதாம் நூற்றாண்டில் தான் மேலோங்கி நிற்கிறது. வடநாடு நோக்கி சேரன் படையெடுக்கிறான். கனகவிசயர் தலையில் கல் ஏற்றி வருகிறான். வடவரின் ஆதிக்கம் கேள்விக்குறி ஆகிறது. அதைப்போல மறையவனின் அறிவுரை கேட்டு சேரன் கனகவிசயரிடம் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு

மன்னரிடம் பகைமை தீர்கிறான். தமிழ்நாடு ஒன்றாகிறது. இளங்கோ காணவிரும்பிய தமிழ் நாட்டைத்தான் இன்று நாம் காண விரும்புகிறோம். கண்ணகி கற்பின் கனலி மட்டுமல்ல, தெய்வமாகிறாள். தமிழ் மக்களின் நீதி உணர்வைக் கண்ணகி தன் நெஞ்சில் தாங்கி நிற்கிறாள். அறம் தவறிய நகரையும், ஊழல்களில் புதையுண்டவர்களையும் எரித்து அழிப்பது தேவை என்பதற்கு இன்றளவும் குறியீடாகிறாள். இவை எல்லாம் பாரதியிடம் நாம் காணும் அறம் முதலிய உணர்வுகளுக்கு சிலப்பதிகாரம் இடம் தருகிறது. பாரதி பாடிய பாஞ்சாலியின் இன்னொரு வடிவம் கண்ணகி. மத உணர்வுகளுக்கு இப்பொழுது நாம் அழுத்தம் தருவதில்லை. இளங்கோ சமணர் என்பதைக் காட்டிலும் அசலான தமிழர் என்பதற்கு நாம் அழுத்தம் கொடுக்கிறோம்.

சிலம்பின் காவியப்பரிமாணம் நம்மைப் பெரிதும் கவர்கிறது. மன்னர்கள் தரையில் வீழ்கிறார்கள். மனிதர்களுக்குள் தெய்வங்கள் கிளர்ந்தெழுகின்றன. பெண் தெய்வம் வரம் தருகிறாள். கோவலன் மட்டுமல்லாமல் பாண்டியனும் குற்றத்தில் இருந்து விடுபடுகின்றனர். இந்தியா நம்முன் காட்சி தருகிறது. இமயம் நமக்கு எதிரில் வருகிறது. காவிரி கானல்வரியாய் ஓடுகிறது. இசைப் பாடல்கள் எல்லா நிலங்களிலும் எழுந்து ஒலிக்கின்றன. தமிழ்நாட்டிய அரங்கை நம் கண்முன் காண்கிறோம். மாதவியின் கானல்வரி கனகவிசயரின் தலையை நெரிக்கிறது. கண்ணகி நமக்குள் பெரும் காட்சியாகிறாள்.

நமக்குள் வரித்துக் கொண்ட பாரதியின் உணர்வுகள் வழியே சிலம்பை நாம் பார்த்ததுபோல இப்பொழுது கம்பர் காவியத்தையும் பார்த்துக் கொள்வோம்.

மனிதனை விட்டு விலகியிருக்கிற தெய்வங்கள் நமக்குத் தேவையில்லை. மனிதருக்குள்ளிருந்து தான் தெய்வங்கள் எழுச்சி கொள்கின்றன. மனித நீதியை இந்தத் தெய்வங்கள் நிறைவேற்ற வேண்டும். அரக்கர்கள் எல்லா இடங்களிலும் அன்றும் சரி, இன்றும் சரி ஆதிக்கம் பெறுகின்றனர். இவர்கள் எல்லாவற்றையும் வசப்படுத்திக் கொள்கிறார்கள். இவர்களுக்கு மனிதர்கள் மட்டுமல்லாமல், தெய்வங்களும் பணிபுரிய வேண்டும். இவர்கள் முன்னிலையில் பெண்கள் தன்மானத்தோடு இருக்கமுடியாது. இந்த அரக்கர்கள்தான் மன்னர்கள் மற்றும் தலைவர்கள், எந்த ஒரு மன்னனுக்குள்ளும் இப்படி ஒரு அரக்கன்தான் இருக்கமுடியும். இந்த மன்னனுக்கும் பதவி பறிபோய் மக்களுக்குள் ஒருவனாய்

வந்து சேரவேண்டும். காடுமலைகளில் திரிய வேண்டும். மக்களின் துணை இல்லாமல் இவனுக்கு வாழ்வில்லை. ஏழைகளோடு இவன் தோழமை கொள்ள வேண்டும். நாகரிகத்தில் தாழ்ந்தவர் என்பதற்காக இவன் அவர்களை ஒதுக்க முடியாது. இவனுக்குள்ளும் இன்னும் தீமைகள் இருக்கின்றன. சிலசமயம் அவையும் வெளிப்படத்தான் செய்யும். இவனும் பெண்ணை ஒடுக்குவான் இருந்தபோதிலும், மக்களின் பேரன்போடு, வலிமையோடு, அரக்கர்களை இவன் முறியடிப்பான்.

இப்படி ஒரு கதையைத்தான் கம்பர் காவியமாய்ப் பாடுகிறார். இந்தக் காவியத்தில் பாரதி தன் மனத்தைப் பறிகொடுத்ததில் வியப்பில்லை. கம்பரின் கதை நம் காலத்துக் கதையும்தான். கம்பர் காவியத்தில் வரும் அற்புதங்கள் முதலியவற்றை பாரதியும் சுவைக்கத்தான் முடியும். புராணங்கள் கூறும் பொய்மைகள் கண்டு நகைத்தவன் பாரதி. புராணங்கள் வழியே மனிதக் கதையை பார்க்கச் சொன்னவன் பாரதி. ஜார் மன்னர்களை, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை வெறுத்தவன் பாரதி. இவர்களின் வீழ்ச்சியைப் பாரதி கொண்டாடுவதில் வியப்பில்லை. தெய்வ நம்பிக்கையோடுதான் பாரதி இறுதிவரை இருந்தார். ஆனால் பாரதியின் தெய்வத்திற்குள் நிறைவாக இருந்தவன் மனிதன்.

கம்பர் காவியத்தில் அரக்கர்களை ஒழிக்கும் பெரும் நோக்கத்தோடு தெய்வம் மனிதனாய் அவதாரம் செய்கிறது. கூனி, கைகேயி முதலியவர்கள் தெய்வத்தின் நோக்கம் நிறைவேறும் முறையில் ஒத்துழைக்கிறார்கள். இவர்கள் குற்றவாளிகள் ஆகமுடியாது. இராவணனேகூட இறுதியில் குற்றம் நீங்குகிறான். பகைவனுக்கருள்வாய் நெஞ்சே என்று பாடியவர் பாரதி. தின்னவரும் புலியிடத்தும் பகைமை பாராட்டதவன் பாரதி. பாரதி கம்பர் காவியத்தை கூடுதலாகவே சுவைத்திருக்கமுடியும்.

"விதியே தமிழச் சாதியை" என்னும் கவிதையில் எல்லை ஒன்று இன்மை எனும் பொருளதனை கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி என்று கூறுகிறார்.

இராவணன் வருகையைக் கண்ட வீபிடனனோ வேறு இன்னொருவனோ கூறுவது போல இவன் "திருமால் இல்லை, சிவனும் இல்லை; பிரம்மனும் இல்லை. இவர்களை எல்லாம் கடந்து பரம்பொருளாய், மேலாய் இருப்பவன் இவன் என்று ஒரு பாடல் வருகிறது. இது பரம்பொருள் இதற்கு உருவம் இல்லை. பெயர் இல்லை. நிறம் இல்லை. குணம் இல்லை என்பதாக நாம்

எடுத்துக் கொள்ளலாம். இதற்கு எல்லை என்பது இல்லை. பிரபஞ்சமாய், இயற்கையாய், எல்லா உயிர்களுமாய், உயிரியக்கமாய் விரிந்திருப்பது இது. இதை எதற்குள் அடக்க முடியும். பிரபஞ்சத்தின் பேரியக்கம் என்று இதை நாம் இங்கு பொருள்படுத்தமுடியும். எல்லையற்று விரிந்து செல்லும் பேரியக்கம் இது. இயற்கை, உயிர்கள் அனைத்திலும் இயங்குவது இந்தப் பேரியக்கம். இது மாபெரும் படைப்பியக்கம். எல்லா மனிதர்களுக்குள்ளும் இயங்குவது இந்தப் படைப்பியக்கம். இந்த மாபெரும் பேரியக்கத்தை தெய்வம் என்று சொல்வது ஒருவகையில் இந்த பேரியக்கத்தை குறுக்கி, குறைத்துக் சொல்வதாக முடியும். இந்தப் பேரியக்கம்தான் வரலாறு, நமக்குள்ளும் இயங்குகிறது. கம்பன் கதைக்குள் நாமும் இருக்கிறோம். மாபெரும் நாடகத்தில் நாமும் உறுப்பினர்கள். ஒருவகையில் கம்பன் இந்தப் பேரியக்கத்திற்கு வசப்பட்டிருக்கிறான். இதற்கு முன் இராமன் கதை ஒரு அற்பமான கதை.

சரயு நதியில் வீழ்ந்து இறந்த இராமனைப் பற்றி பாரதி பாடுகிறார். பாஞ்சாலியின் பார்வையில் தருமன் சிறியவனாகிறான்.

பாஞ்சாலி பெண்மையின் பேருருவம், சீதையின் பார்வையும் சிறுத்திருக்கவா முடியும். இவள் முன்னிலையில் இராமன் எளியவன். புதுமைப்பித்தனை இங்கு நாம் நினைத்துக் கொள்கிறோம்.

கம்பனின் கதை நம் காலத்துக்கதை. இருபதாம் நூற்றாண்டுப் பார்வையிலிருந்து கம்பரை நம் காலத்திற்குக் கொண்டு வருகிறோம். பாரதி வழியே, நமக்குள் செரித்துக்கொண்ட பார்வையின் வழியே கம்பனை நாம் காண்கிறோம். கம்பனின் காவியப் பரிமாணங்கள் நமக்குத் தென்படுகின்றன. இடைக்காலத்தில் கம்பனை நாம் சற்று ஒதுக்கி வைத்திருந்தோம். இன்று கம்பனை நமக்கு நெருக்கமாகக் காணமுடியும். பாரதியின் வழியே இலக்கியத்தை நாம் கற்றிருக்கிறோம். "கம்பன் என்றொரு மானிடன்" என்று பாரதி இன்னொரு இடத்தில் கூறுகிறார். கம்பனுக்குள் மானுடத்தை, மனித இயக்கத்தை, மனித நாடகத்தைக் காண்பதில் தவறில்லை.

இனி வள்ளுவருக்கு வருவோம். வள்ளுவர் இலக்கியத்தினுள்ளும் காவியப் பரிமாணங்கள் இயல்பாகப் பதிந்திருக்கின்றன. பண்புடையவர்கள் சிலர் என்றாலும்

இவர்களால் தான் உலகம் அழிவுறாமல் வாழ்கிறது என்கிறார் வள்ளுவர்.

"ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப் படுவார்"

என்று சான்றோரைப் பற்றி வள்ளுவரின் சித்திரிப்புக்குள் ஒரு காவியத்தை நாம் காணமுடியும்.

செல்வம் ஒரு பக்கமாகவும் - அறிவும் பண்பும் இன்னொரு பக்கமாகவும் உலகம் இரண்டாக உடைந்து விட்டதைப் பார்க்கும் வள்ளுவர், இந்த உலகை எப்படிச் சரிப்படுத்துவது என்பதற்கு மருந்தாக ஒப்புரவை முன்வைக்கிறார். ஊருணியை, நடு ஊரில் பழுத்த மரத்தைச் சான்று காட்டுகிறார். எல்லாவற்றையும் பொதுஆக்கு என்கிறார். "கொல்லப் பயன்படுவோர்கீழ் என்கிறார், தேவர்களைக் கயவர் என்கிறார்.

"அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அரசனின் செல்வத்தை தேய்க்கும் படை" என்கிறார். நெறியற்ற முறையில் வரி என்ற பெயரில் சுரண்டும் மன்னனை, பாலைநிலத்தில் கள்வனோடு ஒப்பிடுகிறார். குன்று போன்ற பெரியவனும் தவறு செய்யும்பொழுது குன்றி மணிபோலச் சிறுத்து விடுகிறான் என்கிறார். மேலுலகம் இல்லையென்றாலும் கொடு என்கிறார். உயிர்களைக் கொன்று உண்ணாதவன் தெய்வம் என்கிறார். வறுமையைப் படைத்தவன் தெய்வம் என்றால் அவனும் பிச்சையெடுத்து அலைந்து அழியட்டும் என்கிறார். பல்லக்கில் செல்பவனை முன் பிறப்பில் நல்வினை செய்தவன் என்றோ, சுமந்து செல்பவனை முன்பிறவியில் தீமை செய்தவன் என்றோ சொல்வது அறநெறி அல்ல என்கிறார். அன்பு செய்பவனுக்குத்தான் அறம் தெரியும். இவனுக்குத்தான் வீரம் உண்டு என்கிறார். அன்பில்லாதவனுக்கு அறம் தெரியாது என்பது மட்டுமல்ல, அவன் கோழை என்கிறார். மக்களை ஏமாற்றும் துறவிகளை வஞ்சகர்கள் என்கிறார். அவனுக்குள் இருக்கும் ஐம்பூதங்களும் நகைக்கும் என்கிறார். அன்போடு மனம் ஒன்றி இல்லறத்தில் ஈடுபடுபவர் துய்க்கும் பேரின்பத்தைப்போல "தாமரைக் கண்ணான் உலகம் உண்டோ" என்கிறார். இன்னா செய்பவர்க்கும் இனியவை செய்ய வேண்டும் என்கிறார்.

இப்படி நூறு நூறு காட்சிகளை வள்ளுவர் தம் இலக்கியத்தில் பதிவு செய்கிறார். சிறியதைப்போலத் தோன்றும்

எந்த ஒரு காட்சியையும் கவனத்தோடு நிறுத்திப் பார்க்க முடியுமானால் அதற்குள் காவியப் பரிமாணத்தின் காட்சிகளைக் காணமுடியும். வள்ளுவரின் மனிதனுக்குள் தெய்வங்களைக் காணமுடியும். சான்றோர்கள் தான் உலகைத் தாங்குகிறார்கள். பேரன்புதான் மனிதனை அமரனாக்குகின்றது. அறம் / அன்பில்லாத வாழ்க்கை வறண்ட பாலைநிலம். வானம் பெய்யவில்லை என்றால் உலகில் தானம் இல்லை, தவமும் இல்லை என்கிறார். மனிதனின் பெருமித வாழ்வுக்கு ஆதாரம் இயற்கை. உழவர்களே உலகத்திற்கு அச்சாணி. விதி வழியது என்றாலும், விதியை மனிதன் வெல்லமுடியும் என்கிறார். முயற்சி செய்பவனுக்கு முன்னர் தெய்வம் வேட்டியை இறுகக் கட்டிக்கொண்டு முன் செல்லும் என்கிறார். இப்படிச் செல்லுகின்றன - வள்ளுவரின் அறங்கள்.

திரும்பவும் சொல்லலாம் தமிழ் இலக்கியத்தில் பாரதி என்ற பெரும் கவிஞனுக்குள் திரண்டிருக்கும் இருபதாம் நூற்றாண்டின் பார்வை வழியே பார்க்கும்பொழுது வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும் நம் காலத்திற்கு நம் உணர்வுகளுக்கு நம் தேவைகளுக்கு மிக நெருக்கமாக வந்து விடுகிறார்கள். இவ்வகையில் வள்ளுவர் முதலியவர்களும் பெருங்கவிஞர்கள். தமிழின் அழிவின்மைக்கு இவர்கள் ஆதாரங்கள். தமிழ் வாழ்வை உலகில் நிலைநிறுத்தும் தகுதி இவர்களுக்கு உண்டு. இவர்களின் இலக்கியங்களில் காவியங்கள், பேரறங்கள், பெருங்காட்சிகள், மனித வீறு முதலியவை இயல்பாய்த் தென்படுகின்றன.

நெருக்கடி மிக்க வரலாற்றுச் சூழலில், வரலாற்றில் புதிய திருப்பங்கள் நேரும் சமயத்தில் பெருங்கவிஞர்கள் எழுவார்கள் என்ற நியதி உண்மை என்றால் வள்ளுவர் மற்றும் இளங்கோவின் தோற்றத்தையும் தமிழகச் சூழலில் வைத்து நாம் பார்க்க வேண்டும். சங்ககாலம் முடிவு வந்துவிட்டது. வேளிர்கள் இனக்குழுத் தலைவர்கள் இனி இல்லை. ஔவை புலம்பியதுபோல இனிப் பாடுநரும் இல்லை. பாடுநர்க்கு ஒன்று ஈபவரும் இல்லை. மூவேந்தர்களும் ஓயாமல் போரிட்டு நாடுகளை நாசமாக்கினர். நகரங்கள் அழிந்தன. வறுமை பெருகியது. அறங்கள் சிதைந்தன. இந்தச் சூழலில்தான் சமூகம் திணறிக் கொண்டிருந்தபொழுது, வள்ளுவரும் இளங்கோவும் வருகின்றனர்.

அநேகமாக இவர்களின் காலம், களப்பிரர் காலம் என்று நம்மால் இனம் காணமுடியும். சமணர்கள் தமிழகத்தில் மக்களோடு

கலந்தனர். கள்ளும், சூதும், பரத்தையர் ஒழுக்கமும் பரவியிருந்த சூழலை மாற்றுவதற்கு அறங்கள் உரைத்தனர். தமிழை அழிவிலிருந்து காத்தனர். மதுரையில் பாண்டியன் இல்லை. அவன் அறநெறி அழித்தவன். புகார் நரில் வறுமைக் கொடுமைகள் பெருகின. இளம் பெண்களைத்தேடி அலைந்த இளவரசன் கொல்லப்படுகிறான். பெண்கள் கறபோடு வாழ்வதற்கு உறுதியில்லை. தவமுயற்சிகள் பெருகுகின்றன. வாழ்வுக்கு ஆதாரமாக எந்தத் தத்துவம் இருக்கமுடியும் என்ற தேடல் ஏற்படுகிறது.

தெய்வங்கள் இனி தமிழகத்தில் தாராளமாக நடமாடமுடியும். வாழ்வின் ஆதாரங்கள் அழிக்கப்படுகிற நிலையில் இனி மாயைகளும், பிரமைகளும் பெருக முடியும். விதியின் வளமை பெருகும். மேலுலகம் என்றும் கீழ் உலகம் என்றும் பேச்சுக்கள் எழும். இந்தச் சூழலை இன்னும் உயிர்வாழ்கிற தமிழ்ச் சான்றோர் ஏற்கமுடியாது. இனக்குழுவின் கூறுகள் இன்னும் அழிந்துவிடவில்லை. சூழலை மாற்றியாக வேண்டும். மக்கள் வழிச்செல்லும் மன்னன் தேவை. புலன் அழுக்கற்ற துறவிகள் தேவை. மனித முயற்சிகள் பெருக வேண்டும். இத்தகைய உணர்வோடுதான் வள்ளுவரும், இளங்கோவும் தோன்றுகின்றனர். தமிழ்ச்சமூகம் இவர்களின் வழியே தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது.

கம்பரின் தோற்றத்தையும் இப்படிக் காணமுடியும். பெருகும் வேந்தர்கள், மாபெரும் படையெடுப்புக்கள் தமிழகத்தில் நடைபெறுகின்றன. படையில் மக்கள் பெருந்திரளாய்த் திரட்டப்படுகின்றன. என்னென்னவோ நடைபெறுகின்றன. அந்நியநாடுகள் அழிகின்றன. போர் வெற்றிகள் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் மக்கள் வாழ்க்கை என்னஆகும். பெரும் வெற்றிகளுக்காக நாட்டு மக்கள் எதை எல்லாம் இழக்க நேரிடும். உயிர்கள், உடமைகள் - எவ்வளவுதான் இழப்பது. இலக்கியத்தில் சித்தரிக்கப்படுவதைப்போல மன்னர்கள் இருக்கமுடியாது. இவர்களுக்குள் இருப்பவர்கள் இராவணர்கள். இவர்களை ஒழித்தால் ஒழிய மக்களுக்கு வாழ்வில்லை. இனி இராமர்கள் தேவை. இப்படி ஒரு சூழலில் கம்பரின் தோற்றத்தைப் புரிந்து கொள்ளமுடியும்.

இப்பகுதியை முடிக்கும்முன்னர் இன்னொன்றையும் சொல்லலாம். தமிழ் மரபில் கம்பன், கவிச்சக்கரவர்த்தி/ பேரரசன்.

இந்தப் பெருமையை இன்றும் தனக்குத் தக்கவைத்துக் கொண்டவன் கம்பன். கவிப்பேரரசன் என்று தன் சமகாலத்தில் அழைக்கப்பட்ட ஒட்டக்கூத்தனை நாம் மறந்துவிட்டோம். கவித்துவம் கொழுத்த செயங்கொண்டாரையும் நாம் இன்று நினைப்பதில்லை. திருத்தக்கத்தேவர் முதலியவர்களும் இன்று நம் முன்னிலையில் இல்லை. இருபதாம் நூற்றாண்டில் இவர்களுக்கு உரிய இடம் என்ன என்பது கேள்விக்குரியதாகி இருக்கிறது. சங்கப் புலவர்கள் நியாயமாகவே நம்முன் நிற்கிறார்கள். பாரதிதாசனும் நமக்குமுன் நிமிர்ந்து நிற்கிறார். சில பீடங்கள் சரிந்துவிட்டன. சிலர் மேல்நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

21-ம நூற்றாண்டுக்குள் வந்துவிட்டாலும் நம் ஆளுமையை உருவாக்கிய இருபதாம் நூற்றாண்டு நமக்குள் இன்னும் வாழ்கிறது. தமிழின் நெடுங்கால மரபில் பெருங்கவிஞர்கள் என நமக்குக் கிடைத்தவர்களில் பாரதியோடு சேர்த்து நால்வர். வள்ளுவருக்கும், இளங்கோவுக்கும், கம்பருக்கும் நிகராய் பாரதியை நாம் வைக்கமுடியும். வள்ளுவர் முதலியவர்களையும் பாரதிக்குள் வந்த இருபதாம் நூற்றாண்டுதான் நமக்கு இனம் காட்டியது. செல்லப்பா அவர்களின் கூற்றின் ஆழத்தை இங்கு நாம் புரிந்து கொள்கிறோம். செல்லப்பாவின் மேன்மையையும் ஒப்புக் கொள்கிறோம்.

"தமிழச்சாதியின் அமரத்துவம்?"

பாரதியின் தமிழ்ப்பற்று குறித்து நாம் விரிவாக சொல்ல வேண்டியது இல்லை. தமிழச்சியைக் காட்டிலும், இன்னொரு பெண் அழகாக இருந்தால தனக்குப் பொறுக்க முடியவில்லை என்று பாரதி எழுதினார். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழின் பெருமை சொன்ன பாரதி, உடனடியாக தமிழர்களின் தாழ்நிலை பற்றி வேதனையோடு சிந்திக்கிறார். தமிழர்கள் பாமரராய், விலங்குகளாய், அடிமைகளாய் பூமி எங்கிலும் பலரால் இகழப்பட்டு வாழ்வதைக் கண்டு குமுறுகிறார். தமிழ்மக்கள் நலம்பெற வேண்டுமானால் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டும் என்கிறார். வீதிதோறும் இரண்டொரு பள்ளி தேவை என்பதோடு இவை தமிழ்ப் பள்ளியாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் சொல்லுகிறார். தந்தையின் விருப்பத்திற்கு ஒப்ப ஆங்கிலக் கல்வி கற்ற தனக்கு நேர்ந்த தீங்குகள் பற்றி எழுதுகிறார். பாரதியின் தமிழ்ப் பற்றை இன்றைய நிலையில் நினைத்துப் பார்க்கிறோம். பாரதி இறந்து 80 ஆண்டுகள் கழிந்த நிலையிலும்

நம் அவல நிலையில் மாற்றம் இல்லை. அன்றியும் நம் அவலநிலை மேலும் பல மடங்கு அதிகரித்து உள்ளதைத்தான் இன்று நாம் பார்க்கிறோம்.

"விதியே விதியே தமிழச்சாதியை என்செய நினைந்தாய்?" என்று தொடங்கும் பாடல் குறித்து இப்பொழுது மீண்டும் சிந்திக்கலாம். தமிழச்சாதி அமரத்துவம் உடையது என்று கருதிய பாரதி இத்தகைய அழிவின்மைக்குக் காரணம் என்ன என்பது பற்றிச் சொல்லுகிறார். இங்குதான் பாரதியின் தமிழ் வரலாற்று அறிவின் மேன்மை என்ன? ஆற்றல் என்னவென்பது பற்றிய சிந்தனையை அறிந்து கொள்கிறோம். தமிழ் வரலாற்றை இப்படிப் பொருள்படுத்தியவர் இதுவரை யாரும் இல்லை.

தமிழ் நிலத்தில் வள்ளுவர் தோன்றினர். இளங்கோவும், கம்பரும் தோன்றினர். தமிழ் மக்களின் ஆற்றல் மிக்கப் பண்பாடுகளை இவர்கள் தம் நூல்களில் பதிவு செய்துள்ளனர். தமிழனின் அறநெறி வள்ளுவத்தில் பதிவாகியுள்ளது. அநீதியை அழிக்க வேண்டிய ஆவேசம் சிலப்பதிகாரத்தில் பதிவாகியுள்ளது. இராவணர்களின் கொடுங்கோன்மையை மக்களைப் படைதிரட்டி அழித்தொழிக்க வேண்டும் என்ற அக்கறை கம்பர் காவியத்தில் பதிவாகியுள்ளது. இன்னும் நிறையச் சொல்லலாம். வள்ளுவரின் ஒப்புரவு, தமிழ் மக்களின் பேரறம். பெண் ஆற்றலைப் போற்றுவது இளங்கோவின் நெறி. பற்றிப் படர்ந்துள்ள தீமைகளை வேரோடு களைவது தெய்வநெறி. இப்படித் தமிழ்நெறி பற்றி எவ்வளவோ சொல்லலாம்.

வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகியவர்களைத் தோற்றுவித்த தமிழ்ச்சாதி / தமிழ்ச் சமுதாயம் உலகில் அழியாமல் என்றும் நிலைத்து நிற்கும் தகுதி உடையது என்று பாரதி கருதினார். அறத்தையும் ஒப்புரவையும், அநீதியை வேரோடு சாய்க்கும் ஆற்றலும் பெண்ணை மதித்தலும் அரக்கர்களை, ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கு முந்தும் தெய்வ நெறியும் கொண்ட ஒரு சமூகம் வரலாற்றில் தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொள்ளும். இவற்றைக் கைவிட்ட சமூகம் வரலாற்றில் மங்கி மாய்ந்து ஒழியும்.

விதியே விதியே எனத் தொடங்கும் இந்தப் பாடலில் வெளியிடப்பட்டதைப்போல பாரதியின் வேதனை வேறு எந்தப் பாடலிலும் இல்லை. "இதுநாள் வரை தமிழ்ச்சாதி அமரத்துவம் உடையது என்றுதான் நம்பியிருந்தேன் இப்பொழுது என் நம்பிக்கையின் மீது பேரிடி வந்து விழுந்துள்ளது" என்பதுபோல

பாரதி கருதுகிறார். மேற்கிலிருந்து வருவன எல்லாவற்றையும் முழுமையாக ஏற்றுக்கொண்டால் ஒழிய தமிழ்ச்சாதிக்கு உய்வு இல்லை என்கிறது ஒரு குரல். இதற்கு மாறாக பண்டையோர் கொண்ட கொள்கைகள் நடைமுறைகள் அனைத்தையும் முழுமையாகக் கடைப்பிடித்தால் ஒழிய தமிழ்ச்சாதிக்கு உய்வு இல்லை என்கிறது இன்னொரு குரல். இந்த இரண்டு குரல்களுக்கும் இடையில் அகப்பட்டுத் தவிக்கிறது தமிழ்ச்சாதி.

பாரதியின் கருத்து என்ன? மேற்கிலிருந்து வருவனவற்றில் நம்மால் ஏற்கத்தக்கவைகளை ஏற்பதும், பழமையிலிருந்து வருவனவற்றில் தள்ள வேண்டுவனவற்றைத் தள்ளுவதும், இப்படி இரண்டு போக்குகளுக்கு இடையில் நம் வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்வதும் தமிழ்மக்களின் கடமை என்கிறார் பாரதி. மேலும் தொடர்கிற கவிதை இத்துடன் நின்று விடுகிறது. பாரதி கருதியதுபோல ஒரு நிலைமை அவர் காலத்திலும் இருந்தது இன்றைக்கும் இதே சிக்கல். தமிழ்ச்சாதி வரலாற்றில் எப்படித் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

தமிழ் வரலாற்றில் ஒரு இறுதிக்கட்டத்தில நாம் இருப்பதைப் போன்ற உணர்வுதான் நமக்கு ஏற்படுகிறது. இன்றுத் தமிழுக்கு இடமில்லை. தமிழ் மக்களின் வாழ்வுக்கான ஆதாரங்கள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன. தமிழ் நிலமும், நீரும், கடலும் நஞ்சாகிறது. உலகமயமாதல் முதலிய பெயர்களில் அந்நியர்கள் நம் அரசியலிலும், பொருளியலிலும், கல்வி, மருத்துவம், பண்பாடு முதலியவற்றிலும் ஊடுருவி அழித்து வருகின்றனர். இவர்களோடு நம் அரசியல்வாதிகளும், படிப்பாளிகளும் ஒத்துழைக்கின்றனர். பணத்துக்கும் அதிகாரத்திற்கும் நாம் பலியாகி வருகிறோம். ஊழல் நமது வாழ்வின் நியதியாகிவிட்டது. தேசம் நமக்குச் சொந்தமில்லை. வாழ்க்கை நம் வசமில்லை. நம்மிடமிருந்து தேசத்தைப் பறித்துக் கொண்டவர்கள் நம்மைக் கூலிகளாய், அடிமைகளாய், அகதிகளாய் மாற்றி வருகிறார்கள். மதுபானம் முதலியவற்றிற்கு இடம் கொடுத்து தமிழ் மக்களின் அற உணர்வும், மனஉறுதியும் சிதைந்துவிட்டன.

தமிழன் இப்பொழுது கோழையாய், போக்கிரியாய் அலைகிறான். துதிபாடிகள் பெருகிவிட்டனர். தமிழனுக்குத் தன்மானம் இல்லை, பகுத்தறிவில்லை. பெரியாருக்கு மட்டுமல்லாமல் மார்க்சுக்கும் புரோகிதர்கள் வந்துவிட்டனர். தமிழனை ஒடுக்க எதிரிகள் படை திரட்டுகின்றனர். அறிவியலும் தொழில்நுட்பமும் தமிழனை அடிமைப்படுத்துகின்றன. தமிழ்

மக்களைக் கொள்ளையிட்டவர்கள் நன்றாக வாழ்கின்றனர். தமிழன் வறியவனாய், நோயாளியாய் வாழ்வுக்குத் தவிக்கிறான். இந்த நிலைமாறும் என்பதற்கான அறிகுறிகள் இல்லை. தமிழனை வாழவைக்க முந்தும் சக்திகள் தொடர்ந்து ஒடுக்கப்படுகின்றன.

பாரதியின் வேதனைக்குரல் நமக்குள்ளும் ஓங்கி ஒலிக்கிறது. தமிழன் அமரத்துவம் உடையவன்தானா? வள்ளுவரையும், இளங்கோவையும், கம்பரையும் நாம் என்ன செய்தோம். வள்ளுவரின் அறத்தை நாம் எப்படிக் கைவிட்டோம். ஒப்புரவை ஏன் தவறவிட்டோம். இளங்கோவின் புரட்சிகர உணர்வு நமக்குள் எப்படி அழிந்தது. இராவணர்களை எப்படிச் சகித்துக் கொள்கிறோம். தெய்வம் என்று எதை நாம் கொண்டாடுகிறோம். தமிழ்நெறி என்ன ஆயிற்று? கூலிகளாய், அடிமைகளாய், அகதிகளாய், கோழைகளாய், வெறியர்களாய், வேசிகளாய் வாழ நேர்ந்த நிலையில் வறுமைக்கும், நோய் நொடிகளுக்கும் பலியான நிலையில் நமக்கு யார் துணை? நம்மை யார் காப்பாற்ற முடியும்? வள்ளுவரும் இளங்கோவும் நமக்குள்வந்து தங்க நமக்குள் எங்கே இடம் இருக்கிறது. பணத்திற்கும் அதிகாரத்திற்கும் எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்த நிலையில் வள்ளுவரும் இளங்கோவும் நமக்கு எதற்குத் தேவை?

பக்திப் பரவசத்தில் மட்டும் தம்மை மூழ்கடித்துக் கொள்பவர்கள் தமக்குள் உள்ளும் வெளியிலும் எந்த இராவணனைக் காண்பார்கள்? இராவணர்களோடு சமரசம் செய்து கொண்டவர்களுக்கு இராமனும்தான் எதற்குத் தேவை? இந்த வேதனையிலிருந்து விடுதலை பெற நமக்கு என்னவழி?

புதிய பாரதி தேவை

ஏறக்குறைய பத்தாண்டுகளுக்கு முன்பு கோவையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பார்வையாளர் ஒருவரின் கேள்விக்குக் கீழ்க்கண்டவாறு கவிஞர் அப்துல் ரகுமான் மறுமொழி கூறினார்.

"தமிழில் இன்று பெரும் கவிஞர்களின் தோற்றத்திற்கு வாய்ப்பில்லை. பாரதியார் காலத்தில் அவருக்குப் பின்னணியாக தேச விடுதலை இயக்கம் இருந்தது. பாரதிதாசன் காலத்தில் அவருக்குப் பின்னணியாக திராவிடர் இயக்கம் இருந்தது. இன்று பேரியக்கங்கள் இல்லை. ஆகவே பெருங்கவிஞர்களின் தோற்றத்திற்கு வாய்ப்பு இல்லை.

கவிஞர் அப்துல் ரகுமானின் மறுமொழி அன்றும் எனக்கு உடன்பாடில்லை. இன்றும் எனக்கு உடன்பாடில்லை. இடைக்காலத்தில் அப்துல் ரகுமானின் கருத்து மாறி இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. காரணம் பத்தாண்டுகளுக்கு முன்பே உலகளவிலான நெருக்கடிகள், கெடுபிடிகள் முதலியவை வளர்ந்திருந்தன. இந்நிலை மேலும் வெடித்திருக்கிறதே தவிர ஒழிந்தபாடில்லை. இந்தியாவினுள்ளும் அன்றும் சரி, இன்றும் சரி நெருக்கடிகள் கூடியுள்ளன. தமிழகத்திலும் எதுவும் குறைந்தபாடில்லை. எல்லா அநீதிகளும் நாசங்களும் உச்சஅளவில் நடைபெறுகின்றன.

வரலாற்றை ஒழிக்கும் சக்திகள் வலிமை பெற்று வருகிறார்கள். தமிழ் வாழ்வையும் இறுதியில் தங்களையும் இவர்கள் சேர்த்து அழித்துக் கொள்வார்கள். இன்று உலகளவில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு குடும்பத்தினுள்ளும், ஒவ்வொரு நிறுவனத்தினுள்ளும், ஒவவொருவர் மனத்தின் உள்ளும் ஓர் போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் எந்தக் காரணத்திற்காகவும் நம் ஆளுமையை, நம் வாழ்வை, நம் வரலாற்றை விட்டுத்தர முடியாது. எதிரிகள் வலிமை மிக்கவர்கள். எதிரிகளின் தாக்குதலால் இடைக்காலத்தில் நாம் வலிமை அற்றுப்போனேம் என்பது உண்மைதான். எனினும் நமக்குள் ஆற்றல்கள் இருக்கின்றன. வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும், சித்தர்களும், பாரதியும், பாரதிதாசனும் இன்றும் நமக்குள் வாழ்கிறார்கள். நமக்குள் இருந்து நம் ஆற்றல்களைத் திரட்டிக் கொள்ள முடியும். வள்ளுவருக்கு மட்டுமல்லாமல் பாரதிக்கும் நமக்குள் உயிர்தரமுடியும்.

பேரியக்கங்கள், நம் கண்ணுக்குத் தெரிகிறமாதிரி இன்னும் உருவாகவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில விடுதலை இயக்கங்கள், உரிமை இயக்கங்கள், பசுமை இயக்கங்கள் உருவாகிவருகின்றன. பெரியாரையும், மார்க்சையும் நாம் இழந்துவிடவில்லை.

ஒரு பெருங்கவிஞரின் தோற்றத்திற்கான காரணிகள் கூடிவருகின்றன. ஆனால் நம் கவிஞர்கள் தான் காலத்தைப் புரிந்து கொண்டவர்களாக இல்லை. தமிழ்வாழ்வின் நெருக்கடிகள் என்று தொடங்கின? யாரால் ஏற்பட்டன? எத்தனை வகைகளில் ஏற்பட்டன? என்றெல்லாம் வரலாறு மற்றும் பொருளியல் முதலியவற்றுக்குள் நுழைந்து ஆராயும் திறன் நமக்கு

இல்லை. நம்மவர்களுக்கும் இல்லை. நமக்குள் ஏற்பட்ட சிதைவுகள், சீரழிவுகள், காயங்கள், ஓலங்கள், துடிப்புக்கள், வேதனைகள் என்று எவற்றை நாம் உணர்ந்தோம்? எல்லாவற்றையும் மறைத்து மூடுவதில் நமக்குத்தான் எவ்வளவு திறமை! எத்தனை போலித்தனங்கள்! எத்தனை பொய்மைகள் மற்றும் பிரமைகள்! எல்லாவற்றையும் கிழித்துக் கொண்டு நம்மை எப்போது பார்க்கப் போகிறோம்? நம்மை இன்றும் ஆதிக்கம் செய்பவர் யார்? எதற்காக இவர்களிடம் நம்மை நாம் இழந்தோம்? இவர்களிடம் பரிசுகளையும், பாராட்டுக்களையும் யாசித்து நிற்கிற அளவுக்கு நாம் எப்படிக் கோழைகளானோம்.

இப்படி எல்லாம் நம் வாழ்வை, வரலாற்றை, நம் சூழலை புரட்டிப் பார்க்கிற பார்வையும், துணிவும் நமக்குத் தேவை. வரலாற்றில் இன்னொரு திருப்பத்திற்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டது இந்தத் திருப்பம். இருபத்தோராம் நூற்றாண்டில் இதன் தாக்கங்கள் நூறு மடங்காய் பெருகி உள்ளன.

எதிரிகளின் தாக்குதல் தொடர்ந்து அதிகரிக்கும்போது நம்மை நாமே விட்டுத்தர முடியாது. இயக்கங்கள் ஒன்றினையும் பேரியக்கம் உருவாகும். வாழ்வா? சாவா? என்று முடிவு செய்யும் கட்டத்தில் நாம் இருக்கிறோம். இப்படி ஒரு பேரியக்கம் பெருங்கவிஞரை எதிர்பார்த்து நிற்கிறது. தமிழ்க் கவிஞர்களில் யார் இனி பெருங்கவிஞராய் உருவாக முடியும் என்ற கேள்வியை வரலாற்றுக்கு விட்டுவிடுவோம். பாரதி இந்திய மக்களுக்கு எதிர்பார்த்த விடுதலையை இடையில் எவரெவரோ பறித்துக் கொண்டனர். இந்திய மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கானத் தொழில் முயற்சிகளை பாரதி எதிர்பார்த்தார். ஆனால் மக்களையும் இயற்கை ஆதாரங்களையும், தேசநலன்களையும் அழிக்கிற முறையில் தான் அந்நியர்களின் ஊடுருவலோடு நம் தேச முதலாளிகள் செயல்படுகின்றனர். பாரதி எதிர்பார்த்ததற்கு மாறாய் சாதிச் சண்டைகளும், மதச்சண்டைகளும் பெருகிவிட்டன. போலி மதவாதிகள் தொடர்ந்து உற்பத்தியாகின்றனர். பெண் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இயலவில்லை. தேசத்தை அடமானம் வைப்பதில் நம் தலைவர்கள் முந்துகின்றனர். இன்னொரு விடுதலைப் போராட்டம் இன்று தேவைப்படுகிறது. பாரதியும் தேவைப்படுகிறார்.

பாரதி நமக்குள் மீண்டும் மீண்டும் எழுவார்.

"என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்று தணியும் இந்த அடிமையின் மோகம்"

என்ற பாரதியின் வரிகள் நமக்குள் நாள்தோறும் ஒலிக்கின்றன.

"இனி ஒரு விதி செயவோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்ற பாரதியின் குரல் நமக்குள் மங்கிவிடாது.

அடிமைப்பட்ட பாஞ்சாலியின் ஆவேசம் நமக்குள்ளும் எழுகிறது. இந்தக் குரல் கண்ணகியின் ஆவேசத்தோடு இணைகிறது.

"இது பொறுப்பதற்கு இல்லை - தம்பி
எரிதழல் கொண்டு வா"

என்று உறவு என்று பாராமல், தன்னை அடிமைப்படுத்தியவனுக்கு எதிராக வீமனின் குரல் இன்றும் நமக்குள் ஒலிக்கிறது.

பாரதியை நாம் இழப்பதற்கில்லை. புதிய பாரதிகள் நமக்குத் தேவை. புதிய காலச் சூழலை எதிர்கொள்ளும் முறையில் புதிய பாரதிகள் தேவை. முன்னைய பாரதியின் உயிர்ச்சக்தி புதிய பாரதிகளைத் தோற்றுவிக்கும். இவர்கள் வழியே வள்ளுவரும், இளங்கோவும் மீண்டும் உயிர்த்தெழுவார்கள்.

கண்ணன் பாட்டில் பாரதியின் கவித்துவம்

தமிழ்க் கவிதையின் உச்சங்களில் ஒன்று என பாரதியின் கண்ணன் பாட்டை நாம் சொல்லமுடியும். கண்ணன் பாட்டில் பாரதி செய்திருக்கிற புதுமைகள் வியக்கத்தக்கவை. கண்ணன் என்ற படிமம், இந்தியாவின் படைப்பியக்கத்தில் ஒரு அற்புதம் என்று சொல்லமுடியும்.

பக்தி இயக்கத்தைப் பொறுத்தவரை தமிழ் மரபின் மாபெரும் ஆக்கக் கூறுகளில் ஒன்று, வைணவம். ஆரியமும் தமிழும் இவை தமக்குள் கொண்ட இணைப்பில் ஓர் ஆக்கமெனக் கண்ணனைக் குறிப்பிடமுடியும். கணணன் என்ற படிமம் பன்முகப் பரிமாணங்கள் கொண்டது. மகாபாரதம், பாகவதம் மட்டுமல்லாமல், திவ்வியப்பிரபந்தமும் கண்ணனின் பன்முகப் பரிமாணங்களுக்கு ஆக்கம் தந்திருக்கிறது. இவற்றோடு தோய்ந்தவர் பாரதியார்.

அன்றியும் தன் சம காலத்தையும் உள்வாங்கிக் கொண்ட நிலையில் கண்ணனை நமக்கு மிக நெருக்கமாகக் கொண்டுவந்திருக்கிறார்.

கண்ணனை குழந்தையாகவும், ஆயர்குலப் பெண்கள் மத்தியில் காதலனாகவும், அர்ச்சுனனுக்குத் தோழனாகவும், போர்க்கலையில் சிறந்தவனாகவும், தத்துவம் அறிந்தவனாகவும் நாம் அறிந்திருக்கிறோம்.

ஆனால் பாரதி மேலும் சில பரிமாணங்களை கண்ணனுக்குள் காணுகிறார். துவாரகையில் அரசனாக வீற்றிருந்த கண்ணனை நாம் அறிவோம். கம்சன் முதலியவர்ளைக் கொன்றவனையும் நாம் அறிவோம். பாகவதக் கதைகளில் மேலும் சில பரிமாணங்களை அறிந்திருக்கிறோம். பாரதியைப் பொறுத்தவரை கண்ணன் தனக்குத் தோழன், தனக்குச சேவகன் மற்றும் சீடன், கண்ணன் தனக்குத் தாய் மற்றும் தந்தை, கண்ணன் தன் குழந்தை, கண்ணன் தனக்குக் காதலி மற்றும் காதலன். கண்ணன் தன் குலதெய்வம் என்று பலபடியாகப் பேசுகிறார்.

கண்ணன் பாட்டு காவியப் பரிமாணத்தையும் தனக்குள் கொண்டிருக்கிறது. பாரதியை ஆழ்வார்கள் வரிசையில் நம் காலத்தவராக நம்மால் இனம் காணவும் முடியும். வ.வே.சு. அவர்கள் எச்சரித்தபடி வாள்மீது நடக்கும் சாதுரியம் பாரதியிடம் இருக்கத்தான் செய்கிறது. பாரதி அங்கங்கே மரபின் எல்லைகளை எளிதாகக் கடக்கவும் செய்கிறார். காதலன் காதலிக்கு இடையில் சாத்திரங்களுக்கு என்ன வேலை என்று கேட்கிறார். வேதங்கள், புராணங்கள் முதலியவற்றை மூடக்கற்பனைகள் என்று சொல்வதில் பாரதிக்குத் தயக்கம் இல்லை. பாரதியின் பராசக்தி அண்டகோளங்களையெல்லாம தன் கைகளில் பொம்மை களாக்கித் தன் குழந்தைகளை மகிழ்விக்கிறாள்.

கண்ணன் சேவகனாக வந்து பாரதிக்குப் பணிவிடை புரிகிறான். சேவகர்கள் சொல்லும் பொய்களை பாரதி இரசிக்கிறார். சேவகனுக்குள்ளும், தன் சீடனுக்குள்ளும் பாரதி கண்ணன் என்ற தெய்வத்தைக் காண முடிகிறது. கண்ணன் பாரதிக்கு மிகவும் நெருக்கமானவன்.தேவைப்படும் பொழுதெல்லாம் பாரதியை சாடக்கூடியவன் இந்தத் தோழன.

கண்ணன் பாட்டில் உள்ள ஒவ்வொரு கவிதையிலும் பாரதியின் முத்திரையை நாம் கண்டு வியக்கிறோம். நம் மரபுச் செல்வங்களுள் கண்ணனுக்கு நிகரான இன்னொரு காட்சியை

நாம் நினைப்பதற்கில்லை. வாழ்வியலின் அத்தனை கோலங்களையும் கொண்டவனாக இந்திய மரபு நமக்குக் கண்ணனை முன்வைத்திருக்கிறது. என்னதான் முயற்சி செய்தாலும், கண்ணனை இந்துத்துவத்திற்குள் இணைப்பது கடினம். பகவத் கீதை மட்டுமே கண்ணன் அருளிய தத்துவம் என்று நாம் மருள வேண்டியதில்லை. கண்ணன் பாட்டை பகவத் கீதைக்கு ஓர் ஆற்றல் மிக்க மறுதலையாகவும் நாம் காணமுடியும்.

கண்ணதாசன் கண்ணனைக் கொண்டாடியதில் மரபின் தொடர்ச்சியைக் காணுகிறோம். பகுத்தறிவு மரபு நம் தடங்களை மாற்றியது, மறைத்தது என்பது குறித்தும் நாம் இப்பொழுது சிந்திக்க வேண்டும். கண்ணனைக் குறித்து ஓஷோவின் விளக்கங்கள் நாம் அறிதற்குரியவை.

கண்ணன் பாட்டின் கவித்துவம் குறித்து நாம் இப்பொழுது சில சொல்லமுடியும். பாரதிக்குத் தன் காலத்தில் கண்ணன் ஏன் தேவைப்பட்டான். மரபு வழி வந்த கண்ணனை பாரதி தனக்கொத்த முறையில் எவ்வாறு ஏன் படைத்தான். இப்படி எல்லாம் சில கேள்விகள் நமக்குள் எழுகின்றன. தெய்வங்களை தொலைதூரத்தில் நாம் வைக்கவேண்டியதில்லை. தெய்வங்களுக்குள்ளும் மனிதனை, மனித வாழ்வின் அர்த்தங்களை நாம் கண்டு தொகுக்க முடியும். நமக்குள்ளிருந்து தெய்வங்கள் பிறப்பெடுக்கின்றன.

நம் வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை தெய்வங்களுக்கும் தந்திருக்கிறோம். நமக்குள்ளும் படைப்பியக்கம் உண்டு. இந்தப் படைப்பியக்கம் தான் உலகத்தை இயற்கையை, பிரபஞ்சத்தை நமக்குத் தேவையான அர்த்தங்களோடு படைக்கிறது. இப்படித்தான் நமக்கான வாழ்க்கையை அர்த்தப்படுத்துகிறோம்.

வாழ்வுக்கு அர்த்தங்கள் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். நாம் படைத்துக் கொண்ட வாழ்வின் அர்த்தங்கள் கற்பனையாகக்கூட இருக்கலாம். எனினும் வாழ்வுக்கு அர்த்தங்கள் நமக்குத் தேவை. இந்த அர்த்தங்கள் என்பவை மண்ணைப் புரட்டி நிலத்தை பக்குவப்படுத்துகிற கருவிகள் மாதிரி. இக்கருவிகள் இல்லாமல் வாழ்க்கையை நம்மால் புரிந்து கொள்ளவும் இயலாது.

நமக்கு உறவுகள் தேவை. தாயும் தந்தையும் நமக்கு நெருக்கமானவர்கள். காதலி, குழந்தைகள் நமக்கு இனியவர்கள். குருவுக்கு நம் வாழ்வில் என்றும் முக்கிய இடம் உண்டு. தோழன்

இல்லாமல் முடியாது. சேவகனும், சீடனும் கூட நமக்கு இன்றியமையாதவர்கள். இதற்கப்பால் அரசன் அல்லது அரசு, அப்புறம் தெய்வம்.

இப்படி ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பல்வேறு உறவுகள். இந்த மனிதனே கூடத் தானே தந்தையாகவும், குருவாகவும், நிர்வாகியாகவும், தோழனாகவும், சீடனாகவும், தனக்குள் பல்வேறு பாத்திரங்களைச் சமூகம் மற்றும் குடும்பச் சூழலில் தரிப்பவனாகவும் இருக்கிறான்.

என்னதான் உறவுகளுக்கு இடையில் வேறுபாடுகளும் முரண்பாடுகள் இருந்தபோதிலும் இவற்றுக்கிடையிலான ஒத்திசைவில்தான் மனிதன் வாழமுடியும். எந்த ஒரு குருவுக்கும் சீடனும் கற்பிக்க முடியும். எந்த ஒரு தலைவனையும் சேவகனும் ஏவல் செய்யமுடியும். அரசனைப் போலவே நாமும் பலரைக் காப்பாற்றுகிறோம். நிர்வாகம் செய்கிறோம். குழந்தையும்கூட நம்மைப் படைப்பதில் பங்கு வகிக்கிறது. யாரும் நமக்கு தாழ்ந்தவர்களும் இல்லை, உயர்ந்தவர்களும் என்றும் இல்லை. அன்பின் வசப்படலில் நமக்குள் சமத்துவம் விளைகிறது.

இன்றைய வாழ்வில் வருணாசிரம வேறுபாடுகளுக்கு அர்த்தம் இல்லை. ஏற்றத்தாழ்வுகளும் அர்த்தம் இழந்து வருகின்றன. ஆதிக்கங்கள் இவற்றை விட்டுவிடாமல் இருக்கலாம். ஆனால் எந்த ஒரு ஆதிக்கமும் தனக்குள் முரண்பட்டும், தனக்குள்ளும் சிதைத்து கொண்டேதான் இருக்கிறது.

இப்படியெல்லாம் நம் காலத்தை ஒட்டி நாம் சிந்திக்கிறோம். 20-ஆம் நூற்றாண்டுச் சூழலுக்குள் இவ்வகைச் சிந்தனைகள் இயல்பாகவே வந்து சேர்கின்றன. இந்த நிலையில்தான் சமத்துவம் என்ற பண்பாடடை மேற்கொள்கிற மனிதனாக நாம் இருக்க / இயங்க விரும்புகிறோம். உறவின் பல்வேறு வகைகளுக்குள்ளும் ஏதோ ஒரு வகையில் சமத்துவம் நமக்குத் தேவை. என் உடமைகளை நான் விட்டுக் கொடுக்க முடியவில்லை என்றாலும் எனக்குப் பணி செய்பவரோடு சிலவற்றையேனும் என்னால் பகிர்ந்து கொள்ள முடியும். நான் ஓர் ஆசிரியனாக இருக்கும்பொழுதே என்னை என் மாணவர்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இப்பொழுதெல்லாம் நிர்வாகம் என்பது ஏவல் செய்வதன்மூலம் சிறப்புறுவதில்லை. ஏவல் செய்வதன் மூலம் நிர்வாகம் சீர்கெடும். இங்கும் தோழமை தேவைப்படுகிறது. இங்கும் பகிர்ந்து கொள்ளமுடியும். நம் காலத்தின் குரல் சமத்துவம்.

ஏற்றத்தாழ்வுகளுக்கு, ஆதிக்கங்களுக்கு எதிரான ஆற்றல மிக்க குரல் சமத்துவம். சமத்துவத்தின் விரிவில் சமதர்மம் இயல்பாகவே மலர்ச்சி பெறும். பாரதிக்குள் இந்தப் பண்புகள் மேலோங்கி இருந்தன.

பாரதியின் படைப்புக்கள் அனைத்தும் முந்திய சமூகச் சூழலுக்கு எதிரானவை என்பதில் ஐயமில்லை. பழஞ் சமூகத்திற்கு தீவிரமான எதிர்நிலை எடுத்தவர் பாரதியார். பழஞ்சமூகத்தின் ஆக்கக் கூறுகளை பாரதியார் தனக்குள் இணைத்துக் கொள்ளவும் செய்தார். பாரதியின் தேசியப் பாடல்கள் முதலியவை பற்றி எல்லாம் இங்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. அடிமைத்தனத்தை எந்தவகையிலும் பாரதி ஏற்கவில்லை. விடுதலை உணர்வின் மொத்த வெளிப்பாடாக பாரதி விளங்கினாா.

சமத்துவமும் சமதர்மமும் பாரதியைப் படைத்தன. இருபதாம் நூற்றாண்டின் பேரெழுச்சியை பாரதி தனக்குள் கொண்டிருந்தார். கண்ணன் பாட்டினுள்ளும் இந்தப் பேரெழுச்சியின் பன்முகப் பரிமாணங்களை நாம் காணமுடியும். இந்தக் கூறுதான் கண்ணன் பாட்டையும் நமக்குள் கொண்டு வருகிறது. கண்ணன் பாட்டிற்குள் வைத்து நம்மையும் பார்த்துக் கொள்ள முடியும். சேவகனோடும், சீடனோடும் நம் உறவுகள் எத்தகையவை என்று நாம் சிந்திக்க முடியும்.

இந்திய மரபினுள் மாபெரும் ஆக்கக் கூறாக விளங்கிய கண்ணன் என்ற படிமத்தினுள் கவித்துவ வீச்சின் பன்முகப் பரிமாணங்களை நாம் காண்கிறோம். கண்ணனை தன் மரபுக்குள் கண்டு அவனை மீண்டும் மீண்டும் காலத்திற்கு ஒத்தபடி புதுப்பித்துக் கொள்வதிலும் கவித்துவத்தின் வளத்தை நாம் காண்கிறோம்.

கண்ணன் நமக்கு வெளியில் இல்லை. வெளியில் அவனை வைத்திருக்கும் வரை நமக்கு அவன் அந்நியன். அவனை நாம் நமக்குள் வைத்துப் பார்க்க முடியும்.

இப்பொழுது கண்ணனுக்குள்ளும் நாம் இருக்கிறோம். கண்ணனைப் போலவே நாமும் விளையாடுகிறோம், காதலிக்கிறோம், கற்றுக் கொள்கிறோம், கற்பிக்கிறோம், சேவை செய்கிறோம், ஏவல் செய்கிறோம், பகிர்ந்து கொள்கிறோம், கொண்டாடுகிறோம், கூத்தாடுகிறோம், நிர்வாகம் செய்கிறோம்,

நிர்வாகத்திற்குட்படுகிறோம். இவை இல்லாமல் நமக்குள்ளும் இயக்கம் இல்லை, சமூகம் இல்லை, உறவு இல்லை, சமத்துவம் நமக்கு உயிர். சமதர்மம் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை.

தெய்வங்களை நாம் புரிந்து கொள்கிறோம். தெய்வங்களும் நமக்கு அந்நியமில்லை. புராணங்கள் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. புதிய வேதங்களை நாமும் படைக்கிறோம். நமக்குள் ஒரு பெரும் நாடகம் மாறி மாறி நாடகத்தில் நாம் பங்கு கொள்கிறோம். உலகம் ஒரு பெரும் நாடகம. மாபெரும் விளையாட்டு. கவித்துவம் நமக்குள் விளைகிறது. கண்ணன் பாட்டை நாம் கொண்டாடுகிறோம்.

பாரதியும் - பார்ப்பனியமும்

பாரதியிடம் பார்ப்பனியம் கண்டு அண்மைக்காலத்தில் திராவிட இயக்கத்தவர் பாரதியை கடுமையாகச் சாடுகின்றனர். இந்துத்துவவாதிகள் பாரதியை கவர்ந்து கொள்வதற்கான முயற்சிகள் ஒரு பக்கம் நடைபெறும்போது, இவர்களின் சாடல்கள் பாரதியை இந்துத்துவவாதிகளிடம் சேர்ப்பதாக இருக்கின்றன. இது பாரதிக்குச் செய்யும் பெரும் தீங்கு என்பதில் ஐயமில்லை. விடுதலை இயக்கத்தோடு திராவிட இயக்கத்தவர் முரண்பட்டு நின்றனர். இந்தியாவின் ஒருமைப்பாட்டைப் பாரதி பெரிதும் வற்புறுத்தினார். பாரதியிடம் இறுதிவரை தெய்வ நம்பிக்கை இருந்தது. குறிப்பாக பாரதியின் அத்வைத நிலைப்பாடு இவர்களுக்கு வெறுப்பைத் தந்தது. பாரதி பிறப்பில் பார்ப்பனர். இந்தியாவை ஆரிய தேசம் என்று பலமுறை பாரதி பாடியிருக்கிறார். இவ்வகைக் காரணங்கள் திராவிட இயக்கத்தவர் பாரதியை வெறுப்பதற்கான காரணங்கள். இவை குறித்து இங்குச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

பாரதி ஒருசமயம் அத்வைத நிலைப்பாட்டில் ஆழ்ந்து இருந்தபோதிலும், விநாயகர் முதலிய பல தெய்வங்களையும் அவர் பாடுகிறார். தேசம் அவருக்குப் புதிய தெய்வம். சக்தி அவருக்கு இன்னொரு தெய்வம். சாக்தம் கூறும் வழிபாட்டை ஒருசமயம் பாரதியும் மேற்கொண்டிருந்தார். ஆனால் பாரதியின் சக்தி பன்முகப் பரிமாணங்கள் கொண்டது. நவீன அறிவியல் இயற்கையிலிருந்து மின்சக்தி முதற்கொண்டு எத்தனையோ சக்திகளை விடுவித்துள்ளது. இயந்திரங்கள் சக்தியின் வடிவங்கள், விடுதலை இயக்கங்களின் வழியே மக்களின் சக்தி

பேரளவில் வெளிப்படுகிறது. இரஷ்யப்புரட்சி ஒரு மாபெரும் சக்தி. பெண்கள் சக்தியின் இன்னொரு வடிவம். பிரபஞ்சம் அளவற்ற சக்தியை வெளியிடுகிறது. பாரதி இத்தகைய சக்தியைப் பாடுகிறார், போற்றுகிறார்.

பாரதி பல தெய்வங்களை பாடுகிறார் என்பது உண்மை என்றாலும், விநாயகரைப் பற்றியும் முருகனைப் பற்றியும் பாடும்பொழுது பாரதியின் பார்வையில் இவர்களும் முழுமுதற் சக்திகள். பாரதியின் அத்வைதப் பார்வை, கண்ணன், புத்தன், இயேசு, அல்லா முதலியவர்களை ஒன்றின் பல வடிவங்களாகக் காண்கிறது. பாரதியின் தெய்வம் மனிதருக்கு நெருக்கமானது. சுத்த அறிவே தெய்வம் என்றும் பாரதி பாடுகிறார். காக்கை, குருவி, கடலும் மலையும் அவருக்குத் தெய்வங்கள்.

பாரதியின் அத்வைதம் குறித்து இங்கு மீண்டும் பார்க்கலாம். தியான நிலையில் மட்டுமே இந்த ஒருமை நிலை வாய்க்கும் என்பது உண்மை இல்லை. பரமஹம்சர், விவேகானந்தர், அரவிந்தர், இரமணர் முதலிய யோகிகளுக்கு மட்டுமே இந்த ஒருமை நிலை வாய்க்கும் என்பது உண்மை இல்லை.

ஒருமலரை நாம் உற்று கவனிக்கும்பொழுது ஒரு கணத்தில் அந்த மலரும் நாமும் ஒன்றாகிறோம். மலர் நம் ஆளுமையின் பகுதியாகி விடுகிறது. இப்படித்தான் காடும் மலையும், கடலும் ஆறும் நமக்குள் இணைகின்றன. குழந்தையோடு கொஞ்சும்பொழுது குழந்தையும் தாயும் ஒன்றாகின்றனர். காதலர்கள் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வகைவகையாய் உணர்வுகள் நமக்குள் வாய்க்கின்றன. வெட்டவெளியில் நிற்கும்பொழுது ஒரு கணத்தில் நாம் இல்லை. எங்கும் வெட்ட வெளி. வெட்டவெளிக்குள் நாம் இருக்கிறோம். காலைக் கதிரவன் ஒளியில் தான் விளைவித்த நெல் வயல்களுக்கு இடையில் ஒரு விவசாயி நடந்து செல்லும்பொழுது, காற்றில் ஆடும் நெற்பயிரும் இவரும் ஒன்றாகின்றனர். வரலாற்றில் மனிதன் இப்படித்தான் தன்னைப் பெற்றான்.

கவிஞர்கள் இயல்பாகவே அத்வைதவாதிகள் தியானத்தின்போது என்ன நடைபெறுகிறது. பிறநதது முதல் நமக்குள் வந்து இணைந்திருக்கிற இயற்கை முதல் பிரபஞ்சம் இறுதியாக எல்லாமே நமக்குள்ளிருந்து எழுகின்றன. ஒரு கணத்தில் நாம் மறைந்து பிரபஞ்சமயமாகிறோம். வாழ்க்கையின் முழுப்பரப்பும் நமக்குள் விரிகின்றன. குன்று ஏறி யானைப்போர் கண்டது போல ஒரு பெரும் காட்சியை நாம் பெறுகிறோம்.

இங்கிருந்து பார்க்கும் பொழுது பகைமைகள் இல்லை. முரண்கள் இல்லை. எல்லாமே அன்பு மயம், நாமும் அவையும் என்ற வேறுபாடு இல்லை.

தியானத்தின்போது இந்த ஒருமை நிலை தீவிரப்படுகின்றது அன்றி எல்லா மனிதரிடத்திலும் அவ்வப்பொழுது சில கணங்களில் பெற்ற அனுபவம் என்பது அன்றி இது வேறில்லை. இது ஓர் பேரனுபவம் அகண்ட பார்வையில் எல்லாவற்றையும் உள்ளடக்கிப் பார்க்கிற அனுபவம். எல்லாமே அந்த அந்த இடத்தில் இணைகின்றன. பகைவனும் நம்மை வளர்த்துள்ளான். தடைகள், நெருக்கடிகள் நம் ஆளுமை வளர்ச்சிக்கான சாதனங்கள். ஒருமை நிலையின் பரவசம் பற்றி சொல்ல வேண்டியதில்லை. போர்க்களத்தில் அர்ச்சுனன் கண்ட பேரண்ட தரிசனம் நமக்கும் உரியது. வரலாறு சமூகம் பற்றிய தீவிரமான பார்வைகளுக்கு இப்படி ஒரு அனுபவம் இல்லாமல் முடியாது.

வேறுபாடுகள், முரண்பாடுகள் அற்று பிரபஞ்சம் வாழ்க்கை முதலியவற்றைப் பார்ப்பது ஒருநிலை. இதுவே முழு உண்மையென்று இல்லை. இது ஓர் பேரனுபவம், தேவையான அனுபவம். இது சில கண அனுபவம் அப்புறம் நாம் கடலாகிவிடுவதில்லை. மேல்கீழ் வேறுபாடுகள் இல்லாமல் இல்லை. கறுப்பும், சிவப்பும் ஒன்று அல்ல. நானும் காக்கையும் ஒன்று அல்ல. பொருள்கள் முதலியவை வேறு வேறாக இருக்கின்றன. எல்லாவற்றையும் ஊடுருவி உள்ளது பொருண்மை என்பதனால் பொருள்களுக்கிடையில் வேறுபாடுகள் இல்லாமல் இல்லை.

ஆழ்ந்து பார்த்தால் அடிப்படையில் மூன்று வகையான பார்வைகள் உள்ளன. ஒன்று நாமும் உலகமும் ஒன்று. இது ஒருமைநிலை. இரண்டு நாமும் உலகமும் வேறு - இது இருமை நிலை. மூன்று நமக்குள் உலகமும் உலகத்திற்குள் நாமும் இருக்கிறோம். இது இரண்டற்ற நிலை. அடிப்படையில் பார்வைகள் மூன்று என்றபோதிலும் பார்வைகள் இன்னும் விரிவு பெறலாம்.

பாரதியை இன்னும் ஆழ்ந்து பார்க்கலாம். விவேகானந்தரைப் போல ஒருமை நிலையின் உச்சத்தில் எந்நேரமும் பாரதியும் இருக்கவில்லை. மலையின் உச்சியில் வாழமுடியாது. தரைக்கு வரவேண்டும். ஒருமை நிலையை தியானத்தில்

அனுபவித்தால் போதாது. சமூகத்திற்குள்ளும் பொருளியலுக் குள்ளும் அந்தப் பார்வை விரிவு பெறவேண்டும். சாதிகளுக்கு இடையில் வேற்றுமை தேவையில்லை. பொருளியலில் ஏற்றத்தாழ்வுகளுக்குத் தேவையில்லை. சமதர்மம்தான் தேவை. அத்வைதம் என்பதை இப்படிப் பொருள்படுத்த இயலுமானால், பாரதியை நம்மால் வெறுக்க முடியாது.

பாரதியிடம் இருந்த பார்ப்பனியம் பற்றி இப்பொழுது பார்க்கலாம். அரசியல், மெய்யியல் முதலிய எல்லாவகைக் கருத்தியல்களுக்குள்ளும் இரு எதிர்நிலைப்பாடுகள் உண்டு. ஒன்று வலசாரிப் போக்கு. இன்னொன்று இடசாரிப்போக்கு. ஒன்றை மிதவாதம் என்றும் இன்னொன்றை தீவிரவாதம் என்றும் சிலசமயங்களில் நாம் சொல்கிறோம். மார்க்சியம், பெரியாரியம், தலித்தியம், பெண்ணியம் முதலிய எல்லாவற்றினுள்ளும் இப்படி இருவேறு எதிர்நிலைகள் உண்டு. புத்த மதத்தினுள்ளும் இவ்வகைப் போக்குகள் உண்டு. கிறித்துவம் முதலியவற்றினுள்ளும் இவ்வகை எதிர்நிலையைக் காணமுடியும். எந்த மதத்தினுள்ளும் எதிர்நிலைக்கு இடம் உண்டு. ஒன்று ஆதிக்கச் சார்பு, இன்னொன்று மக்கட்சார்பு, முதலாளியத்தோடு ஒத்துழைக்கிற மார்க்சியம் வலசாரிப்போக்கு. முதலாளியத்தைக் கடந்து செல்கிற மார்க்சியம் இடசாரிப்போக்கு. ஆதிக்கவாதிகளோடு ஒத்துழைக்கிற புரோகிதம் வலசாரிப் போக்கு. ஆதிக்கங்களுக்கு எதிராக செயல்படும் தீர்க்கதரிசனம் மக்கட்சார்பு.

பார்ப்பனியத்தினுள்ளும் தொடக்க காலம் முதல் இன்றுவரை இப்படி எதிர்நிலைகள் உள்ளன. சாதி, பூணூல், மந்திரம், சடங்கு, அதிகாரம் முதலியவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ள பார்ப்பனியம் ஆதிக்கவாதிகளோடு ஒத்துழைக்கிற பார்ப்பனியம். பிரம்மம் எங்கும் உள்ளது, எல்லோருக்குள்ளும் இருக்கிறது. இதற்குப் பெயர் இல்லை, உருவம் இல்லை. இதன் முன்னிலையில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. சாதி வேறுபாடுகள் இல்லை. ஆதிக்கங்களுக்கு இடம் இல்லை. இப்படிச் சொல்லுகிற பார்ப்பனியம் இடசாரிப் பார்ப்பனியம்.

இத்தகைய பார்ப்பனியம் வேதத்தைக் காட்டிலும், உபநிடதங்களில் கூடுதலாக இடம்பெற்றுள்ளன. விவேகானந்தர் இத்தகையவர். பாரதியின் பார்ப்பனியமும் இவ்வகைப்பட்டது. மக்கள் சார்பிலிருந்துதான் பாரதி எல்லாவற்றையும் பார்க்கிறார். மக்களிடமிருந்து என்றும் இவர் முரண்படவில்லை. இவரது

பார்வையில் எல்லோரும் மேன்மையானவர் ஆரியர்கள். நந்தனும் ஒரு பார்ப்பான். வேர்க்க வேர்க்க பொருள் செய்வது ஒன்றையே போற்றும் பார்ப்பனர் வெறுக்கத்தக்கவர். அரவிந்தரைக்கூட பாரதி ஒருசமயம் வெறுத்தார். தாழ்த்தப்பட்டவர் என்று சொல்லப்பட்டவருக்கு பூணூல் அணிவித்தார். இத்தகையவரைப் பார்ப்பனர் என்று சாடுவதில் நேர்மை இல்லை.

பாரதியை நாம் இழப்பதற்கில்லை. தமிழை அவர் நேசித்தார். பெண் விடுதலை வேண்டினார். சித்தர்களோடு அவரும் ஒரு சித்தர். சாத்திரம், சடங்குகள் முதலியவை அவரைப் பற்றிக்கொள்ளவில்லை. அவரிடம் இருந்த இந்துமதம், இந்துத்துவமாக ஒருபோதும் உருக்கொள்ளவில்லை. இந்துத்துவத்திற்கு அவர் இரையாகவில்லை. அவரிடம் இருந் த திலகர் வெறுப்புக்குரியவராக இல்லை. அவரைப் பற்றி இருந்த மதம் மார்க்சின் சொற்களில் சொன்னால் இதயமற்ற உலகின் இதயம், ஆன்மா அற்ற உலகின் ஆன்மா. பாரதியின் வாழ்க்கையில் நெருக்கடிகள் அதிகம். ஆகவே அவரிடம் மதம் சிறிதளவு அபினாக இருந்தது.

குறிப்பு : இந்த ஆண்டு (2002) ஏப்ரல் 4ஆம் நாள் அன்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தப் பெற்ற பாரதி அறக்கட்டளை சொற்பொழிவு - பல்கலைக்கழகத்துக்கு நன்றியுடன் இங்கு வெளியிடப்படுகிறது.

பாரதிதாசனும் தமிழ்த்தேசியமும்

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் படைப்புகளில் இடம் பெறும் அரசியல் குறித்து திரு. தெ.திருஞானமூர்த்தி அவர்கள் விரிவாக ஆராய்ந்திருக்கிறார். இந்தியாவில் நடைபெற்ற விடுதலைப் போராட்டச் சூழலில் காந்தியின் தலைமையில் உருவான விடுதலை இயக்கம் குறித்துப் பாரதியிடமிருந்து தாக்கம் பெற்றுப் பாரதிதாசன் பாடினார். பாரதிதாசன் கவிதைகளில் இடம்பெறும் இந்த உள்ளடக்கத்தை இந்திய தேசியம் என ஆய்வாளர் குறிப்பிடுகிறார். இதற்கு அடுத்த கட்டம் எனப் பெரியாரின் தாக்கம் பெற்ற பாரதிதாசன் கவிதைகளில் இடம்பெறுவது திராவிடத் தேசியம் என வரையறுக்கின்றார். சிங்கார வேலரோடும் பெரியாரோடும் கொண்ட உறவின் விளைவாகப் பாரதிதாசனிடம் ஆழமாகப் பதிந்திருந்த பொதுவுடைமைப் பார்வை குறித்து அடுத்து விளக்குகிறார்.

பாரதிதாசனிடம் தொடக்கம் முதலே ஆழமாகப் பதிந்திருந்த தமிழ்மொழி உணர்வு, தமிழின உணர்வு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்த தமிழ்த்தேசியம் குறித்து விரித்துரைத்துள்ளார். பாரதிதாசன் இந்தியச் சமூகத்தில் காலம் காலமாக நிலவி வருகிற சாதிய அமைப்பைத் தகர்க்கும் நோக்கம் கொண்டவர் என்பதை அடுத்த கட்டுரையில் ஆராய்கிறார். பாரதிதாசன் தன் காலம் முழுவதும் அரசியல் மற்றும் சமூக இயக்கங்களோடு தொடர்பு கொண்டவரெனினும் இயக்கங்களை மீறியும் அவரது சிந்தனைகள் இயங்கின என்றும் தொடர்ந்து விளக்குகின்றார். பாரதிதாசனுக்குள் இடம்பெற்ற அரசியல் உள்ளடக்கம் குறித்துத் தொகுத்துத் தருகிற ஆய்வுநூல் என்ற முறையிலும், ஆங்காங்கே சில திறனாய்வுக் குறிப்புகள் இடம்பெறுகின்றன என்ற முறையிலும் வரவேற்கத்தக்க ஆய்வு நூல் என்று இந்த நூலை நாம் மதிப்பிடலாம்.

இந்தியத் தேசியம் என்ற கருத்தாக்கம் குறித்து ஆசிரியர் விரிவாகப் பேசவில்லை. இந்தியத் தேசியம் ஆசிரியருக்கு உடன்பாடு இல்லை. பாரதி நெறியில் தான் இந்தியத் தேசியத்தைப் பாடினார் என்பது சற்று எளிமைப்படுத்திய கருத்து. விடுதலைப் போராட்டமென்பது பாரதியையும் அதன் காரணமாகவே பாரதிதாசனையும் உள் இழுத்துக் கொண்ட ஒரு பெரும் சக்தியாகும்.

தமிழ்த்தேசிய இயக்கம் வரவேற்கத்தக்க இயக்கம்தான். இந்தியத் தேசியம் என்ற கருத்து, தவறான கருத்து. கூட்டாட்சி குறித்து நாம் புரிந்து கொள்ளவில்லை. தேசபக்தன் என்ற இதழிலிருந்து பாரதிதாசன் கருத்துக்களை ஆசிரியர் மேற்கோள் காட்டுவது பாராட்டத்தக்கது.

திராவிடம் என்பது நீதிக்கட்சியினரால் பரப்பப்பட்ட கருத்தாக்கம். பெரியார் இக்கருத்தை மேலும் வலுப்படுத்தினார். பிராமணரல்லாதோர் என்ற தொடருக்குப் பொருத்தமான மறுசொல் இது. சென்னை மாகாணத்திற்கு மறுபெயர்தான் திராவிட நாடு. இதற்குள் அடங்காத பகுதிகளும் உண்டு. மொழிவாரி மாநிலப் பிரிவினையைப் பெரியார் ஏற்கவில்லை. மொழி என்பதன் அடிப்படையில்தான் தேசிய இனங்கள் அமைய முடியும். இந்நிலையில் நான்கு மொழிகளை உள்ளடக்கிய ஒரு தேசியம் இருக்க முடியாது. இதன் காரணமாகவே எல்லைப் பிரிவினை இயக்கத்தில் திராவிட இயக்கம் ஈடுபடவில்லை என்ற ஆய்வாளரின் கருத்து ஏற்புடையதே.

மார்க்சியத்தின் அடிப்படைகள் மற்றும் இலக்கியக் கோட்பாட்டைத் தொகுத்துக் கொள்கிறார் ஆசிரியர். அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவது இலக்கியம். பெரியாரின் திராவிட இயக்கக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர் பாரதிதாசன். இம்முறையில் சாதியம், பார்ப்பனியம், நாத்திகம், பெண்ணியம் என்பன குறித்துப் பாரதிதாசன் பாடினார். இவை பகுதிகள். இவற்றை உள்ளடக்கிய முழுமைப் பார்வைதான் மார்க்சியப் பார்வை. வர்க்கப் போராட்டம் என்பதில் கவனம் வைத்துப் பகுதிகளை மார்க்சியர் ஒதுக்கினர் என்பது திராவிட இயக்கத்தவர் கருத்து.

நிலப்பிரபுத்துவத்தையும் கோவிலையும் புத்தர்காலம் முதற்கொண்டு தாக்கியவர்கள் பார்ப்பனரைச் சாடினர். பாரதிதாசனும் இதைத்தான் செய்தார். சமூகம் தான் இலக்கியவாதிக்குள் பிரதிபலிக்கிறது. இந்த பிரதிபலிப்பைத்தான் இலக்கியவாதி படைக்கிறான். தானாக இவன் எதையும் படைப்பதில்லை. சூழல் தான் மனிதனை நிர்ணயிக்கிறது. புறத்தின் பிரதிபலிப்புத்தான் அகம். இது மார்க்சியரின் இலக்கியக் கோட்பாடு. திராவிட இயக்கப் படைப்பிற்கும் இந்தக் கோட்பாடு பொருந்தும். இதுதான் ஆசிரியரின் இலக்கியப் பார்வை.

இந்திய விடுதலை என்றும் திராவிட தேச விடுதலை என்றும் பாடிய காலத்திலும், தமிழ் மொழி, தமிழ் இனம் என்று பாரதிதாசன் பாடத் தவறவில்லை எனப் பாரதிதாசன் உள்ளத்தை ஆய்வாளர் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். தமிழைப் பெரியார் இகழ்ந்தபோது அவரை எதிர்த்துப் பாரதிதாசன் பேசினார். சம்பத்தின் எழுச்சியைப் பாரதிதாசன் பாராட்டினார். தமிழுக்குப் பாரதிதாசன் என்றும் தேவை.

சாதி என்பது கருத்தியல் மட்டுமன்று; பொருளியலோடும் தொடர்புடையது. கலப்புத் திருமணத்தால் சாதி ஒழிந்து விடாது. சூழ்ச்சியால் மட்டும் ஒரு சமூகத்தை அமைக்க முடியாது. மதம் குறித்த பெரியார் ஆய்வு போதுமானதாக இல்லை. தமிழ்த் தேசிய வளர்ச்சிக்குச் சாதி பெரும் தடை என்பதில் ஐயமில்லை.

வரலாற்றுச் சூழலில் வைத்துத்தான் பாரதிதாசன் படைப்புகளில் இடம்பெறும் அரசியலையும் நாம் மதிப்பிட வேண்டியிருக்கிறது என்ற முறையில், இந்த ஆய்வாளரின் நூலில் இடம் பெறுகின்ற சில குறிப்புகளைத் திறனாய்வு நோக்கில் இங்கு நாம் தொகுத்துக் கொள்ளலாம்.

ஒரு தேசத்தின் விடுதலை என்பது அரசியல், பொருளியல் மற்றும் சமுதாயம் என்ற பல களங்களிலும் ஒருசேர நடைபெற வேண்டும். இந்தியாவில் இப்படி நடைபெறவில்லை! அரசியலுக்கு முதன்மை தருவதாகக் கருதிக்கொண்ட காங்கிரசு இயக்கம் பொருளியலையும் சமூகவியலையும் புறக்கணித்தது. இதன் காரணமாகக் காந்தியின் தலைமையில் செயல்பட்ட காங்கிரசு இயக்கத்திற்கும், காந்தியின் தலைமையை ஏற்றுக்கொண்ட பெரியாருக்கும் இடையில் கடுமையான முரண்பாடு ஏற்பட்டது. இந்த இருவர் தலைமையிலும் செயற்பட்ட இயக்கங்கள் தமக்குள் முரண்பட்டு எதிரெதிர் திசைகளில் சென்றதன் விளைவை இன்று வரை நாம் அனுபவிக்கிறோம். இந்தியத் தேசியம் என ஆசிரியரால் குறிப்பிடப்படுகிற போக்கும் திராவிடத் தேசியம் என ஆசிரியரால் குறிப்பிடப்படுகின்ற போக்கும் முரண்படுகிற வரலாற்றுச் சூழல் என இதைத்தான் சொல்லமுடியும்.

இந்தியா ஒரு துணைக்கண்டம், பல்வேறு தேசிய இனங்கள் வாழுகின்ற பல நாடுகளின் தொகுப்பு இந்தியத் துணைக்கண்டம். புவியியல் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலும் இந்தியா ஒரு துணைக்கண்டம் என ஒப்புக்கொள்வதில் யாரும் மறுத்துரைக்க மாட்டார்கள். ஆனால் அரசியல் என்று வருகிறபோது இந்தியாவை ஒரு தேசம் என்றுதான் விடுதலைக்காலத் தலைவர்கள் கருதினர். ஆனால் "விடுதலை"க்குப் பின்னர் என்ன நேர்ந்தது? கடந்த சில பத்தாண்டுகளில் நாம் என்ன பார்க்கிறோம்? இங்குக் கூட்டாட்சியும் இல்லை. சோசலிசமும் இல்லை. மைய அரசின் அதிகாரப் பெருக்கம் மாநிலங்களை வறுமைக்குள்ளாக்குகிறது. மைய அரசின் அதிகாரத்திலிருந்து தேசிய இனங்கள் விடுதலை கோருகின்றன. இப்பொழுது இந்தியத் தேசியம் என்ற கருத்தாக்கம் உண்மையில்லை என்றாகிறது. இந்தப் பின்னணியில் தான் திராவிடத் தேசியம் என்றும் தமிழ்த்தேசியம் என்றும் பேச வேண்டி வருகிறது. இந்தியத் தேசியத்திலிருந்து திராவிடத் தேசியம் தனக்கு விடுதலை கோருகிறது. திராவிடத் தேசியத்திற்குள் இருந்து தமிழ்த் தேசியம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

இந்தியத் தேசியம் என்பது ஆரியக் கருத்து என்று புரிந்து கொண்ட நிலையில், திராவிடம் என்ற கருத்தாக்கம் தோன்றியது. வரலாற்றுக் காலம் முழுவதும் ஆரியரும் திராவிடரும் பல்வேறு களங்களில் முரண்பட்டதை வரலாற்றிலிருந்து நாம் அறிகிறோம். டாக்டர் இராதாகிருஷ்ணன் முதலியவர்கள் ஆய்ந்துரைத்தபடி

இந்திய நாகரிகம் என்பதன் மேலடுக்கு ஆரிய நாகரிகம். அதைக் களைந்துவிட்டுப் பார்த்தால் இந்திய நாகரிகத்தின் அடித்தளம் முழுவதும் திராவிட நாகரிகம். காங்கிரசு இயக்கத்தில் பார்ப்பனியச் செல்வாக்கு அதிகரித்த நிலையில் திராவிடத் தேசியம் தனி இயக்கம் காண்பதில் தவறு சொல்ல முடியாது. ஆரிய நாகரிகம் மேலுலகம் மற்றும் பார்ப்பனியச் சார்புடையது என்றால் திராவிட நாகரிகம் மண்ணுலகம், மற்றும் மக்கள் வாழ்வியல், சமத்துவம் சார்ந்ததென்று உறுதியாகச் சொல்ல முடியும். இந்தப் பின்னணியில் தான் நீதிக்கட்சியின் தோற்றம். திராவிட இயக்கம் குறித்தும் நாம் பார்க்கிறோம். திராவிட நாடு என்ற கோரிக்கையை பெரியார் முன் வைத்தாலும் அதை செயற்படுத்தும் முறையில் இயக்கத்தை அவர் உருவாக்கவில்லை.

திராவிட நாட்டுக் கோரிக்கையை அண்ணா கைவிட்டதற்கான காரணம் என்று அவர் சீனப்படையெடுப்பைக் குறிப்பிட்டது உண்மையுமில்லை. குணா ஆய்ந்துரைத்தபடி இந்திய தேசியம் என்பதைப் போலவே திராவிட தேசியம் என்பதும் ஒரு மாயை தான் என்பதில் ஐயமில்லை. இப்படிச் சொல்வதனால் திராவிட நாகரிகம், வாழ்வியல் முதலிய கருத்துக்கள் பொய்மை என்று ஆகிவிடாது. இவை இன்றளவிற்கும் வரலாற்று உண்மைகள் மற்றும் தேவைகளாக இருக்கின்றன.

இவ்வாறு விடுதலைப் போராட்ட கால வரலாற்றுச் சூழலைத் தொகுத்துக் கொள்வதன் மூலம் நாம் என்ன புரிந்து கொள்கிறோம். அரசியல் வடிவிலான விடுதலை இயக்கத்திலிருந்து பெரியார் தன்னை வெட்டிக் கொண்டதை, விடுதலை வரலாற்றில் ஒரு பின்னடைவு என்றே நாம் இன்று மதிப்பிட முடியும். காங்கிரசு இயக்கமும் திராவிட இயக்கமும் தமக்குள் முரண்பட்டு, இரண்டுமே எதிர்த்துருவங்களுக்குச் சென்றன. இதன் விளைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு என்றே சொல்லவேண்டும்.

இந்த ஆய்வு நூலின் தேவையை முன்வைத்து இங்கு சிலவற்றை குறிப்பிடலாம். திராவிட நாடா? தமிழ்நாடா? என்ற முரண்பாடு பெரியாருக்குள் இருந்தது. மொழிவாரிப்பிரிவினை என்ற பேச்சு எழுந்தபோது திராவிட நாடு என்ற மாயையில் அகப்பட்டதன் காரணமாகத் தமிழ்நாட்டின் எல்லைச் சிக்கலில் பெரியார் ஈடுபடவில்லை.

காங்கிரசு இயக்கத்தில் ஊன்றி இருந்தபோது மதுக்கடை மறியல், கதர் விற்பனை முதலிய காந்தியத் திட்டங்களில் கவனம் வைத்திருந்த பெரியார், காங்கிரசு இயக்கத்தை விட்டு விலகிய பிறகு இவ்வகைத் திட்டங்களில் கவனம் கொள்ளவில்லை. இத்தகைய திறனாய்வு பாரதிதாசனுக்கும் பொருந்தும் என்பதை இங்கு அழுத்திச் சொல்ல வேண்டியதில்லை.

திராவிட தேசியத்தில் முழுக் கவனம் வைத்ததன் காரணமாக தமிழ்த்தேசியம் என்பதைப் பெரியார் புறக்கணித்தார் என்று அறிஞர் குணா சொல்வதை ஆய்வாளர் திருஞானமூர்த்தியும் ஏற்றுக் கொள்வதாகவே தோன்றுகிறது. இன்னொன்றையும் இங்குக் குறிப்பிட வேண்டும். காட்டுமிராண்டி மொழி என்று தமிழைப் பெரியார் குற்றப்படுத்தியதை பாரதிதாசன் ஏற்கவில்லை. தமிழிலக்கியத்தைப் பெரியார் தூக்கி எறிய முடியும். பாரதிதாசனுக்கு இது முடியாது. கடவுள் இல்லை என்று பெரியாரால் அடித்துச் சொல்ல முடியும். பாரதிதாசனுக்கு இது முடியாது. இலக்கிய நயம் என்று பெரியார் பேசமாட்டார். தமிழிலக்கியத்தில் தன்னை கரைத்துக் கொண்டவர் பாரதிதாசன். ஆய்வாளர் திருஞானமூர்த்தி பெரியாரையும், பாரதிதாசனையும் சில கூறுகளில் வேறுபடுத்திப் பார்ப்பதன் நியாயத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். திராவிட நாடு என்ற கருத்தின் உள்ளடக்கமாகத் தமிழ்த் தேசியம் தான் இருந்தது என்று அறிவார்ந்த முறையில் ஈ.வி.கே. சம்பத் அவர்களின் தெளிவுரை பாரதிதாசனுக்கும் உகந்ததாக இருந்தது.

பாரதிதாசனின் படைப்புகளின் உள்ளடக்கம் என்ற முறையில் தமிழ்த்தேசியம் என்ற அரசியலை நாம் சொல்ல முடியும். ஆசிரியர் இதை வெளிப்படையாகச் சொல்லவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். பாரதிதாசனின் தமிழ்த் தேசியம் குறித்த கருத்துக்களை ஆசிரியர் மிகச்சிறப்பாகத் தொகுத்துத் தருகிறார். 20-ஆம் நூற்றாண்டில் எழுச்சிபெற்ற தமிழியக்கத்தின் முதல்வர்களில் ஒருவராக நாம் பாரதிதாசனை மதிப்பிட முடியும். அவரது தமிழ் இயக்க வீறு இன்றும் என்றும் நமக்குள் தொடரும். உயர்சாதி ஆணவத்தைக் கடுமையாகச் சாடினார். தமிழன் தனக்கான அரசியலையும் பொருளியலையும் உருவாக்கிக் கொள்வதன் தேவையை வற்புறுத்தினார். பாரதிதாசனை முற்றாக வரித்துக் கொண்டது, அவரது தமிழ்த்தேசிய உணர்வு. அவர் எல்லாவற்றையும் தமிழ் எனக் கண்டார். தமிழுக்கு அவர் ஆயிரம் பொருள் சொன்னார். அகம் என்றும் புறம் என்றும் அறிவு என்றும்,

அன்பு என்றும் தவம் என்றும் கலை என்றும் இயற்கை என்றும் காதல் என்றும் கவிதை என்றும் தமிழுக்குப் பொருள் கண்டார் பாரதிதாசன். தமிழ் அவரைப் பொறுத்தவரை தெய்வம். தமிழை வணங்க அவரது பகுத்தறிவுணர்வு தடையாக இல்லை. குமரகுருபரரின் அழகுத் தமிழில் மனம் தோய்ந்தவர் பாரதிதாசன் சாங்கியத்தைத் தமிழ்மெய்யியல் எனக் கண்டவர் பாரதிதாசன்.

இந்திய / தமிழக வரலாற்றில் நேர்ந்த இன்னொரு சிக்கலின் பின்னணியில் வைத்துப் பாரதிதாசனை நாம் மதிப்பிட வேண்டும். திருஞானமூர்த்தி அவர்களின் ஆய்வேட்டில் காணப்படும் சில குறிப்புக்கள் இத்தகைய மதிப்பீட்டிற்கு இடம் தருகின்றன. பாரதிதாசன் அவர்களின் பொதுவுடைமைச் சார்பை யாரும் கேள்விக்கு உட்படுத்த முடியாது. அந்த அளவுக்குப் பொதுவுடைமை என்பதனுள் ஆழத் தோய்ந்தவர் பாரதிதாசன். லெனினை அவர் பாராட்டினார். சோவியத் ரஷ்யாவைப் புகழ்ந்துரைத்தார் பொதுவுடைமைக்கட்சி தன்னைக் கேலி செய்தபோது பொதுவுடைமைக் கட்சியை அவர் கடிந்துரைத்தார். புதியதோர் உலகம் செய்வோம் என பாரதிதாசனுக்குள் எழுந்த முழக்கம் பொதுவுடைமையின் முழக்கம். அவரளவுக்குப் பொதுவுடைமையைப் போற்றிய கவிஞர் என இன்னொருவரைச் சொல்லுவதற்கில்லை. திராவிட இயக்கத்தோடும் பாரதிதாசனோடும் நெடுங்காலம் முரண்பட்டிருந்த மார்க்சியர் அண்மைக்காலத்தில் பாரதிதாசனைப் போற்றத் தொடங்கி உள்ளனர். சோவியத் யூனியன் தகர்ந்த நிலையில் இவர்களுக்கு இப்படியொரு "புத்தறிவு" வாய்த்திருக்கிறது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல இருக்கிறது?

திராவிட இயக்கமும் மார்க்சிய இயக்கமும் இணைந்து செயல்பட்டிருக்க வேண்டிய பேரியக்கங்கள். இப்படி இணைந்து செயற்பட்டிருந்தால் தமிழக வரலாற்றின் திசைவழி உறுதிப்பட்டிருக்கும். இங்கும் பகைமையென்பது இரு சார்பினரின் கண்களையும் மறைத்தது. மார்க்சியர் தம் அறிவாண்மையில் தெளிவோடு இருந்திருப்பார்கள் என்றால் திராவிட இயக்கம் இனம் என்று பேசியதை தமிழ்த்தேசிய இனம் என்று புரிந்து கொண்டிருக்க முடியும். தேசிய இனம் என்ற கருத்தில் தெளிவும் உறுதியும் மார்க்சியருக்கு இருந்திருக்குமானால் தமிழ் மொழியின் மேன்மை, தொன்மை என்றெல்லாம் திராவிட இயக்கத்தினர் பேசியதைத் தமிழ்த்தேசிய இனத்தின் அடையாளங்கள் என்று புரிந்திருக்க முடியும்.

அரசியல் அதிகாரம் என்பதை மார்க்சியர் தமக்குள்ளிருந்து களைந்து கொண்டிருக்க முடியுமானால் உயர் சாதியினரின் ஆதிக்கம் குறித்துத் திராவிட இயக்கத்தவர் பேசியதைப் புரிந்து கொண்டிருக்க முடியும். தமக்குள்ளும் சாதி மறைந்திருப்பதை ஒப்புக் கொண்டிருக்க முடியும். மதம் என்பதனுள்ளும் வர்க்கப் போராட்டம் தொடர்கிறது என்பதை மார்க்சியர் புரிந்து கொண்டிருக்க முடியுமானால் பெரியாரின் கடவுள், மதம், புராணம் ஆகிய கருத்தாக்கங்களைக் கட்டுடைத்து, இவ்வகைக் கருத்தாக்கங்களின் உள்ளடக்கக் கூறுகளை வரலாறு மற்றும் வர்க்கச் சார்பிலிருந்து விலக்கியிருக்க முடியும். அரசியல் அரங்கில் தொடங்கிய பகைமை பெரியார் இயக்கத்திற்கு எதிராக மார்க்சியரை எதிர்த் துருவத்தில் கொண்டு நிறுத்தியது. இதன் காரணமாகவும் தமிழ்த்தேசிய உருவாக்கம் இங்கு சிதைந்தது. இவ்வகையில் வரலாற்றில் நமக்கு நேர்ந்தது பின்னடைவு. பாரதிதாசனோடும் மார்க்சியர் விவாதித்திருக்க முடியும். பாரதிதாசனை மதித்து விவாதித்திருக்க முடியும். பாரதிதாசனின் பார்ப்பன எதிர்ப்பு என்ற கருத்து அவரது இலக்கிய ஆளுமையைப் பாதிக்கத்தான் செய்தது. சாதி என்பது குறித்தும் ஆய்வுகள் தொடர்ந்திருக்க முடியும். எப்படியோ வரலாற்றில் பல பத்தாண்டுகளை நாம் இழந்து நிற்கிறோம்.

சாதி என்பதற்கான தோற்றம் பற்றி ஆராய்கையில் ஆரியச் சூழ்ச்சி என்பதற்கே பாரதிதாசன் அழுத்தம் தந்தார் என்று குறிப்பிடும் ஆசிரியர் தொல்குலத்தின் தொடர்ச்சி என்றும் உபரிமதிப்பின் விளைவு என்றும் சாதியைக் காண்கிறார். நிலவுடைமை ஆதிக்க அமைப்பின் உட்கூறு எனச் சாதியை ஆசிரியர் கருதுகிறார். (உபரிமதிப்பு என்பது முதலாளியக் கோட்பாடு. இதை நிலக்கிழாரியத்திற்கு நீட்ட முடியாது) கலப்புத் திருமணமும், கல்வியும், மத ஒழிப்பும் சாதி அமைப்பைத் தகர்க்கும் என்பது பாரதிதாசனின் கருத்து என்கிறார் ஆசிரியர். மதம் என்றால் என்ன என்பது குறித்தும் மதத்தை ஒழிப்பது சாத்தியம் என்பது குறித்தும் நாம் விவாதிக்க வேண்டும். சாதி, மதம் குறித்து மார்க்சியர் சுயமான ஆய்வு எதையும் செய்துகொள்ளாத நிலையில் நாம் பாரதிதாசனையோ பெரியாரையோ குறை சொல்ல முடியாது. தமிழ்த்தேசிய உணர்வெழுச்சிக்குச் சாதி பெரும் தடையென்பதில் ஐயமில்லை. அதைப்போல மதவாதம் என்பதும் மதவாத அரசியல் என்பதும் தடையாக வந்து சேர்ந்திருக்கிறது.

பாரதிதாசன் படைப்புகளில் ஆய்வாளர் திருஞானமூர்த்தி ஆய்ந்துரைத்த அரசியலைக் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்து தொகுத்துத் தரலாம்.

பாரதிதாசனின் கருத்து, சமூகச் சூழலுக்கு அவர் தந்த எதிர்வினை. "சூழல் மனிதனை பாதிக்கிறது என்பது, உண்மையில் ஒரு பாதி சூழலை மனிதன் மாற்றியமைக்கிறான் என்பது உண்மையின் மறுபாதி" இவ்வாறு மார்க்சின் ஆய்வுரை லெனின் கருத்துரையோடு ஒத்துச் செல்கிறது. இந்த அணுகுமுறையை உறுதியாக ஆசிரியர் கடைப்பிடித்திருப்பார் என்றால் அரசியலிலும் பாரதிதாசனின் படைப்புத்திறனைக் கூடுதலாகக் கண்டிருக்க முடியும்.

இன்று நமக்குப் பெரிதும் தேவைப்படும் அரசியல் தமிழ்த்தேசியம் என்ற அரசியல். சந்தைப் பொருளாதாரம் என்ற பெயரில் அந்நியர்களின் ஊடுருவலும் மைய அரசின் அதிகாரப் பறிப்பும் அதிகரித்து வரும் சூழலில் தமிழ்த்தேசியம் என்ற அரசியலுக்கான அழுத்தம் கூடுகிறது. திராவிட இயக்கத்தின் கருத்தாக்கங்கள் மற்றும் செயல்பாடுகளிலிருந்து தமிழ்த்தேசியம் என்ற அரசியலை நாம் வரித்துக் கொள்ள முடியும். சமதர்மம் என்பதைப் பெரியாரின் கருத்துக்களின் மையம் என்ற முறையில் வகுக்க இயலுமானால் தமிழ்த் தேசியத்தின் ஆக்கத்திற்கு இக்கருத்து வலிமை தரும். சுரண்டலும் ஒடுக்குமுறையும் எந்த வடிவத்திலும் வேண்டாம் என்பது சமதருமம். ஆகவே சாதி ஆதிக்கம் வேண்டாம். பார்ப்பனிய ஆதிக்கமும் தான்.

பாரதிதாசனின் அரசியலை, அவரது படைப்புக்களிலிருந்து இவர் தொகுக்கும் ஆய்வுநெறி மார்க்சியர் கூறும் எதிரொளிர்வு, பிரதிபலிப்புக் கோட்பாடு என்று சொல்லமுடியும். சமூகம் அல்லது புறம், படைப்பாளியின் அகத்தில் எதிரொலிக்கிறது. இந்த எதிரொலிப்பைத்தான் படைப்பாளி தன் படைப்பில் வெளியிடுகிறான் என்பது இக்கோட்பாடு. லெனின் கூறிய எதிரொலிப்புக் கோட்பாட்டில் இரண்டு கூறுகள் உண்டு. ஒன்று உடன்பாட்டு முறை எதிரொலிப்பு (PASSIVE REFLECTION) இரண்டு எதிர் வினை என்ற முறையில் எதிரொலிப்பு (ACTIVE REFLECTION) சமூகத்தில் வறுமை நிலவுகிறது. ஆகவே இவன் திருடுகிறான் என்பது ஒருமுறை. வறுமை நிலவினாலும் நான் திருடமாட்டேன். சமூகத்தை மாற்றி அமைப்பேன் என்பது எதிர்வினை. முதல் நெறி குறித்து ஆய்வாளர் பேசினாலும் இரண்டாம் நிலையை

உள்ளடக்கித்தான் பேசுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். பெரியாரைப் போலவே பாரதிதாசனும் தமிழ்ச் சமூகச் சூழலுக்கு எதிர்வினை தருவதில் முன் நின்றார். தமிழ்த்தேசியம் வேண்டாம். இவை போலவே ஆணாதிக்கம், அந்நியராதிக்கம் முதலியனவும் வேண்டாம். தமிழ் மக்கள் தமக்கான அரசியலையும் பொருளியலையும் தாமே வகுத்துக் கொள்ள வேண்டுமென்பது சமதருமத்திற்கு ஒத்த நெறி. பாரதிதாசனிடம் புரட்சி மற்றும் பொதுவுடைமை என்ற கருத்து அழுத்தம் பெற்றுள்ளது. இப்போக்கு மார்க்சியருக்கு உடன்பாடான போக்கு தேசிய இனச்சிக்கல் என்பது குறித்து மார்க்சியருக்குத் தெளிவான, உறுதியான கருத்து உண்டு. ஸ்டாலின் வகுத்த வரையறைகளோடு சமனியம் மற்றும் நிகரமையம் ஆகிய கருத்துக்களையும் இணைத்துக் கொள்வதற்கு மார்க்சியம் இடம் தரும். இம்முறையில் சாதி முதலிய ஆதிக்க முறைகளைக் களைவதன் மூலமே தமிழ்த்தேசியம் என்ற அரசியல் உறுதிப்படும். பாரதிதாசனின் கருத்துக்களை இவ்வாறு ஆக்கமுறையில் தொகுப்பதற்குத் திருஞானமூர்த்தி அவர்களின் ஆய்வு நமக்குப் பயன்படும்.

பாரதிதாசன் அவர்களிடம் திராவிடஇயக்கச் சார்பே கூடுதலாக இருந்தது. பொதுவுடமை, புரட்சி ஆகிய கருத்துகளில் அவர் அழுத்தம் கொண்டிருந்த போதிலும் மார்க்சியர் என்று அவரைக் கூற முடியாது. வர்க்கப் போராட்டம், வரலாற்று பொருள் முதல்வாதம், அடித்தளம் மேற்கட்டு என்பதன் இணக்கம், இயங்கியல் முதலிய மார்க்சியத்தின் அடிப்படை கருத்துக்கள் அவரிடம் வெளிப்படையாக இல்லை. ஆனால் இந்த நோக்கத்தோடு ஒருவர் ஆய்வில் ஈடுபட இயலுமானால் மார்க்சியத்தின் அடிப்படை கூறுகள் சிலவற்றையேனும் பாரதிதாசனிடமிருந்து வகுத்துக் கொள்ள முடியும். பெரியாரிடமிருந்தும் சில கூறுகளில் பாரதிதாசன் வேறுபடுவதை கருத்தில் கொண்டால் அவர் திராவிட இயக்கத்திற்கும் மார்க்சிய இயக்கத்திற்கும் இடையில் இருந்தார் என்றுதான் மதிப்பிட முடியும். இவ்விரு இயக்கங்களின் இணைப்புக்கான பாலம் என்று அவரை மதிப்பிட முடியும். தமிழ்ச்சூழலை மார்க்சியர் எதிர்மறை முறையில் பார்த்தனர் என்பதனால் பாரதிதாசனை மார்க்சியர் இகழ்ந்துரைத்ததை நாம் ஏற்கவேண்டியதில்லை. பாரதிதாசனிடமிருந்து கற்றுக் கொள்ள மார்க்சியர் தவறினார்.

இந்தியாவில் கூட்டாட்சியோ சோசலிசமோ அல்லது இரண்டும் இணைந்தோ செயற்படவில்லை என்பதனால்தான்

தமிழ்த்தேசியம் குறித்து இப்பொழுது பேசுகிறோம். தமிழ்த்தேசியம் என்றவுடன் இதை நாட்டுப் பிரிவினை என்று பொருள்படுத்திவிட முடியாது. மீண்டும் கூட்டாட்சிக்கான குரல் என்றும் இதைக் காண முடியும். கூட்டாட்சி இயக்கம் கொள்ளுமானால் சோசலிசமும் இணைந்து வரும். இந்தியா ஒரு துணைக்கண்டம் என்ற வகையிலும் இந்த அடிப்படையில் நாம் இணைந்து வாழ வேண்டும். இந்தியாவின் அரசியல் விடுதலையில் திராவிட இயக்கமும் பங்கெடுத்திருக்க முடியும். வகுப்புவாரி உரிமை என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான விடுதலைக்கான வழி என்பதை காங்கிரசு இயக்கம் ஒப்புக் கொண்டிருக்கவும் முடியும்.

சீனத்தாக்குதல் என்பதற்காக இந்தியாவின் ஒருமைப்பாடு குறித்து நாம் முழங்கியிருக்க வேண்டியதில்லை. இமயச்சாரலில் ஒருவன் இருமினால் குமரியிலிருந்து மருந்து கொண்டு ஓடுவான் என்பது பாரதிதாசனின் அதீத கற்பனை. இந்தியப் புரட்சியை மார்க்சியர் சாதிக்கவில்லை. இதன் காரணமாக பெரியாரை குறைச் சொல்வதில் பொருளில்லை. இப்படி எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது சமுதாய விடுதலையில் அக்கறையுடைய பெரியாரியரும் மார்க்சியரும் நெருங்கி வந்து தமிழ்த் தேசிய அரசியலை வளர்த்தெடுக்க வேண்டும். இத்தகைய கருத்தாக்க வளர்ச்சிக்கு ஆசிரியரின் ஆய்வு நூல் பயன்பட முடியும். இதன் காரணமாக இந்த ஆய்வு நூலை காலத்தினால் செய்த நன்றி என நாம் பாராட்ட முடியும். திராவிட இயக்கத்தில் பெரியாருக்கும் அண்ணாவிற்கும் நிகராக இருந்தவர் பாரதிதாசன். பாரதிதாசனின் தனித்திறன்கள் திராவிட இயக்கத்தை தமிழ் மக்களுக்குள் ஆழமாக பதிவு செய்தது. தமிழுணர்வின் வீறு பாரதிதாசனிடம் வெளிப்பட்ட அளவுக்கு வேறு யாரும் வெளிப்படுத்தவில்லை.

பாரதிதாசனின் அரசியலைத் த்மிழ்த்தேசியம் என்று வரையறுப்பதுதான் பொருத்தமாகயிருக்கும். தொடக்க காலத்திலும் இறுதிக் காலத்திலும் இந்தியத் தேசியம் என்று பாரதிதாசன் பேசினாலும் தமிழ்த் தேசியம்தான் பாரதிதாசனின் கருத்தியல் என்பதை இவ்வாய்வேடு விளக்கி நிற்கிறது. பெரியாரிடம் முரண்படும் அளவிற்கு சுய சிந்தனை உடையவராப் பாரதிதாசன் இருந்தார். தமிழோடு பாரதிதாசன் வாழ்ந்தார் இன்று தமிழ்த் தேசியத்திற்கு வரலாற்றில் வாய்ப்பிருக்கிறது. திராவிட இயக்கத்திலிருந்தும் மார்க்சிய இயக்கத்திலிருந்தும் தமிழ்த் தேசியம் என்ற அரசியலை வளர்த்தெடுக்க முடியும்.

(குறிப்பு : திரு. திருஞானமூர்த்தி அவர்களின் 'பாரதிதாசன் படைப்புகளில் அரசியல்' என்ற முனைவர் பட்டத்திற்கான ஆய்வு நூலில் இடம் பெற்ற அணிந்துரை.)

- டிசம்பர் - *1998*

6

பார்ப்பனிய எதிர்ப்பா, சமதர்மமா ? எது பெரியாரியத்தின் மையம் ?

1. பெரியாரிலிருந்து சில மேற்கோள்கள் :

கோவைக் கூட்டத்தில் *(30-1-33)* பெரியார் பேசியவை. "நமது இயக்கம் சீர்திருத்த இயக்கம் அல்ல. அழிவு வேலை இயக்கம். இன்றைய நிலையில் சமத்துவத் தன்மைக்கு மத சம்பந்தமாக, கடவுள் சம்பந்தமாக, பொருளாதார அரசியல் சம்பந்தமாக அனுகூலமானவை இல்லை. ஆகவே எப்படிச் சீர்திருத்தம் செய்வீர்கள்? இவைகளில் செய்யும் சீர்திருத்தாம் இவை இன்னும் நெடுங்காலத்திற்கு நிலைத்து இருக்கத்தான் பயன்படுமே தவிர, மாறுதலை உண்டாக்க முடியாது. வேகமாகப் போவதற்கு இடையூறாய்க் கடவுளும், மதமும், அரசாங்கமும் குறுக்கே போடப்படுகின்றன. இவற்றை ஒழிக்க வேண்டும். நாம் பொதுநலச் சேவைக்காரர்கள் அல்ல. புரட்சியாளர்கள். நமக்குச் சீர்திருத்தக்காரர்களும், பொதுநலச் சேவைக்காரர்களும் பெரிய விரோதிகள். தலைகீழாயக் கவிழ்ப்பதுதான் புரட்சி. இது குற்றமானால் இதை ஒவ்வொருவரும் குஷாலாகச் செய்ய வேண்டியதுதான்" (ஆனைமுத்து தொகுப்பு நூல் *509-512)*

கட்சிக்குள் ஏற்பட்ட கடுமையான விவாதம் ஒன்றின்போது பெரியார் கூறியது: பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் வேலை செய்யாமல் சமூக முற்போக்கு எப்படி ஏற்படும்?

ஒரு சமூகத்திற்குப் பொருளாதாரமும், அரசியலும் அவசியமானது அல்லவா? இந்த இரண்டையும் விட்டுவிட்டுச் செய்யும் முற்போக்கிற்காக நமது சுயமரியாதை இயக்கம் தேவையே இல்லை. சும்மா அலங்காரமாக, வேடிக்கையாக, புராணமுட்டாள் தனத்தையும், பார்ப்பனச் சூழ்ச்சியையும் பேசிக் காலம் கழிப்பது மாத்திரமே சுயமரியாதை இயக்கம் என்றால் அது அழிந்து போவதே மேலான காரியம் என்று சொல்வேன் (ஏ.எஸ்.கே.நூல் பக்கம் 11, இவர்தான் பெரியார்) குடியரசு இதழில் வந்த அறிக்கை *(31-3-35)* சுயமரியாதை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் அல்ல. சர்க்காரோடு ஒத்துழையாமை இயக்கம் அல்ல. சட்டத்தையும், சமாதானத்தையும் மதிகக்காத இயக்கம் அல்ல. சுயமரியாதை இயக்க வேலைத் திட்டம் சட்ட வரம்பிற்குட்பட்டே நடக்கும். (ஆனைமுத்து நூல்)

2. இந்த மேற்கோள்களிலிருந்து பெரியாரின் இறுதி இலக்கு சமதர்மத்தை நோக்கிய புரட்சிகரமான மாற்றம். இந்த மாற்றத்திற்குக் குறுக்கே இருப்பவை சாதி, மதம் இவற்றோடு பார்ப்பனியம், அரசு, பொருளாதாரம் அதாவது முதலாளியம் நிலவுடைமை முறையையும் சேர்த்துக் கொள்ளலாம். அரசுத் தடை வந்தவுடன் பெரியார் தன் சுயமரியாதை இயக்கத்தைச் சட்ட வரம்பிற்குட்பட்டதாக மாற்றிக் கொள்கிறார். தனது இயக்கத்தைச் சீர்திருத்த இயக்கமாக அமைத்துக் கொள்கிறார். இது பெரியாரின் குறுகிய எல்லை. விரிந்த எல்லை சமதர்மம். அவ்வப்போது குறுகிய எல்லையிலிருந்து விடுபட்டு சட்டத்தையும், அரசையும் மீறிச் செயல்படுவதாகவும் பெரியார் இருந்தார்.

இதற்காகப் பெரியாரை எப்படி விமர்சனம் செய்யலாம்? சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள், தொடக்கத்தில் பெரியார் மீது அமர்ந்து சவாரி செய்ய விரும்பினார்கள். அரசுத் தடை வந்தவுடன் காங்கிரசுக்குள் நுழைந்து சோசலிசக் கட்சி என்ற பெயரில் தங்கினார்கள். இன்னொரு பொருளாதார வாதம், தொழிற்சங்க வாதம், அரசியல் அதிகாரவாதம் ஆகியவை இவ்வாறு மார்க்சியத்தை நம் சூழலில் முடக்கியவை. மார்க்சியர் செய்ய வேண்டிய கட்டத்தில் நேருவின் சோசலிசத்தை ஏற்றார்கள். புரட்சிப் பாதையைக் கைவிட்டார்கள். இன்று இறுதியாகப் பார்க்கும் பொழுது சோவியத் யூனியனிலும் சரி, இந்தியாவிலும் சரி, மார்க்சியம் என்பது பெருமளவில் முதலாளியக் கூறுகளை உள்வாங்கிக் கொண்ட கோட்பாடாகவே இருக்கிறது. பொருளாதார வாதம், தொழிற்சங்க வாதம், அரசியல் அதிகாரவாதம் ஆகியவை இவ்வாறு மார்க்சியத்தை நம் சூழலில்

முடக்கியவை. மார்க்சியர் செய்ய வேண்டிய முதன்மையான செயற்பாடு சமதர்மம் நோக்கிய சமூக மாற்றம். வர்க்கப் போராட்டம், புரட்சிக்கான கட்சியமைப்பு முதலிய கருத்துருவங்கள், செயற்பாடுகள் மூலமே இந்தச் சமூக மாற்றம் சாத்தியம். இதற்கான துணைச் சக்தி பெரியாரியக்கம். ஆகவே, மார்க்சியர் தோற்ற இடத்தில் பெரியார் வெற்றி பெறுவாரென்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆனால் பெரியார் செய்து கொண்ட சுயவிமர்சனத்தின்படி பெரியாரியத்தை அர்த்தப்படுத்தும் பொழுது, அவர் தீவிரப்படுத்திய சாதி மத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு ஆகிய முனைகளை முற்றான தனிநிலைகளாகக் கொள்வது, பெரியாரியத்தைக் குலைக்கும். மாறாக, சமதர்மம் என்ற இலக்கிலிருந்து சாதி, மத, பார்ப்பனிய எதிர்ப்பு என்ற முனைகளை வேறுபடுத்திவிடக் கூடாது. இந்த முனைகளில் மட்டும் பெரியாரியத்தை முடக்கினால், அப்புறம் பெரியாரியம் முதலாளிய, அரசு அதிகார எல்லைக்குள் சுழல்வதாகச் சுருங்கிவிடும். வீரமணியின் தலைமையில் பெரியாரியக்கம் இப்படி முதலாளி மயமாகத்தான் சுருங்கிக் கிடக்கிறது. இப்படிச் சுருக்குவதன் மூலம் பெரியாரியத்தை மார்க்சியத்திற்கு எதிரான போக்கு என மாற்றியிருக்கிறார்கள். முதலில் சமூகமாற்றம், பிறகு பொருளியல் மாற்றம் என்று இவர்கள் தத்துவம் வகுக்கிறார்கள். இப்படிக் கூறுவதற்கு ஆதாரமாக பெரியாரிலிருந்தே சில மேற்கோள்களை எடுத்துக் கொள்ள முடியும். இப்படி விளக்குவதன் மூலம் சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவற்றை சமூக மாற்றத்திற்குத் தடையான மூலச்சக்திகள் என உருப்பெருக்கிக் காட்ட முடியும். இந்தியச் சமூகமே சாதியச் சமூகம் என்ற வரையறை இதற்குப் பெரிதும் பயன்படும். மார்க்சியர் கூட இன்று இந்த வரையறைக்குள் சரிந்துள்ளனர். இதனால் மார்க்சியமும் தனக்குள் சுருங்கிப் போயுள்ளது. இதற்கு மாறாக சமதர்மம் பற்றிய பெரியாரின் உறுதியான கருத்துக்கள் என்ற ஆதாரத்தில் பெரியாரியத்தை மறு உருவாக்கம் செய்வது நம் காலத்தின் கடமை. சமதர்மம் என்ற ஆதாரத்திற்கு ஒத்த முறையில் சாதி, மதம், பார்ப்பனியம் ஆகியவற்றைப் பெரியாரிலிருந்து விளக்க வேண்டும். சமதர்மம் தான் முற்றான கோட்பாடு. இடையில் சாதி, மதம், பார்ப்பனியம், அரசு அதிகாரம், முதலாளியம் இவற்றோடு ஏகாதிபத்தியம் ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவை பெரியாரின் முக்கிய முனைகள்.

1. பெரியாரின் கோட்பாடு என எதைச் சொல்லலாம்? பெரியாரிடம் கோட்பாட்டாக்கம் இல்லையா? என்ற கேள்வியை

எடுத்துக் கொள்ளலாம். பெரியாரின் கோட்பாடு அதாவது பெரியாரியம் என்பது சுயமரியாதை அல்லது தன்மானம்தான். இதுதான் பெரியாரின் தத்துவம். சுயமரியாதை ஒரு கருத்து மட்டுமே என்று சிலர் கருதலாம். ஆனால் சுயமரியாதை என்பதற்கு பெரியார் தந்த விளக்கங்கள் மிக விரிவானவை. ஒரு பெண்ணுக்கு எது சுயமரியாதை? தொழிலுக்கு எது சுயமரியாதை? திராவிடனுக்கு எது சுயமரியாதை? தமிழனுக்கு எது சுயமரியாதை? இப்படியெல்லாம் நிறையக் கேள்விகளை எழுப்புகிறார். அடிமைத்தனம் எந்த வகையிலும் கூடாது என்கிறார். சாதி, மதம், இனம், மொழி, தேசம், தேசியம் என்று எதற்கும் மனிதன் அடிமைப்படக்கூடாது. மனிதன் இப்படித் தன்மான முடையவனாக இருக்க வேண்டும். தேசபக்தி, மூடத்தனம் என்றெல்லாம் பேசுகிறார்.

பெரியாரிடமிருந்து ஒரு மேற்கோள் : (நிறப்பிரிகை - 6 ராஜன்குறை கட்டுரை, பக்கம் - 39)

"பொதுவாக, சுயமரியாதை என்கின்ற ஓர் இன்ஜினைப் பலப்படுத்தி, சரியாக ஓடத் தெரிந்த சக்தியை உண்டாக்கி வைத்துவிட்டால், பிறகு எந்த எந்திரத்தைக் கொண்டு அதோடு இணைத்துத் தோல்பட்டையை மாட்டிவிட்டாலும் அது தானாகவே ஓடும். அது இவ்விதமான இயந்திரமாகத்தான் இருக்க வேண்டும் என்கின்ற கவலை யாருக்கும் வேண்டியதில்லை என்றே சொல்கின்றோம். மற்றபடி எல்லா உணர்ச்சிகளையும்விட சுயமரியாதை உணர்ச்சியே மேலானதும், மதிக்கத் தக்கதுமாகும் என்பதின் தத்துவத்தை உணர்ந்தவர்களுக்கு இந்த இயக்கத்தில் உண்மையான சந்தேகமே தோன்ற இடமிருக்காது. அது இன்றைய தினம் வேண்டுமானால் ஏதோ ஒரு சிறு வகுப்பாருடன் போராடத் தோன்றியதாகத் தோன்றலாம். இது அல்ல அதன் இலட்சியம். ஒரு இயந்திரத்தைச் சுழற்றும் போது முதலில் சுற்றும் சிறு வேகம் போல் இன்று ஒரு சிறு வகுப்பார் உணர்ச்சியோடு போராடுவதாகக் காணப்படுவது; மற்றபடி பின்னால் அது உலகத்தையே ஒன்றுபடுத்த - உலக மக்களையே ஒரு குடும்ப சகோதரர்களாகச் செய்யும் முயற்சியின் போதுதான் அதன் உண்மைச் சக்தியும், பெருமையும் வெளியாகும்."

(குடியரசு - தலையங்கம் 17-2-1929)

இந்த மேற்கோள்களில் சுயமரியாதைத் தத்துவம் என்றும், இதன் விரிவு உலக சகோதரத்துவம் என்றும் பெரியார் குறிப்பிட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். சகோதரத்துவம் என்பது இங்கு சமதர்மம்தான். பகுத்தறிவு என்பதை பெரியாரின் தத்துவம் எனச்

சொல்வது பொருந்தாது. பகுத்தறிவு என்பது பகுத்தாய்தல். இது ஆய்வு முறை மட்டுமே. காரணம், காரியம், எதார்த்தம், தோற்றம், மாயை, மனிதன், விலங்கு என்றெல்லாம் இந்த ஆய்வு செயல்படும். சில சமயம் மனிதனைவிட விலங்கு மேல் என்று இந்த ஆய்வு முறை சொல்லும். கை, கால், முதலிய உறுப்புகள் மட்டுமே உள்ளன - மனிதன் இல்லை என்று இந்த ஆய்வு முறை சொல்லும். இப்படி குறுக்கும் நெடுக்குமாக, மேலும் கீழுமாக இந்த ஆய்வு முறை தாவும், தடுமாறும். எனினும் இது விடாப்பிடியாக ஒன்றை நிரூபணம் செய்யும். அதுதான் சுயமரியாதை.

புலனறிவு, கருத்தாக்கம் என்பவற்றின் வழியே இயங்கி, இறுதியில் உருவாகும் கோட்பாடு சுயமரியாதை. ஆய்வு முறை எனப்படும் பகுத்தறிவு, பெரியாரின் மெய்காண் முறை / அறிதல் கொள்கை மட்டுமே. சுயமரியாதை என்பது ஒரு முழு முற்றான கோட்பாடு ஆகுமா என்று நாம் விவாதிக்கலாம். மனிதன் தன்மானம் உடையவனாக இருப்பதென்றால், சமதர்மியாக இருக்க வேண்டும் என்பது பெரியாரின் அடிப்படையான கருத்து. அரசு அதிகாரம், முதலாளியம் என்ற வரையறைக்குள் மார்க்சியர் இயங்கிய மாதிரிதான் பெரியாரும் இயங்கினார். இந்த வரையறைகளை ஒப்புக் கொண்டவன்

தன்மானம் / சுயமரியாதை இருப்பவனாக எடுத்துக் கொள்ள முடியாது. அரசு அதிகாரம், முதலாளியம் ஆகிய வரையறைகளைத் தகர்க்காமல் ஒருவர் தன்மானம் உடையவராகச் சொல்லிக் கொள்ளவும் முடியாது.

(4) இன்றைய நிலையில் எவை மையப்படுத்த வேண்டும் என்பது பற்றி.

இன்று சந்தைப் பொருளாதாரம், தாராளமயமாக்கல், அரசு உடைமையை தனியார்மயமாக்கல், உலகச் சந்தையோடு இந்தியாவை இணைத்தல் - இப்படியெல்லாம் தீவிரமாகச் செயல்படுவது முதலாளியம். இதற்கு ஒத்த முறையில் செயல்படுவது அரசு அதிகாரம். இவை இரண்டும் ஏகாதிபத்திய நலன்களைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்டு தீவிரமாகச் செயல்படுகின்றன. இதற்காகவே இராணுவப் பெருக்கம், அரசு அதிகாரத்தை நவீனப்படுத்தல், நவீன அறிவியல் தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்தல், பசுமைப் புரட்சி - இப்படி இன்று செயல்பாடுகள் அதிகரிக்கின்றன. தேசிய இன விடுதலைக் குரல்கள் அழிக்கப்படுகின்றன. தனி மாநிலக் கோரிக்கைகள் அமுக்கப்படுகின்றன. மைய அரசு வலுவாக நவீன அரசாக

உருவாக்கப்பட வேண்டும் - இதுதான் இந்தியாவை ஒரு தேசமென வைத்திருக்கும். எதிர்ப்பு இயக்கங்களை இது ஒடுக்கும். தொழிலாளர், உழவர் போராட்டங்களை, சோசலிசக் கோரிக்கைகளை இது ஒடுக்கும். இப்படி ஒரு மைய அரசு தேவை. மாநிலங்களை மொழிவாரி அடிப்படையில் இல்லாமல் வேறு அடிப்படையில் பிரித்துவிட வேண்டும். பஞ்சாயத்துகளின் நிர்வாகத்தில் மைய அரசு தலையிட வேண்டும். முதலாளியம் தான் குறிக்கோள். இதன் மூலம் ஆதிக்கம் பெறுவது ஏகாதிபத்தியம். இதுதான் இன்றைய நிலவரம். இந்திய ஒருமை, வலுவான மைய அரசு, என்ற அடிப்படையில் தான் மைய இந்துத்துவம் எழுந்திருக்கிறது. இது தமிழனின் தன்னுரிமைகளை அழிக்கும். பகுத்தறிவு இயக்கத்தை ஒழிக்கும். தமிழனின் வரலாற்றை, தமிழ் மொழியை அழிக்கும். இது இன்றைய சூழல்.

இங்கு அடிப்படையான பிரச்சினை, ஏகாதிபத்திய நலன்களை உட்கொண்ட அரசு அதிகாரம் / முதலாளியம், இந்துத்துவம் என்ற பேச்சு, முஸ்லீம்களை ஒடுக்குவதற்காக மட்டுமல்ல, முஸ்லீம்களை ஒடுக்குவதாகத் தொடங்கி, தொழிலாளிகள், உழவர்கள், தாழ்த்தப்பட்டவர், பிற்பட்ட சமூகத்தினர், பெண்கள் ஆகிய அனைவரையும் ஒடுக்ககுவதற்கானதும்தான். மதம் என்பது இங்கு அரசியலாக, பொருளியலாக மாற்றப்படுகிறது. அதாவது அரசியலையும், பொருளியலையும் மறைக்க இங்கு மதவாதம் பேசப்படுகிறது. அரசு ஆதிக்கத்தை, முதலாளியத்தை நிறுவுவதற்கான கருத்தியல்களில் ஒன்று பார்ப்பனியம், அரசு அதிகாரத்தை, முதலாளியத்தை நிறுவிக் கொள்வதில் உயர்சாதிகள் ஒத்துழைக்கும். தாழ்த்தப்பட்டவர்களை ஒடுக்கும். பிறபட்டவர்களின் கோரிக்கைகளை அரசு அதிகாரங்கள் உள்வாங்கிக் கொள்வதன் மூலம் அவர்களைத் தங்கள் கட்டமைப்புக்குள் கொண்டு வரலாம். இறுதியில் தொழிலாளர், உழவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் ஆகியவர்கள் மீது கட்டப்படுவது அரசு அதிகாரம், முதலாளியம். பெரியாரின் சமதர்மப் பார்வையை ஆதாரமாகக் கொண்டால் மட்டுமே இப்படி விரிந்த பார்வையைப் பெற முடியும். சமதர்மத்துக்கான இயக்கங்கள் தகர்ந்த நிலையில் தான் சாதி, மதச் சக்திகள் இன்று தமக்குள் திரள்கின்றன. முதலாளியத்தை ஒழித்து மக்கள் நலன்களுக்கு ஒத்த முறையில், தொழில்துறை, வேளாண்மையை உருவமைத்திருக்க முடியுமானால், சாதிகளும், மதங்களும் தம் ஆதிக்கம் குறைந்திருக்கும். புரட்சிக்கான சக்திகள் ஒடுக்கப்பட்டது முதலாளியத்திற்குச் சாதகமானது. இதைச் செய்வது அரசு அதிகாரம். புரட்சிகரமான சமூக மாற்றம் மக்கள் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல சிக்கல்களைக்

குறைத்திருக்கும். இதற்கு மாறாக முதலாளியம் உச்ச அளவில் சுரண்டலை அதிகரித்துள்ள நிலையில், அரசு அதிகாரம் உச்ச நிலையில் ஒடுக்குதலைத் திணித்திருக்கிற நிலையில் மக்களின் வேதனைகள் அதிகரிக்கின்றன. அறிவு தடுமாறுகிறது. ஆகவே கோயில்களையும், புதிய புதிய கடவுளர்களையும் தேடிச் செல்கின்றனர். விடுதலைக்கான சக்திகள் திரண்டு செயல்படாத நிலையில், கடவுளர்களையும். தலைவர்களையும் மக்கள் தேடிச் சென்று காலில் விழுந்து வழிபாடு செய்கின்றனர். நவீன முதலாளிய வளர்ச்சிக்கு கணக்கியல் அறிவு, கணிப்பொறிகள் இயக்கம், நவீன் தொழில்நுட்ப அறிவு தேவைப்படுகிறது. தேவைப்படும் இவ்விடங்களில் பார்ப்பனர் இடம் பெறுகின்றனர். சமூகச் சிக்கல் மிகுந்த நிலையில் சோதிடர்களைப் போலவே புரோகிதர்களுக்கும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. சுரண்டலும், ஒடுக்குமுறையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிற சூழலில் தான் பார்ப்பனியம், சாதி, மதம் என்ற பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும். சுரண்டலும், ஒடுக்கு முறையும் முதன்மையாக அரசு அதிகாரத்தின் மூலமும், முதலாளியத்தின் மூலமும் தான் நடைபெறுகின்றன. இவற்றோடு ஒத்துழைக்கும் முறையில் தான் சாதிகளும், மதங்களும் பார்ப்பனியமும் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும். இவை மூன்றையும் முற்றான தனி நிலைகளென பிரித்துப் பார்ப்பதன் மூலம், நம் சிந்தனையாளர்கள் மீண்டும் பார்ப்பனியம் என்று சிலர் சொல்கிற இந்தச் சூழல் வட்டத்திற்குள் தான் இயங்குகின்றனர். இப்படிப் பார்ப்பதன் மூலம் எந்தச் சிக்கலும் தீராது. தெளிவும் ஏற்படாது. பெரியாரியத்தை இப்படிக் குறைக்கக் கூடாது. அரசின் அடக்குமுறைக்கு ஒத்து, சீர்திருத்த இயக்கமாகத் தன்னை மாற்றிக் கொண்ட பெரியாரியத்தை இப்பொழுதேனும் தனக்கு இட்டுக் கொண்ட முன்னைய தளையிலிருந்து விடுவிக்க வேண்டும். பெரியாரின் புகழ் பாடி, பெரியாரைச் சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு ஆகியவற்றினுள் முடக்குவதன் மூலம் பெரியாரின் ஆற்றலை இன்றைய சூழலை மாற்றுவதற்கேற்ற முறையில் பயன்படுத்த முடியாது. சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு இவை மூன்றையும் ஆதாரமாக்கினால் முதலாளிய எல்லையைக் கடக்க முடியாது.

குறிப்பு : “நிறப்பிரிகை ” யில் 2-5-93ல் ஏற்பாடு செய்யப்பட்ட பெரியாரியம் - கூட்டு விவாதத்தின்போது இக்கட்டுரை முன் வைக்கப்பட்டது.

7

சுயமரியாதையும் சமதர்மமும்

சுயமரியாதை பற்றியும் பெரியாரின் சில உரைகளையும், கட்டுரைகளையும் திரும்ப வாசிக்கிற போது அங்கங்கே சில கருத்துக்கள் நமக்குள் ஆழமாகப் பதிகின்றன. பெரியாரின் சுயமரியாதை உணர்விலிருந்து சமதர்மத்தைப் பிரித்துப் பார்க்கவே முடியாது. அவரது சுயமரியாதை உணர்வை, தொடர்ந்து ஆழமாகப் பொருள் படுத்திக் கொண்டே சென்றால், சமதர்மம் என்ற ஊற்றை நாம் அவருக்குள் காண முடியும். இறுதியில் இப்படிக் கேட்கலாம்; மனிதன் தன் சுயமரி யாதையை எப்பொழுது தனக்கு நிறைவாகப் பெறுவான்? இதற்கான பதில் - பெரியாரின் பதில் சமதர்மத்தில் தான் மனிதன் தன் சுயமரியாதையை நிறைவாகப் பெறுவான்.

மார்க்சு, எங்கல்சு எழுதிய கம்யூனிஸ்ட் கொள்கை அறிக்கையை மொழிபெயர்த்துப் பெரியார் வெளியிட்டார். இது குறித்து அவர் முன்னுரை எழுதினார். சமதர்மம் என்ற கருத்து, பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது என்று குறிப்பிட்டார். ஜாரின் கொடுங்கோன்மைக்கு எதிராக சமதர்மப் புரட்சி ஏற்பட்டதன் நியாயம் பற்றி பெரியார் எழுதினார். உடனடியாக ஒன்றைக் குறிப்பிடுகிறார். ரஷ்யாவைக் காட்டிலும் இந்தியாவுக்குத்தான் இந்தப் புரட்சியின் தேவை அதிகம் என்றார். ரஷ்யாவுக்கு முன்பே இது இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும் என்கிறார். இக்கட்டுரையில் வியப்புக்குரிய ஒரு குறிப்பு - ரஷ்யாவில்

பார்ப்பனர்கள் என்று குறிப்பிட் ு வளைவுக்கோட்டில் பாதிரியார் என்று குறிப்பிடுகிறார். இந்தியாவில் இந்தப் போக்கு வராது தடுத்தவர்கள் பார்ப்பனர்கள், மதவாதிகள் என்றார். கடவுள், சாதி என்றும் குறிப்பிடுகிறார். தடுத்தது இந்தச் சக்திகள் தானா என்றெல்லாம் ஆய்வைப் பிறகு வைத்துக் கொள்ளலாம்.

சமதர்மத் திட்டம் பற்றி, இத்திட்டத்தின் பல அம்சங்கள் பற்றி பெரியாரின் சில கட்டுரைகள் இருக்கின்றன. பிரிட்டிஷ்காரர்களின் உடைமைகளைத் தேசம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இழப்பீடு கூடாது என்றார். முதலாளிகளின் சொத்துக்களை தேசம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். அரசு எல்லாவற்றையும் நிர்வாகம் செய்ய வேண்டும் என்கிறார். கல்வி, மருத்துவ வசதி, முதுமைக் காலத்திற்கு என்றெல்லாம் பேசுகிறார்.

சமதர்மத் திட்டம் வகுத்ததில் சிங்காரவேலருக்குப் பங்கு உண்டு என்பதை நாம் அறிவோம். சுயமரியாதை அமைப்பினுள் சமதர்ம இயக்கத்துக்கு இடம் தரப்பட்டது. தமிழகம் முழுவதும் சமதர்மக் குழுக்கள் இருந்தன. ரஷ்யாவுக்குச் சென்று வந்த பிறகுசமதர்ம நோக்கு பெரியாரிடம் தீவிரம் பெற்றது. இவையெல்லாம் நாம் முன்பே அறிந்த செய்திகள். சிங்காரவேலர் வகுத்துத் தந்த சமதர்மத் திட்டத்தைச் சுயமரியாதை இயக்கம் ஏற்றுக் கொண்டது. சுயமரியாதைக்கும், சமதர்மத்துக்கும் வேறுபாடு கற்பித்து காங்கிரஸ்காரர்களும், மற்றவர்களும் விமர்சனம் செய்தபொழுது பெரியார் மறுத்துப் பேசியிருக்கிறார். கோவையில் பேசிய பெரியார், சமதர்மத்தை ஏற்படத்துவதுதான் நம் வேலை. இது அழிப்புச் செயல்தான். இதை உற்சாகமாகச் செய்ய வேண்டும் என ஆவேசத்தோடு பேசியிருக்கிறார்.

முன்பே எழுதிய கட்டுரை ஒன்றில் ஜமீன்தார்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் போது, நிலவுடைமை அதிகாரம் பெற்ற வரலாற்றை தொகுத்துச் சொல்கிறார். ஜமீன்தார்கள் ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்று சொல்கிறார். உலகப் போர் நடந்த காலத்தில் வியாபாரிகள் அடித்த கொள்ளை பற்றிப் பேசுகிறார். இலட்சாதிபதிகளும், கோடீஸ்வரர்களும் உருவான கதையைச் சொல்கிறார். இவர்களிடமுள்ள செல்வத்தைப் பறிக்க வேண்டிய தேவைபற்றிச் சொல்கிறார். திருடாமல் செய்வதன் மூலம் திருடனைத் திருத்த முடியும் என்று பெரியார் சொல்கிறார். இதை ஓர் உருவகமாக நாம் கொண்டால், பல பரிமாணங்களில் நாம் இதைப் பொருள் படுத்த முடியும்.

பணக்காரனிடமிருந்து அவனது செல்வத்தைப் பறித்தால் தான் அவனை மனிதனாக்க முடியும். நிலவுடையாளனிடமிருந்து நிலத்தைப் பறித்தால் தான் அவனை மனிதனாக்க முடியும். மனிதன் என்பவன் இறதியாகப் பார்க்கும் போது தன்மானமுடையவன். தனது திட்டம் பொதுநலச் சேவையா என்ற கேள்விக்கு, இல்லை என்று பெரியார் சொல்கிறார். திருடனுக்கும், திருட்டுக் கொடுத்தவனுக்கும் பொதுவாக நான் சேவை செய்ய முடியாது என்கிறார். ஏழைக்காகத் தான் சேவை செய்ய முடியும். பணக்காரனுக்குச் சேவை செய்ய முடியாது என்கிறார்.

சுயமரியாதை இயக்கத்தில் பெரியார் ஈடுபட்ட தொடக்க காலத்திலேயே ஒரு முக்கியமான கருத்தை முன்வைக்கிறார். பணக்காரர்கள், அரசாங்க அதிகாரிகள், மதவாதிகள் இவர்கள் ஐந்து சதவிகிதத்தினர். இவர்கள் தன் நலத்துக்காகத்தான் உத்தியோகம் என்றும், கட்சி என்றும், அரசியல் என்றும் பேசுகிறார்கள். பிரிட்டிஷ் குடையின் கீழ் சுதந்திரமா, வெளியில் சுதந்திரமா என்றெல்லாம் இவர்கள் பேசுவதும் இந்தக் கருத்தில்தான். காங்கிரஸ் கட்சியையும், காந்தியையும் ஒழித்தால் தான் சமதர்மம் சாத்தியம் என்று பின்னாளில் பெரியார் பேசினார். சமூகத்தைத் திருத்த நினைக்கிறவன் சட்டசபைக்குள் செல்லக் கூடாது என்றும் பேசியிருக்கிறார். சட்டத்தின் மூலம்தான் சிலவற்றைத் திருத்த முடியும் என்றும் கூட பெரியார் பேசியிருக்கிறார்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான உண்மை என்னவென்றால், அரசியல்வாதி தன் நன்மைக்காகத்தான் அரசியலில் ஈடுபட்டிருக்கிறான். அரசு உத்தியோகத்திற்குச் செல்பவன் தனக்குத்தான் நன்மை செய்து கொள்கிறான். அரசியல் என்றும், சுதந்திரம் என்றும் பேசுவது தன்னலத்திற்காகத்தான். பிரிட்டிஷ்காரன் போன பிறகு அந்த இடத்தில் அமர்ந்து கொண்டு இவர்கள் இதைத்தான் செய்வார்கள். மீதி 95 சதவிகித மக்களின் நலன் இவர்களுக்கு முக்கியமில்லை. 95 பேரை இவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். அந்தக்கால நிலைமைகளில் பெரியார் இந்த உண்மைகளைச் சரியாகவே சொல்லியிருக்கிறார். அரசு, அதிகாரம். கட்சி அரசியல் ஆகியவை மக்களைக் கவனிக்கவில்லை. பெரியாரின் பார்வையைத் தொடர்ந்து சென்றால், நம் கால நிலவரங்கள் நமக்குக் கூடுதலாகப் புரியும். இன்று மக்களை வைத்தே, அவர்கள் தம் அதிகாரக் கோட்டையை இறுக்கமாகக் கட்டியிருப்பதை நம் தெரிந்து கொள்ளலாம்.

இந்த இடத்தில் நாம் நிறைய சொல்ல வேண்டியிருக்கிறது. பெரியாரின் தீட்சண்யமான பார்வையை ஆதாரமாக வைத்துக் கொண்டால்தான் நாம் இப்படிப் பேச முடியும். பெரியார் அரசியலை மதிக்கவில்லை. சட்டசபைக்குச் செல்வதை விரும்பவில்லை என்றெல்லாம் பேசியவற்றை நாம் தவறாகவே புரிந்து கொள்வோம். சட்டங்கள் மூலம் தான் மக்களுக்குச் சில நன்மைகள் செய்ய முடியும். இதை அரசாங்கம்தான் செய்ய வேண்டும் என்று பெரியார் கூறுவதை அவரோடு, நாம் சற்றுச் சென்றுதான் பொருள்படுத்த முடியும். அரசு பற்றிப் பெரியார் தெரிந்து கொள்ளவில்லை என்று இன்னும் திறனாய்வுகள் உள்ளன. அரசு என்பது பிறிதொரு காலத்தில் உதிர்ந்து விடும் என்ற கருத்து உடையவர்களும் இடைக்காலத்தில் அரசு அதிகாரம் பற்றிப் பேசத்தான் வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தை நிர்பந்தப்படுத்தி சட்டத்தின் மூலம் சில நன்மைகள் பெற்றுக் கொள்ள முடியும் என்பது பற்றித்தான் பெரியார் கூறுகிறார். சலுகை பெறுவதைப் பெரியார் இகழ்ந்தே பேசியிருக்கிறார். வகுப்பவாத உரிமை என்று உத்தியோகத்தில் அமர்ந்து கொள்வதை ஆதரிக்கிற பொழுதே விமர்சனமும் செய்கிறார்.

பெரியாரைப் பொறுத்தவரை, சமதர்ம உணர்வின் ஆதாரத்தில் சுயமரியாதைக் கொள்கையை எடுத்து உரைத்தவர். மதம், சாதி, பார்ப்பனர் என்று விடாப்பிடியாகப் பேசுகிறார். பிறவியிலேயே முதலாளிகள் ஏற்பட்டுவிடுவது பற்றியும் பேசுகிறார். நாம் இவற்றையெல்லாம் கவனமாக இருந்து பொருள்படுத்த வேண்டும். சாதிய வர்க்கமா, பார்ப்பனியமா, முதலாளியமா என்ற எதிர் நிலைகளில் விலகிப் போவதால் இன்று நமக்கு ஒரு பயனும் இல்லை. முதலாளிகள் இன்று மதத்தைத் தம் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சாதி உணர்வைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். வாழ்க்கை மிகச் சிக்கலாய் இருக்கிற சூழலில் கடவுள்களுக்கும், மதத் தலைவர்களுக்கும் இன்று அதிகம் பெருமை ஏற்பட்டிருக்கிறது. சாதி உணர்வைப் பயன்படுத்தி தம்மை வளர்த்துக் கொள்பவர் உயர் சாதியினர்தான். பிற்படுத்தப் பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சாதியால் இன்று நன்மை இல்லை. சாதியால் இவர்களுக்குப் பெருமை இல்லை. இன்று கணிதம், கணிப்பொறி, நிர்வாகம் அகியவற்றுக்கு வாய்ப்புகள் அதிகரித்திருக்கின்றன. இந்த இடத்தில் அமர்ந்திருப்பவர் பார்ப்பனர்கள். சந்தைப் பொருளாதாரம், இவர்களுக்கு அதிக வாய்ப்புகளைத் தருகிறது. தன்னலத்தில் சுருங்கிவிட்டவர் பார்ப்பனர்கள். நாடு, மொழி என்ற

அக்கறைகள் இவர்களுக்கு இல்லை. பார்ப்பனர் என்று மட்டுமில்லாமல் இன்று எவ்வளவோ பேர்களுக்கு இவற்றில் அக்கறை இல்லை.

சமதர்மம்தான் தனக்குத் தேவையான உணர்வு. சுயமரியாதை என்று தொடங்கி சமதர்மத்தை நோக்கித்தான் நாம் இயங்க வேண்டும். பெரியாரிடமிருந்து சமதர்மத்தைப் பிரிக்கும் முயற்சி பெரியாரைக் குறைத்துவிடும். பெரியாரை முதலாளிகளுக்குச் சாதகமாக்கிவிடும். பெரியாரியம் பேசுபவர்களுள் முதலாளிய உணர்வு உடையவர்கள், சமதர்ம உணர்வு உடையவர்கள் என்று இருவேறு உணர்வுடையவர்கள் இன்று உள்ளனர். எங்களுக்கும் சமதர்ம உணர்வு உண்டு என்று சொல்லித் தம் முதலாளிய உணர்வை மூடிமறைத்துக் கொள்பவர்கள்தான் சாதி, மதம், பார்ப்பனியம் என்பனவற்றில் முனைந்து நிற்கிறார்கள். இவர்களின் பெரியாரியம் இன்றைய சூழலில் நம்மைக் காப்பாற்றாது.

இன்றைய சூழல் பற்றித்தான் நாம் கருத்து சொல்ல வேண்டும். முதலாளியம், அரசு அதிகாரம், புதிய காலனியம், வேளாண்மை, மருத்துவம், தொழில் என்றெல்லாம் நாம் பேச வேண்டும். ஆங்கிலக் கல்வி, அலோபதி மருத்துவம், நவீன அறிவியல், தொழில்நுட்பம், அணுமின் திட்டங்கள், பசுமைப் புரட்சி, ஏற்றுமதிக்கான உற்பத்தி, விரைந்து செல்வதற்கான போக்குவரத்துச் சாதனங்கள், அன்னியக் கடன், வங்கி மோசடி, பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துதல், நகர வசதி, போதைப் பொருட்கள், விளையாட்டுகள், தமிழின் அழிவு, அரசியல் சட்டம், மைய அரசு, தேர்தல் முறை, மாநில அரசு, இராணுவம் இப்படி 100 பொருட்கள் பற்றி நாம் பேச வேண்டும். இன்று சுரண்டலும், ஒடுக்குமுறையும் கடந்த 20 ஆண்டுகளுக்குள் பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. நமது வாழ்க்கை பெருமளவு நாசமாயிருக்கிறது. நம்மை வைத்துப் பலர் சம்பாதிக்கிறார்கள். நம் நிலம், ஆறு, காடு, இயற்கை ஆகியவற்றை அழித்துப் பலர் வாழ்கிறார்கள். நம் வாழ்க்கையையும், பண்பாடுகளையும் தம் நலத்திற்காக இவர்கள் அழிக்கிறார்கள். கோழைத்தனமும், விகாரமும் உடையவர்களாக நம்மை மாற்றி விட்டார்கள். நாம் செல்ல வேண்டிய திசையையும், இலட்சியங்களையும் அழிக்கிறார்கள். நம் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் இவர்களால் ஆபத்து அதிகம். சாதிச் சண்டைகளை இவர்கள்தான் மூட்டுகிறார்கள். மதக்கலவரங்களை இவர்கள்தான் திட்டமிட்டு உருவாக்குகிறார்கள். லாட்டரிச் சீட்டு, மது விறபனை என்று தொடங்கியவர்கள், பங்குப் பத்திரங்களை இன்று நம் முன் பரப்பி

வைத்திருக்கிறார்கள். தமிழனுக்கு வாழ்க்கை இல்லை, மொழி இல்லை, தன்மானம் இல்லை என்று ஆக்கியவர்கள் இவர்கள்தான். இப்படிச் செய்தவர்களின் முகங்கள், பெயர்கள் உங்களுக்குத் தெரியும், கட்சியின் பெயர்கள் தெரியும். ஆம்! இவர்கள் தான் நம்மை அழிப்பவர்கள். பெரியாரைச் சொல்லி இவர்களைத் தாக்க முடியுமா? தாக்கலாமா என்ன செய்யலாம்?

மேலும் சில

1. கடவுள், மதம், சாதி, மூடநம்பிக்கைகள், சடங்குகள் முதலியவை வரலாற்றில் எந்தக் கட்டங்களில், எந்தக் காரணங்களால் தோன்றின என்ற ஆய்வு பெரியாரிடம் இல்லை. வரலற்றுக்கு வெளியே வைத்து இவை பற்றிப் பேசுகிறார். தன் காலத்தில் இவற்றின் தீங்கு காரணமாக இவற்றை முதன்மைப்படுத்தி - முற்றான முதன்மைப் படுத்திப் பேசுகிறார். இப்படிப் பேசுவது கருத்து முதல்வாதச் சிந்தனை. இதுதான் பகுத்தறிவுவாதம். இந்தப் பகுத்தறிவுவாதம் பொருளிய லோடுதான் இணைக்கப்பட வேண்டும். இந்த இணைவுக்கான சில புள்ளிகளும் பெரியாரிடம் இருக்கின்றன. இவற்றிற்கு அழுத்தம் கொடுத்துப் பார்க்க வேண்டும்.

2. திருவள்ளுவர், கபிலர் முதலியவர்களால் சாதியை ஒழிக்க முடியவில்லை. சுயமரியாதை இயக்கம் தான் சாதியை ஒழிக்க முனைந்து இருக்கிறது என்கிறார் பெரியார். சாதியை முதன்மைச் சக்தியெனக் கருதுகிறார் பெரியார். ஆனால் தன் சாதியை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்பவர்களையும், பார்ப்பனனைப் போலவே தம் சாதிப் பெருமையில் மகிழ்ச்சி அடைகிறவர்களையும் பெரியார் கண்டிக்கிறார்.

3. மக்களுக்கு மான உணர்ச்சி, ஒற்றுமை தேவை. இதற்குத் தடையாக இருக்கின்றன என்ற முறையில்தான் சாதி, மதம், கடவுள்களை ஒழிக்க வேண்டும் என்கிறார் பெரியார். (நாமக்கல் உரை) மற்றபடி சாதி, மதங்களை அழிக்கும் இயக்கம் சுயமரியாதை இயக்கம் அல்ல என்கிறார். பெரியாரின் வழி சரியானதுதான்.

4. சுயராச்சியம் பேசுபவர், உத்தியோகம், பதவி, பட்டம் பெற்று அவற்றைத் தன் நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பர்ப்பனர் அல்லாதார்க்கும் இவை தேவை. இவற்றைப் பெறுவதன் மூலம் சாதி ஒழிப்புக்குப் பாடுபடுகிறோமா? உத்தியோகத்திற்கு வெளியே என்ன செய்கிறோம் என்று கேட்கிறார் பெரியார். இவை தேவையான

கேள்விகள், சுயமரியாதை என்று சொல்லும் போதே சமத்துவம், சுதந்திரம் பற்றிப் பேசுகிறார். குடியானவர் பற்றிப் பேசுகிறார். பெரியாரின் பார்வை விரிவாகத்தான் இருக்கிறது.

5. 1925. சமூகத் தொண்டையும், அரசியல் தொண்டையும் முற்றாகப் பிரிக்க வேண்டும் என்கிறார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்திலும் இப்படிப் பிரிவு வேண்டுமென்கிறார். சட்டசபைக்குள் நுழைந்ததும் காங்கிரசுக்காரர்கள் கெட்டார்கள், அரசியல் யாரையும் அயோக்கியர் ஆக்கி விடும். இத்தகைய ஏற்பாடு தேவை என்கிறார் பெரியார். சமூகத் தொண்டில் பெரியாரின் ஈடுபாடு உறுதியாகப் புலப்படுகிறது. அரசியலும், ஊழலும் எப்படியோ சம்பந்தப்பட்டு விட்டன. கொஞ்சம் நெருங்கினால் கூட ஊழல் பற்றிக் கொள்கிறது என்கிறார் பெரியார்.

இக்கருத்துகளின் உண்மையை நாம் மறுக்க முடியாது. பெரியாரை வாசிக்க நாம் பழகிக் கொள்ளத்தான் வேண்டும்.

குறிப்பு : தோழர் ஆனைமுத்து அவர்கள் தொகுத்துத் தந்திருக்கும் பெரியார் சிந்தனைகள்: முதல் தொகுதி; சுயமரியாதை இயக்கம் (பக்கம் 448-541) மூன்றாம் தொகுதி: சமதர்மம் (பக்கம் 1675-1705), பொதுவுடைமை (பக்கம் 1706-1717) ஆகிய பகுதிகள் இக்கட்டுரைக்கான ஆதாரங்கள்.

8

பெண் விடுதலை, மண் விடுதலை

1

பெண் உரிமை என்பதும், பெண் விடுதலை என்பதும் ஒன்றல்ல. இரண்டும் வெவ்வேறானவை.

பெண் உரிமை என்று சொல்லும்போது, பெண்ணுக்கு கல்வி தேவை. குடும்பத்தில் பெண்ணுக்குரிய வேலைகளை ஆணும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பெண்ணுக்கு வேலை வேண்டும். காவல் மற்றும் படைத்துறையிலும் பெண் இடம் பெற முடியும். மறுமணம் செய்து கொள்ளப் பெண்ணுக்கு உரிமை உண்டு. குழந்தை பெற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்று தீர்மானிக்கும் உரிமை பெண்ணுக்கும் உண்டு. சொத்துரிமை பெண்ணுக்குத் தேவை. அரசியலிலும் பெண்ணுக்கு இடமுண்டு. இப்படிப் பெண்ணுக்குத் தேவையான உரிமைகள் எனப் பலவற்றைப் பட்டியல் போட முடியும். திருமணம் தேவையா? இல்லையா? என்பதைப் பெண்ணே தீர்மானிக்கலாம். காதலிக்க உரிமை உடையவள் பெண்.

இப்படியெல்லாம் பெண்ணுக்கு உரிமைகள் தேவையென்று நாம் பேசும்போது, ஆணுக்கு நிகரான உரிமைகள் பெண்ணுக்குத் தேவை என்ற உணர்வோடு பேசுகிறோம். பெண் தனித்து வாழலாம்.

அதிகாரியாகலாம். முதலாளியாகலாம். சேவகியாகலாம் என்றெல்லாம் இது பொருள்படுகிறது. வேறுவகையில் சொன்னால் ஆணின் அதிகாரத்தில் பெண்ணும் பங்கு போட்டுக் கொள்ளலாம். தொழில் செய்யலாம். சொத்து சேகரிக்கலாம். குடும்பத்தை நிர்வாகம் செய்யலாம். பெண் துறவியாகலாம். மத நிறுவனத்தில் ஒரு பீடத்தில் அமரலாம். இயன்ற பொழுதெல்லாம் தனது அதிகாரத்திற்கு உட்பட்ட ஆணைத் தண்டிக்கலாம். சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளலாம். நீதிபதியாகலாம். நிர்வாகம் செய்யலாம். கையில் ஆயுதத்தோடு சுற்றி வரலாம். பெண் உரிமை என்பது இப்படியெல்லாம் பல தளங்களில் விரிவு பெறலாம்.

2

இப்பொழுது பெண்ணுக்குத் தேவையான உரிமைகள் கிடைத்து விட்டன என்று வைத்துக் கொள்வோம். இதனால் பெண்ணுக்கு விடுதலை கிடைத்து விட்டதா? பெண் தன்னை விடுவித்துக் கொண்டாளா? என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வோம்.

அப்படியானால் உரிமை என்பதும், விடுதலை என்பதும் வெவ்வேறா? என்பது பற்றி இப்போது சிந்திக்கலாம்.

இன்றைய சமுதாய, அரசியல், பொருளாதாரச் சூழலில் ஆண்தான் ஆதிக்கம் செய்கிறான் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். இது உண்மைதானா? முதலாளி ஆதிக்கம் செய்கிறான். தொழிலாளி முதலாளியின் ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டு இருக்கிறான். அதிகாரி ஆதிக்கம் செய்கிறான். அவனது அதிகாரத்தை ஏற்று ஊழியர்கள் செயல்படுகின்றனர். தலைவன் அதிகாரம் செய்கிறான். தொண்டன் ஒத்துச் செல்கிறான். குரு கட்டளை இடுகிறார். பக்தன் அவருக்குப் பணிவிடை செய்கிறான்.

இவைகூடத் தோற்றம்தான். உண்மையல்ல. முதலாளி பணத்திற்கு, உடமைக்குச் சேவை செய்கிறான். அரசு, அதிகாரம் செய்கிறது. அதிகாரி ஒத்துழைக்கிறான். மதம் அதிகாரம் செய்கிறது. புரோகிதன் ஒத்து இயங்குகிறான். உடமை என்றோ, அரசு என்பதோ, மதம் என்றோ இல்லாத காலம் என ஒன்று இருந்தது. அப்பொழுது எவரும் யாரையும் அதிகாரம் செய்யவில்லை. எல்லோரும் சமதையாக, ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து வந்தனர். அங்கு ஆதிக்கமில்லை. அதிகாரமில்லை. பணமில்லை. மதமில்லை. ஆணுக்குப் பெண் அடிமையில்லை. இது வரலாற்றுக்கு முற்பட்ட காலம்.

இங்கும் ஒரு உண்மையை நாம் காண முடியும். இந்தச் சமூகத்தில் பெண்ணுக்குத் தான் தலைமை இருந்தது. தலைமை என்பது அதிகாரம் செய்வதாக இல்லை. தாய் அன்பு கொண்டவள். பகிர்ந்து கொடுப்பவள். இவள் இயற்கையைப் போல, மழையைப் போல, காற்றைப் போல இவளுக்கு வேறுபாடில்லை. எதையும் தனக்கென இவள் வைத்துக் கொள்வதில்லை. இவள்தான் இயற்கை.

3

காலம் மாறியது. வரலாற்றுக்குள் நுழைகிறோம். தனிமையும், அரசு அதிகாரமும் வந்து விட்டன. மெல்ல, மெல்ல மத பீடங்களும் உருவாகின. ஆயுதங்கள், போர்க்கொடுமைகள், ஏற்றத் தாழ்வுகள் தோன்றிவிட்டன. இயற்கையை ஒரு சிலர் வசப்படுத்திக் கொண்டார்கள். ஆண்டான் அடிமை முறை தோன்றி விட்டது. ஆண்டவன் அதிகாரம் செய்கிறான். அடிமைச் சேவகம் செய்கிறான். ஆண்டவன் அடிமையை அடிக்கலாம். வதைக்கலாம். விற்கலாம். அடகு வைக்கலாம். கொல்லலாம்.

இப்படிப்பட்ட காலம்தான், வரலாறுதான் இன்றைக்கும் தொடர்கிறது. இன்றைக்குச் செயல்படுவது முதலாளியம், ஏகாதிபத்தியம், அரசு அதிகாரம், மத அதிகாரம், சாதி அதிகாரம். இவற்றோடு ஒத்துழைப்போர்கள் அதிகாரத்தில் இருப்பவர்கள். இவர்களின் அதிகாரம் தான் எல்லாத் திசைகளிலும் செயல்படுகிறது.

பணம்தான் கடவுள் என்று பணத்தைத் தேடி சேகரித்துக் காப்பாற்றி வைப்பவன் பணத்திற்கு அடிமையாகிறான். பெயரளவில் இவன் முதலாளி. ஆனால் பணத்துக்கு அடிமை. பணமே தனக்கு வாழ்வு, அதுவே தனக்கு மோட்சம் என்று நம்பியுள்ள இவனிடமிருந்து எந்தச் சமயத்திலும் பணம் பறி போகலாம். பலருக்குச் சேர வேண்டிய செல்வத்தை இவன் பறித்துக் கொண்டவன். ஆகவே இவனிடமிருந்து தனக்குத் தேவையான செல்வத்தை யாரும் பறித்துச் செல்லலாம். ஆகவே இவன் அச்சத்தில் வாழ்கிறான். பணத்தையே பற்றிக் கொண்டு வாழ்பவனுக்குப் பாதுகாப்பு இல்லை. இன்பம் இல்லை. இவனுக்கு நல் உறவுகள் இல்லை. இயற்கையின் பேரழகு இவனுக்குத் தெரியாது.

இப்படித்தான் அரசு அதிகாரத்தைப் பற்றிக் கொண்டவனும் அச்சத்தில் வாழ்கிறான். இவன் அதிகாரத்தை வேறொருவர் எந்தச் சமயத்திலும் கைப்பற்றிக் கொள்ளலாம். ஆதிக்கம் என்பது அதைச்

செலுத்துபவன் எவனோ அவனுக்கு நிம்மதி இல்லை. ஆதிக்கம் எந்த வகையில் செயல் பட்டாலும் அது மனிதனுக்கு நல்லது இல்லை. மனிதப் பண்பை, வாழ்வை, இன்பத்தை, அழகுணர்வை, நல்ல உறவுகளை இது நாசமாக்கும்.

ஆதிக்கம் செய்பவனுக்குக் கிடைக்கும் பாதுகாப்போ, பெருமையோ, பெருமிதமோ, இன்பமோ தற்காலிகமானது.

மலை உச்சியில் வாழ்பவன் நிம்மதியாக வாழ முடியாது. தரையில் வாழ்வதுதான் அவனுக்குப் பாதுகாப்பு. மனிதர்கள் அனைவரும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் ஒருவரை ஒருவர் அதிகாரம் செய்யாமல், ஒருவர் மற்றவர்க்கு உதவி செய்து, கிடைப்பதைப் பகிர்ந்து கொண்டு வாழ்வதில்தான் மனிதர்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக வாழ முடியும். அன்பில்தான் மனிதன் தழைக்க முடியும். திருடன் எப்பொழுதும் நிம்மதியாக வாழ முடியாது. கொலைகாரனுக்கும், குற்றவாளிக்கும் நிம்மதி இல்லை. முதலாளிக்கும், அதிகாரிக்கும் நிம்மதி இருக்க முடியாது. புரோகிதனும் மற்றவர்களை ஏமாற்றித்தான் வாழ முடியும். பொய் சொல்லிப் புராணக் கதைகள் சொல்லித் தன்னையும், பிறரையும் ஏமாற்றிக் கொண்டுதான் வாழ முடியும். இவர்களுக்கெல்லாம் கிடைப்பது தற்காலிக இன்பம். அதே சமயத்தில் நீங்காத துயரம். இதுதான் இன்றைய சமூகம்.

4

இப்பொழுது தொடங்கிய இடத்துக்கு மீண்டும் செல்லலாம். ஆண் அதிகாரம் செய்கிறான். ஆதிக்கம் செய்கிறான் என்பது உண்மைதானா? முதலாளி ஆண் என்றாலும் பணத்துக்கு அடிமை. பணம்தான் அவனை அதிகாரம் செய்கிறது. முதலாளிக்கு ஊழியம் செய்பவர்கள் ஆண்கள். இவர்கள் முதலாளியின் அதிகாரத்துக்குச் சேவகம் செய்யும் அடிமைகள். இவர்களுக்குத் தன்னுரிமை இல்லை. விடுதலை இல்லை. பணத்துக்கு ஏவல் செய்யும் முதலாளி என்ற அடிமைக்கு இவர்கள் அடிமைகள். இப்படியேதான் அரசு அதிகாரிகளும், அரசுக்குச் சேவகம் செய்கிறார்கள். அதிகாரிகள் ஆண்கள்தான் என்ற போதிலும் இவர்களும் அதிகாரத்துக்கு அடிமைகள்.

ஆண் என்ற இந்த அடிமை பெண் மீது தன் அதிகாரத்தைச் செலுத்துவதன் மூலம் தற்காலிக இன்பம் காண்பவன். இவனுக்கும் விடுதலை இல்லை. இவன் மற்றவர்களுக்கும் விடுதலை தரமாட்டான்.

சுருக்கமாக இப்படிச் சொல்லலாம். முதலாளியம் இருக்கும் வரை அரசு அதிகாரம், இராணுவம், காவல்துறை, சட்டம் என்றெல்லாம் இருக்கும்வரை, மனிதர்களுக்கு விடுதலை இல்லை. இவர்களெல்லாம் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு, தன்னையும் கட்டுகளுக்கு உட்படுத்திக்கொண்டு, விடுதலை என்பது என்னவென்றே தெரியாமல் வாழ்பவர்கள். இவர்கள் தான் போட்டி, பொறாமை, வம்பு, வழக்குகள், தற்பெருமை, சூது, போதை, காமம் என்பவற்றுக்கெல்லாம் தம்மை இழந்து தம்மைத்தாமே அழித்துக் கொண்டு, தம்மைத் தாமே சிறுமைப்படுத்திக் கொண்டு வாழ்பவர்கள். இவர்களுக்குத்தான் சாதிப் பெருமை, மதம், சடங்குகள், சாத்திரங்கள் தேவைப்படுகின்றன.

இவர்களுக்கு வரலாறு தெரியாது. வாழ்க்கை தெரியாது. பிரபஞ்சம் தெரியாது. கலைகள் தெரியாது. இவர்கள் அசலான மனிதர்களாக இல்லை. இவர்கள் போலிகள். போலித் தனங்களில் வாழ்பவர்கள். இவர்கள் மூடர்கள். இவர்களுக்கு இயற்கை தெரியாது. குழந்தைகளை அறியமாட்டார்கள். இவர்கள் தம்மையும் நோகடித்துக் கொண்டு பிறரையும் நோகடிப்பவர்கள்.

இவர்கள் கற்ற கல்வி அசலான கல்வி இல்லை. யாருடைய தேவைக்காகவோ, தம்மை மற்றவருக்கு அடிமைப்படுத்தி வாழ்வதற்குக் கல்வி என்று எதையோ கற்றிருக்கிறார்கள். இவர்கள் நோய்களை உற்பத்தி செய்வதற்காகவே மருத்துவம் கற்றவர்கள். இவர்கள் அழகுகளை, ஆபரணங்களை உற்பத்தி செய்வது என்ற பிறரை அடிமைப் படுத்துவதற்காக. இவர்கள் தாம் பிறரைக் குற்றவாளிகள் என்று சட்டம் செய்து பலரைச் சிறையில் அடைப்பதன் மூலம் தம்மை நீதிமான்கள் என்று மெய்ப்பித்துக் கொள்கிற அயோக்கியர்கள். பலருக்குச் சேர வேண்டிய செல்வத்தை அபகரித்துத் தம்மிடம் வைத்துக் கொள்வதன் மூலம் தாம் செய்த குற்றங்களை மறைப்பதற்காகச் சட்டம் செய்தவர்கள். இவர்களுக்குக் கடவுள் என்பது என்னவென்று தெரியாது. உண்மை தெரியாது. அன்பு தெரியாது.

5

முதலாளியமும், அரசு அதிகாரமும், மத அதிகாரமும் எந்த வடிவத்தில் இருந்தாலும், மனிதர்களுக்கு இவற்றில் இருந்து விடுதலை இல்லை. பெண்ணுக்குக் கிடைக்க வேண்டிய உரிமை என்பவை முதலாளியத்துக்கு, அரசு அதிகாரத்துக்கு, மத அதிகாரத்துக்குச் சேவை செய்வதன் மூலம் தம்மை இவற்றுக்கு அடிமைப் படுத்திக்

கொள்வதற்குக் கிடைக்கின்ற உரிமைகள்தான். இத்தகைய உரிமைகள் தற்காலிக இன்பம் தருபவை. நிரந்தரமான விடுதலைக்கு இவை வழி விடுவதில்லை.

ஆணும் இவற்றிற்கெல்லாம் சேவை செய்வதன் மூலம் மேலும் மேலும் தம்மை அடிமைத்தனத்தில் ஆழ்த்திக் கொள்பவன்தான். எந்த ஒரு கட்டத்திலாவது முதலாளி தனக்குச் சேர்ந்திருக்கிற செல்வம் போதும் என்று கருதமாட்டான். அப்படியானல் இவனுக்கு ஊதியம் செய்பவர்கள் மேலும் மேலும் இவனுக்குச் செல்வத்தைச் சேர்த்துக் கொடுப்பதன் மூலம் இவன் அதிகாரத்தைப் பல மடங்கு பெருக்குவதன் மூலம் தன் அடிமைத்தனத்தை மேலும் மேலும் அதிகரித்துக் கொள்பவர்கள்.

ஏற்றத்தாழ்வு இல்லாத தனி உடமையை அரசு அதிகாரத்தை மேலும், மேலும் சேகரித்துக் கொள்வதற்குத் தேவை இல்லாத ஓர் உலகில்தான் மனிதர்கள் தமக்கிடையில் சமத்துவத்தோடு வாழ முடியும். இயற்கையைத் தொடர்ந்து அழிப்பதன் மூலம் செல்வத்தைத் தமக்கென மேலும் மேலும் சேகரித்துக் கொள்கிற பெரு முதலாளிகள் வாழ்கிற நாள் வரைக்கும் இயற்கை மேலும் மேலும் மாசுப்படுவதை, அழிவதை நம்மால் தடுக்க முடியாது. இயற்கையை இப்படி முதலாளிகள் மேலும் மேலும் வசப்படுத்திக் கொள்வதன் மூலம் நமக்கான வாழ்வியல் ஆதாரங்களை அழிக்கிறார்கள். நோய் நொடிகளைப் பெருக்குகிறார்கள்.

பெண்தான் இயற்கையின் இன்னொரு வடிவம். இவளுக்குத்தான் தாய்மை என்பது, அன்பு என்பது, பகிர்ந்து கொள்வது என்பது புரியும். இவள் அரவணைப்பில் தான் உலகம் பத்திரமாக இருக்கும். பாதுகாப்பாக இருக்கும். இவளுக்குப் போர் தேவையில்லை. ஆயுதங்கள் தேவையில்லை. இராணுவம் தேவையில்லை. அன்பான குழந்தைகள் வளர்வதற்கான உலகத்தை இவள்தான் படைக்க முடியும்.

உரிமைகள் என்ற பெயரில் நமக்குக் கிடைப்பதை ஆண்களிடம் இருந்து எடுத்துக் கொள்வதன் மூலம் இவள் புதிய உலகத்தைப் படைக்க முடியாது. ஆண்கள் செய்த அதிகாரத்தால், காயப்பட்ட உலகத்தை இவள்தான் மருந்திட்டு ஆற்ற முடியும். இதுவரை உலகில் நடந்த போர்கள் இனியும் தேவையில்லை. நாடுகளுக்கு இடையில், இனங்களுக்கு இடையில் இனியும் மோதல்கள் அவசியம் இல்லை. உலகத்தை முப்பது முறை அழிப்பதற்குத் தேவையான அணு ஆயுதங்கள் அமெரிக்கா முதலான நாடுகளில் குவித்து வைக்கப்பட்டுள்ளன.

இன்றுள்ள அறிவியல் தொழில் நுட்பங்களின் மூலம் உலகில் அனைவருக்கும் தேவையான உணவை உற்பத்தி செய்ய முடியும். கல்வி தர முடியும். இவற்றை எல்லாம் செய்யத் தாய்மைப் பண்பு தலைமைக்கு வர வேண்டும். இதைப் பெண் தான் செய்ய முடியும். தாய்தான் புணரமைக்க முடியும். பெண் விடுதலை என்பது இதுதான். இதற்காகத்தான் பெண் விடுதலையின் மூலம் தான் ஆதிக்கவாதிகளிடமிருந்து மண் விடுதலை பெறும்.

6

பெண்ணுக்கு இப்பொழுது கல்வி வாய்ப்புகள் பெருகி வருகின்றன. அதிகாரங்களிலும் பெண்ணுக்கு வாய்ப்புகள் கூடிவருகின்றன. குடும்ப நிர்வாகத்தில் பெண்ணுக்குரிய முதன்மை இடம் இப்பொழுது எல்லாம் மதிக்கப்படுகிறது, நிர்வாகத்தைப் பெண்கள் சிறப்பாகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை மிகுந்து வருகிறது. கலைகளைப் பெண்தான் காப்பாற்றி வருகிறாள். கோயில்களில் பெண் தெய்வங்களுக்கு இன்னும் மரியாதை இருக்கிறது.

பெண்கள் இந்த வாய்ப்புகளை இப்பொழுது / இனி சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உரிமைகளோடு பெண்கள் முடங்கி விடக்கூடாது. ஆதிக்கத்திற்குச் சேவை செய்கிற போக்கைப் பெண்கள் அனுமதிக்க முடியாது. ஆண் ஆதிக்கம் என்பதை அவனது முகத்திரையைக் கிழித்து அவனது உண்மை வடிவத்தை அவனுக்குக் காண்பிக்க வேண்டும். உண்மையான கல்வி எது என்பதை இனிப் பெண்தான் நிலை நிறுத்த வேண்டும். போர் ஆயுதங்களைக் கடலில் கொட்ட வேண்டும். வரலாற்றை இனிப் பெண்கள் புதிதாகப் படைக்க முடியும். ஆண்களின் ஆதிக்கத்தில் உலகம் இனியும் அழிய முடியாது. பெண்கள்தான் இனி உலகத்தை உய்விக்க வேண்டும். தாய்மையில், அன்பில், சமத்துவத்தில், தழைப்பது தான் தெய்வம் - தெய்வீகம்.

மீண்டும் சொல்லலாம், பெண் உரிமை என்பது ஒரு வாய்ப்பு. விடுதலை என்பது இலக்கு. பெண் விடுதலையின் மூலமே மண் விடுதலை ஆகும்.

குறிப்பு : 2005, மார்ச் 8 ஆம் நாள் திண்டுக்கல்லில் நடைபெற்ற அனைத்துலகப் பெண்கள் நாளைக் கொண்டாடுவதற்காக ச.கொ.பவுலின் அவர்கள் கேட்டுக்கொண்டபடி எழுதிய கட்டுரை.

9

தமிழின் மெய்யியல்

1. மெய்யியல் என்பது குறித்து விரிவான வரையறைகள் உள்ளன. இந்த வரையறைகளுக்குள் இப்பொழுது நாம் செல்ல வேண்டியதில்லை. எனினும் ஒரு முக்கியமான வரையறை வாழ்வின் அர்த்தம் என்ன? என்பதுதான். வாழ்வின் அர்த்தம் தேடுகிற நோக்கில்தான், கடவுள், ஆன்மா, மேலுலகம், கீழுலகம், பல பிறப்புகள் என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன. வாழ்வுக்கும், சிந்தனைக்கும் என்ன தொடர்பு? இறுதி உண்மை என்பது பொருளா? சிந்தனையா? பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கு ஏதாவது நோக்கம் உண்டா? பரிணாமம் ஏதாவது நோக்கத்தோடு செயல்படுகின்றதா? வாழ்வின் இறுதிப் பொருள் எது? மரணத்துக்கு என்ன அர்த்தம்? மரணத்தோடு வாழ்க்கை முடிவடைந்து விடுகிறதா? இப்படியும் கேள்விகள் எழுந்தன. இவ்வகைக் கேள்விகளையும் உள்ளடக்கியதாகத்தான் வாழ்வின் அர்த்தம் என்ன என்ற கேள்வியை நாம் முதன்மைப் படுத்துகிறோம். இந்த அர்த்தம் என்ற அடிப்படையில் தான், வாழ்வின் லட்சியம் செயற்பாடுகள் முதலியவை தீர்மானமாகின்றன.

2. இந்தக் கேள்விகள் எல்லாமே, மனிதனின் மனம் சார்ந்து எழும் கேள்வி என்ற போதிலும், இவ்வகைக் கேள்விகள் எழுவதற்கான, வரலாற்று, பொருளியல் சூழல் என்பது நம் கவனத்துக்கு உரியது. மனிதன் தான் இவ்வகைக் கேள்விகளை எழுப்புகிறான். வாழ்வின்

துயரங்கள், காரணமாகத்தான், இவ்வகைக் கேள்விகள் எழுகின்றன. மனிதத் துயரத்தின் மூலங்கள் எவை என்பது பற்றி, மெய்யியலா ளர்களுக்குள் கருத்து வேறுபாடுகளும் எழுகின்றன. கடவுள், ஆன்மா முதலிய கருத்துக்களும், குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் மனித இருப்புக் குறித்த கேள்விகளாகத்தான் எழுகின்றன. வரலாற்றைக் கடந்ததாக நமக்குச் சிந்தனைகள் செய்ய முடியாது. விலங்குகளின் துயர் குறித்து நமக்கு ஆய்வில்லை. இவற்றையும் உள்ளடக்கி, மனிதச் சிந்தனைகள் செல்லுமானால் வரவேற்கத்தான் வேண்டும். இதன் காரணமாக, மனிதச் சிந்தனை இன்னும் ஆழ்ந்து செல்ல முடியும்.

இயற்கை குறித்தும், உயிரினங்கள் குறித்தும், தற்காலத்தில் மிகுதியாகச் சிந்திக்க வேண்டிய தேவை நமக்கு எழுந்துள்ளது. இதுவும் கூட மனித வாழ்க்கைக்குள் வந்துவிட்ட நெருக்கடியின் விளைவாக உள்ளது. மனிதன் தான் இந்த உலகத்தில் மையம் என்ற சிந்தனையை விட்டுவிடக்கூடிய தேவையும் ஏற்பட்டு இருக்கிறது. பொதுவாக உயிர் இயக்கம் குறித்து மனிதன் சிந்திக்க வேண்டியவன் ஆகிறான். கூடவே இயற்கையின் வரையறைகள் குறித்துச் சிந்திக்க வேண்டியவனாகிறான். மனிதன் தன் மனத்தைக் கடந்து செல்ல வேண்டும் என்று நெடுங்காலம் முதலே பேசி வருகிறான். பிரபஞ்சம் தொடர்ந்து விரிகிறது. வாழ்வின் எல்லைகள் குறித்த ஆய்வுகளும் விரிவடைகின்றன. கணினி முதலியவை மீண்டும் மனித இருப்புக் குறித்த சில விளக்கங்களைத் தருகின்றன. க்ளோனிங் மனித வாழ்வியலுக்குள்ளும் வந்துவிடக்கூடும். பூமியைவிட்டு வேறு கிரகங்களில் குடியேறுவது பற்றியும் மனிதன் இன்று சிந்திக்கிறான். மீண்டும் மனித வாழ்வின் அர்த்தம் தான் என்ன என்ற கேள்விக்கே வந்து சேர்கிறோம்.

3. மனிதன் தன் துயரங்களைத் தீர்த்துக்கொள்வதற்காகத்தான் சிந்தனையில் ஈடுபடுகிறான். பல்வேறு செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். எந்த ஒரு மனிதனும் சுயமாக இவற்றைச் செய்கிறான் என்று சொல்லமுடியாது. இவனது சிந்தனை மற்றும் உணர்வுகளுக்குள், குடும்பம், கல்வி, பயிற்சி என்று பலவற்றின் பாதிப்புகள் இருக்கின்றன. தான் வாழும் கலாச்சாரம், தன் காலப் பொருளியல், அரசியல், இறுதியில் உலகளவிலானத பொருளியல் அரசியல் சூழல் இவை எல்லாமே மனிதனைச் சிந்திக்க வைக்கின்றன. மனிதனின் சிந்தனைக்குள் பாதிப்பைச் செலுத்துகின்றன. இன்னும் ஆழ்ந்து பார்த்தால், இவனைச் சூழந்துள்ள பல்வேறு சக்திகளும் இவனது சிந்தனையையும் இறுதியாக வாழ்வியலையும் கட்டமைக்கின்றன என்பது தெரியும்.

இவன் தனக்காக வாழ்கிறான் என்பதைக் காட்டிலும் இவனுள் வேறு யார் யாரோ வாழ்கிறார்கள். சுயமாயகச் சிந்திக்கிறான் என்பது கூட உண்மையில்லை. இவனுடைய சிந்தனைக்கடியில் குடும்பம் மற்றும் பல உலகளாவிய சக்திகள் செயல்படுகின்றன. இன்று சந்தைப் பொருளாதாரம் என்பது ஒரு மாபெரும் சக்தி. இந்தியாவுக்குள்ளும் நம்மைப் பாதிக்கிற பல்வேறு சக்திகள் குறித்து நாம் பேச முடியும். நமக்குத் தேவையான கல்வியை நாம் பெற முடியவில்லை. நல்வாழ்க்கைக்கான சமூகச் சூழல் இன்றில்லை. நம்பகமான உறவில்லை. வெட்டி ஆர்ப்பாட்டங்களிலும், பொழுது போக்குகளிலும் நம்மை இழக்கிறோம். பொய்களிலும், பிரம்மைகளிலும், போலித்தனத்திலும் நாம் வாழ்கிறோம். நேர்மையை நம்மால் கடைப்பிடிக்க முடியவில்லை. ஊழலில்லாமல் வாழ்க்கையில்லை. நாம் உண்ணும் உணவு, காய், கனி முதலியவற்றின் வழியே நஞ்சு சேருகிறது. மருந்துகளே நஞ்சாகின்றன. வாழ்வில் நிறைவும், நிம்மதியும் இல்லை. எந்தச் சமயத்திலும் நமக்கு விபத்துகள் நேரலாம். வெடிகுண்டுகள் எங்கும் வெடிக்கலாம். போலித் துறவிகள் இன்று பெருகிவிட்டனர். சோதிடர்கள். போலிச் சாமியாரின் பின்னே இன்று மக்கள் ஓடுகின்றனர். இப்பொழுது மீண்டும் அதே கேள்வி. நம் வாழ்விற்கு அர்த்தம் என்ன? நம் வாழ்வை நாமே தீர்மானிக்கவும், அழகு படுத்தவும் முடியுமா? நாம் தனியர்கள் அல்லர்! ஒரு சமூகத்திலும் வாழ்கிறோம். வேற்றுமைகள் தேவை என்ற போதிலும் இவை பிளவாகிவிடக்கூடாது . இப்படி எல்லாம் இன்று சிந்திக்கிறோம்.

நம் சிந்தனைக்குள் செயல்படுவது மெய்யியல். இன்று நமக்கு மெய்யியல் பார்வை தேவை. பொருளையும் அதிகாரத்தையும் சேர்த்துக் கொள்வது இன்று வாழ்க்கை இல்லை. வாழ்க்கை எளிமைப்படவேண்டும். அறம் தழைக்க வேண்டும். என் வாழ்க்கை எனக்காக மட்டுமில்லை. இன்று முதலாளிகள் தேவையில்லை. வல்லரசுகள் தேவையில்லை. மத நிறுவனங்கள் தேவையில்லை. இவை எல்லாமே அதிகார பீடங்கள், மக்களின் அறிவு, உழைப்பு ஆகியவற்றைச் சுரண்டுவதன் மூலமே இவை வலுப்பெறுகின்றன. அதிகாரம் எந்த வகையிலும் மனிதனை அழிக்கும். அன்பில், நேசத்தில், உறவுகளில், பிறருக்காகத் தன்னை இழப்பதில்தான் மனிதனுக்கு வாழ்க்கை எழ முடியும். இதற்கு ஒட்டுமொத்தமாக நாம் தரவேண்டிய பெயர் சமதர்மம்.

4. நான் மார்க்சியன். மார்க்சியக் கட்சியோடு எனக்கு இன்று எந்த உறவும் இல்லை. எனினும் மார்க்சியத்துக்குள் தான் இருக்கிறேன். கட்சிகள் மார்க்சியத்தைக் கட்டுப்படுத்திய வரலாறு எனக்குத் தெரியும். மார்க்சியத்தின் ஆழங்களும், உள்ளுறை ஆற்றல்களும் மிக விரிவானவை. மார்க்ஸ், மாவோ முதலியவர்களை இன்னும் நாம் ஆழ்ந்து கற்க வேண்டும். சோவியத் யூனியன் தகர்வோடு மார்க்சியம் தகர்ந்துவிடவில்லை, என்பது மட்டுமல்ல மார்க்சியத்துக்கான ஆற்றல்களும் அதிகரித்திருக்கின்றன. வர்க்கப் போராட்டம் என்ற அளவில் மார்க்சியத்தைக் குறுக்கிவிட இயலாது. வர்க்கப் போராட்டங்களின் வழியே வர்க்கங்களைக் கடந்து செல்வது தான் மார்க்சியம். இது மார்க்சியத்தின் அரசியல். இது மெய்யியல் அடிப்படையிலான அரசியல்.

மார்க்சியத்தின் மெய்யியல் அந்நியமாதல் என்ற கோட்பாட்டிலிருந்து தொடங்குகிறது. இயற்கையிலிருந்தும், சமூகத்திலிருந்தும், இறுதியாகத் தன்னிலிருந்தும் அந்நியமாகிற நிலை அழிய வேண்டும். எல்லா வகை ஆதிக்கமும் அழிந்த நிலையில் மனிதன் மீண்டும் இயற்கையோடும், சமூகத்தோடும் தன்னோடும் நிறைவான உறவில் வாழ்வான். இதுதான் மார்க்சிய மெய்யியலின் அடிப்படை.

5. இப்பொழுது தமிழ் மெய்யியல் குறித்துச் சொல்லலாம். 20ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தில் மெய்யியல் பார்வை அழுத்தம் பெறவில்லை என்பதை முதலில் குறிப்பிட வேண்டும். பெரியாரின் திராவிட இயக்கம், தமிழனுக்குச் சாதி, மதம், கடவுள் இல்லை என்று பேசியது. இதன் பொருள், வரலாற்றில் தமிழனுக்குச் சாதியோ, மதமோ கடவுளோ இல்லையென்று ஆகாது. இன்று இவை தேவை இல்லை. இவை எதிர்காலத்தில் தமிழனுக்குத் தேவை இல்லை என்பதாகத்தான் பெரியாரின் கூற்றை நாம் பொருள்படுத்தவேண்டும். வராலற்றைப் பொருள் படுத்துவது என்பது நிகழ் காலத் தேவை இல்லை என்பதாகத்தான் பெரியாரின் கூற்றைப் பொருள் படுத்தவேண்டும். வரலாற்றை பொருள்படுத்துவது என்பது நிகழ்கால தேவைகளை யொட்டித்தான் என்பதனை நாம் ஏற்கமுடியுமானால், பெரியார் இவ்வாறு கூறியதை இப்படிப் பொருள்படுத்த முடியும். தொன்மையான தமிழ் வரலாற்றைத் தேடிச் செல்வோமானால், குறிப்பாகச் சங்க காலத்தில் தமிழன் மீது, சாதியோ, மதமோ, கடவுளோ வந்து அமர்ந்து கொள்ளவில்லை. சங்க காலத்திலேயே இவை நுழைந்துவிட்டன

எனினும், தமிழ் மக்களின் வாழ்வியலை இவை தீர்மானிப்பவையாக இல்லை. வரலாற்று போக்கில் தமிழ்ச் சமுதாயத்துக்குள் மட்டுமல்லாமல், எல்லாச் சமூகத்தினுள்ளும் மதமும், கடவுளும் சடங்குகளும் ஆற்றலும் ஆதிக்கமும் பெற்றன. வரலாற்றில் வர்க்கங்களின் தோற்றத்தை ஒட்டி நாம் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். திரும்பவும் சொல்லலாம். மனிதன் தன்னைப் புரிந்து கொள்வதற்காகத், தன் சூழலை, வாழ்வை மாற்றி அமைப்பதற்காக தோற்றுவித்த இவ்வகைக் கருத்தாக்கங்கள் நாளடைவில் மாறுபட்ட சமூகச் சூழலில் மனிதனை அழுத்தும் கருத்துக்களாகின்றன.

திராவிட இயக்கத்தினரின் வினோதமான ஒரு கருத்தாக்கம் இங்குக் குறிப்பிட வேண்டும். 20ஆம் நூற்றாண்டுச் சூழலில், பார்ப்பனியத்தின் ஆதிக்கத்தைப் பெரியார் மறுக்க வேண்டி இருந்தது. காங்கிரஸ் கட்சி வட்டாரத்திலும் வெளியிலும் பெரியாருக்கு நேர்ந்த அனுபவங்கள் பார்ப்பினியத்தைக் கடுமையாக அவர் சாடுவதற்குக் காரணங்களைப் புகுத்தியவர் பார்ப்பனர்தான் என்றும் பெரியார் விவாதித்தார். தமிழகத்தின் எத்தகைய பொருளியல் மற்றும் அரசியல் சூழல் காரணமாகத் தமிழகத்திற்குள் பார்ப்பனர் நுழைந்து வலுப்பெற்றனர் என்பது குறித்து நம்மிடம் பார்வையும் ஆய்வுகளும் இல்லை. அன்றியும் இந்திய வரலாற்றில் பார்ப்பனியம் என்ற கருத்தாக்கத்தின் உள்ளுறையையும் நாம் அழமாக அறிந்து கொள்ளவில்லை. இது குறித்து விரிவான ஆய்வுக்குத் தேவை உண்டு. எனினும் இப்போதைக்கு நான் தவிர்க்கிறேன்.

தமிழனுக்குச் சாதி, மதம் கடவுள், வேண்டாம் என்று பெரியார் கூறியவை லட்சியம் குறித்த கருத்துக்கள். பகுத்தறிவு மூலம், இவற்றை அகற்றிட முடியும் என்று பெரியார் நம்பினார். பகுத்தறிவு என்பதன் எல்லைக்கும் அப்பால் பொருளியல் சூழலோடும் தமிழ்ச் சமூகத்தின் ஆதிக்க சக்திகளோடும் இவை உறவுடையதாக இருப்பதைப் பெரியார் போதிய அளவு பார்க்கவில்லை. சமதர்மம் வந்தாலொழிய இவை அழியா என்பது பெரியார் கருத்தாக இருந்தது. பெரியாரின் மெய்யியலை, இவ்வகை பகுத்தறிவுக் கருத்துக்களில் முடக்கிவிட இயலாது. பெரியாரின் மெய்யியல் என்ற அவரது தன்மானம் என்று கருத்தியலைத்தான் குறிப்பிட முடியும். இது நெடுந்தொலைவு செல்லும். வர்க்கம் மற்றும் சாதியற்ற சமூக ஆக்கத்தை உள்ளடக்கி இந்தக் கருத்தியல் விரிவு பெறும் தன்மையுடையது. பெரியாரிடம் ஒரு வகையான ஆன்மிகப் பார்வை செயல்பட்டது. இதற்குப் பெரியார்

அழுத்தம் தருவதில்லை. குறைந்த அளவிலேனும் பெரியாரை ஒரு சித்தர் என்று நாம் சொல்ல முடியும். இப்படிச் சொல்வதற்கான தடையங்களைப் பெரியாரின் வாழ்வுக்குள் நாம் காணமுடியும். பெரியாரியத்தை மேலும் வளர்த்து ஆழப்படுத்துவது என்ற முறையில் நம் சிந்தனைகள் செல்ல வேண்டும். பெரியாரைக் குறைத்துப் பேசுவதன் மூலம் தமிழ் மெய்யியலை நாம் வளர்க்க முடியாது.

6. 20ஆம் நூற்றாண்டுச் சூழலில், தி.மு.க.வினர் தமிழர்களின் தொன்மை, மேன்மை குறித்து நிறையப் பேசினர். தெற்கில் குமரிக் கண்டம், வடக்கில் சிந்து வெளி நாகரிகம் முதலியவற்றை உள்ளடக்கிய தமிழனின் தொன்மை, மேன்மை (நாகரிகம் குறித்து) பேசினர். தமிழர்கள் பேரரசுகளை நிறுவியது குறித்தும் பேசினார்கள். தமிழர்கள் கடல்கடந்து வணிகத்தில் ஈடுபட்டார்கள். அரசுகளைத் தோற்றுவித்தார்கள், நகரங்களைப் படைத்துப் பெரும் இலக்கியங்கள் படைத்தனர். இமயம் வரை படையெடுத்து வென்றனர். தமிழின் தனித்தன்மை குறித்தும் பேசினர்.

இவ்வகைப் போக்கு ஆங்கிலேயருக்கு எதிரான இந்தியாவின் விடுதலைப் பேரியக்கத்தோடு தொடர்புடையது என்பதையும் இந்திய நாகரிகம் என்பது ஆரிய நாகரிகம் தான் என்று சிலர் அழுத்தம் தந்ததற்கு எதிர்வினையாகத் திராவிட நாகரிகம் குறித்தும் பேசவேண்டி இருந்தது என்பதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். திராவிட நாகரிகத்தின் மேன்மை குறித்த கருத்துக்கள் பொய்யானவையும் அல்ல. இவ்வகைக் கருத்துக்கு வரிவான ஆதாரங்கள் உண்டு. ஆரியம், திராவிம் என்ற முரண்பட்ட போக்குகளுக்கு இடையிலான போராட்டம் இன்றைக்கோ, நாளைக்கோ ஓயமுடியும் என்று தோன்றவில்லை. சங்க காலம் முதற்கொண்டே இத்தகைய முரண்பாட்டின் மோதலின் தொடக்கத்தை நாம் கவனிக்கிறோம். ஆரிய நாகரிகம் என்பதை மேலும், பிரம்மம், வேள்வி, சாதி, சடங்குகள் முதலியவற்றைச் சார்ந்தது என்று நாம் வேறுபடுத்த இயலும். சாங்கியம், வைசேடிகம், சார்வாகம், சமணம், பௌத்தம் முதலிய மெய்யியல் போக்குகளையும், ஆரியர்களின் வைதீகத்திற்கெதிராக நாம் நிறுத்த முடியும் கூடவே ஒன்றை நாம் குறிப்பிட வேண்டும். இவை வரலாற்றின் எதிர்நிலைகள். ஒன்றை மற்றது பாதிக்கவும் ஊடுருவவும் செய்யும். எப்பொழுதும் இவை தனித்தனியே பிரிந்து இயங்க இயலாது. திராவிடத்துக்குள், ஆரியமும் வந்துவிடும். திரும்பவும் நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்.

நம் பார்வையில் தெளிவு ஏற்படுத்தக் கூடியது மெய்யியல் பார்வைதான். கடவுளோ, கடவுள் மறுப்போ மனித வாழ்வியலுக்குள் என்ன பாதிப்பைச் செய்கிறது என்ற கேள்விதான் முக்கியம். கடவுள் மனித வாழ்க்கையை முழுமையாகத் தனக்குள் கரைத்து அழித்துவிடக் கூடாது. மத நிறுவனங்கள் , மனிதனைத் தன் ஆதிக்கத்தின் கீழ் அடிமையாக்கிவிடக்கூடாது, ஆதிக்கத்தின் சார்பில் மதம் செயல்படக் கூடாது. மனிதன் விடுதலைக்கு மதம், உதவ இயலுமானால் நாம் வரவேற்க இயலும். மத எல்லைக்குள் செயல்படும் புரோகிதர்கள் நமக்கு வேண்டாம். தீர்க்கதரிசிகளும் சித்தர்களும் நமக்குத் தேவை.

7. தி.மு.க. தமிழக அரசியலில், தமிழர் வாழ்வியலுக்குள் எத்தகைய ஆக்கங்களைச் செய்தது என்பது குறித்து இங்கு நாம் விரிவாகப் பேசவேண்டியதில்லை. தமிழர்களுக்கு இன, மொழி உணர்வை இவர்கள் ஏற்படுத்தினார்கள். தமிழனுக்குத் தனி அரசியல், தனி நாடு தேவை என்றும் பார்ப்பனியத்தை ஒதுக்க வேண்டும் என்றும் உணர்வை ஏற்படுத்தினார்கள். தமிழனுக்குத் தேவையன அரசியல், பொருளியல் குறித்த உணர்வையும் ஏற்படுத்தினார்கள். சங்க இலக்கியத்தின் காதல் வாழ்வை மேம்படுத்தினர். தமிழ் இலக்கியத்தின் மேன்மையை எடுத்துச் சொன்னார்கள். தமிழிலக்கியத் திறனாய்வில் ஆரியச் சார்பை விளக்கினார்கள். இப்படித் தமிழர்களுக்குப் பெருமித உணர்வை ஊட்டிய பொழுதே தற்செருக்கையும் இவர்கள் புகுத்தினார்கள். தமிழனுக்கு இணையானவன் உலகில் இல்லை. தமிழ் இலக்கியத்துக்கு நிகராக உலகில் இல்லை என இப்படி எல்லாம் தமிழனுக்குக் கற்பித்தது மூலம் வரலாற்றுச் சூழலிலிருந்து தமிழர்களைப் பிரித்தார்கள். தான் அடைய வேண்டிய உயர்வு இனி எதுவும் இல்லை என்ற உணர்வைத் தமிழனுக்குத் தந்தது மூலம் எல்லா அறிவும் எனக்குள்ளேயே இருக்கிறது என்று கற்பித்தார்கள். மெய்யியல்களை ஆழ்ந்து கற்க வேண்டியதில்லை. தமிழ் மன்னர்களைப் பெருமைப் படுத்தினார்கள். காதல், பெண் இன்பம், உலகியல் இன்பம் ஆகியவற்றைப் போற்றி முதலாளியப் போக்கை ஊக்குவித்து, நுகர்வியத்தை வளர்த்தார்கள். அரசியலில் அதிகாரத்தைச் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை, பொருள் சேர்ப்பது தவறில்லை.

இத்தகைய போக்கின் விளைவை இன்றும் பெரிய அளவில் பார்க்கிறோம். தமிழன் தனக்குள் குறுகி இறுகி விட்டான். வள்ளுவரையும், இளங்கோவையும் சங்க இலக்கியத்தையும் இவர்கள் தம் அளவில் குறைத்தார்கள். கம்பராமாயணம், பெரிய புராணம் முதலிய

காப்பியங்களுக்குள் இவர்கள் மதத்தை மட்டுமே கண்டனர். தமிழனின் வரலாற்றை, இலக்கிய ஆக்கத்தைக் காணவில்லை. மேலும் இவர்கள் அற உணர்வில் செழிக்கவில்லை.

8. 20ஆம் நூற்றாண்டுச் சூழலில் தோன்றிய சைவ சமய மறுமலர்ச்சி, தனித்தமிழ் மற்றும் தமிழ்த் தேசிய இயக்கம் பற்றியும் நாம் பேச வேண்டும்.

சைவ சமயம் தன் மத இறுக்கத்தைக் குறைத்துக் கொண்டது என்பது உண்மை. எனினும் வள்ளலாருக்கும், சித்தர்களுக்கும் அவர்கள் உரிய இடத்தைத் தரவில்லை. திராவிட இயக்கத்துக்கான தூண்டுதலை, சைவ சமயத்தின் ஒரு பகுதியினர் தந்தனர். தனித்தமிழ் இயக்கத்துக்கும் இவர்கள் காரணமாக இருந்தனர். பார்ப்பனியத்தை இவர்கள் மறுத்தார்கள். தமிழ் என்பதைச் சமய இலக்கியங்களோடு, குறுக்கிக் கொண்டனர். தனித்தமிழ் தேவை என்பதில் நமக்கு மறுப்பில்லை. தமிழர்களின் இன உணர்வு என்பதை மரபு இனமாகக் குறுக்கிவிட முடியாது. தமிழ்த் தேசிய இன உணர்வுதான் இன்று நமக்குத் தேவை. தமிழ்த் தேசியம் என்பதனுள் பெரியாருக்கு மட்டுமல்லாமல் மார்க்சியத்துக்கும் இடமுண்டு. அதாவது, தமிழர்களுக்கான, பொருளியல் குறித்து நாம் கூடுதலாகப் பேசவேண்டும். தமிழ் மக்களின் இயற்கை வளங்களைப் பிறருக்கு விட்டுத் தர இயலாது. சமதர்மம் தான் தமிழ் மக்களுக்கான வாழ்வுரிமை. முதலாளியத்திடமும், அரசியல் ஆதிக்கத்திடமும் தமிழ் மக்களை ஒப்படைக்க முடியாது. தமிழ் மக்களுக்குத் தேசம், இயற்கை, வாழ்வுரிமையும், விடுதலையும் வேண்டும். இந்தியத் தேசியம் தமிழ் மக்களின் அடிமைத்தனம் மீது எழ முடியாது. இந்தத்துவம் தமிழர்களின் வாழ்வியலை அழிக்கும். தமிழ் மக்களின் மெய்யியலை அழிக்கும். தமிழ்த் தேசிய உணர்வுடையவர், தமிழ் மெய்யியலை வளர்த்தெடுக்க வேண்டும். சமதர்மத்தை உள்ளடாக்கியதுதான் தமிழ் மெய்யியல்.

9. தமிழ் இலக்கியங்களுக்குள், வரலாற்றுக்குள் ஆதிப் பொதுமைச் சமூகம் ஒரு பெரும் நீரோட்டமாகத் தொடர்ந்து வருவதைக் காண முடியும். வராற்றுக்குள் வந்துவிட்ட ஏற்றத் தாழ்வுகள், தனி உடைமை, அரசு அதிகாரம் ஆகியவற்றுக்குள் எதிராக இந்தப் பொதுமைக் கூறுகள் செயல்படுகின்றன. இரு வேறு உலகத்தியற்கை என்று வள்ளுவர் கூறினார். திருச் செல்வம் ஒரு பக்கம். தெள்ளியராதல் மறுபக்கம். இப்படி இருவேறு உலகம் ஏற்பட்டதை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

பக்குடுக்கை, நன் கணியனார், இப்படி உலகம் இரு வேறு பட்டதைக் கண்டு நொந்தார். ஒரு தெருவில் வீட்டில் மணமுரசு, இன்னொரு வீட்டில் சாப்பறை, இத்தகைய உலகத்தைப் படைத்தவன் பண்பில்லாதவன் என்றார் நன்கணியனார். பண்பில்லாதவர்கள் உலகத்தை அழிக்கின்றனர். பண்புடையவரால் தான் உலகம் வாழ்கிறது என்றார் இன்னொரு கவிஞர். பெரியோர் என்றும் சிறியோர் என்றும் மனிதர்களை வேறுபடுத்துகிற உலகப் போக்கு கணியன் பூங்குன்றனார்க்கு உடன்பாடில்லை. வாழ்க்கை எளியதாகவே இருக்க முடியும். உண்பது நாழி, உடுப்பவை இரண்டு என்றார் நக்கீரர். செல்வத்துப் பயன் ஈதல், நாமே துய்ப்போம் என்றால் நாம் இழந்துவிடுவன பல. பாரி முதலிய வேளிர்களின் சாவைப் புலவர்கள் ஏற்கவில்லை. இறந்தவனை எரிக்கலாம் அல்லது புதைக்கலாம். இது குறித்து விவாதங்கள் தேவையில்லை என்றார் இன்னொரு கவிஞர். களவு மணம் தமிழர்களின் மனநிலை. செல்வமோ, குலமோ, இடையில் குறுக்கிட வேண்டியதில்லை. இவை காரணமாகப் பெற்றோர் குறுக்கிட வேண்டியதில்லை. வாழ்வை அன்பே தீர்மானிக்கட்டும். செல்வமோ, குலமோ தீர்மானிக்க முடியாது. இது தமிழ் அறம்.

ஆரியப் பிரகதத்தனுக்குக் கபிலர் இந்த அறத்தை எடுத்துரைத்தார். வள்ளுவர் ஒப்புரவுக்கு அழுத்தம் தந்தார். பேரறிவாளனிடம் சேரும் செல்வம் ஊருணி நீரால் நிறைவது போன்றது என்றார் வள்ளுவர். மழை தானே பெய்து, ஊருணி தானே நிரம்புகிறது. ஊருணியைக் கேட்காமலும் எடுத்துக் கொள்ளலாம். நயனுடைய வனிடம் சேரும் செல்வம், பயன் மரம் உள்ளூரில் பழுத்தது போன்றது என்றார் வள்ளுவர். மரம் ஊருக்குப் பொது. பழங்கள் எல்லோருக்கும் உரியவை. மழை நீர் தனி ஒருவருக்குச் சொந்தம் ஆக முடியாது. ஊருணியும் ஊர் மக்களுக்கான பொதுவுடைமை. ஊர் நடுவில் உள்ள மரமும் மக்களுக்குச் சொந்தம். நிலத்தில் தனி உடைமை தேவை இல்லை. ஒருவனிடம் பெருகும் செல்வத்துக்கு அவன் மட்டுமே காரணம் அல்ல. ஊரே கூடி உழைக்கும் போதுதான் ஒருவனுக்குச் சேருகிறது செல்வம். அறிவுடையவனுக்கு இந்த உண்மை புரியும். நான் தான் செல்வம் சேர்த்தேன். எனக்குத்தான் இதன் மீது உரிமை என்று கூறுபவன் அன்பற்றவன். அன்பகத்தில்லாதவன் வாழ்க்கை பட்ட மரத்தின் வாழ்க்கை. பாலை நிலத்தில் இருக்கும் இந்த மரம் தளிர்ப்பதில்லை. இப்படி எல்லாம் வள்ளுவர் பேசுவது தமிழ் அறம். இதற்கு நம் காலத்துப் பெயர் சமதர்மம்.

10. சமுதாயத்தில் வர்க்க வேறுபாடுகள் மிகுந்த நிலையில் கோவலன் திருடனாகிறான். அந்நிய நாட்டிற்குப் பிழைக்க வந்தவன் கையில் எப்படி விலை மதிப்புமிக்க சிலம்பிருக்க முடியும். ஆகவே அவன் கள்வன். கொல்லப்படுதலுக்கு உரியவன். நெடுஞ்செழியன் கோவலனைக் கொன்று அறம் பிழைத்தான். அறமே இப்பொழுது அவனுக்குக் கூற்றுவனாக எதிரில் வந்தது. பாண்டியன் இறந்தான். இப்படி ஏற்றத்தாழ்வை அடிப்படையாகக் கொண்டிருக்கிற ஒரு பெரிய நகரில் சான்றோர் வாழ முடியாது. கற்புடைய பெண்கள், தெய்வம் இருக்க முடியாது. ஆகவே இந்த நகரம் அழிவுக்குரியது. அழிப்பதற்குரியது. இப்படிச் செல்கிறது இளங்கோவின் அறம். இளங்கோ சமணராக இருக்கலாம். எனினும் தமிழ் அறத்தைத்தான் இவர் தழுவி நிற்கிறார்.

புகார் நகரில் தீ பற்றியது போல வறுமையின் கொடுமையில் மக்கள் வாழ்கின்றனர். இந்த வறுமையைச் செல்வர் தீர்க்கமுடியாது. மன்னர் தீர்க்கமாட்டார்கள். தெய்வமே முன்வந்து எடுக்க எடுக்கக் குறையாத அமுதசுரபியைத் தந்தாலன்றி இந்த வறுமைத் தீ குறையாது. இப்படிச் செல்கிறது சாத்தனார் சிந்தனை. அமுதசுரபி என்ற கற்பனை இவருக்குள் எழுந்தது இப்படித்தான்.

நாடு முழுவதும் இராவணர்கள். தெய்வமே அவதாரம் எடுத்து வந்தாலொழிய இந்த இராவணர்களை ஒழிக்க முடியாது. தாழ்த்தப்பட்டவரோடும், ஏழைகளோடும் உறவு கொண்டால் மட்டுமே ராமன் இவர்கள். சார்பில் போரிட இயலும். இப்படிச் செல்கிறது கம்பன் வகுத்த அறம். தமிழிலக்கியத்தின் சாரம் என இத்தகைய அற உணர்வைத்தான் குறிப்பிட முடியும். தமிழிலக்கியத்துக்கு மையமென்று சித்தர்களைக் குறிப்பிட வேண்டும். இவர்களுக்குச் சாதி, மதம், சடங்குகள் இல்லை. பொருளோடு. அதிகாரத்தோடு இவர்களுக்கு ஒட்டுறவு இல்லை. கணியன் பூங்குன்றன் முதல் வள்ளுவர் வழியாக இந்த இயக்கத்தின் வெளிப்பாடுகள். நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் சித்தர் இயக்கத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாது. பெரியாரும் சித்தர் இயக்க வீச்சைப் பெற்றவர். இதன் தொடர்ச்சி என்று பாரதி, புதுமைப் பித்தன் முதலியவர்களையும் நாம் காண முடியும். ஆழ்ந்து பார்த்தால் வேளாண்மைச் சமூகத்தில் இவர்கள் வேர் பிடித்தவர்கள், கிளை பரப்பியவர்கள். இயற்கையோடு இவர்கள் இயைந்தவர்கள். உழவர்களின் விளைச்சலில் இயற்கையின் பங்கு அதிகம். இதன் காரணமாக உழைப்பும், பகிர்வும் இவர்களுக்கு வாழ்க்கையாக

அமைகிறது. இயற்கையை, தமக்குள் உள்வாங்கிக் கொண்டவர்கள் அன்பையும், அறத்தையும் சேர்த்தே உள்வாங்கிக் கொள்கிறார்கள்.

இந்தியச் சமூகத்தை, ஆசிய முறைச் சமூகம் என்றார் மார்க்ஸ். இங்கு நிலத்தில் தனி உடைமை இல்லை. அரசோடு அதிக உறவில்லை. ஒவ்வொரு கிராமச் சமூகமும் தனி அரசு போலச் செயல்படுகிறது. இதில் ஏற்றத் தாழ்வு உண்டெனினும் இன்று நாம் காணும் பேரளவிலான ஏற்றத் தாழ்வு இல்லை. வேளாண்சைச் சமூகத்தை, இயற்கையை நாம் தொடர்ந்து அழிப்போம் என்றால் வாழ்வின் ஆதாரங்களையும் தமிழ் வளத்தையும் சேர்த்தே அழிப்போம்.

11. தமிழ் மக்கள் இறைவனோடு கொண்ட உறவு குறித்து இங்கு சிலவற்றைச் சொல்லலாம். ஏற்றத்தாழ்வு குறைவாக இருக்கிற சமூகத்தில் இறைவனுக்கு மனிதர் தம்மை இழக்க மாட்டார்கள். அந்நியமாதலுக்கு அதிகம் ஆட்பட மாட்டார்கள். ஏற்றத்தாழ்வான உலகைப் படைத்தவனைப் பண்பிலாதவன் என்று இவர்கள் கூற முடியும். வள்ளுவரும் இறைவனை வசை பாடுகிறார். இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான் என்கிறார். காதலியோடு, தலைவன் இல்லத்திலிருந்து வாழும் வாழ்க்கையின் பேரின்பம் தாமரைக் கண்ணான் உலகில் இருக்க முடியுமா? என்கிறான் வள்ளுவரின் தலைவன். வள்ளுவர் மேலுலத்தைப் பொருட்படுத்தவில்லை. மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்கிறார் வள்ளுவர். மழை பெய்யவில்லை என்றால், தானமும் தவமும் இல்லை என்கிறார். முறைப்படி இல்லறத்தில் வாழ்பவனுடைய வாழ்க்கை, வானத்து அமரர்களுக்கு நிகரான வாழ்க்கை என்கிறார். உயிர்களைக் கொன்று உண்ணாதவனை மண்ணுயிர்கள் இறைவனாகத் தொழும் என்கிறார். பொய்த்தவ வேடம் கொண்டவர்களை இகழ்ந்துரைக்கிறார். முறை செய்து காப்பாற்றும் மன்னவனை மக்கள் இறையெனப் போற்றுவர். மெய்ப் பொருளைக் காண்பது அறிவு என்கிறார். உலகியல் வாழ்க்கையை அர்த்தம் உள்ளதாகப் படைக்க வேண்டும் என்பதுதான் வள்ளுவர் நோக்கம்.

சிலம்பில் கண்ணகி தெய்வமாகிறாள். மதுரை நகரில் மதுரையின் காவல் தெய்வமாகிய மதுராபதி கண்ணகிக்கு முன்வர அஞ்சுகிறது. மணிமேகலையின் அறத்திற்குத் தெய்வங்கள் ஒத்துழைக்கின்றன. ஆபுத்திரன் செய்யும் நற்செயலுக்குத் தெய்வம் உதவுகிறது. இந்திரன் உலகம் ஆபுத்திரனுக்கு வேண்டாம். வறியவரின்

பசி தீர்க்கும் வாய்ப்புக்கு ஆதாரமாக இந்த மண்ணுலகமே தேவை. 12 ஆண்டு பசி தீர்ப்பதாகிய நாவல் மரத்தினடியில் நாவல் பழத்திற்காகத் தவம் செய்கிறான் விருட்சிகன், இவனைச் சாத்தனார் பாராட்டவில்லை.

பெரிய புராணத்தில் நாம் என்ன பார்க்கிறோம். சிவகோசரியாருக்கு இறைவன் நெருக்கமாக இல்லை, இறைவன் கண்ணப்பனிடமே தன்னைக் காண்பிக்கிறார். பூசலாரின் மனக்கோயிலுக்குள்தான் இறைவன் முதலில் எழுந்தருளினார். கண்ணப்பனின் கதையாக்கத்தின் உயிர்ப்பை நமக்குள் உள்வாங்கிக் கொள்ள இயலுமானால் சேக்கிழாரின் படைப்பு நெறியிலேயே நந்தனுக்கு நாம் வாழ்வளிக்க முடியும். நந்தனைக் கொன்ற பார்ப்பனர்களை இறைவனுக்கு எதிரில் நிறுத்த முடியும். படைப்பிலக்கியத்தில் இப்படிச் செயல்படும் உரிமை நமக்குண்டு. தமிழிலக்கியம் இந்த உரிமையை நமக்கு வழங்கியிருக்கிறது.

தமிழ் இலக்கியத்தினுள்ளும் மன்னருக்குப் பெருமை, அந்தணர்க்குப் பெருமை, முதலியவை இடம் பெறுகின்றன. இவற்றை எல்லாம் இன்று நாம் களைந்து பார்க்க முடியும். திருமூலரை முன்னிறுத்தி, அன்பை அழிப்பவர்கள், சிவநெறிக்கெதிரானவர்கள் என்று சொல்ல முடியும். தமிழிலக்கியத்தை நாம் கால நோக்கில் வாசிப்பதற்கான அணுகுமுறை இன்று தெரியவந்திருக்கிறது. சாதி, ஆண், ஆதிக்கத்தை நாம் ஏற்பதற்கில்லை. தனி உடைமை அரசு அதிகாரத்தை நாம் மதிக்க வேண்டியதில்லை. இது தமிழர் மெய்யியல்.

10

மதங்களும் மனிதமும்

1. மத நல்லிணக்கம் குறித்து இன்றைய சூழலில் கூடுதலாகப் பேசுகிறோம். மதங்கள் பல என்ற போதிலும் பெரும்பாலான மதங்கள் இறைவனை ஒப்புக் கொள்கின்றன. அன்பு குறித்துப் பேசுகின்றன. உலகில் அன்பும் சகோதரத்துவமும் நிலவவேண்டுமென்று பேசுகின்றன. இவற்றை எவ்வளவுதான் மக்கள் தம் நெஞ்சில் பதித்துக் கொண்டாலும் மத உணர்வுகளைக் கிளறி மக்களை எதிர்த்துருவங்களுக்குத் தள்ளி மக்களுக்கிடையில் மோதல்களையும் கலவரங்களையும் உண்டாக்குவது தொடர்கிறது. கோயில்கள் இடிக்கப்படுகின்றன. கொலைகள் திட்டமிட்டு நடைபெறுகின்றன. குண்டுகள் வெடிக்கின்றன. அன்பையும் அமைதியையும் உபதேசிக்கும் மதங்கள் இப்படி ஏன் செய்ய வேண்டுமென நாம் அதிர்ச்சியடைகிறோம். மதங்கள் என்பவற்றுள் அரசியல் நுழைந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. தேர்தல் வெற்றிக்காகவும் மதக்கலவரங்கள் தூண்டப்படுகின்றன. வணிக நிறுவனங்கள் கொளுத்தப்படுகின்றன. வணிகர்க்கிடையே உள்ள போட்டியும் இந்த மோதல்கள் வழியே வெளித் தெரிகின்றன. தேசத்தின் அரசியலை யார் நிர்ணயிப்பது? என்ற முறையில் கலவரங்கள் தூண்டப்படுகின்றன. நாடுகளுக்கிடையிலான சச்சரவுகளும் மதக் கலவரங்களில் தெரிகின்றன. அரசு கடைப்பிடிப்பதாகச் சொல்லப்படும் மதச்சார்பின்மை ஒரு கேலிச் சித்திரமாக மாறுகிறது. சில அரசுகள்

தமக்குரிய மதம் என்பதையே வாழ்வுக்கான விதிமுறைகள் ஆக்கி இருப்பதை இன்றளவும் காண முடிகிறது. பெண்களும் குழந்தைகளும் இத்தகைய மதக்கலவரங்களால் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இவற்றிற்கெல்லாம் காரணம் மதம் மட்டுமா என்ற கேள்வி எழுகிறது.

2. உபதேசங்கள் / நல்லுரைகள் தற்காலிகமாகப் பயன்படலாம். மதக்கலவரங்கள் கொஞ்ச காலம் ஓய்ந்திருப்பது போலத் தோன்றினாலும் மீண்டும் வெடிக்கின்றன. கலவரங்களால் ஏற்பட்ட காயங்கள் ஆறுவதில்லை. கலவரங்களின் போது இறைவன் எங்கே போய்விட்டான்? என்று ஐயம் எழுகிறது. நாம் நவீன உலகில்தான் வாழ்கிறோமா? என்றும் நமக்குள் கேள்வி எழுகிறது. இளைஞர்கள் உணர்வேற்றப்பட்ட நிலையில் எதையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள். நல்லவர்கள் ஒதுங்கிக் கொள்ள, முரட்டு மனிதர்கள் முன் வரிசைக்கு வந்து விடுகின்றனர். தம் பகைமைகளை - போட்டி பொறாமைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாகவும் இவற்றைச் சில சக்திகள் பயன்படுத்திக் கொள்கின்றன. சிறிதளவும் பொருட்படுத்தக் கூடியதல்லாத காரணங்களுக்காகத் தோன்றுகின்ற வாய்ச்சண்டை, பின்னர் பெருங்கலவரமாக மாறுவதைப் பார்க்கிறோம். பெரிய மனிதர்கள் பாதுகாப்போடு தங்கியிருக்க, வறியவர்கள் கடுமையான துயரங்களுக்கு உள்ளாகின்றனர். கலவரங்களைக் கட்டுப்படுத்தக் காவல் துறையும் அரசும் உடனடியாகச் செயல்படுவதில்லை. காவலர் களுக்குள்ளும் மத உணர்வுகள் தூண்டப்படுவதை நாம் மறுப்பதற் கில்லை. பொறுத்திருந்து தேவையான சமயத்தில் அரசு தலையிடுவ தினுள்ளும் அரசியல் செயல்படுவதைத் தொடர்ந்து பார்க்கிறோம். நடுநிலையோடு அரசு செயல்படுவதாகச் சொல்வதை நம்மால் நம்ப முடியவில்லை. நீதி விசாரணையும் இத்தகைய அரசியலோடுதான் நடைபெறுகிறது. விசாரணை அறிக்கைகள் மறைக்கப்படுகின்றன. மறுக்கவும் படுகின்றன; இவ்வாறெல்லாம் நடைபெறுவதைப் பார்க்கும்போது மத நல்லிணக்கம் என்று பேசுவதனால் மட்டும் இந்தச் சிக்கலின் ஆழமும் விரிவும் நமக்குப் புலப்படுவதில்லை. இந்தச் சிக்கலில் மதம் என்பதனோடு தொடர்பில்லாத எத்தனையோ சக்திகள் செயல்படுகின்றன. அல்லது மதம் என்பதைப் பயன்படுத்திக்கொள்ளும் சக்திகளையும் பார்க்கிறோம். ஒன்று வெளிப்படையாகத் தெரிகிறது: மத நல்லிணக்கம் பேசுபவர்களும் காலம் கழித்துத்தான் செயல்படுகிறார்கள். பெரும்பாலான மக்களுக்கு என்றுமே பாதுகாப்பாக

வாழ்வு இல்லை. கூலிகளாகவும் அடிமைகளாகவும் இவர்கள் வாழ்கிறார்கள். சுரண்டலுக்குள்ளும் ஒடுக்குமுறைக்குள்ளும் சிக்கியுள்ள இவர்கள், தமககுள்ளும் தம் மனத்திலுள்ளும் பிளவுபட்டு கோபதாபங்களோடு வாழ்கிறார்கள். இவர்களுக்கு நல்ல கல்வி தரப்படுவதில்லை. முதலாளிகளாலும் அரசதிகாரிகளாலும் இவர்கள் கேவலங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் இவர்கள் காயப்படுகிறார்கள். இவர்களின் உணர்ச்சிகளுக்குத் தீ மூட்டுவது எளிது. இவர்களை அரசியல் கட்சிகளோ, குழுத் தலைவர்களோ பயன்படுத்த இயலும். இவர்களை வைத்துக் கொள்ளையடிக்க முடியும். இப்படியெல்லாம் இங்கு நடைபெறுவதைப் பல முறை நாம் பார்த்திருக்கிறோம்.மேலும் ஒன்றைச் சொல்லலாம். நமது சமூகமே வன்முறையின் அடிப்படையில்தான் கட்டப்பட்டிருக்கிறது. ஏற்றத்தாழ்வோடு இயங்கும் சமூகம் வன்முறையின்றிச் செயல்படமுடியாது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் முடியாது. இத்தகைய சமூகத்தில் எல்லா நிறுவனங்களுமே வன்முறையின் பலத்தோடுதான் செயல்படுகின்றன.குடும்பத்தினுள்ளும் இந்த வன்முறை செயல்படுகிறது. பெண்களின் மீதும் குழந்தைகள் மீதும் வன்முறை செலுத்தப்படுகிறது. கல்வி நிறுவனங்களிலும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ செயல்படுவது இந்த வன்முறை. பணம் என்பதனுள் இந்த வன்முறை உறைந்திருக்கிறது. உலகளவில் அரசியலையும் பொருளியலையும் தாங்கி நிற்பது இந்த வன்முறை. ஆதிக்கம் எந்த வகையில் செயல்பட்டாலும் அதனுள் இந்த வன்முறையைக் காண முடியும். இன்று செயல்படுவதாகச் சொல்லிக் கொள்ளும் சனநாயகத்தினுள்ளும் வன்முறை மறைவாகத் தங்கியுள்ளது. அரசென்பது உச்ச அளவில் வன்முறையோடுதான் அமைந்திருக்கிறது. உடைமை என்பதனுள் உறைந்திருப்பது இந்த வன்முறை. பிரம்மாண்டமான கட்டிடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், தொழில் முறைகள், இயந்திரங்கள் முதலியவற்றினுள்ளும் உறைந்திருப்பது வன்முறை. மத நிறுவனங்களினுள்ளும் செயற்படும் அதிகாரம் , இந்த வன்முறையின் வடிவம்தான், இத்தகைய வன்முறைகளுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுவது தவிர்க்க இயலாதது. இப்பொழுதெல்லாம் சட்டத்தை மக்கள் தம் கைகளில் எடுத்துக் கொள்ளக் கூடாதென்று அரசுத் தலைவர்கள் பேசுவதன் உண்மை என்ன என்பதை நாம் தெரிந்தே இருக்கிறோம். பயங்கரவாதமென்று குற்றம் சாட்டப்படும் இயக்கங்கள் அரசின் வன்முறைக்கு எதிர்வினைகள் என்றுதான் சொல்ல முடியும்.

பெரிய தேசங்கள் சிறிய தேசங்களின் மீது வன்முறையைச் செலுத்துகின்றன. ஒரு தேசத்தினுள்ளும் இப்படிப் பல படி நிலைகளில் வன்முறைகள் செயல்படுகின்றன.

இப்பொழுது நாம் புரிந்து கொள்ள முடியும். மதக் கலவரம் என்பது ஒரு கொத்துப் பிரச்சனை. அதைப் போலவே மத நல்லிணக்கம் என்பது பல பரிமாணங்களில் அணுகுவதன் மூலமே சாதிக்க முடியும். கடமையோடும் அதிகாரத்தோடும் இவற்றிற்குள்ள உறவை ஊடாட்டத்தை நாம் புரிந்து கொண்டிருக்கின்றோம். வரலாற்றுக் காலம் முதல் தொடர்ந்து கலவரங்கள் நிகழ்கின்றன. இவற்றில் மதக் கலவரங்கள் ஒரு குறிப்பிட்ட வகைக் கலவரங்கள், மக்களின் ஒரு பகுதியினரை ஒடுக்கி வைப்பதற்காக நடைபெறுபவை. இந்தக் கலவரங்கள் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக மக்கள் சார்பிலும் கலவரங்கள் வெடிக்கின்றன. இறுதியில் சமத்துவம் என்ற முறையில் சமூகத்தின் அரசியலும் பொருளியலும் அமைந்தாலன்றி கலவரங்களுக்கான காரணங்கள் அழிந்து விட மாட்டா. வரலாறு என்பதை வர்க்கப் போராட்டம் என்று மார்க்சியர் கூறுவதை இங்கும் நாம் பார்க்கிறோம். மக்கள் மத்தியில் வர்க்க உணர்வு வளர்ந்து விடக்கூடாது என்ற முறையிலும் ஆதிக்க சக்திகள் மதக் கலவரங்களைத் தூண்டுகின்றன. இன்று இந்தியாவில் நடைபெறும் மதக்கலவரங்களைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் என்றும் வர்க்கப் போராட்டத்தைக் குறிப்பிட முடியும். சோசலிச ஆதிக்கத்திற்கான முயற்சிகளை அழிக்கும் முயற்சியில் ஆதிக்க சக்திகள் தொடர்நது செயல்படுகின்றன. கம்யூனிஸ்டுகளை எந்த வகையிலும் ஒடுக்கியாக வேண்டும். தொழிற் சங்கங்களை முடக்க வேண்டும். முதலாளிய சக்திகளுக்கு இந்தத் தேசத்தைப் பத்திரப்படுத்த வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எது காரணம் என்பதை மக்கள் அறிந்து விடக்கூடாது, உடைமைப் பெருக்கம் இல்லாமல் சமூகம் வாழ முடியாது என்ற உணர்வை மக்களுக்குள் திணிக்க வேண்டும். சுரண்டலும் ஒடுக்கு முறையும் எல்லாக் காலங்களிலும் நடைபெறுவது இயல்புதான். இதில் தவறு இல்லை என்று மக்கள் நம்ப வேண்டும். அரசும் உடமையும் இல்லாமல் சமூகம் இயங்காது என்று மக்கள் நம்ப வேண்டும். இராணுவமும் காவல்துறையும் இல்லாமல் சமூகத்தில் அமைதி நிலவமுடியாது என்றும் அவர்கள் நம்பவேண்டும். தொடர்ந்து மக்கள் தொகை பெருகும் நிலையில் அரசு என்னதான் செய்ய முடியும்? என்று மக்களே வருந்த வேண்டும். சரியான கல்வி மக்களுக்கு

வழங்கக்கூடாது, ஏற்றத்தாழ்வோடுதான் சமூகம் இயங்கும். இவ்வாறெல்லாம் மக்களுக்குக் கற்பித்து மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் அரசியல்- பொருளாதாரம் குறித்து நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். இந்த அரசியலை மக்கள் ஏற்க மாட்டார்கள். கலவரங்களின் போது அரசை எதிர்பார்த்து மக்கள் காத்திருப்பதன் மூலமும் இந்த அரசியல்தான் வெற்றி பெறுகிறது.

மக்களைச் சிறுபான்மை, பெரும்பான்மை என்று பிரித்துப் பார்ப்பது இந்த ஆதிக்க அரசியல்தான். இத்தகைய பிரிவினைக்குள் செயல்படுவது, பெரும்பான்மைக்குச் சிறுபான்மை கட்டுப் படவேண்டும். பெரும்பான்மையினர் வகுத்துத் தரும் வரையறை களுக்குள் சிறுபான்மையினர் மனமொத்து வாழ வேண்டும். அவர்களுக்குத் தரப்படும் சில சலுகைகளை ஏற்றுக் கொண்டு பெரும்பான்மையினரிடம் நன்றியுணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரிவினைகள் ஒழிந்து ஒரு தேசத்தின் மக்கள் நாம் என்ற முறையில் இவர்கள் இணைந்துவிடக்கூடாது. இதற்காக அடிக்கடி நினைவுறுத்தப்படும் இந்தப் பிரிவினை. இதை நிரந்தரப்படுத்தும்படி தனித் தொகுதிகள், தனிச் சட்டங்கள் என்ற வசதிகள், மதச்சார்பின்மை என்று சொல்லிக் கொண்டே, மத நிறுவனங்களின் ஆளுகையில் அரசு தலையிடுவதில்லை என்றும் மத விவகாரங்களில் அரசு தலையிடாது என்றும் சொல்லிக்கொள்ளும் கொள்கையோடு - மத நிறுவனங்களின் மூலம் நடைபெறும் ஆதிக்கத்தோடு அரசு ஒத்துழைக்கிறது. சனநாயகத்தை மக்கள் மத்தியில் கூடுதலாகக் கொண்டு செல்ல அரசு விரும்பியிருக்குமானால் மத நிறுவனங்களின் விவகாரங்களில் அரசு தலையிட்டிருக்க முடியும். இந்து சமயம் என்னும் கட்டமைப்பைக் காப்பாற்ற விரும்புகிறது இந்தியாவின் அரசியல் சட்டம். வழிபாடு செய்யும் உரிமையை அனைத்து மக்களுக்கும் வழங்குவது சனநாயகத்தின் செயல்பாட்டிற்கு வழி வகுக்கும். மதச்சார்பின்மை என்ற கொள்கை யோடு மத நிறுவனங்களை-அவற்றின் உடைமை, அதிகாரம் ஆகியவற்றோடு காப்பாற்ற விரும்புகிற அரசு, மதம் குறித்த ஆழமான விமர்சனங்களையும் தடுக்கத்தான் செய்கிறது.

இந்தியாவின் சாதிய அமைப்பைத் தகர்ப்பதில் அரசுக்கு அக்கறையில்லை. சாதியமைப்பைத் தகர்த்தால் ஒழிய மக்கள் தம் நலன்களை மேம்படுத்து முடியாது. இவ்வகை அமைப்புகள் வழியே

ஏற்றத்தாழ்வுகள் நிலை நிறுத்தப்படுகின்றன. இத்தகைய ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக்கொண்ட பிறகுதான் மத நல்லிணக்கம் என்று நாம் பேச முடியும். மதங்களுக்கு அப்பால் மக்களின் நல்லிணக்கம் என்று நாம் பேச வேண்டும். ஏற்றத் தாழ்வு என்ற கட்டமைப்பைத் தகர்க்கும் முறையில் இந்து - முஸ்லீம் என்ற வேறுபாடுகளை மறுத்துவிட்டு மக்கள் என்ற முறையில் அனைவரும் தமக்குள் இணக்கம் காண வேண்டும். நாம் சகோதரர்கள் என்ற முறையில் வேறுபாடுகளை ஒதுக்கி வைக்க வேண்டும். வேறுபடுத்துபவர்களை ஒதுக்கி வைக்க வேண்டும். ஒரு மதத்தைக் கடைபிடித்துக் கொண்டே இன்னொரு மதத்தோடு நல்லிணக்கம் என்பது சாத்தியமில்லை. தாற்காலிகமாக இப்படிப் பேசலாம். இது மேலோட்டமான பேச்சு. இது நிலைக்காது, மத நல்லிணக்கம் என்று இன்று பேசுகின்ற மதச்சார்பினருக்கு அவரவர்க்குரிய கோயில்கள், கடவுளர்கள் வழிபாட்டு முறைகள், மதத்தலைவர்கள், மறைநூல்கள் சடங்குகள் வேண்டும். கோயில்களுக்குத் தனி உடைமைகளும், அரசுப் பாதுகாப்பும் வேண்டும். இவை நிலபெற வேண்டுமானால் மக்கள் தமக்குள் பிரிந்திருக்க வேண்டும். எங்கள் மதம், எங்கள் கோயில், எங்கள் தலைவர் என்று பெருமையோடு பேசவும் வேண்டும். பிற மதங்களை நாம் அவமதிக்க கூடாதென்று நல்ல வார்த்தை சொல்லிக் கொள்ள வேண்டும் கடவுள் ஒன்று. ஆனால் எனக்கு என் கடவுள்; என் மத நூல் என்று பேச வேண்டும். இதனால் மதம் நிலைபெறும். தத்துவங்கள் என்னவாகும்? தத்துவம் கருதி மதங்கள் தம் வரையறைகளை ஒதுக்கி வைக்கக்கூடாதா?

மதமா? மனிதமா?

1. மத நல்லிணக்கம் என்று பேசும்பொழுது மதம் குறித்த ஆய்வில் ஈடுபடுவது தேவையாக இருக்கிறது. மதம் என்பதே மூடத்தனம் என்று பேசும் நாத்திகவாதம், மத நல்லிணக்கத்திற்கு உதவுமென்று தோன்றவில்லை. மதம் குறித்த ஆய்வு தேவையில்லையென்றும் மதவாதிகள் கூறலாம். இறைவனால் தூதுவர் மூலம் அருளப்பட்டது மதம். இதை எப்படி ஆய்வுக்குட்படுத்த முடியும் என்று அவர்கள் கருதலாம். வழிவழியாக வந்தது எங்கள் மதம். எங்களின் முன்னோர் கடைப்பிடித்த மதத்தை இப்பொழுது கேள்விக்குள்ளாக்க அனுமதிக்க மாட்டோம் என்றும் அவர்கள் கூறலாம். மதத்தைக் கேள்விக்குட் படுத்துகிறீர்கள் என்றும் எங்கள் வாழ்வுக்குள் தலையிட உங்களுக்கு

உரிமையில்லையென்றும் அவர்கள் கூறலாம். அவரவர் மதத்தோடு தொடர்புடையதாகத் திருமணம் முதலிய எத்தனையோ சடங்குகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் உதறிவிடக்கூடாது என்றும் அவர்கள் கருதக்கூடும். இவர்களின் நெறியை நாம் ஒப்புக் கொண்டால் மத நல்லிணக்கத்திற்கு நாம் போய்ச் சேர முடியாது.

2. மதம் குறித்து நாம் ஆய்வு செய்யத்தான் வேண்டும். இந்த ஆய்வின் மூலம் மனிதத்திற்கு நாம் வழி திறந்து விடுகிறோம். இதன் காரணமாகத்தான் நாம் ஆய்வு செய்கிறோம். மதம் என்பது கடவுளின் தொடர்பில் வைத்து எல்லாவற்றையும் வளைக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. கடவுள்தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார். உயிரினங்கள் தொடங்கி மனிதர் வரை எல்லோரையும் படைத்தவர் கடவுள். ஒரு நோக்கத்தோடுதான் அவர் இந்தப் படைப்பைச் செய்திருக்க முடியும். எல்லா உயிரினங்களுக்கும் எல்லா வாய்ப்பு களையும் வழங்கியிருக்கிறார். நல்வராகவோ தீயவராகவோ வாழ்வதற்கான சுதந்திரத்தையும் கடவுள் தந்திருக்கிறார். உயிரினங்களின் செயல்பாடுகள் கடவுளைப் பாதிப்பதில்லை. அவர் எல்லாவற்றையும் கடந்து நிற்கிறார். இப்படித் தொடங்கிக் கடவுள் குறித்து மதம் ஒவ்வொன்றும் தனக்குரிய முறையில் வேறுபட்ட விளக்கங்களைத் தருகிறது. கடவுளை ஒப்புக் கொள்ளாத மதங்களும் அந்த இடத்தில் எல்லாம் வல்லதாக அறம் என்பதையோ, வினை என்பதையோ பொருள் அல்லது இயக்கம் என்பதையோ முதன்மைப்படுத்துகின்றன. பொருளுக்கு இயக்கம் இல்லை. சடப்பொருளுளிலிருந்து இயக்கம் தோன்ற முடியாது. உயிர் இயக்கம் தந்தது கடவுள். ஆன்மா என்பதில் கடவுள் தங்கியிருக்கிறார். இறுதியில் எல்லா ஆன்மாக்களும் கடவுளை வந்து சேர வேண்டும். இறைவனை வந்தடைய வேண்டுமென்றால் துன்பங்களை ஏற்றுக்கொண்டு தவம் செய்து தீமைகளிலிருந்தும் பிறகு நன்மைகளிலிருந்தும் விலகி நிற்க வேண்டும். வினைகளிலிருந்து இப்படி விடுபடும்போதுதான் உயிர் இறைவனை அடைய முடியும். இப்படி சொல்லும் மதங்களும் இருக்கின்றன. இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவு பல வகைகளில் அமைகிறது. இறைவனும் உயிரும் ஒன்று; இறைவனும் உயிரும் வேறு வேறு; இரண்டுக்குமிடையில் ஊடாட்டமும் உண்டு. இப்படியும் சில நிலைப்பாடுகள். இறைவன் கருணை மிக்கவன். பல வடிவங்கள் தரிப்பவன். உயிர்களோடு உறவாடுபவன். அவதாரங்களை எடுத்து உயிர்களை ஈடேற்றுபவன். ஓர் அறிவுயிர் எனத் தொடங்கி ஆறறிவு வாய்ந்த மனிதனாகும் போதுதான்

இறைவனை உணரும் அறிவு வாய்க்கிறது. இறைவனை அறிவதே கல்வியின் பயன்.

இவ்வாறெல்லாம் மதங்கள் மனித வாழ்வை மையப்படுத்தி பிரபஞ்ச அளவில் உறவு கொண்டனவாய் இயங்குகின்றன. சுருக்கமாகச் சொன்னால் அறிவியலின் பெரு வளர்ச்சிக்கு முன்பு மத்திய காலம் அல்லது இருண்டகாலம் என்று சொல்லப்படுகிற காலம் முழுவதும் மனித அறிவின் குவிமையமாக இருந்தது மதம்.

3. மேற்குலகில் பதினைந்து பதினாறாம் நூற்றாண்டுகளில் அறிவியலும் தொழில் புரட்சியும் பெரும் வளர்ச்சி கண்டன. அதுவரையில் அறிவின் குவி மையமாக இருந்த மதம் அறிவியலுக்கு இடம் கொடுத்துப் பின்னடைவுக்கு உள்ளாயிற்று. முன்பு பிரபஞ்ச இயக்கம்- உயிர்களின் தோற்றம் - வளர்ச்சி- மனித வாழ்வில் இன்ப துன்பங்கள் முதலிய அனைத்தையும் மதம் தனது நெறியில் விளக்கியது. பரிணாமம் என்ற விதிமுறை கொண்டு, பிரபஞ்ச இயக்கம் முதலிய அனைத்தையும் அறிவியல் இப்போது விளக்கத் தொடங்கியது. மனிதர்களின் இன்ப துன்பங்கள் பொருளியல் சிக்கல்களால் ஏற்படுகின்றன. இவற்றைத் தீர்க்கும் வகையில் அரசியல் செயற்பட வேண்டும். பிரபஞ்ச இயக்கம் முதற்கொண்டு மனித வாழ்க்கை வரை எத்தனையோ புதிர்களில் கடவுள் தங்கியிருந்தார். இந்தப் புதிர்களை அறிவியல் மெல்ல மெல்ல அவிழ்த்துவிடும். இப்படியெல்லாம் அறிவியக்கம் வளர்ச்சி பெற்ற நிலையில் மதத்தின் ஆதாரங்கள் கேள்விக்குள்ளாகின. அதுநாள் வரை மத குருமார்தான் அரசியல் களத்திலும் அதிபதியாக இருந்தனர். இப்பொழுது மதம் வேறு அரசியல் வேறு என்ற பிரிவினை ஏற்பட்டது. மதத்தின் எல்லை இப்பொழுது தேசம் என்ற அளவில் குறுகியது. கல்வி, மருத்துவம், அறிவியல். முதலிய அனைத்தும் மதத்தின் எல்லைக்குள் இருந்து விடுபட்டன. பிறப்பு இறப்பு முதலியவை இப்பொழுது கடவுளால் தீர்மானிக்கப்படுவதாக இல்லை. இப்படித் தொடங்கிய மாற்றங்கள் மேற்குலகிலிருந்து அனைத்துலகிலும் தொடர்ந்து பரவின. இன்னும் இந்தப் போக்கு தொடர்கிறது.

4. இப்பொழுது எல்லாவற்றையும் நாம் மறு ஆய்வுக்கு உட்படுத்துகிறோம். மதங்கள் இல்லாமல் மனிதன் வாழவில்லை. தன்னுடைய வாழ்வைப் புரிந்து கொள்வதற்காகத்தான் சூழலைப் புரிந்து கொள்ள வேண்டியவனாகிறான். இதற்காகத்தான் இயற்கை

முதலியவற்றை உண்டாக்கிய பிரபஞ்சத்தைப் புரிந்தவனாகிறான். தன் வாழ்வுக்குரியதாக உலகச் சூழலை அவன் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இத்தகைய முயற்சியின் ஒரு நெறியாகத்தான் மதம் என்பதை அவன் கண்டறிந்தான். மனிதன் தான் கடவுளைக் கண்டுபிடித்தான். இவன் கண்டுபிடித்த கடவுள் இவனைப் போலத்தான் பெரியதாக - பேரறிவு உடையதாக- பெரும் கருணை உடையதாக இருந்தார். இக்கடவுளுக்குப் பேரறிவு தேவை; பெரும் கருணை தேவை; வானமும் கதிரவன் நிலா முதலியனவும் நிலம், கடல் , மழை முதலியனவும் இவன் வாழ்வுக்கு ஆதாரங்கள். காற்றும் நீரும் தீயும் இவனுக்கு இன்றியமைதாவவை. கருவிகளும் படைப்புகளும் இல்லாமல் இவன் இல்லை. தாயும் தந்தையும் குருவும் இல்லாமல் இவன் இல்லை. இவை அனைத்தும் இவனைப் படைக்கின்றன. மனிதன் கண்டறிந்த கடவுளுக்குள் இவை அனைத்தும் இயங்குகின்றன. எதற்கும் ஒரு தோற்றம் இருந்தாக வேண்டும். ஆகவே எல்லாவற்றிற்கும் முன்பிருந்தவர் கடவுள். இவர்தான் எல்லாவற்றையும் படைத்து இருக்கிறார். அழிவு என்பதனுள்ளும் ஆக்கம் இருக்கிறது. மனிதன் கண்டறிந்தது இப்படியொரு தர்க்கம். இந்தத் தர்க்கம்தான் கடவுளையும் படைத்தது. இந்த தர்க்கம் இறைவன் தந்த தர்க்கம் என இவன் சொல்லிக் கொண்டாலும், தன் வாழ்வியல் அனுபவங்கள் என்ற வரையறைக்குள் தான் இந்த தர்க்கத்தைப் படைத்துக் கொண்டான். இந்த தர்க்கம் போதாதென்றாலும் இந்தத்தர்க்கமே இவனைத் தொடர்ந்து படைக்கிறது. இயற்கையின் கருணையில்லாமல் இவனால் வாழ முடியாது. வாழ்வியலுக்குள் சில சமயம் இவன் குரூரமாக நடந்து கொள்கிறான். - தண்டிக்கப்படுகிறான் நன்மை தீமை என்ற முரணுக்குள் சிக்கித் தவிக்கிறான்.கடவுளோடு ஒரு பிசாசும் இவனுக்குத் தேவைப்படுகிறது. கடவுளுக்கும் இந்தப் பிசாசுக்கும் என்ன உறவு இருக்குமென்று சிந்திக்கிறான் மாற்றி மாற்றிப் போட்டு இந்த உறவை வரையறை செய்கிறான்; குழம்புகிறான்.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம்பிறகு அவன் விடை கண்டறிவது என்பது ஒருபுறம் இருக்கட்டும். முன்னைய இருண்ட காலச் சூழலுக்குள் வெளிச்சமாய் இருந்தவர் கடவுள்! அருளாக-அறிவாக இருந்தவர் கடவுள். இயற்கையை- இயக்கத்தை இப்படித்தான் கடவுளாக அவன் கண்டறிந்தான். பிரபஞ்சம் மட்டுமல்ல, தன்னைப் படைக்கிற சமூகமும் பல்வேறு உறவுகளும் கடவுள் தன்மை உடையவை. இவற்றுள் கடவுள் இயங்குகிறார். கடவுள் என்பது மூடத்தனத்தின் விளைவு அல்ல;

அறிவின் விளைவு; அறிவின் ஆக்கம். இந்தக் கடவுளுக்குள் இருந்தவன் மனிதன். மனிதனை மையப்படுத்தித்தான் கடவுளை, மதத்தை, கோயிலை, வழிபாட்டை, சடங்குகளை, மந்திரங்களை திருவிழாக்களை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இப்பொழுது சொல்லலாம். மதத்திற்குள் இருக்கும் மனிதத்தை நம்மால் இன்று விடுவித்துப் பார்க்க முடியும். கடவுள்தான் எல்லாவற்றையும் படைத்தார். தன் குழந்தைகளுக்கு எல்வாவற்றையும் வழங்கினார் என்று மதம் சொல்லும் போது, இயற்கை- இந்த உலகம் எல்லோர்க்கும் உரியது என்பதாக நாம் புரிந்து கொள்ள முடியும். சமத்துவம் என்பதனுள்தான் நம்முள் கடவுள் ஆட்சி தழைக்க முடியும். இயற்கையோடு நாம் ஒன்றியிருக்கிறோம். இயற்கைக்குள் நாம் இருக்கிறோம். கடவுளுக்குள் நாம் இருக்கிறோம். கடவுள் நமக்குள் இருக்கிறார். நமக்குள்ளும் இறைவனை எழுப்பிக் கொள்ள முடியும். இறைவனுக்கு நாமும் திருக்குமாரன் ஆக முடியும். தூதுவராகமுடியும். இப்படியெல்லாம் தான் மனத்திற்குள் இருக்கும் மனிதத்தை நாம் பெறுகிறோம். இன்று வளர்ந்துள்ள வரலாற்றறிவும் சமூகவியல் அறிவும் மதம் குறித்த இந்தத் தெளிவை நமக்கு ஏற்படுத்த முடியும்.

நிறுவனமாக்கப்பட்ட மதம் இந்த மனிதத்தைத் தனக்குள்ளிருந்து வெளியேற்றிவிட்டு மதவாதமாகிவிடுகிறது. இப்படியெல்லாம் மதம் குறித்த விளக்கம் தருவதை மதவாதம் ஏற்காது. குருமார்களென்றும் புரோகிதர்களென்றும் நாங்கள் இருக்கும்போது மதத்திற்கு நீ விளக்கம் தரமுடியாது. வேத நூல்களுக்கும் நான்தான் விளக்கம் சொல்லத் தகுதியுடையவன். கோயில்களையும், சிலைகளையும் நான்தான் நிறுவுகிறேன். கடவுளின் அருளைப் பெற்று நான்தான் உங்களுக்கு வழங்குகிறேன். மண்டியிடுவதும், வணங்குவதுமே உங்கள் கடமை. நீங்கள் தவறு செய்கிறீர்கள் உங்களைக் கடவுள் தண்டிக்கிறார். உங்கள் பாவங்களைக் கழுவக் கடவுளிடம் மன்றாடுங்கள். காணிக்கை களைக் கொடுங்கள். இப்படியெல்லாம் சொல்வார் குருமார் - புரோகிதர். இறையருளைப் பெற்றவன் அரசன்; செல்வமுடையவன். இவர்களை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர்களின் ஆளுகையை நீங்கள் மதிக்க வேண்டும் - இப்படியும் குருமார்கள் சொல்கிறார்கள்.

உடைமையாளரோடும் அரசியலாளரோடும் இப்படி மதம் ஒத்து இயங்குவதை நாம் புரிந்து கொள்ள முடியும். மதத்தினுள்ளும் வர்க்கப் போராட்டம் நடைபெறுகிறது என்று எங்கல்சு கூறியதை இப்படித்தான் புரிந்து கொள்ள முடியும். மதத்திற்குள் இருந்து ஆதிக்கம் செய்பவர்கள்-

அவர்களால் அடிமைப்படுத்தப்படுபவர்கள் ஆகியவர்களுக்கிடையில் இப்போதும் உராய்வுகள் நேர்கின்றன. மதத்திற்குள் எப்பொழுதும் கலகங்கள் நடைபெறுகின்றன. மதம் மனிதனுக்கு ஒளியை வழங்குவதற்கு மாறாக இருளை வழங்குவதை வேறு எப்படி விளக்க முடியும்? மதவாதம் முன்னுக்கு வரும்போது மனிதம் தடுமாறுகிறது; சீர்குலைகிறது; கதறுகிறது. மதவாதிகள் கடவுளை சிறைபிடித்து வைத்திருக்கிறார்கள். தங்கள் மொழியில் அவரைப் பேச வைக்கிறார்கள். தங்களைப் போல அவரையும் பெருமைப்படுத்துகிறார்கள். அலங்காரம் செய்கிறார்கள். மக்களிடமிருந்து அவரைப் பிரித்து வானத்தில் வைக்கிறார்கள். பெரிய கோவிலை உருவாக்கி அவற்றில் வைக்கிறார்கள். ஆரவாரத்தோடு அவருக்கு அலங்காரம் செய்கிறார்கள். அவரை எந்த அளவிற்கு உயர்த்துகிறார்களோ அந்த அளவுக்கு மக்களைத் தாழ்த்துகிறார்கள்; மக்களைப் பூச்சிகளாக்குகிறார்கள் ; குற்றவாளிகளாக்குகிறார்கள். அவர்கள் உண்பது உறங்குவதுகூடக் குற்றப்பட்டியலில் சேர்த்து விடுகிறார்கள். புலன் இன்பம் பாவம் என்கிறார்கள். சுய சிந்தனை தவறு என்கிறார்கள். தாங்கள் கற்றுக் கொடுத்த மந்திரங்களைத்தான் அவர்கள் திரும்பத் திரும்ப ஆயிரம் முறை சொல்ல வேண்டும். இப்படியெல்லாம் சொல்பவை மதவாதம். இறைவனிடமிருந்து மக்களை பிரித்து வைப்பவர்கள் மதவாதிகள்.

மதவாம் நமக்கு வேண்டாம். மதத்தை ஆழமாக நம்மால் புரிந்து கொள்ள இயலுமானால் அதனுள்ளிருந்து மனிதத்தை மேம்படுத்தலாம். இவ்வகையில்தான் மதங்களுக்கிடையிலுள்ள முரண்பாடுகள் தீரும். சமத்துவமும் சகோதரத்தத்துவமும் பெருகும். உடைமையாளரோடும் ஆதிக்கவாதிகளோடும் ஒத்துழைக்கும் மதவாதம் நமக்கு வேண்டாம். இறைவனை நமக்குள் தேடுகிறோம். கண்டடைகிறோம். இறைவனை நமக்குள் விடுவிக்கிறோம். நமக்கு நாமே விடுதலை வழங்கிக் கொள்கிறோம். உலகை, வாழ்வை இப்படித்தான் நாம் உரிமைப்படுத்துகிறோம்.

11

வேண்டாம் மதவாதம்

மத நல்லிணக்கம் என்று பேசும்பொழுது மதம் என்பதையும் மதவாதம் என்பதையும் வேறுபடுத்திப்பார்க்க நமக்குத் தெரிய வேண்டும்.

பெரும்பாலான மதங்கள் கடவுளை ஒப்புக் கொள்கின்றன. சமணமும் பௌத்தமும் கடவுளை ஏற்பதில்லை. ஆன்மா என்ற கருத்தை பௌத்தம் மறுக்கிறது. எனினும் பௌத்தம் ஒரு மதம்தான். ஆன்மா குறித்து அழுத்தமாகப் பேசுகிறது சமணம். கடவுள் நிலைக்கு அறத்தை பௌத்தம் உயர்த்துகிறது. சார்வாகம் தவிர எல்லா மதங்களும் மோட்சம்-முக்தி குறித்து அக்கறை கொண்டுள்ளன. இதற்காக வாழ்வியலில் சில, பல அறநெறிகளை எல்லாச் சமயங்களும் வற்புறுத்துகின்றன.

உருவ வழிபாட்டை ஒப்புக் கொள்ளாமலும் ஒரு மதம் இருக்க முடியும். கடவுளுக்கு ஆயிரம் பெயர்களைச் சில மதங்கள் சொல்லுகின்றன. மதத்திற்கு மதம் வழிபாட்டு முறைகளும் சடங்குகளும் வேறுபடுகின்றன. எல்லா மதங்களும் அன்பை வற்புறுத்துகின்றன.

சாங்கியம் வைசேடிகம் - மீமாம்சம் முதலிய தரிசனங்கள் தொடக்கத்தில் கடவுளை ஒப்புக் கொள்ளவில்லை. நாளடைவில் இவற்றினுள்ளும் கடவுள் கருத்து இடம் பெறலாயிற்று. புத்தனும் அருகனும் கூடக் கடவுள் ஆயினர்.

இப்படி மதம் என்பதற்குச் சில வரையறைகள் காணலாம். வரலாற்றுச் சூழல் முதலியவற்றுக்கு ஏற்றவாறு மதங்கள் தோன்றுகின்றன; மாறுகின்றன. எல்லாக் காலத்திலும் மதங்களை மறுக்கின்ற கருத்துக்களும் இருந்தே வந்திருக்கின்றன.

மதவாதம் என்றால் என்ன என்பது குறித்து இப்போது பார்க்கலாம். எங்கள் மதம்தான் உண்மையான மதம். எங்கள் கடவுள்தான் உண்மையான கடவுள் என்று தொடங்கிப் பேசுவது மதவாதம்.

எங்கள் வழிபாட்டு முறைதான் கடவுளுக்கு உகந்தது, முக்தியை நீங்கள் சொல்கிற நெறியில் பெற முடியாது என்பது மதவாதம்.நீங்கள் வைத்து வழிபடுவது தெய்வமாக இருக்க முடியாது. பிசாசைத்தான் வழிபடுகிறீர்கள் என்பது மதவாதம். இப்படி விவாதம் தொடங்கி பேச்சின் கடுமை கூடி ஆயுதங்கள் கொண்டு விவாதத்துக்கு முடிவு கட்டலாம் என்பது மதவாதம். உலக வரலாற்றில் மதவாதம் செய்த கொடுமைகளுக்கு அளவு இல்லை.

நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்று தொடங்கும் மதம், மக்கள் மத்தியில் வேற்றுமைகளைக் கிளப்ப முடியாது. ஏற்றத்தாழ்வுகளை ஏற்க முடியாது. சாதி வேற்றுமைகளைப் பாராட்ட முடியாது. கடவுளின் குழந்தைகள் என்ற முறையில் நாம் அனைவரும் சகோதரர்கள், சமத்துவமானவர்கள் என்று நம்பும் மனிதர், நிறவேற்றுமை கற்பிக்க முடியாது. நாடுகளுக்கிடையே கூடப் பகைமையை ஊட்ட முடியாது. கடவுள் நமக்காகத்தான் எல்வாவற்றையும் படைத்தார் என்று நம்புகிறவர்கள் எல்லாவற்றையும் எல்லார்க்கும் உரியதாகத்தான் செய்வார்கள். பிரபஞ்சம் முதலியவற்றைப் படைத்தவர் ஒருவராகத்தான் இருக்கமுடியும் என்று நம்பும் மனிதர், ஆயிரம் பெயர்களில் ஆயிரக்கணக்கான முறைகளில் வழிபாடுகள் நடைபெற்றாலும் இவற்றைக் கொண்டு தமக்குள் வேற்றுமை பாராட்ட மாட்டார்கள். எல்லா உயிர்களும் இறைவன் படைப்பு என்று நம்புவார்கள். உயிர்க் கொலைகளில் - வன்முறைகளில் ஈடுபடமாட்டார்கள். வழிபாட்டுக்கு முதன்மை தருவதைக் காட்டிலும் இவர்கள் எல்லா உயிர்களுக்கும் அன்பு செய்வார்கள். கடவுள் இல்லையென்று சொல்பவர்களிடமும் இவர்கள் வேற்றுமை பாராட்ட மாட்டார்கள். எல்லா மனிதரும் கடவுளை அவரவர் மொழியில் வழிபாடு மேற் கொள்வதை இவர்கள் ஏற்பார்கள். எல்லோரிடமும் கடவுள் தன்மையைக் காண்பவர்கள்

யாரையும் ஒடுக்கமாட்டார்கள். எத்தகைய பொருளையும் அதிகாரத்தையும் போற்றமாட்டார்கள்.

ஆனால் மதவாதம் பேசுகிறவர்கள் என்னவெல்லாம் செய்வார்கள் என்பதை நாம் இங்கு விவரிக்க வேண்டியதில்லை. இவர்கள்தான் கோயிலைப் பெரிதாக எடுக்க வேண்டும் என்பவர்கள். கடவுளுக்கு உடைமை வேண்டும்; நலம் வேண்டும்; வருமானம் வேண்டும் என்பவர்கள் கடவுளுக்கு பெரிய அளவில் விழாக் கொண்டாட வேண்டும். கடவுளுக்கு ஏராளமான வல்லமைகளை கற்பிப்பவர்களும் இவர்கள்தான். கடவுளுக்காக நாம் எதையும் செய்ய வேண்டும் என்பது மதவாதம். மன்னர்களின் வடிவில் கடவுளைக் கண்டவர்கள் மதவாதிகள். மாற்று மதத்தவரைக் கொன்றொழிப்பது நம் கடவுளுக்கு உகந்த செயல் என்பவர்கள் மதவாதிகள். மாற்று மதத்தவரின் நாடுகளையும் கோவில்களையும் கொள்ளையடித்தவர்கள் மதவாதிகள். உண்மையை ஆராய்ந்து பார்த்தால் மதவாதிகளுக்கு மதம் என்றால் என்னவென்று தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். அன்பே கடவுள் என்ற உண்மையை இவர்கள் அறியமாட்டார்கள். எங்கும் எதிலும் யாவரிடத்தும் கடவுள் இருக்கிறார் என்பதை இவர்கள் ஏற்கமாட்டார்கள். இயற்கையின் எல்லா ஆற்றல்களினுள்ளும் கடவுள் செயல்படுகிறார் என்பதைக்கூட இவர்களால் ஏற்க முடியாது. கடவுள் கருணை மிக்கவர். தம் குழந்தைகளை அவர் கொல்லமாட்டார் என்பது இவர்களுக்குப் புரியாது. எல்லார்க்கும் உரியது இந்த உலகம் என்றால் இவர்கள் ஏற்கமாட்டார்கள். உடைமைகளும் அதிகாரங்களும் கடவுள் அருளால் வந்தவை என்று நம்பி உடமையாளர்களிடமும் ஆதிக்கவாதி களிடமும் இவர்கள் கடவுளைக் காண்பார்கள். கடவுள் பெயர் சொல்லிவரும் இவர்கள் காலில் விழுந்து பணிவார்கள். மதங்களும், கடவுளர்களும் வரலாற்றுச் சூழலில்தான் தோன்றுகின்றன என்ற வரலாற்றை இவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இவர்களுக்கு உடைமைகள் வேண்டும்; உயர்ந்த பதவிகள் வேண்டும்; ஏற்றத் தாழ்வுகள் வேண்டும்; சாதிகள் வேண்டும்; ஆதிக்கமும் அடிமைத்தனமும் வேண்டும். கடவுளிடம் கூட அடிமைகளாகத்தான் நடந்து கொள்வார்கள். புரோகிதர்களை இவர்கள் போற்றுகிறார்கள். நாம் மீண்டும் சொல்லலாம்; மதம் நமக்குத் தேவையில்லை, வரலாற்றில் மதங்கள் இன்னும் நெடுங்காலத்திற்கு இருக்கும். மதம் என்பதே மூடத்தனம் என்று சொல்வதில் பொருள் இல்லை; வரலாற்றுச் சூழலில் தோன்றியவை மதங்கள். சடங்குகள் இல்லாமல் எந்த இனமும்

வாழவில்லை, ஏற்றத்தாழ்வோடுதான் வரலாறு இதுவரை வந்திருக்கிறது. கடவுள் என்ற கருத்தாக்கத்தினுள்ளும் மனிதரின் ஆர்வங்கள், ஆசைகள் முதலியவற்றின் பெருக்கத்தைத்தான் நாம் காண்கிறோம். கதிரவன் முதலிய இயற்கை ஆற்றல்கள் நம்மைப் படைக்கின்றன. நம்மை வாழ்விக்கின்றன .இவற்றின் உயர் ஆற்றலை உள்ளடக்கியதாகத்தான் கடவுள் என்ற கருத்தாக்கமும் அமைந்திருக்கின்றது. சமூகத்தில் நெருக்கடிகள் அதிகரிக்கும் போதேல்லாம் கடவுள்களும் புதிய பிறப்புக்கள் எடுக்கின்றன. முக்தி மோட்சம் என்ற கருத்தாக்கங்களினுள் மனித விடுதலைக்கான கருக்கள் இருக்கின்றன. இதயமற்ற உலகின் இதயமாக மதம் இருக்கிறது. மதத்தினுள்ளும் வர்க்கப் போராட்டத்தை நாம் காண முடியும். அபின் என்று சொல்லி மதத்தை நாம் குறைத்துப் பேச முடியாது. கடவுளை வழிபட்டால்தான் கடவுள் அருள் கிட்டும் என்றுகூட மதங்கள் சொல்வதில்லை. உயிர்களுக்கு அன்பு செய்பவனிடம் கடவுள் வந்து தங்கியிருப்பார் என்று மதங்கள் கூறுகின்றன. மதத்தோடு என்றும் ஒரு உரையாடல் தேவையென்பதை நாம் மறுக்க வேண்டியதில்லை.

மதம் தனக்குள் இறுகும்போதுதான் மதவாதம் தோன்றுகிறது. உடைமையாளர்களும் அரசு அதிகாரங்களும் மதத்தைத் தம்வசப்படுத்தும் போது மதவாதம் தோன்றுகிறது. மத நிறுவனங்கள் என்பனவும், உடமைகளையும் அதிகாரத்தையும் இம்முறையில்தான் சேர்த்துக் கொள்கின்றன. ஆதிக்க சக்திகளுள் ஒன்றாக மதவாதம் இப்படி உருவாகிறது. மதவாதம் மக்களுக்கு விடுதலை தராது. அதிகாரத்தோடு மதவாதிகள் ஒத்துழைக்கின்றனர். இவர்கள் தம் அதிகார எல்லைக்குள் கடவுளையும் முடக்கி வைக்கின்றனர். இவர்கள் நலன்களுக்காகக் கடவுள் சேவை செய்ய வேண்டும். இந்தக் கடவுள்களைக் காட்டிலும் புரோகிதர்கள் வலிமையுடையவர்கள். இந்தக் கடவுளர்களுக்குச் சாதி வேண்டும், பலி வேண்டும், மனிதர்க்கிடையில் சண்டை வேண்டும். இந்தக் கடவுளர்களின் புரோகிதர்கள் அனைத்தையும் மதவாத எல்லைக்குள் வைத்துப் பார்க்க முடியும். மதவாதம் இன்று அரசியல் வடிவம் எடுத்துள்ளது. இந்த அரசியலோ மதவாதமோ சமுதாய நலத்துக்கு எதிரானது. மத நல்லிணக்கம் விரும்புவோர் மதவாதங்களை மறுக்கத்தான் வேண்டும். சமத்துவம் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை வளர்க்கும். உடைமையாளர்களுக்கும் ஆதிக்காவதிகளுக்கும் சேவை செய்கிற மதவாதம் நமக்கு வேண்டாம்.

12

தமிழ்த் தேசியம் - மீள்பார்வை

தமிழ்த் தேசியம் குறித்து, அண்மைக்காலத்தில் தமிழகத்தில் மீண்டும் ஓர் அலை எழுந்துள்ளது. மைய அரசில் இறுதியாக நடந்த பேராயக் கட்சியின் ஆட்சியும் , தமிழகத்தில் அம்மையாரின் ஆட்சியும் இணைந்து நடத்திய கெடுபிடிகள், தமிழ்த் தேசியம் என்ற எதிர்வினை எழுச்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது என்று கூறலாம். இத்தகைய கெடுபிடிகளிலிருந்து தமிழகம் தன்னை விடுத்துக் கொள்ளும் சாத்தியம். இல்லையென்று பலரும் கருதிய சூழலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் சில பத்தாண்டுகளாக தமிழகத்தில் தொடர்ந்து நிலவும் தமிழ்த் தேசிய உயர்வெழுச்சிக்கும் குறைவு எதுவும் நேர்ந்து விடவில்லை. கூட்டணி அரசு என்பது கூட்டாட்சி ஆக மலர்ச்சி பெறும் என்பதற்கும் தடயங்கள் இல்லை. மாநிலத்திற்கு சில் அதிகாரங்கள் கூடி வரலாம் என்பதைத் தவிர இந்தக் கூடுதல் அதிகாரம் கூட்டாட்சி என்று ஆகிவிடாது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சி என்ற கோட்பாடு இடம் பெறவில்லை . அரசியல் அமைப்பு சட்டமன்றத்தில் தொடக்கத்தில் கூட்டாட்சி பற்றிச் சில நம்பிக்கைகள் எழுந்த பொழுதிலும் இறுதி வடிவில் கூட்டாட்சி என்பது ஒதுக்கப்பட்டது. கூட்டாட்சி என்ற அமைப்பில் மாநிலங்கள் என்பவை தனிக்கொடியோடும், தனி அரசியல் அமைப்புச் சட்டத்தோடும் ஏற்றுக்

கொள்ளப்பட்டிருக்கும். மொழி என்ற அடிப்படையில் அமைந்த தேசிய இனங்கள் கூட்டாட்சியின் உறுப்புகளாகஇடம் பெற்றிருக்கும். இறையாண்மை உடைய தேசிய இனங்கள் தம் இறையாண்மையில் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதன் மூலமே மைய அரசு உருவாகும். அனைத்துத் தேசிய இனங்களின் மொழிகளும் , மைய அரசின் அலுவல் மொழிகளாக அமைந்திருக்கும் . இந்தி மொழி அல்லது ஆங்கிலத்தோடு கூடிய இந்தி மொழி என்ற கேள்விக்கே இடம் இருந்திருக்காது. ஆளுநர் என்பவர் மைய அரசின் முகவராக இருக்க முடியாது. வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்கள் இந்திய அரசுப் பணியாளர்களாக தமிழகத்திற்கு வரவேண்டியதில்லை. தமிழகத்தின் எல்லைகளுக்குள் செயல்படுகிற மைய அரசின் அலுவலகங்கள் தமிழில்தான் நடைபெறும். மாநிலங்களும் மைய அரசும், முற்றான சமத்துவம் உடைய அரசுகளாகத் தான் அமைந்திருக்கும். எந்த மாநிலமும் தேவைப்படும் பொழுது மைய அரசிலிருந்து ஒரு பொது வாக்கெடுப்பின் மூலம் பிரிந்து செல்ல முடியும்.

கூட்டாட்சி என்பதன் கோட்பாட்டை இப்படி இன்று விவரித்துச் சொல்வதற்கான காரணம் என்ன என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை. இப்படி ஒரு கூட்டாட்சி அமைப்பு ஏற்பட்டிருக்குமானால் காஷ்மீரிலோ, பஞ்சாபிலோ தேசிய இன எழுச்சிகள் வெடித்திருக்க முடியாது. தமிழகத்திலும் தேசிய உணர்வு ஒரு கனலாக தொடர்ந்து நிலைபெற்றிருக்க முடியாது. கடந்த 50 ஆண்டுகளுக்கு இடையில் அரசியலமைப்புச் சட்டத்தில் தமக்குத் தரப்பட்டிருந்த உரிமைகளை, மாநில அரசுகளிடமிருந்து மைய அரசு பறித்தது என்று தொடங்கிப் பல காரணங்களை அடுக்கலாம். கடைசியாகச் சந்தைப் பொருளாதாரம் என்ற முறையில் இந்தியாவின் மைய அரசு தன் இறையாண்மையை அன்னிய சக்திகளின் காலடியில் அடகு வைத்தபொழுது பாராளுமன்றத்தையோ, மாநில அரசுகளையோ அது கலந்து கொள்ளவில்லை. இப்படி ஒரு முற்றான அதிகாரத்தை மைய அரசு செயல்படுத்தியது. மைய அரசில் இடம் பெற்றிருந்த பேராயக் கட்சியின் குறுகிய நலன்களுக்காக மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. இவற்றோடு இன்னும் ஒரு முக்கியமான காரணம் இந்தியாவில் சில மாநிலங்கள், தொழில் வளர்ச்சியில் தொடர்ந்து முன்னேற்றம் பெற, இதற்காக வேறு சில மாநிலங்கள் தாம் சுரண்டப்படுவதை இந்திய தேசியம் என்ற மாயையை நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இந்தியாவின் கிழக்குப் பகுதியிலுள்ள

அஸ்ஸாம் முதலிய மாநிலங்கள் எந்த வகையிலும் இந்திய தேசியத்தின் முத்திரையை ஏற்கக்கூடியனவாகவும் இல்லை.

பிரிட்டிஷ் அரசு, இராணுவத்தின் மூலம் இந்தியாவின் பல பகுதிகளை ஓர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தது. 47-48 இல் இந்தியா என்ற ஒரு தேசம் சுதேச சமஸ்தானங்களையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக விடுதலைப் போராட்டம் நடைபெற்றபொழுது, இந்திய தேசியம் என்ற ஓர் உயர்வு ஏற்பட்டது. இந்தியா முழுவதிலும் நெடுங்காலமாக நிலவிய பல்வேறு கலாச்சாரங்களுக்கிடையில் நிலவிய சில ஒத்த கூறுகள் விடுதலைப் போராட்டத்தை ஒட்டி முன்னிலைப்படுத்தப்பட்டன. 47-க்குப் பின்னர் உருவான மைய அரசு, மாநிலங்களின் ஒட்டு மொத்தமான வளர்ச்சியை முதன்மைப்படுத்தியிருக்குமானால் இந்திய தேசம் என்ற ஒத்த உணர்வு மேலும் வளர்ச்சி பெற்றிருக்கக்கூடும். கூட்டாட்சி என்பதனோடு சோசலிசம் என்ற செயல்பாடுகளும் கடைப் பிடிக்கப்பட்டிருக்குமானால் இந்திய தேசம் மேலும் வலுப்பட்டிருக்கும். இப்படி எதுவும் நடைபெறவில்லை.

கங்கை -காவிரி இணைப்பு நடைபெறவில்லை. தொழில் வளர்ச்சி பெருகிய அளவிற்கு வேளாண்மைத் துறையில் வளர்ச்சியில்லை. பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் துறை நலன்களுக்காகச் செயல்பட்டன. சோசலிசத் திட்டங்கள் தொடர்ந்து கைவிடப்பட்டன. இந்தி மொழியின் வளர்ச்சிக்காக மைய அரசு செயல்பட்டது. அரசு நிர்வாகம் பல மடங்கு தன்னைப் பெருக்கிக் கொண்டது. நகரங்கள் பெருகின. கிராமங்கள் அழிந்தன. மேல்நிலைக் கல்வி வளர்க்கப்பட்ட அளவிற்கு தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி வளர்க்கப்படவில்லை. முதலாளியைப் போலவே மத்திய தரவர்க்கமும் பெருகியது. ஒவ்வொரு ஆண்டும் வறுமைக் கோட்டிற்கு கீழே தள்ளப்படுவர் தொகை பெருகியது. கட்சிக்காரர்கள் கொள்ளைக் காரர்களாக மாறினர். மக்களாட்சி தொடர்ந்து பலவீனப்படுத்தப்பட்டது. இந்திய தேசியத்திற்குப் பெரும் அளவிலான மனிதர்கள் அன்னியர்களாயினர்.

இத்தகைய சூழல்தான் தேசிய இன உணர்வெழுச்சிக்கு ஆதாரமாக அமைகிறது. தமிழ்த் தேசிய இன உணர்வெழுச்சிக்கு இந்தப் பொதுப் போக்குதான் காரணம். மைய அரசின் இந்தி மொழி தமிழைத் தாழ்த்தியது. தமிழ் பெற வேண்டிய இடங்களை ஆங்கிலம் தொடர்ந்து

கைப்பற்றுகிறது. தமிழ், தமிழின் பெருமை, தமிழின் தொன்மை என்றெல்லாம் தமிழ்ப்பற்றாளர்கள் பேசுவதை, வடக்கத்தியாரோ, இந்திய தேசியத்தை ஒரு முகமாக ஏற்றுக் கொண்ட அரசியல் கட்சிகளோ மதிக்கவில்லை. பொருட்படுத்தவில்லை. தமிழகத்தில் நெடுங்கால வரலாற்றுக் காரணங்களோடு தோன்றி வளர்ந்த திராவிட இயக்கத்தை, இந்திய தேசியம் பேசியவர்கள் மதிக்கவில்லை. இந்தியாவில் வேறு எந்த மொழியைக் காட்டிலும் நீண்ட கால வரலாறும், மேன்மையும் தனித்தன்மையும் உடையது தமிழ் மொழி என்ற உண்மை அவர்களுக்குக் கசப்பாக இருந்தது. இந்திய மொழிகள் அனைத்திற்கும் மூலமொழி சமக்கிருதம்தான் என்ற அவர்களது பொய்மையை தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ள இயலாது. அன்றியும் சமக்கிருதத்திற்கு நிகரானது தமிழ் மொழி. ஆரியம் வருவதற்கு முன்னர் இது இந்தியா முழுவதும் பரவியிருந்தது. தமிழ் நாகரிகம் என்பது சிந்துவெளி நாகரிகம், திராவிடர்களின் நாகரிகம், இந்த உண்மைகள் எல்லாம் இந்தியாவிள் அரசியல் அறிஞர்களினால் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்குமேயானால், தமிழ்த் தேசத்திற்கான தன்னுரிமையை அவர்கள் மறுத்திருக்க முடியாது.

தமிழ் நாகரிகத்தின் தொன்மை முதலியவற்றை மறைத்ததோடு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதன் மூலம் தமிழ் தேசத்தின் குரலை ஒடுக்கவும் அவர்கள் முனைந்தார்கள். இதுநாள் வரை செவ்வியல் மொழி தமிழ் என்பதை அவர்கள் ஏற்கவில்லை. தமிழிசையின் தனித்தன்மை, தமிழ் மருத்துவத்தின் தனித்தன்மை முதலியவற்றைக்கூட அவர்கள் ஏற்கவில்லை. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகவே இந்திய தேசியம் என்ற உணர்வுக்கு ஆட்பட்ட தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை, தமிழ் உணர்வு உடையவர்களுக்கு எதிராகக் கிளப்பி விடுவதிலும் அவர்கள் வெற்றி கண்டனர். ஞானபீடம் முதலிய பரிசுகள் தமிழ் இலக்கியத்திற்குத் தொடர்ந்து மறுக்கப்படுவதை, இதன் தொடர்பில் வைத்து நாம் புரிந்து கொள்ள முடியும்.

அண்மைக் காலத்தில் மேலெ எழுந்திருக்கிற தமிழ்த் தேசிய உணர்வு எழுச்சியை கடந்த ஒரு நூற்றாண்டு கால வரலாற்றுச் சூழலில் வைத்துச் சிலவற்றைக் கூறினோம். அண்மைக்கால வரலாற்றோடுதான் நாம் நெருக்கமாக இருக்கிறோம் என்பது மட்டுமல்லாமல், இந்த அண்மைக்கால வரலாற்றின் வழியே நமக்குள் வந்திருக்கின்ற தமிழ்த் தேசிய உணர்வின் வரலாறு மேலும் நீண்டது - நெடுங்காலத்திற்குரியது என்பதையும் நாம் நினைவில் கொள்வது தகும். தமிழுக்கும்

ஆரியத்திற்கும் நெடுங்காலமாக நிலவிய எதிர்நிலையை இங்குக் குறிப்பிடலாம். பக்தி இலக்கிய எழுச்சியின் போது தமிழின் மேன்மை பாடப்பெற்றது. சங்ககாலம் முதல் கொண்டு உலகியல் வாழ்வுக்கு முதன்மை தரும் போக்கு தமிழ் இலக்கியத்தில் ஆழமாகப் பதிந்திருப்பதைக் காண்கிறோம். சங்க இலக்கியம் உலகியல் வாழ்வுக்குத்தான் முதன்மையைத் தந்தது. வள்ளுவர் பாடிய அறம் என்பது உலகியலை மேன்மைப்படுத்தும் அறம். கண்ணகி செய்த புரட்சியோ, மணிமேகலை மேற்கொண்ட தவமோ, உலகியலின் செம்மை கருதியதுதான். சித்தர் பாடல்களை மையப்படுத்தினால் வரலாறு முழுவதும் தமிழ் மக்களின் அறச் சார்பை நன்கு புரிந்து கொள்ளலாம். வள்ளலார் முதலியவர்கள் வழியே, பெரியாருக்கும் பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் நாம் வந்து சேர முடியும். இன்று சாதி வேண்டாம், மதம் வேண்டாம் பார்ப்பனர் ஆதிக்கம் வேண்டாம் என்றெல்லாம் நாம் கூறுகிறோம். இன்றைய நமது இலக்குகளை நெடுங்காலத் தமிழ் வாழ்வின் சாரமென்று நாம் மதிப்பிட முடியும்.

வள்ளுவரின் ஒப்புரவு என்பது இன்றைய நோக்கில் சோசலிச அறம். எந்த வடிவத்திலும் ஆதிக்கம் நமக்கு வேண்டியதில்லை. இப்படி ஒரு நாகரிகம் தான் நமக்குத் தேவை. இடைக்காலத்தில் வந்து சேர்ந்து ஏற்றத்தாழ்வுகளை நாம் ஒப்புக்கொள்ள மறுக்கிறோம். ஆழ்ந்து பார்க்கும்பொழுது தமிழ்த் தேசியமென்று இன்று நாம் பேசுவதற்கான மெய்யியலின் அடிப்படைக் கூறுகளை தமிழ் வரலாற்றிலிருந்து நாம் பெறுகிறோம். தமிழ் தேசம் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற குரல் புறநானூற்றில் ஒலிக்கிறது. தமிழ் மன்னர்களை இகழ்ந்தவர்களின் மீது செங்குட்டுவன் படையெடுத்துச் சென்றான். இப்படிச் சிலம்பு சொல்லும் கற்பனை கதைக்கு அடியிலுள்ள உண்மையை நாம் காண வேண்டும். தமிழன் பிற தேசங்களை வென்றான் என்ற பெருமிதம் நமக்கு இன்று உடன்பாடில்லை, அனைத்துத் தேச மக்களோடும் சமத்துவ உணர்வோடும் வாழ்வதில்தான் மனித மேன்மை அடங்கியிருக்கிறது. பிறரை நாம் அடிமைப்படுத்தினால் பிறர் நம்மை அடிமைப்படுத்து வதையும் நாம் ஏற்க வேண்டியிருக்கும். சுரண்டலோ ஒடுக்கு முறையோ நமக்கு எந்த வடிவிலும் தேவையில்லை.

வரலாற்றின் அனுபவங்களை நமக்குள் சேகரித்துக் கொண்ட நிலையில்தான் தமிழ்த் தேசியம் என்று இன்று நாம் பேசுகிறோம். தமிழ்த் தேசியத்தின் இயற்கையை நாம் அன்னியர் கைகளில் ஒப்படைக்க விரும்பவில்லை. பசுமைப் புரட்சி, சந்தைப் பொருளாதாரம்,

ஏற்றுமதிக்கான உற்பத்தி என்ற பெயர்களில் தமிழ் நிலத்தின் நிலம், நீர் முதலிய இயற்கை வளங்களை நாம் இழந்து விடுவதை ஏற்கமாட்டோம். வணிகர் மற்றும் முதலாளிகளின் தேவைக்காகக் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான இயற்கையை நாம் அழித்துவிட முடியாது . இதைப் போலவேதான் தமிழ்க் கல்வி என்பது நம் வாழ்வுக்கு இன்னொரு ஆதாரம், தமிழ்தான் நமக்குப் பயிற்று மொழி - ஆட்சி மொழி - மைய அரசோடு உறவு கொள்வதற்குரிய அலுவல் மொழி. தமிழ் நம் அறிவை வளர்க்கும். உயிரை வளர்க்கும். தமிழ் வரலாறு நமக்குள் பதிவது தமிழக் கல்வி மூலம்தான். தொன்மையான நாகரிகம் என்ற முறையில் மேன்மையான மனித வாழ்வுக்குரிய பண்பாட்டுச் செழுமையைத் தனக்குள் தாங்கியிருப்பது தமிழ் மொழி. நுகர்வியத்திற்கு இடம் கொடுத்து உலகளவில் சிதைந்து கொண்டிருக்கின்ற மனித நாகரிகத்தை ஒரு மீள் பார்வைக்கு உட்படுத்தக்கூடியதாகவும், மனித நாகரிகத்தை மீண்டும் மேம்படுத்துவதற்குரிய ஊற்றாகவும் திகழ வல்லது தமிழ் மொழி.

தமிழ்த் தேசியத்தின் ஆட்சி என்பது தமிழ் நாகரிகத்தின் ஆட்சி; மனித நாகரிகத்தின் ஆட்சி ; இவ்வளவையும் உள்ளடக்கித்தான் த்மிழ் தேசியம் என்ற குரலை இன்று நாம் மீண்டும் ஒலிக்கிறோம்.

சுமார் 10 கோடி தமிழர்கள் இன்று உலகில் வாழ்கிறார்கள். உலகில் ஒரு தனி நாடு என்ற முறையில் வாழத் துகுதியுடையவர்கள் தமிழர்கள். தனி நாடு என இருந்தால் மட்டுமே தமிழரின் குரல் உலக அரங்கில் ஒலிக்கும். தன்னுரிமையா விடுதலையா என்பதை தமிழ் மக்கள் இன்று தீர்மானிக்கவில்லை; வரலாறு அதைத் தீர்மானிக்கும். தமிழ்த் தேசியம் என்ற குரல் இன்று மீண்டும் எழுவதற்கான எத்தனையோ காரணங்களில் ஆற்றல் மிகுந்த ஒரு காரணம் தமிழ் ஈழத்தின் எழுச்சி. இதற்காக ஈழத் தமிழர்களுக்குத் தமிழ் மக்கள் நன்றி சொல்ல வேண்டும்.

13

மார்க்சியத்திற்கு அழிவு இல்லை

1. மார்க்சியம் உலகத்திற்கு அறிமுகமாகி 150 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இடைக்காலத்தில் பாரீஸ் கம்யூன், இரஷ்யப் புரட்சி, சீனப் புரட்சி, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கியூபா, வியட்நாம் என்று எத்தனையோ வகைப்பட்ட வரலாற்று அனுபவங்கள் நேர்ந்துள்ளன. அரசியல் நடைமுறை என்பது மட்டுமல்லாமல் தத்துவம், கலை இலக்கியம், கலாச்சாரம், வரலாறு என்ற முறையிலும் மார்க்சியத்தின் அடிப்படையில் ஏராளமான ஆய்வுகள் உலக அளவில் நடைபெற்றுள்ளன. மார்க்சியத்தின் அடிப்படைகள் என்று அறியப்பட்டன வற்றினுள்ளும் கேள்விகள் எழுந்துள்ளன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இனியும் மார்க்சியத்தின் அடிப்படைகளுள் ஒன்றாக இருப்பதற்கில்லை என்ற முறையில் அனுபவங்கள் நேர்ந்துள்ளன. அடித்தளம், மேல் கட்டுமானம் என்பனவற்றில் எப்பொழுதும் அடித்தளத்திற்கே அழுத்தம் என்பது தொடக்கம் முதலே கேள்விக் குள்ளாகியிருக்கிறது. வரலாற்றுக் கட்டங்கள் தோறும் கலாச்சாரம் மாறிவரும் என்பதற்கு மேலும், வரலாற்றுக் காலம் முழுவதும் தொடரும் கலாச்சாரக் கூறுகள் குறித்த சிந்தனை ஏற்பட்டுள்ளது. முதலாளியத்தை உள்வாங்கியதாக மார்க்சியம் இருக்க முடியாது என்ற புரிதல் மேலும் மேலும் அழுத்தம் பெறுகிறது.

மார்க்சியம் குறித்த புதிய வகையான புரிதல் இன்று நமக்குத் தேவைப்படுகிறது. சோவியத் யூனியன் தகர்வை அடுத்து சோசலிசம் குறித்து நாம் மறு ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. முதலாளிய / ஏகாதிபத்திய நாடுகளின் பொருளியல் முதலியவற்றை நகல் எடுக்கும் முயற்சியை சோசலிசம் என்று சொல்ல முடியாது. சோவியத் யூனியனில் தகர்ந்தது முதலாளியத்தை உள்வாங்கிக்கொண்ட சோசலிசமே அன்றி மார்க்சியம் அல்ல. மாபெரும் இராணுவம், மாபெரும் தொழிற்கூடங்கள் மற்றும் அணைக்கட்டுகள், மாபெரும் அரசுக் கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்குவதன் மூலம் தொழிலாளர்கள் மற்றும் உழவர்கள் மீது கடுமையான சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் திணிக்க வேண்டி இருந்தது. தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்பட்டன. உழைப்பாளர் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டன. உளவுத்துறை அனைத்து அதிகாரங்களையும் பெற்றதாக இருந்தது. கட்சியதிகாரம் கொடிகட்டிப் பறந்தது. கட்சிக்குள்ளும் தனி நபரின் இறுதி அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட இயலாது. கட்சியின் முன்னணித் தோழர்கள் ஒழிக்கப்பட்டனர். ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டியிருக்கிறது என்பதற்காக இத்தனைப் பெரிய சர்வாதிகாரத்தை ஒரு தேசத்தால் தாங்க இயலாது.

2. இந்த சர்வாதிகாரத்தை இறுதியாகக் களைந்தவர் கோர்பச்சேவ். ஏற்கெனவே நிலவிய பொருளியல் மற்றும் அரசியல் கட்டமைப்பை இனியும் தொடர்வதற்கில்லை என்ற நிலையில் தான் கோர்பச்சேவ் அன்று நிலவிய கட்டமைப்பைக் கலைத்தார். அன்றைய நிலையில் பொருளியல் வளர்ச்சிக்கே இடமில்லாமல் முழு அளவில் தேங்கி விட்டது. உழவர் பண்ணைகளில் மின்சாரம் இல்லை. டிராக்டருக்கு உதிரி உறுப்புகள் இல்லை. எங்கும் ஊழல் மயம். ஆகவே தான் எல்லாவற்றையும் திறந்து போட்டார். முன்னர் நடைபெற்ற கொடுங்கோன்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன. தொழிற்சாலை, நிர்வாகம் முதலியவற்றில் மறுசீரமைப்பை ஏற்படுத்தினார்.

இவற்றோடு கோர்பச்சேவ் நின்றுவிடவில்லை. அணு ஆயுதம், ஏவுகணை ஆகியவற்றில் அமெரிக்காவை எதிர்பார்க்காமல் தானே முன்வந்து குறைப்பைச் செய்தார். சோசலிசம் நிலவுவதாகச் சொல்லப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மக்களின் எழுச்சியை ஒடுக்குவதற்காக அந்த நாடுகளில் நிறுத்தப்பட்ட சோவியத் இராணுவம் இனி உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது என்று அறிவித்தார். இந்த அறிவிப்பை அடுத்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிலவிய சர்வாதிகார அரசுகள் சடசடவெனச் சரிந்தன.

சோவியத் யூனியன் இனியும் தன்னைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் அந்நிய நாடுகளின் மூலதனம் இல்லாமல் ஒரு மாதம்கூடத் தாக்குப்பிடிக்க இயலாது என்ற நிலையில், இலண்டனில் நடைபெற்ற ஜி-7 நாடுகளின் மாநாட்டிற்கு கோர்பச்சேவ் சென்றார். செல்வதற்கு முன்னர் அவருடைய நிதியமைச்சர் ஓர் ஆலோசனை வழங்கினார். சோவியத் யூனியனுக்குள்ளேயே கட்சி அதிகாரிகளும் அரசு அதிகாரிகளும் கள்ளத்தனமாகக் குவித்து வைத்திருக்கிற ஏராளமான செல்வத்தை சோவியத் அரசால் பறிமுதல் செய்ய முடியுமென்றால் அன்னியர்களின் மூலதனம் இங்கு அறவே தேவைப்படாது என்றார். தேசத்தின் அதிபர் என்றாலும் இதை அவரால் செய்ய முடியாது. செய்ய முயன்றால் ஒருநாள் கூட அவர் அரசு நிற்காது. ஆகவே இலண்டன் மாநாட்டிற்குச் சென்று மண்டியிட்ட கோர்பச்சேவ் வெறுங்கையோடு திரும்பினார்.

3. சோவியத் யூனியனில் அதுவரை நிலவிய அரசியல், பொருளியல் கட்டமைப்பை சோசலிசம் என்று கூறமுடியாது. எல்லோருக்கும் கல்வி, மருத்துவம், குழந்தைகளுக்கு வசதிகள் என்ற சில கூறுகளைத் தவிர ஒட்டுமொத்தமான கட்டுமானத்தை சோசலிசம் என்று கூறுவதற்கில்லை. அதிகார வர்க்கத்தின் போக்குக் குறித்து தொடக்க காலத்திலேயே லெனின் கவலைப்பட்டார். அதிகார வர்க்கத்தை அடக்க முடியாமல் ஸ்டாலினும் திணறினார். முதலாளிய வளர்ச்சி முற்றுப் பெறாத நிலையில் சோசலிசத்தைச் செயல்படுத்துவதிலுள்ள சிக்கல்கள் குறித்த புரிதல் லெனினுக்கு இருந்தது. லெனினால் செய்ய முடியாததை ஸ்டாலின் செய்து முடிக்க முனைந்தார். விளைவுகள் கடுமையாக இருந்தன. பிறிதொரு சமயம் பிரஸ்னேவிற் எழுதிய கடிதம் ஒன்றில் சல்சனிட்சன் இவ்வாறு குறிப்பிட்டார். "சோவியத் யூனியனில் 15 சதம் மக்களுக்கு சோசலிசத்தை உருவாக்குவதற்காக நாம் காடுகளை அழித்தோம். சுரங்கங்கள் தோண்டி கனிமங்களை எடுத்தோம்; பெட்ரோலியத்தை எடுத்தோம். இன்னும் எவ்வளவு காலத்திற்கு காடுகளும் கனிமங்களும் இருக்கும்? அனைவருக்கும் சோசலிசம் என்பது என்றாவது, எப்படியாவது சாத்தியப்படுமா?"

தொடக்கக் காலத்தில் எங்கெல்ஸ் இவ்வாறு எழுதினார். "பெருந்தொழிலும் சோசலிசமும் ஒத்துப் போகாது". பெருந் தொழில்கள் மட்டுமல்ல; அரசு, தொழில் முதலிய எத்தகைய பெரும் கட்டமைப்போடும் சோசலிசம் ஒத்துப் போகாது. பெரும் கட்டமைப்பை உருவாக்க மக்களை, இயற்கையைப் பலியிட நேரும்.

இப்படிப் பலியிட்டு 15 சதம் பேருக்கு என உருவாக்கப்படுவது சோசலிசமாகவும் இருக்க முடியாது.

எல்ட்சின் தன் நினைவுக் குறிப்புகளில் எழுதியவாறு சோவியத் யூனியனில் பல்வேறு மாநிலங்களிலுமுள்ள கட்சித் தலைவர்கள் மாஸ்கோவில் வந்து தங்குவதற்காக மாஸ்கோவில் மட்டும் 4500 மாளிகைகளை வைத்திருந்தார்கள். பெரும் முதலாளிகளும் கனவுகாண இயலாத அளவிற்கு எல்லா வகை வசதிகளையும் கொண்டவை இந்த மாளிகைகள். இதுதான் உண்மை நிலை என்றால் 85 சதம் மக்களுக்கு எப்போது சோசலிசம் வரும்? சோசலிசம் என்பது நுகர்வியத்தின் பெருக்கமா? முதலாளியத்திற்கு இது பொருந்தும். சோசலிசத்திற்கு இது எப்படிப் பொருந்தும்? வாழ்க்கை வசதிகளின் பெருக்கத்திற்காக - அதாவது கறியும் மீனும் மதுவும் எனத்தின்று உடல் கொழுப்பை வளர்ப்பதற்காக - இயற்கையை அழிப்பது எவ்வளவு காலத்திற்கு சாத்தியப்படும்? இது குறித்து எங்கெல்ஸ் விடுத்த எச்சரிக்கையை மார்க்சியர் எவரும் புறக்கணித்துவிட முடியாது.

4. அனுபவச் செறிவு மிக்க மாவோவின் சில கூற்றுகளை இங்கு நினைவுகூறலாம். உற்பத்திச் சக்திகளின் பெருக்கம் முதலாளியத்திற்கே வழிவிடும். உற்பத்திச் சக்திகளைக் காட்டிலும் உற்பத்தி உறவுகளுக்குத்தான் நாம் அழுத்தம் தரவேண்டும். பகை முரண்பாடுகளைப் போலவே நட்பு முரண்பாடுகளும் முக்கியத்துவம் உடையவை. முதலாளியமா? சோசலிசமா? எது இறுதியில் வெற்றி பெறும் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. நூறு மலர்கள் மலரட்டும். கலகம் செய்வது, நியாயமானது. கலாச்சாரப் புரட்சி ஒரு தடவை அல்ல - ஓர் ஆயிரம் முறை நடத்தப்பட வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியும் தவறு செய்யும். கட்சி செய்யும் தவறுகளை இறுதியில மக்கள்தான் களைய வேண்டும். தவறு செய்யும் தலைமைப் பீடத்தை மக்கள் தகர்த்தெறிய வேண்டும். மார்க்சியமும் பிற்போக்கான தத்துவம் என்று சொல்வதற்கான காலமும் வரும்; வரவேண்டும். வரலாறு மார்க்சியத்தையும் கடந்து செல்லும். இந்தக் கூற்றுகளோடு மக்கள் சீனத்தில் மளமளவென உருவாகி பின்னர் மாவோவுக்குப் பிறகு கலைக்கப்பட்ட கம்யூன்களையும் இங்கு நினைவு கொள்வோம்.

5. இவற்றோடு கிராம்சி முதலிய மார்க்சிய அறிஞர்கள் முன்வைத்த கோட்பாடுகளையும் ஆய்வுகளையும் நெஞ்சில் நிறுத்துவோம். கியூபா அனுபவங்கள் மிக முக்கியமானவை.

இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு மார்க்சியத்தைப் புதிய வரையறைகளில் நாம் கற்க வேண்டியிருக்கும்.

வரலாறு குறித்த மார்க்சியப் பார்வையின் அகலத்தையும் ஆழத்தையும் நாம் புறக்கணிக்க இயலாது. இயங்கியலை மேலும் ஆழமாகக் கற்பதற்கான வாய்ப்புகள் உண்டு. வர்க்கப் போராட்டம் என்பது மார்க்சியத்தின் மிக முக்கியமான ஆதாரக் கோட்பாடு. பொருளா? கருத்தா? எது முதல் என்ற ஆய்வில் பொருள் முதல்வாதம் அடங்குவதில்லை. பொருளும் கருத்தும் ஒன்றையொன்று ஊடுருவக் கூடியவை. மதம் மக்களுக்கு அபின் என்ற ஒற்றைப் பரிமாணத்தில் மதம் குறித்த மார்க்சிய ஆய்வு முற்றுப் பெறுவதில்லை. வர்க்கப் போராட்டங்களின் வழியே - வர்க்கப் போராட்டத்தைக் கடந்து செல்வதுதான் மார்க்சியம்.

வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவது என்பது முதலாளியமேயன்றி சோசலிசமாகாது. எளிமையான வாழ்க்கை முறைதான் எல்லோருக்கும் சாத்தியம். இந்த எளிய வாழ்க்கை முறையின் மூலம்தான் இயற்கையைக் காப்பாற்றி வைக்க முடியும். அமைப்புகளில்லாமல் இயலாது என்ற போதிலும் அமைப்பு களுக்குள் அதிகாரம் குவியக்கூடாது. முதலாளியத்தோடு ஒத்துழைக்கும் தொழிற்சங்க அமைப்புகள் மூலம் மார்க்சியத்தை முன்னெடுத்துச் செல்ல இயலாது.

மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியவர்களோடுதான் உலகிற்கு மார்க்சியம் அறிமுகமானது என்றாலும் வரலாற்றிற்குள் மார்க்சியத்தின் வேர்கள் ஆழமாக ஓடியிருக்கின்றன. எந்த நெடுங்கால மரபிற்குள்ளும் மார்க்சியத்தின் இழைகளைக் காணமுடியும். எந்தவகை ஆதிக்கத்திற்கும் எதிரானது மார்க்சியம். மனித விடுதலை தான் மார்க்சியத்தின் இலக்கு. ஆதிக்கம் என்பது ஒரு கட்டமைப்பு. இதற்குள் அகப்பட்டுள்ள மனிதன் தனக்குள்ளும் அந்நியமானவன். ஆதிக்கக் கட்டமைப்பிற்குள் இருந்து இவனை விடுவித்து மனிதனாக்குவது மார்க்சியம். தனியுடைமையும் அதிகாரமும் மனிதனைச் சுருக்கும்; திரிக்கும்; அழிக்-கும். இவற்றின் ஆதிக்கங்களிலிருந்து மனிதன் விடுதலை பெற வேண்டும். ஆணுக்குப் பெண் அடிமை என்பதும், உயர்சாதிக்காரனுக்கு இன்னொருவன் அடிமை என்பதும் உடைமைச் சமூகத்தின் கூறுகள்.

இப்படியெல்லாம் மார்க்சியம் குறித்த புதிய புரிதல்கள் இன்று சாத்தியம். இந்த வகை மார்க்சியத்திற்கு அழிவு இல்லை. மாவோவின் நெறியில் கற்பது இத்தகைய மார்க்சியம்.

சாதி வேண்டாம்; மதம் வேண்டாம்; சடங்குகள் வேண்டாம் என்று கூறிய தமிழ்ச் சித்தர்கள் நெறியில் மார்க்சியத்தை நாம் பயில முடியும். இந்த சித்தர்கள் உடைமைக்கும் அதிகாரத்திற்கும் எதிரானவர்கள். இந்த சித்தர் மரபை வள்ளுவருக்குள்ளும் கணியன்பூங்குன்றனுக்குள்ளும் காணமுடியும். வாழையடி வாழை எனத் தொடர்ந்து வரும் இந்த சித்தர் மரபில் பெரியாரையும் வைத்துக் காணமுடியும்.

தமிழ்ச் சூழலில் பெரியாரியமும் மார்க்சியமும் கைகோத்துக் கொள்ள முடியும். பெரியார் வழியே மார்க்சியத்தையும், மார்க்சியத்தின் வழியே பெரியாரியத்தையும் கற்பதுதான் தமிழ மக்களின் எதிர்கால வாழ்விற்கு, விடுதலைக்கு வழிவகுக்கும்.

தேசிய இனங்களின் தன்னுரிமை மற்றும் விடுதலை என்பது மார்க்சியத்திற்கு ஒத்த கோட்பாடுதான். தமிழன் தன்னை உலகில் நிலைநிறுத்திக் கொள்ள மார்க்சியம் இல்லாமல் முடியாது; பெரியாரியம் இல்லாமல் முடியாது. சந்தைப் பொருளாதாரம் என்ற பெயரில் உலக அளவில் சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் உச்ச அளவில் திணிக்கிற முதலாளியத்திற்கு மரண அடி கொடுக்கவல்லது மார்க்சியம் தவிர வேறில்லை.

நவீன அறிவியலும் தொழில் நுட்பமும் முதலாளியத்தின் படைப்புகள் என்று உரிமை கொண்டாடுவது ஒரு வெற்று மாயை. வரலாற்றின் வழியே கோடிக்கணக்கான மனிதர்களின் உழைப்பின் விளைச்சல்தான் நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள். இவற்றை மூலதனம் வசப்படுத்திக் கொண்டது என்பதனால் மூலதனத்திற்கு இவை உரிமையாகி விட முடியாது. எல்லாவற்றையும் தோற்றுவித்தவன் மனிதன். எத்தனை ஆயிரம் ஆண்டுகளின் வாழ்வும் வளர்ச்சியும் இந்த மனிதனைப் படைத்துள்ளன? இவனுக்கு இந்த உலகம் சொந்தம். இந்த மனித வரலாற்றிற்குள் ளிருந்துதான் மார்க்சியத்தை நாம் கண்டறிகிறோம். மார்க்சியத்தையும் மனிதனையும் வேறு பிரித்து அறிய முடியாது. இத்தகைய மார்க்சியத்திற்கு அழிவு இல்லை. முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சியத்தில் இருந்து மனித விடுதலையை உள்ளடக்கிய மார்க்சியத்தைக் கண்டெடுப்பது நம் கடமை

14

பொதுமை அறம் - நமக்கான கலாச்சாரம் - சில குறிப்புகள்

1. மனிதனை விலங்கிலிருந்து பிரிப்பது அவன் சேகரித்துக் கொண்ட கலாச்சாரம் - பண்பாடு. விலங்குக்குத் தன்னுணர்வு இல்லை. மனிதனுக்குத் தன்னுணர்வு உண்டு. தன்னை மனிதன் என்று உணர்கிறவன் அவன். அதாவது, தன்னை என்றும் மனிதனாக மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறவன். மனித நிலையிலிருந்து தான் சிதைகிற போது அல்லது மறைகிற போது மீண்டும் தன்னை மனிதனாக்கிக் கொள்ள முனைகிறவன்.

இயற்கையிலிருந்து இவன் தோன்றியவன். சமூகத்தில் இவன் மனிதனானான். இவனுக்கு வரலாறு உண்டு. இவனுக்கு உண்மையும், உணர்வையும் தருவது இயற்கை. உழைப்புத் திறனையும், அறிவையும், நற்பண்புகளையும் தந்தது சமூகம். இயற்கையின் உறவையும், சமூகத்தின் உறவையும் இவன் வெட்டிக் கொள்ள முடியாது. முன்னய வரலாறு இவனை இன்னும் புதிய ஆக்கங்களை நோக்கிச் செலுத்துகிறது.

ஓர் ஆழ்ந்த நோக்கில் பார்த்தால் இயற்கையினுள்ளும், சமூகத்துனுள்ளும், வரலாற்றினுள்ளும் இவன் இணைந்திருக்கிறான். இயற்கை, சமூகம். வரலாறு ஆகியவற்றுக்கும் மனிதன் என்ற இவனுக்கும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாத முறையிலும்; ஒன்றில் மற்றது ஊடுருவிச் செல்லும் முறையிலும்; ஒன்று

மற்றதை வளர்க்கும் முறையிலும்; ஒன்றின் ஆக்கத்தில் மற்றது தன்னை நிறைவு செய்து கொள்ளும் முறையிலும் உறவு இருக்கிறது. அல்லது உறவு இருக்க வேண்டும். இத்தகைய உறவுதான் மனிதனுக்கான உறவு. இந்தப் பண்புதான் கலாச்சாரம், பண்பாடு.

இது வெறும் இலட்சியம் அல்ல. வரலாற்றில் எந்தக் கட்டத்திலும் வரலாற்றைக் குறுக்கே தரித்துப் பார்த்தால், தோற்றத்திற்கடியில் இந்த உண்மை நீரோட்டமாய்த் தெரியும் - தெரிய வேண்டும்.

2. பொதுமைதான் மனித அறம் - மனிதக் கலாச்சாரம். இந்தப் பொதுமை வரலாற்றின் தொடக்கத்தில் இருந்து - இல்லை என்றே வைத்துக் கொண்டாலும் இந்தப் பொதுமையைச் சாதிக்கத்தான் வரலாற்றுக் காலம் முழுவதும் மனிதன் கனவு காண்கிறான், கற்பனைகள் செய்கிறான், இலக்கியம் படைக்கிறான். கலை அனுபவத்திற்குள் மனிதன் நெகிழ்ந்து விடுகிற பொழுது, இந்தப் பொதுமை குணத்தினுள் தன்னைக் காண்கிறான். இயற்கையின் முன்னிலையில் இவன் தன்னை நெகிழ்த்திக் கொள்கிறான். இலக்கியம் படைக்கிறான். காவியங்கள் படைக்கிறான். இவற்றின் மூலம் பொதுமையை, ஒரு பொதுச் சமூகத்தை, இந்தக் குணங்களைத் தாங்கிய மனிதர்களை, வீரர்களை இவன் தனக்குள் படைத்துக் கொள்கிறான். இவனது பொதுமைக் குணத்திலிருந்து இவன் படைத்துக் கொண்ட மதத்தினுள் பொதுமை என்ற கனவை வைத்திருக்கிறான். இயேசுவென்றும், புத்தம் என்றும் இவனது போற்றுதலுக்குரிய பெரியவர்கள் இந்தப் பொதுமைக் குணத்தின் விரிவாய்த் திகழ்ந்தார்கள். மனிதர்களுக்கிடையில் சமத்துவம் வேண்டுவது இந்தப் பொதுமைக்குணம். தன்னை அடிமைப்படுத்துவதை வெறுப்பது இந்த பொதுமைக்குணம். அடிமைத்தனத்திற்கு உட்பட மறுப்பது இந்த பொதுமைக்குணம். கிடைத்தது குறைவாயினும் பகிர்ந்து வாழ வேண்டும்; சமூகத்தின் பொது நன்மைக்காகத் தன் உயிரையும் துறக்கலாம். அடிமைத் தனத்திற்கும், அதிகாரத்திற்கும் சமூகத்தை உட்படுத்துகிறவன் சமூக மனிதனை அழிக்கிறான். மனிதன், தியாகி சமூகத்தின் உழைப்பைத் திருடுகிறவன் கொள்ளைக்காரன், திருடன் சமூகத்தின் பல களங்களும் இணைந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் சமூகத்தின் படைப்புத்திறன் உயரும்.

இப்படியெல்லாம் நம் கனவுகளை, கற்பனைகள், உணர்வுகளை உருவாக்குவது மனிதன் நெடுங்காலமாகத் தனக்குள் போற்றி வளர்த்திருக்கிற கலாச்சாரம் என்ற குணம்.

3. வரலாற்றில் மனிதன் தனக்குள் பிளவுபட்டான். ஓர் உருவகம் போல இப்படிச் சொன்னாலும் இதற்குள் ஆழ்ந்து பார்க்கும் பொழுது சில உண்மைகள் புலப்படும். மனிதன் உழைக்க வேண்டும். உற்பத்தியைப் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். தன்னையும், தன் சூழலையும் நிர்வாகம் செய்ய வேண்டும். தொலைதூரத்தச் சமூகத்தோடு உறவு வேண்டும். பொருட்களைப் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும். தன் இனத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். இயற்கைச் சூழலில் தன் உழைப்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் மனிதன் இருக்க வேண்டும் - வாழ வேண்டும். இப்படி வாழ வேண்டுமென்றால் மனிதன் தமக்குள் சகோதரராக, சமத்துவம் உடையவராக, சுதந்திரம் உடையவராக இருக்க வேண்டும். இதுதான் ஆரோக்கியமான சமூகத்திற்கு அடையாளம்.

இன்று இப்படி இல்லை. நெடுங்காலமாகவே மனித சமூகம் இப்படி இல்லை. வர்க்க வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், அரசு, தனி உடைமை, நிலப்பிரபுத்துவம், முதலாளியம், ஏகாதிபத்தியம், வணிகப்பெருக்கம், நகரியம் - இப்படி எவ்வளவோ வரலாற்றில் தோன்றி, பெருகி, மனிதனுக்கு இடையில் நிலவ வேண்டிய ஆரோக்கியமான உறவுகளை அழித்திருக்கின்றன. வரலாற்றில் இந்தப் போக்குகள் தோன்றாமல் மனித வளர்ச்சி சாத்தியம் தானா என்று கோட்டுக் கொள்ளலாம். சாத்தியம் இல்லை என்றே வைத்துக் கொண்டாலும், இவற்றிற்காக மனிதன் தன்னை இழக்க வேண்டியதில்லை. தன் ஆரோக்கியத்தை அழித்துக் கொள்ள வேண்டியதில்லை. கருவிகளை மனிதன் படைத்தான். இதே கருவிகள் மனிதனை அழிக்க வேண்டியதில்லை. மனிதனின் உற்பத்திக்கு ஆதாரம் இயற்கை. இந்த இயற்கையை அழித்தி பிறகு மனிதன் இல்லை. சமூக உறவுகளில்தான் இவன் மனிதனாகிறான். சமூக உறவுகள் சிதைகிறபொழுது, சின்னாபின்னப்பட்டு போகிறபோது, மனிதன் தன் ஆற்றல் அழிகிறான். தன்னை அழித்துக் கொள்கிறான். வரலாற்றின் சில சூழல்களில் இவன் அடிமைப்பட்டான். அடமிமைப்பட்டவன் தன்னை விடுதலை செய்வதற்கு மாறாக, அரசு அதிகாரத்திற்காகவும், முதலாளியப் பெருக்கத்திற்காகவும் தன்னைத்தானே அழித்துக் கொள்ள வேண்டியதில்லை. வரலாற்றில் சில சூழல்களில் இவன் தன்னைத் தானே விற்றுக் கொண்டவன். தன்னைத் திரும்பவும் பெற்றுக் கொள்வதற்கு மாறாக தன்னைத் தானே அழித்துக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் வரலாற்றில் மனிதன் தன்னை அழித்துக் கொள்கிற காரியத்தை,

மனிதனோடு சேர்ந்து இயற்கையையும் அழிக்கிற காரியத்தையும் ஏகாதிபத்தியமும், முதலாளியமும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றன. மனிதன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் இவற்றுக்குச் சேவகம் செய்ய முடியாது. இவற்றை அழித்தாக வேண்டும். போர் கூடாது. போர் ஆயுதங்கள் தேவை இல்லை. இராணுவம் தேவையில்லை. முதலாளியம் தேவையில்லை. அரச அதிகாரம் தேவையில்லை. இப்படியெல்லாம் இன்று மனிதன் பேச வேண்டும். ஆதிக்கத்தை எந்த வடிவத்திலும் நாம் அனுமதிக்க முடியாது. மனிதனை வெறும் பண்டமாக்கும் எந்தச் சூழலையும் நாம் ஏற்க வேண்டியதில்லை. மனிதன் தன்னை எதற்கும் அடிமைப்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. மனிதன் பிற உயிர்களுக்குத் தலைவனும் இல்லை. பிற உயிர்களோடு சேர்ந்து வாழ்கிறவன் மனிதன். மனிதனின் சாரம் அவனது பொதுமைக் குணம். இது மனிதனின் கலராச்சாரம்.

நகரங்கள் பெருக, நகர வசதிகள் பெருக, மனிதன் அழிகிறான். முதலாளியம் முதலிய போக்குகள் சிலரை ஏற்றி வைக்கும் பொழுதே, பலரைக் கீழே தள்ளுகின்றது. இது மனிதனை அழிக்கிற போக்கு. சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எனப் பலரை இந்தப் போக்கு ஆக்குகிறது. சிலர் அழகிலும், ஆடம்பரத்திலும், செல்வத்திலும் திளைப்பதற்காக இப்படிப் பலர் வறுமையிலும், சேற்றிலும், அவலத்திலும் அழிய வேண்டியதில்லை. மக்கள் மீது அடிமைத்தனத்தைத் திணிப்பதில் முதலாளியோடு, அரசியல்வாதியோடு மதத் தலைவனும் ஒத்துழைக்கிறான். இவர்களை நாம் அங்கீகரிக்க வேண்டியதில்லை.

4. வரலாற்றில் இந்தப் பொதுமைக்குணம் என்ற அறம், உழைக்கும் மக்களிடம் தொடர்ந்து இயங்குகிறது. உழைப்பவனுக்குத் தான் பிறர் துன்பம் புரியும். உழைக்கிறவனுக்குப் பகிர்ந்து கொள்ளத் தெரியும். தொழில்முறை உற்பத்தியைக் காட்டிலும், வெளாண்மை உற்பத்தியில் இயற்கையின் பங்கு இன்னும் அதிகமாக இருக்கத்தான் செய்கிறது. இயற்கையின் பங்களிப்பை அறிந்தவன் தான் விளைச்சலைப் பகிர்ந்து கொள்வான். நவீனத் தொழில்முறை, அரச அதிகாரம் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிற உழவர்களுக்கு சமூக நீதி பற்றிய உணர்வு இயல்பானது. அவர்கள் வாழ்நிலை, சமூகநீதி பற்றிய உணர்வை அவர்களுக்குள் தூண்டுகிறது. கைவினைஞர்களுக்கும் இத்தகைய மேன்மை புரியும். தாழ்த்தப்பட்ட மக்களைப் பொருத்த வரை இந்த நீதி சற்று தொலைவில் தான் இருக்கிறது. ஆனால் இவர்களுக்குத்தான்

சமத்துவம் என்பது அதிக அளவில் உயிர்ப்பைத் தருகிறது. இவர்கள் எல்லோர்க்குமே வாழ்க்கை எளிமையானது. எளிய வாழ்க்கை இவர்களுக்குப் போதும். இவர்கள் இன்னும் படைப்புத் திறன் உடையவர்களாகத் தான் இருக்கிறார்கள். பரம்பரையாகத் தொடர்ந்து வரும் சில கலைத்திறன்களை இவர்கள் கொண்டிருக்கிறார்கள். நாகரிக உலகம் இவர்களைப் பெருமளவு சுரண்டுவதன் மூலம் தன் அநாகரிகத்தைத்தான் வெளிப்படுத்துகிறது. நடுத்தர மக்கள் நீதி உணர்வு குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். நாளுக்கு நாள் இவர்களுக்கு வாழ்க்கை இன்னும் கூடதலான வசதிகளை நோக்கியதாக இருக்கிறது. கூடுதல் வசதிகளைத் தேடவதன் மூலம் அரசு அதிகாரத்திற்கும், வாணிகக் கலாச்சாரத்திற்கும் இவர்கள் அதிகமாகப் பலியாகிறார்கள். அறிவுத் திறனை இவர்கள் சேகரித்துக் கொள்கிற அளவுக்கு நற்குணங்களை / பண்பாட்டை இழந்து வருகிறார்கள். இவர்கள் பெறும் அறிவுத்திறன் என்பது கூட முதலாளியச் சக்திகளுக்குத் தம்மை அடிமைப்படுத்தத்தான் செய்கிறது என்ற புரிதல் இவர்களுக்கு இல்லை. ஆசிரியர் சமூகம் என்பது கூட இந்த மடமையில் தான் தன்னை அதிகமாக ஆழ்த்திக் கொள்கிறது. இன்ப நுகர்ச்சி என்ற வாழ்க்கை நோக்கு இவர்களிடம் விடுதலை உணர்வை ஒதுக்கி விடுகிறது. இவர்கள் மூலம் தான் முதலாளியமும், ஏகாதிபத்தியமும் முழுவல்லமை உடையதாக மாறிக் கொண்டிருக்கிறது. எல்லோருமாகச் சேர்ந்து சோசலிசம் என்ற கனவை, தேவையை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் ஆதாரமாகிய நீதி உணர்வை அழிக்கிறார்கய். சமூக உணர்வை அழிக்கிறார்கள். தன்னலம் தவறல்ல, ஊழல் செய்வது தேவையானது தான், அடிமைத்தனம் ஏதாவது ஒரு விதத்தில் உலகில் இருக்கத்தான் செய்யும் - இப்படி அநீதிகளை இவர்கள் நீதிப்படுத்துகிறார்கள்.

ஏகாதிபத்தியவாதிகளும், முதலாளிகளும் அனைத்து மக்களின் உழைப்பின் விளைவில் பெரும்பகுதியை அனுபவிக்கிறார்கள். இவர்கள் தேவைக்காகத் தான் இயற்கை அழிக்கப்படுகிறது. இவர்கள் உண்பதும் அதிகம். துய்ப்பதும் அதிகம். வீணாக்குவது அதிகம். இவர்கள் தேவைக்காகத்தான் உணவும், பிற பொருள்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவர்களின் நுகர்வுத் தேவை தீர்ந்த பிறகு தான் மற்றவர்களின் தேவை கவனிக்கப்படும். வரலாற்றுக் காலம் முழுவதையும் சேர்த்து வைத்துப் பார்த்தால் இவர்கள் செய்த அக்கிரமங்கள் அதிகம். விஞ்ஞான வளர்ச்சியை இவர்கள் தூண்டி இருக்கிறார்கள் என்பது ஓரளவுக்குத் தான் உண்மை. விஞ்ஞான

வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் திரிபுக்கு இவர்களே முழுமையான காரணம். மனித சமூகத்தின் அறிவு வளர்ச்சியைத் தம் தேவையை ஒட்டி முடமாக்கியிருக்கிறார்கள். கலைப் படைப்புகளை இவர்கள் உற்பத்தி செய்யவில்லை. ஆனால் கலை வளர்ச்சியை நமக்கு இவர்கள் அடிமைப்படுத்தி இருக்கிறார்கள். வரலாற்றில் இவர்களுக்குச் சார்பாக இன்று சொல்வதற்கான நியாயம் எதுவுமில்லை. இயற்கை வளங்களைத் தொடர்ந்து அழிப்பதன் மூலம் பெரும்பாலான மக்களின் வாழ்வுக்கான ஆதாரத்தை அழிக்கிறார்கள். மக்களின் தேவைகளுக்காக போர்கள் நடைபெறுவதில்லை. இராணுவம், காவல்துறை, நிர்வாகத்துறை முதலியவற்றில் மக்களை இழுத்து, மேய்த்து அவர்களின் அறிவையும், பண்பையும் அழிப்பவர்கள் இவர்களாதான். மத்தியதா வர்க்க அறிவாளிகளுக்கு இந்த உண்மை புரியும். முதலாளி, ஏகாதிபத்தியவாதி ஆகியவர்களின் அதிகாரத்தையும், ஆற்றல்களையும் இவர்களாதான் தக்க வைக்கிறார்கள். முதலாளிகளை அறிவும், ஆற்றலும் மிக்கவர்கள் போல காட்டுபவர்கள் இவர்கள்தான். அதிகாரம், நுகர்வு வெறி, திமிர்த்தனம் ஆகியவற்றைத் தவிர முதலாளியிடம் சொல்லிக் கொள்வதற்கு வேறு குணங்கள் இல்லை. முதலாளிக்குச் சேவகம் செய்வது அரசு. திரும்பவும் அரசு அதிகாரத்தைத் தக்க வைப்பவர்கள் இந்த நடுத்தர வர்க்கத்தினர்தான். இவர்கள் வரலாற்றில் வைத்து நம்மைப் பற்றி உணர்வு கொள்ளவில்லை.

தொழில் துறையில் அறிவியல் நுட்பங்களும், தானியங்கிச் செயல்பாடுகளும் தொடர்ந்து அதிகரித்து வருவதன் மூலம் வரலாற்றில் தொழிலாளிகள் ஒதுக்கப்படுகிறார்கள். தொழிலநுட்பங்கள் தொடர்ந்து அதிகரிப்பதன் மூலம் நிபுணர்களுக்குத் தேவை அதிகமாக ஏற்படுகிறது. பிரம்மாண்டமான முறையில் தொழில துறைக்கு மூலதனம் சேர்கிறது. வேளாண்மை முதலிய துறைகள் கூட விஞ்ஞானமயப் படுத்தப்படுகின்றன. கணிப்பொறியின் ஆளுமை அதிகமாகிறது. மக்களின் உழைப்புத்திறனைக் காட்டிலும் மானியங்கி எந்திரங்களின் உற்பத்தித் திறன் அதிகமாகிறது. இன்று நிபுணர்கள் தேவை. மக்கள் தேவையில்லை. நிபுணர்கள் நிர்வாகம் செய்ய, முதலாளியம், ஏகாதிபத்தியம் தேவை. ஆகவே ஏகாதிபத்தியம் சர்வ வல்லமை உடையதாகவும், மக்கள் வல்லமையற்றவர்களாகவும் இன்று தெரிகிறார்கள். இயற்கைச் சக்தி பெருமளவு ஏகாதிபத்தியவாதிகளால் இன்று அழிக்கப்படுகின்றன. வரலாற்றின் இறுதிக் கட்டத்திற்கு வந்து விட்டதைப் போன்ற இன்றைய நிலைமை. ஏகாதிபத்தியத்தை இன்று

முற்றாக அழித்தாலொழிய மக்களுக்கு வாழ்வு இல்லை. நடுத்தர மக்கள் இதை அறியவில்லை. இதுதான் இன்றைய வரலாற்றின் அவலம்.

5. ஏகாதிபத்தியம் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கான ஒரு கலாச்சாரத்தைப் பரப்புகிறது. இது போலவே முதலாளியமும் தனக்கான கலாச்சாரத்தைப் பரப்புகிறது. அரச அதிகாரம் தனக்கான ஜனநாயகம் என்ற கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. பொருளியல் துறையில் சந்தைப் பொருளாதாரம் ஒரு கலாச்சாரம். இவை அனைத்துமே ஆதிக்கவாதிகளின் கலாச்சாரம். சமூகத்தை எவ்வாறு ஒழுங்கமைப்பது என்பது பற்றி இவர்கள் தொடர்ந்து அறிவை உற்பத்தி செய்கிறார்கள். கல்வி, மருத்துவம், கலை ஆகியவற்றை உருவாக்குகிறார்கள். நுகர்வு முறைகளை உருவாக்குகிறார்கள். பொழுது போக்கு, திரைப்படம் ஆகியவற்றை உருவாக்குகிறார்கள். பொதுமை என்ற அறம் இவர்களிடம் இல்லை. பொதுமை அறத்தை அழிப்பது தான் இவர்கள் நோக்கம். மனித வளர்ச்சி இவர்கள் கலாச்சாரத்தில் உள்ளடக்கமாக இல்லை. மனிதன் இவர்கள் நோக்கம் அல்ல. இவர்கள் தமக்குள்ளும் மனிதர்களை அழிக்கிறவர்கள். இவர்களுக்குள் கிளர்ச்சி அதிகம். உணர்ச்சிகள், கொந்தளிப்புகள் அதிகம். ஆரவாரங்கள் அதிகம். இவர்கள் மனித நாகரிகத்தை அழிப்பவர்கள். வரலாற்றை அழிப்பவர்கள். இவர்களின் கலைச் செயல்பாடு முதலியவற்றைக் கலாச்சாரம் என்று நாம் கூட ஏற்க வேண்டியதில்லை. இவர்கள் இயந்திரங்களைக் கொண்டு, தொழில் நுட்பங்களைக் கொண்டு, அதிகாரத்தைக் கொண்டு தம்மைத் தாமே அழித்துக் கொள்கிறார்கள். இவர்களை இனி மனிதர்களாக மாற்ற முடியுமென்று தோன்றவில்லை. இவர்களுக்குச் சேவை செய்பவர்களும் தம்மை அழித்துக் கொள்பவர்கள். இவர்கள் அனைவரிடமிருந்தும் உலகத்தை விடுவிக்க வேண்டும். இத்தகைய விடுதலை நோக்கம் தான் இன்றைய மக்கள் கலாச்சாரத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். இதை நோக்கி அறிவாளிகள், ஆசிரியர்கள், விஞ்ஞானிகள் ஆகியவர்களைத் திரட்ட வேண்டும்.

மக்கள் கலையை வளர்ப்பதற்காக அரசு சொல்வதை நாம் மறுக்க வேண்டும். மக்கட் சார்புடையதாக அரசு தன்னைக் காட்டிக் கொள்வதற்காகவே கலாச்சார விழாக்களை நடத்துகிறது. கூலி கொடுத்துக் கலைஞர்களை அமர்த்திக் கொள்கிறது. மக்களோடு இணைந்திருப்பதுதான் மக்கள் கலை. மக்களிடமிருந்து பிரித்து அதன் தரத்தை நுட்பப்படுத்துகிற பொழுது அது மக்கள் கலையாக இருக்க முடியாது. திரைப்படம் இன்று மக்களை அவர்கள் கலைகளிடமிருந்து

பிரித்து வருகிறது. தொலைக்காட்சி இதைத்தான் செய்கிறது. இசையை அனுபவிப்பதென்பது இசைப்பது அல்லது பாடுவது. விளையாட்டை அனுபவிப்பதென்பது விளையாடுவது. இன்று தொலைக் காட்சியில் அல்லது திரைப்படத்தில் பார்ப்பதன் மூலம் இவற்றை ரசிப்பது என்ற செயல்பாடு ஊக்குவிக்கப்படுகிறது. இதன் மூலம் மக்களின் செயல்பாடு குறைகிறது. மக்கள் அருவருப்பப் படுத்தப்படுகிறார்கள். கலை வியாபாரிகளுக்கு அடிமைப்படுகிறார்கள். நுகர்வு வெறி இவர்களுக்குள் இப்படிச் செயல்படுகிறது. இதன் மூலம் படைப்பு செயல் என்பது, அனைவர்க்கும் உரியது என்ற நிலை தோன்றுகிறது. கலை வியாபாரிகள், மீண்டும் முதலாளியச் சக்திகள், ஏகாதிபத்தியச் சக்திகள், அருவ வடிவில் கலை மனிதனை சாந்தப்படுத்துவது எனத் தொடங்கி அவனுக்குள் கோபதாபங்களைக் குறைத்து, சமூக அநீதி பற்றின உணர்வை அவனிடமிருந்து விலக்குகிறது. இவன் மேலும் மேலும் அதிகமாக கலை நுகர்வுக்கு ஆளாகிறான். அறிவியல், கணிதம் ஆகியவற்றினுள் இவன் பெறுகிற நுட்ப அறிவோடு, இவனது கலை நுட்ப அறிவும் சேர்கிறது. இந்த அறிவைத் தொடர்ந்து திரட்ட இவனுக்கு வாழ்க்கை வசதிகள் பெருக வேண்டும். இவன் மக்களுக்கு எதிர்நிலையில் செல்பவன்.

6. ஒவ்வொரு நாளும் வரலாறு மறு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த உண்மையை ஆளும் வர்க்கம், வரலாற்றுக்கு ஆதார சக்தியான மக்களிடமிருந்து பல முறைகளைக் கடைப்பிடித்து மறைத்து விடுகிறது. மக்கள், பாமரராய், குருடர்களாய், அறிவற்றவர்களாய், ஆற்றல் அழிந்தவர்களாய்த் தம்மைக் கண்டு துயருறுகின்றனர். நடுத்தர வர்க்கம் ஏற்கனவே தாம் சிக்கியுள்ள மாயைகளில் மேலும் ஆழ்ந்து செல்வதின் மூலம் வரலாறு பற்றிய இந்த உண்மையை அறிந்து கொள்வதில்லை.

நிலத்தைப் பக்குவப்படுத்தி உழவுக் கருவிகளைப் பயன்படுத்தி, இன்னும் பலவற்றைச் செய்து உணவு முதலியவற்றை உற்பத்தி செய்பவன் உழவன், வேளாண்மைக்குத் தான்தான் காரணம் என்ற உண்மை வரலாற்றின் பழைய தடங்களில், இவனைப் பொருத்தவரை மறைத்துவிட்டது. நிலத்துக்கும் உழு கருவிக்கும் நவீன வேளாண்மை முதலியவை செய்யும் முதலீடும் - இவைதான் இன்று உணவு உற்பத்திக்கு காரணம். இன்றை உணவு உற்பத்தியில் உழவனின் பங்கு குறைவு. இம்மாதிரி மாயத் தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது. வங்கி முதலாளி வங்கியிலுள்ள பணத்திற்குத் தான்தான் கர்த்தா என்பது போல நினைத்துக் கொள்கிறான். வரலாற்றுக் காலம் முழுவதும் சேகரமான அறிவின் தொடர்ச்சிதான் இன்றைய நவீன விஞ்ஞானம் என்பதை மறந்த

விஞ்ஞானி, தனக்குள் தான் சேகரித்துக் கொண்ட அறிவுதான் உணவுப் பெருக்கத்திற்குக் காரணம் என நினைத்துக் கொள்கிறான். உழவுக்கருவி, வேளாண்மை பற்றிய அறிவு ஆகியவற்றினுள் தொண்மைக்கால வரலாற்றோடு தான் உறவு கொண்டிருப்பதை விவசாயி அறிந்து கொள்ளவில்லை. இவன் குத்தகைதாரன் அல்லது கூலி விவசாயி. கிடைப்பதை வைத்துத் துயரத்தோடு வாழ்வதுதான் விதி என நினைத்துக் கொள்கிறான். உணவு உற்பத்திச் செயலில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து அம்சங்களோடும் சமகால சமூகத்தின் விரிந்த பரப்பும், வரலாற்றுக் காலம் முழுவதும் திரண்டு வந்துள்ள அனுபவத் தொகுப்பும் உறவுபட்டுள்ளன என்ற உண்மை இன்று இதில் சம்பந்தப்பட்டவர்க்கும் தெரியவில்லை.

இதேபோலத்தான் தொழில் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள தொழிலாளியின் நிலையும் இருக்கிறது. தொழிற் சாலையில் தன்னைக் கொண்டு உற்பத்தியாகும் பொருளுக்குள் தன் உழைப்புத் திறன்தான் திரண்டுள்ளது என்ற முறையில்தான் இவனுக்குள் தொழிற் சங்கங்கள் அறிவு புகட்டியுள்ளன. இதனால் தான் தங்களுக்கு மட்டும் கூலி உயர்வு, போனஸ் என தொழிலாளிகள் குரல் எழுப்புகிறார்கள். இதற்கு மாறாக முதலாளி என்ன நினைக்கிறான்? தொழிற்சாலை உருவாக்கத்திற்குத் தன் மூலதனம் தான் ஆதாரம். ஆகவே உபரி மதிப்பு முழுவதும் தனக்குத்தான் சொந்தம். மூலதனத்திற்குள் பல்லாயிரம் தொழிலாளிகளும் சற்று அகலக் கண்ணை விரித்துப் பார்த்தால் பல லட்சம் விவசாயிகளும் இன்னும் ஆழ்ந்து பார்த்தால் ஒட்டு மொத்த சமூகமும், மேலும் பார்க்க முடியுமானால் வரலாற்றுக் காலம் முழுவதும் அவன் அறிவுக்குள் தட்டுப்படும். தொழிலாளி இப்படி பார்க்க முடியுமேயானால், விவசாயிகளின் நலத்தின் வழியே நலன் அமைந்திருப்பதைக் கண்டு கொள்ள முடியும். விவசாயிகளுக்குள் அப்பால் உள்ள பலவகைப்பட்ட கைவினைகர்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளதை அறிந்து அவர்களையும் தம்மோடு சேர்ந்து கொண்டு போராட முனைவான்.

இதேபோல ஒரு விஞ்ஞானி, ஓர் ஆசிரியர் ஆகியவர்களை முன்னிறுத்திச் சிந்திக்கலாம். ஒரு பத்தாண்டுக் காலம் தான் முயன்று சேகரித்த அறிவுத் திறனுக்குச் சமூகம் காணிக்கை செலுத்த வேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நெடுங்காலம் சமூகத்தில் சேர்ந்த அறிவின் ஒருவகைத் திரட்டலைத்தான் இவன் கொண்டுள்ளான் என்பதை இவன் அறிவதில்லை. அறிவு திரட்டல் என்பதைக் கூட

கரும்பு தின்ன கூலி என்பது போன்று ஒரு சுகமான செயல். அன்றியும், விரிவான அறிவுத் திரட்டலின் மூலம் சமூகத்ததையும் வரலாற்றுப் பரப்பையும் தனக்குள் கண்டு தன் ஆளுமை விரிவு என்று புதுவகையான இன்ப அனுபவத்தின் மூலம் தன்னைப் பற்றிய புதிய புரிதலைப் பெறுகிறான்.

இத்தகையை பார்வையை சமூகத்தின் பிற பகுதியினரை முன்னிறுத்தியும் நாம் தொடரலாம். இனி ஓர் அரசு அதிகாரியை முன் நிறுத்திப் பார்க்கலாம். ஒரு வட்ட ஆட்சியர் - தன் அதிகாரத்தினுள் தானே சிக்கிக் கொண்ட இவர், தனக்குக் கீழ் உள்ள அலுவலர்களைப் ப்றிறயும், தன்னிடம் உதவி கேட்டு வரும் பொது மக்களைப் பற்றியும் என்ன நினைக்கிறார். பலருடைய விதியைத் தீர்மாணிக்கும் அற்றல் தனக்கு இருப்பது போல அவர் நினைத்துக் கொள்ளலாம். அரசு இப்படித்தான் அவரை வார்த்து வைத்திருக்கிறது. உண்மை இப்படியல்ல, ஒட்டு மொத்தமான சமூகத்திற்கு தொண்டு செய்யும் ஊழியர் அவர்.

அரசு அதிகாரம் இந்த நோக்கத்தோடுதான் ஏற்பட்டதா? இப்படி ஏற்பட்டதாகத் தெரியவில்லை.பழம் சமூகத்தில் அரசன் என்பவன் அதிக அளவில் ஒரு கொள்ளைக்காரன், ஒரு சமூகத்திற்கு வெளியில் இருந்து உள்றே வந்தவன். இவனைப் பற்றி நிறையச் சொல்லலாம். இங்கு சொல்வதற்கு நேரமில்லை. ஆகவே சிலவற்றை மட்டும் கூறிச் செல்லலாம். வரலாற்றில் நெடுங்காலமாகவே அரசு அதிகாரம் நில உடைமையாளரோடும் முதலாளிகளோடும் சேர்ந்தே செயல் பட்டிருக்கிறது. மக்களுக்கு தம்மைப் பாதுகாவலராக, தன்னை அரசு நியமித்துக் கொள்கிறது. மக்களின் அனைத்து வகை வாழ்வியல் நடைமுறைகளையும் ஒழுங்குபடுத்தும் கடமையை, தான் மேற் கொண்டுள்ளதாக் கூறுகிறது. இப்படி பொது மக்களுக்கு நீதி யைக் கற்பிப்பதன் மூலம் சமூக நலத்திற்குத் தம்மை இன்றியமையாத தேவை ஆக்கிக் கொள்கிறது. இன்று வரை அரசுகள் பேசும் ஜனநாயகம் இப்படித்தான் தன்னை நிறுவிக் கொள்கிறது. உண்மையில் அரசு அதிகாரம், இதில் சம்பந்தபட்டுள்ள அனைத்து நபர்களையும் சமூகத்தின் முதல்தரக் குடிமக்கள் ஆக்கிக் கொள்கிறது. சமூகத்தின் உற்பத்தியில் முதன்மைப் பங்கை தான் எடுத்துக் கொள்கிறது. உழைப்பாளிகளை ஒடுக்கும் முறைக்கு உட்படுத்தி, அவர்கள் விளைச்சலின் இன்னொரு பெரும் பகுதியை நில உடைமையாளர்க்கும் முதலாளிகளுக்கும் கொண்டு சேர்க்கிறது. அந்நிய நாடுகளிலிருந்து தன் நாட்டைக்

காப்பதாகச் சொல்லி இராணுவத்தைப் பெருக்குகிறது. அரசு இருப்பதனாலேயே போர்கள் நடைபெறுகின்றன. முதலாளிகளின் தேவைகளுக்காக, அரசு பிற நாடுகளை அடக்குகிறது. போரின் போது சமூக உற்பத்தியின் செல்வத்திலும் பெரும் பகுதி நாசமாகிறது. இந்தச் சூழலில் அரசு தான் இருப்பிற்கு மேலும் அதிகமான நியாயம் கற்பிக்கிறது. மக்கள் மீது சுரண்டலையும், ஒடுக்கு முறையையும் அதிகரிக்கிறது. போர் ஆயுதக் குவிப்புக்காக விஞ்ஞானிகளை, தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்துகிறது. இவ்வாறு கூலிக்கு அமர்த்துவதன் மூலம் விஞ்ஞானியை. தொழிலாளியை சமூக உறவிலிருந்து துண்டிக்கிறது. இயற்கையின் கனிவளங்கள் இராணுவத் தேவைக்காக வீணாக்கப்படுகின்றன. போர்வெறி, தேசபக்தி எனக் கற்பிக்கப்படுகிறது.

இந்தக்கதை, இதிகாசம் போல விரிந்து செல்லக்கூடிய கதை. ஒரு வணிகன், வழக்குரைஞன், மருத்துவன், பாராளுமன்ற உறுப்பினர், ஓர் அமைச்சர் இப்படி பல பாத்திரங்கள் மூலம் சமூகத்தில் சுரண்டலும், ஆதிக்கமும் பெருகி வருகிறது என்று சொல்லலாம். ஒவ்வொருவரும், ஒட்டு மொத்தமான மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான சமூகப் பரப்பையும், வரலாற்றையும் தரம் பிரித்துக் கொள்கிற மாயைகள் மூலம் அழிப்பதைப் புரிந்து கொள்ள முடியும். உடைமைச் சமூகம் இப்படி ஒவ்வொரு சமூகப் பிரிவையும் அதற்கே உரிய மாயைக்குள் தள்ளுகிறது. ஒரு கவால் அதிகாரி தன்னால்தான் ஊரில் அமைதி காக்கப்படுவதை நினைத்துக் கொள்கிறான். ஓர் அமைச்சன், தான் இல்லாவிட்டால் சமூகம் இல்லை என நினைத்துக் கொள்கிறான். ஓர் ஏழை விவசாயி உழைப்பதும், இழப்பதும், துயரப்படுவதும், சாவதும் தன் விதி என நினைத்துக் கொள்கிறான். ஒரு திருடன் தான் திருடுவது குற்றமில்லை எனச் சொல்ல முடியும். இப்பொழுது இவையனைத்தையும் திரும்ப ஒருமுறை பார்த்துக் கொள்ளலாம். வரலாறு ஒவ்வொரு நாளும் உற்பத்தியாகிறது. மாயைகளும் சேர்ந்தே உற்பத்தியாகின்றன. அதிகார வர்க்கம் மக்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்க தொடர்ந்து மாயைகளைக் கற்பிக்கிறது. நடுத்தர வர்க்கம் மாயைகளுக்குள் வாழ்கிறது. உழைப்பாளிகள், ஏழைகளுக்குப் பல மாயைகள் கற்பிக்கப்படுகின்றன. திரைப்படங்கள், தொலைக்காட்சிகள் தொடர்ந்து பல மாயைகளை மக்களுக்குள் திணிக்கின்றன. இன்பம்தான் வாழ்வின் குறிக்கோள் என்று ஓயாமல் வற்புறுத்தப்படுகிறது. இதற்கான உணவு, உடை, பொழுதுபோக்குகள் பற்றி ஆயிரக்கணக்கான விளம்பரங்கள் வாழ்க்கை

வசதிகளை தொடர்ந்து அதிகரித்துக் கொள்ள வேண்டும் எனத் தூண்டுதல்கள் இப்படி ஒவ்வொரு நாளும் பரப்பப்படும் மாயைகளுக்குள் மக்கள் மாட்டிக் கொள்ளும் பொழுது, முதலாளி வர்க்கம் நிம்மதியாய், உற்பத்தியை மேலும் மேலும் பெருக்கி, கடைத் தெருக்களில் கொட்டுகிறது. மாடி வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனம், தொலைபேசி, அழகு சாதனப் பொருட்கள் இனிய உணவு வகைகள், மது வகைகள் - இப்படி வாழ்க்கை வசதிகள், வாழ்க்கைத் தேவைகள் உற்பத்தியாகின்றன. இவற்றின் மூலம் மக்கள் மலினபடுத்துப்படுகிறார்கள். அறிவு அழிகின்றனர். நுகர்வு வெறிக்கு உள்ளாகின்றனர். தம்மை இழக்கின்றனர். தங்களை அடிமையாக்கிக் கொள்ள முந்துகின்றனர். அடிமைத்தனம் சுகமெனக் கருதுகின்றனர். வணிக நிறுவனங்களுக்குள் தம்மை அடைத்துக் கொள்கின்றனர். தமக்கான வரலாற்றுப் பார்வையை இழந்து, தம்மைத் தனி நபர்களெனக் கருதுகின்றனர். வாழ்வதற்குத் தம்மை அனுமதிக்கிற அரசை, அதிகாரத்தை, கொள்ளைக்காரர்களைத் துதிக்கின்றனர். தேசம் பெரிதல்ல, மொழி பெரிதல்ல. தமக்கு வாழ்வே பெரிது என்கின்றனர். முதலாளியம் வெற்றி பெறுகிறது. ஏகாதிபத்தியம் தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது. இந்தக் கதைதான் ஒவ்வொரு நாளும் திரும்பத் திரும்ப மறு உற்பத்தியாகிறது. மக்களின் வரலாற்றை அழிப்பவர் முதலாளிகள். மக்களுக்குரிய உலகத்தைத் தமக்குரியதாகப் பறித்துக் கொண்டவர் முதலாளிகள். மக்களுக்குரிய படைப்புத் திறன், கலைத்திறன் ஆகியவற்றை அவர்களிடமிருந்து அழிக்க முனைபவர் முதலாளிகள், மக்கள் என்ற மாபெரும் ஆற்றலை வெட்டி, குறைத்து அவர்களை ஏழைகளாய், வறியவர்களாய், மடையர்களாய், கூலிகளாய், கோழைகளாய், போக்கிரிகளாய், வேசிகளாய், ஆணவமிக்கவர்களாய் மாற்றியவர் முதலாளிகள். சமூகத்தின் விளைபொருளை மக்களிடமிருந்து பிரித்து, தம் மாளிகைகளில், விருந்துக் கூடங்களில், கேளிக்கை விடுதிகளில் அடைத்து அனுபவிப்பவர்கள் முதலாளிகள். இப்படிச் செய்வதற்கான நியாயம் தங்களுக்கு உண்டென, நடுத்தர மக்களைச் சொல்ல வைத்தவர்கள் முதலாளிகள்.

நெடுங்கால வரலாற்றின் வழியேயும், ஒட்டு மொத்தமான உலக சமூகப் பரப்பிலிருந்தும் சேகரித்துக் கொண்ட பேராற்றல்களை, தம் வயிற்றுப் பிழைப்புக்காகவும் சிற்சில பதவிகள் பெருமைகளுக்காகவும், விஞ்ஞானிகள், அறிவாளிகள் எனத் தம்மைக் கருதிக் கொள்பவரை தமக்கு அடிமைகளாக்கிக் கொண்டவர்கள் முதலாளிகள். இங்கு

முதலாளிகள் என்ற சொல்லும் பொழுதெல்லாம், ஏகாதிபத்தியம், அரசு அதிகாரம் ஆகிய பலவற்றைச் சேர்த்தே சொல்லிக் கொள்ள வேண்டும்.

திரும்ப ஒரு முறை சொல்லலாம், முதலாளிகள், ஏகாதிபத்தியவாதிகள், அரசு அதிகாரம் ஆகியவற்றிலிருந்து மக்கள் சமூகம் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். விடுவித்துக் கொள்வதன் மூலம் தான் வரலாற்றை தமக்கென படைத்துக் கொள்ள முடியும். உலக அளவில் நடைபெறம் நெடுங்கால வரலாறு என்னும் நாடகத்தினுள் முதலாளிகளும்தான் தாமே படைத்துக் கொண்ட மாயைகளில் சிக்கியுள்ளனர் என்பது உண்மை. இந்த மாயைகள் அவர்களை முற்றாக விடுவித்துக் கொள்ளமுடியாது. உலகத்தையும் வரலாற்றையும் தமக்கென பெற முனைந்துள்ள மக்கள் கூட்டம் தான் இந்த முதலாளிகளை, அவர்களைப் பிடித்துள்ள மாயைகளிலிருந்து விடுவிக்கவும் முடியும். அதற்கு முன் தம்மை அடைத்துக் கொண்டிருக்கும் மாயைகளிலிரந்து மக்கள் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். இந்த விடுதலைப் பணி என்பது ஒரு போர்ச் செயல். இரத்தம் சிந்தித்தான் இந்த விடுதலையைத் தொடங்க வேண்டும்.

7. சுருக்கமாக :

இதுவரை முதலாளி, தனக்கென உலகத்தை, நாகரிகத்தை, கலாச்சாரத்தை, விஞ்ஞானத்தை, மெய்யியலை, ஒழுக்க நெறிகளைப் படைத்தான். இவனைப்ப போலவே ஏகாதிபத்தியவாதியும் தனக்கான உலகத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறான். இவர்கள் படைக்க விரும்பும் விஞ்ஞானம், கலாச்சாரம் மக்களுக்கானவை அல்ல. முதலாளி படைத்த விஞ்ஞானத்துள், கலாச்சாரத்துள் மக்களின் பங்கு இல்லாமலில்லை. மக்களைக் கொண்டுதான் அவன் தன் உலகத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறான். இந்த உலகம் திரிபுடையது. பொய்யானது. அநீதியானது. மாயைகளைக் கொண்டது. இந்த மாயைகளும் அநீதிகளும் மக்களைப் பாதித்துள்ளன. தம்மைப் பாதித்த மாயைகளிலிருந்து மக்கள் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். நடுத்தர வர்க்கத்தின் ஆதரவு இல்லாமல் முதலாளி இந்த உலகத்தைப் படைக்கவில்லை. முதலாளி படைத்த உலகில் நடுத்தர வர்க்கம் தன்னைப் பொருத்தவரை இழிவுக்குள்ளாக்கியுள்ளது. நடுத்தர வர்க்கம் தன் இழி நிலையை உணர்ந்து தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஆதரவாக உள்ள மக்களோடு சேர்ந்து கொள்ள வேண்டும்.

மக்கள் சமூகத்ததில் இன்று முன்னணியிலுள்ளவர்களாக தொழிலாளி வர்க்கம் தன்னைக் கருதிக் கொள்கிறது. தொழிலாளி வர்க்கம் தனக்கேயான வர்க்கம் அல்ல. உழவர்களை, கைவினைஞார்களை, தாழ்த்தப்பட்டவர்களை, ஆதிவாசிகளை, பெண்களைத் தனக்குள் வைத்துப் புரிந்து கொள்ள வேண்டும். உழைப்பில், பொருள் உற்பத்தியில், உலக ஆதிக்கத்தில் இவர்கள் அனைவரும் உறவு கொண்டுள்ளனர். இவர்கள்தான் புது நாகரீகம் படைக்க முடியும். புதிய கலாச்சாரம் படைக்க முடியும். முதலாளிகளிடமிருந்து மீட்டுக் கொள்கிற உலகை, அவ்வாறு மீட்டுக் கொள்கிறபோதே தமக்குரியதாக மாற்றியமைக்க வேண்டும். இடைக்காலம் முழுவதும் நேர்ந்த திரிபுகளைக் களைய வேண்டும். நில உடைமையாளர்க்குள்ளும் அரசு அதிரகாரத்திற்குள்ளும் முதலாளியத் திற்குள்ளும் தாம் விட்டு வைத்ததை, தாம் விட்டு வைத்த வரலாற்றை மீட்டுக் கொள்ள வேண்டும். வாழ்க்கை எளிமையானது, இயற்கையோடு கூடியது. வாழ்க்கை அழகானது. அனைவர்க்குமானது. இந்த வாழ்க்கையை மக்கள் வரலாறு மக்களுக்கானதல்ல, மக்கள் தமக்கான வரலாற்றைப் படைத்துக் கொள்ள வேண்டும்.

15

பொருள் முதல் வாதமும், மார்க்சிய மெய்யியலும்

மார்க்சிய வகைப்பட்ட பொருள் முதல்வாதம், அதிக அளவில் அறிவியல் கண்ணோட்டமாக இருக்கிறதே அன்றி, வாழ்வியல் கண்ணோட்டமாக இல்லை அல்லது புரிந்து கொள்ளப்படவில்லை. இதன் காரணமாகவே மார்க்சியத்தில் அரசியல் கண்ணோட்டம் தான் இலக்கியப் பார்வைக்குள் அழுத்தம் பெறுகிறது. அன்றியும் கட்சிப் பார்வைக்கு ஆதாரமாக இருக்கிறது.

எங்கல்ஸ் இவ்வாறு எழுதினார், "இயற்கை விஞ்ஞானம் முழு அளவில் வளர்ச்சி பெறும் பொழுது மெய்யியலுக்கு இடம் இல்லாமல் போகும்" இந்தக் கூற்று இன்னும் ஆழமாக, விரிவாக சிந்திக்கத் தகுந்தது.

இயற்கை விஞ்ஞானம் என்பதனுள் இயற்பியல், வேதியியல் ஆகியவற்றை உள்ளடக்கலாம். உயிரியலை இத்தோடு சேர்த்துக் கொள்ள இயலும். பொருள் என்பதனுள் திடப்பொருள், திரவப்பொருள், வாயுப்பொருள் மட்டுமல்லாமல் வேறு பல நுண்பொருள்களையும் உள்ளடக்கலாம். விண்மீன்கள் முதலியன குறித்த வானவில் ஆய்வும் இதற்குள் வந்துவிடும். தாவரங்கள், விலங்குகள், முதலிய உயிரினங்கள் குறித்த ஆய்வும் இதனுள் அடங்கும்.

புறச்சூழலுக்கு ஏற்றவாறு மனிதன் உள்பட எல்லா உயிரினங்களும் எவ்வாறு தம்மைத் தக அமைத்துக் கொள்கின்றன என்ற ஆய்வும் இதில் சேரும். விலங்கு முதலிய உயிரினங்களின் உடம்புக்குள் நடைபெறும் வேதியியல் செயல்பாடுகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இயற்கை விஞ்ஞானம் குரித்து எங்கல்ஸ் இங்கு குறிப்பிட்டாலும், அறிவியல் கண்ணோட்டத்தைத் தனக்குள் விரிவாகக் கொண்டிருக்கிற எத்தகைய ஆய்வையும் பொருள் முதல்வாத ஆய்வு என நாம் கருத முடியும். மானுடவியல்,சமூகவியல் ஆகிய ஆய்வுகள் இத்தகையவை.

குடும்பம், உடமை, அரசு, முதலியவை எவ்வாறு தோன்றி நிலை பெறுகின்றன என்ற ஆய்வு சமூகவியல் ஆய்வு. சாதி மதங்கள், சடங்குகள் முதலியவற்றின் தோற்றம் மற்றும் நிலைபேறு குறித்த ஆய்வுகளும் சமூகவியல் ஆய்வுகள், வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவுகள் இவற்றுக்கிடையிலான உறவுகள் குறித்த ஆய்வுகளும் இதனுள் அடங்கும். இதைப் போலவே கலை மற்றும் இலக்கியங்கள் தோன்றுவதற்கான - சமூக நிலவரங்கள் குறித்த ஆய்வுகளும் சமூக இயலினுள் அடங்கும். உளவியல் ஆய்வும், அறிவியல் கண்ணோட்டத்துடன் நடைபெற இயலும். மனநோய்கள் முதலியவற்றுக்குக் காரணமான குடும்பம் மற்றும் சமூகச் சூழல் குறித்த ஆய்வையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் செய்ய முடியும். இவை அனைத்துமே வரலாற்றுச் சூழல் பற்றிய பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்துள் அடங்கும்.

ஒவ்வொரு துறையிலும் நடைபெறும் அறிவியல் ஆய்வின் மூலம் திரட்டப்படும் பொது விதிகளை இயங்கியல் விதிகளுக்குள் அடக்கி இந்த இயங்கியலை மெய்யியல் என்று மார்க்சிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பொதுவிதிகளுக்குள் இயங்கியலைக் காண முடியும் என்பதை நாம் மறுப்பதிற்கில்லை. ஆனால் இயங்கியலை ஆய்வு நெறியென குறிப்பிடலாமேயன்றி மெய்யியல் எனக் கூற முடியாது. எங்கல்ஸ் கூறியபடி அறிவியல் ஆய்வுகளின் முடிவில் மெய்யியல் தனக்கான இடத்தை விட்டுக் கொடுத்துத்தான் இல்லாமல் போய்விட வேண்டும்.

பிரபஞ்சம் பற்றிய ஆய்வில் இன்னும் விடுபடாத புதிர்கள் நிறையவே உள்ளன. அறிவியல் என்று குறிப்பிடப்படும் எந்தத் துறையினுள் மேலும் மேலும் உண்மைகள் தேடி ஆய்வுகள்

நடைபெறுகின்றன. ஒவ்வொரு துறையும் தன்னைப் பற்றிய ஆய்வில் என்று முடிவு பெறும் என்பது குறித்து இப்பொழுது எதையும் சொல்ல முடியாது. துறை வகைகளும், துறைகளுக்கு இடையிலான ஆய்வும் தொடர்ந்து வளர்ச்சி பெறுகின்றன. உயிர்த் தொழில் நுட்பம், கணிணி குறித்த ஆய்வுகள் மிக அண்மைக் காலத்தில்தான் தொடங்கப் பெற்று உள்ளன. உடலியல் குறித்த ஆய்வில் டி.என்.ஏ. வரைபடம் தயாரிப்பது குறித்து நம்பிக்கையோடு அறிஞர்கள் பேசுகின்றனர். தாவர இனங்கள் முதலியவற்றை நாம் விரும்பும் அளவுக்கு மாற்றி அமைக்க முடியும் என்றும் கூறுகின்றனர். புதிய உயிரினங்களை இனிப் படைக்க முடியும். மனிதர்களுக்கு வரக்கூடிய நோய்களைக் கருவின் உள்ளிருந்தே கண்டறிந்து நீக்கமுடியும். டாலி ஆட்டைப் போல மனிதர்களையும் படைக்க முடியும்.

எவ்வளவுதான் இதுவரை ஆய்வுகள் நடைபெற்ற போதிலும், ஆய்வுகள் என்றாவது நிறைவு பெறும் என்று தோன்றவில்லை. ஆகவே, எல்லாத் துறைகளினுள்ளும் மர்மங்களும், புதிர்களும் தொடர்ந்து பெருகுகின்றன. உளவியல் குறித்து இன்னும் எவ்வளவோ தொலைவு செல்ல வேண்டியிருக்கிறது. புதிர்களும் மர்மங்களும், குழப்பங்களும் நிலவும் காலம் வரையிலும் தொடர்ந்து பல்வேறு கண்ணோட்டங்களுக்கு / கருத்தியல்களுக்கு இடம் இருந்தே தீரும். ஒரு நிகழ்வு குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களும், கருத்தியல்களும் நிலவும் காலம் வரையிலும் அறிவியல் ஆய்வு நிறைவு பெற்றதாகச் சொல்ல முடியாது. இதன் காரணமாகப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தினுள்ளும் நிறைவு சாத்தியமில்லை. இங்கெல்லாம் கருத்து முதல்வாதமும், தன்னை எத்தனையோ வழிகளில் உயிர்ப்பித்துக் கொள்ளவே செய்யும். இதன் காரணமாக நாம் இங்கு ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும். பொருள் முதல்வாதக் கண்ணோட்டம்தான் எப்பொழுதும் வெற்றிபெறும் என்று சொல்லிவிட இயலாது.

அறிவியல் ஆய்வுகள் எனப்படுபவை பொதுவாகப் புறநிலை சார்ந்தவை. அகநிலைச் சார்புக்கு அறிவியல் ஆய்வில் இடம் இல்லை என்பது ஒரு பொதுவிதி. கல், மண், காற்று, கதிரவன் முதலிய ஆய்வுகளுக்கு இந்தப் பொது உண்மை பொருந்துகிறது. உயிரினங்களைப் பற்றிய ஆய்வுக்கும் கூட இந்தப் பொது உண்மை பொருந்தலாம். சூழலுக்கு எதிர்வினைதரும் முறையில் எந்த ஒரு உயிர் இனமும் ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளின் எதிர்வினை தரமுடியும். மனிதன் என்று வருகிறபோது, மனிதன் தரும் எதிர்வினை குறித்தும்

எப்பொழுதும் உறுதியாகச் சொல்ல முடியாது. விலங்குகள் வாழும் சூழல் என்பதைக் காட்டிலும் மனிதன் வாழ்கிற சூழல் என்பது மிக, மிக விரிவானது. விலங்குகளைக் காட்டிலும் மனிதனின் சமூக ஆக்கம், விரிவானது. மனிதன் தான் வர்க்கங்கள் என்றும், மதங்கள் என்றும், சாதிகள் என்றும் பேச முடியும். மனிதனுக்குத்தான் வரலாறு என்பது இருக்கிறது. மொழி என்பதனுள் எத்தனையோ விந்தைகளை மனிதன் உள்ளடக்கி வைத்திருக்கிறான். மனிதன் படைத்த கலை, இலக்கியங்கள் எத்தனையோ நுட்பங்களுடன் இயங்குகின்றன. மனிதனுக்கு மட்டும்தான் தன் உணர்வு உண்டு. பிரபஞ்சப் பெருவெளி குறித்தும் வரலாற்றின் விரிவு குறித்தும் மனிதன் மட்டுமே உணர்வு கொள்ள முடியும். மனிதனுக்கு மட்டும்தான் விலங்குகளைக் காட்டிலும் பல அடுக்கிலான மனம் உண்டு. மனிதன் ஆயிரம் தொழில் செய்யக் கூடியவன். நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் வழியே வாழக் கூடியவன். எத்தனையோ பேருணர்வு இவனுக்குள் பொங்கி எழுகின்றன. இவன் எவ்வளவோ படைக்கிறான். தனக்கேற்றதாக உலகத்தைப் படைத்துக் கொள்கிறவன் மனிதன். இவனுக்குள் தன்னியக்கம் என ஒன்று இருக்கிறது. இவனுக்கு மட்டுமே சுதந்திர உணர்வுண்டு. பிரபஞ்ச இயக்கம் இவனுக்குள் எப்படியெல்லாம் இயங்குகிறது என்பதைத் தீர்மானமாகக் கூறிவிட இயலாது. கதிரவனும் விண்மீன்களும் பிற கிரகங்களும் இவனுக்குள் ஏற்படுத்தும் பதிவுகள் குறித்து விரிவான ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

இயற்கை விஞ்ஞானங்கள் முன்வைக்கும் ஆய்வு முறைகள் சமூகவியல், வரலாறு, முதலியவை பற்றிய ஆய்வுக்குப் போதுமானதாக இருக்க முடியாது. உளவியல் ஆய்வு முதலியற்றை மேற்கொள்ளும் பொழுது மேலும் புதிய ஆய்வு முறைகள் தேவைப்படுகின்றன. மனிதனுக்கு உள் இயங்கும் கலை உணர்வு முதலிய ஆய்வுகள் இன்னும் நுட்பமானவை. நாளை வருவதைச் சில மனிதர்கள் முன்கூட்டியே உணர்கின்றனர். குறைந்தளவு மெய்ம்மைகளிலிருந்து புதிய உண்மைகளுக்குத் தாவுகிறது மனித மனம். இசை என்னும் பிரவாகம் மனிதனுக்குத்தான் சாத்தியம். வறுமை நிலையில் திருடுவது, பொய் சொல்வது முதலியவற்றுக்கான நியாயங்களை மறுத்து எல்லோருக் குமான வாழ்வு குறித்து மனிதன் சிந்திக்கிறான். தனது இன்பங்களைத் துறக்கிறான். பிறர் நலத்திற்காகத் தன் உயிரை இழக்கவும் துணிகின்றான். இப்படி எல்லாம் மனிதன் இயங்குவதை வரலாற்றுக் காலம் முழுவதும் நாம் பார்க்கிறோம். காமம் என்பது உடலியல் தூண்டுதல் என்ற

போதிலும் இதனைக் காதலாக மாற்றிக் கொள்பவன் மனிதன். முரண்பட்ட பலவற்றையும் ஒரு தொகுப்பினுள் இணைத்துக் காண்பவன் மனிதன். போட்டி,பொறாமை வம்பு வழக்குகள் முதலியவை புறச்சூழலிருந்து வரும் தாக்கங்கள் என்ற போதிலும் இவற்றிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியும் என்று மெய்ப்பிப்பவன் மனிதன். அறம் என்ற பேருணர்வில் தன்னை இவன் வடிவமைத்துக் கொள்ளவும் செய்கிறான். இவை எல்லாம் இவன் தனக்குள் செய்த கொள்கிற சுய இயக்கம். வரலாற்றுக்குள்ளிருந்து தன்னை இவன் எழுப்பிக் கொள்கிறான். எதிர்நிலைகளிலிருந்து பாடம் பெறுபவன் இவன்.

மனிதனைக் குறித்த இத்தகைய சித்தரிப்பு நமக்கு எதை மெய்ப்பிக்கிறது? இத்தகைய மனிதனை அறிவியல் ஆய்விலிருந்து விலக்க முடியாது. சமூகவியல் ஆய்வுகூட இத்தகைய மனிதனைக் கண்டறிந்து சொல்ல முடியாது.

மனிதனுக்கு உணவு தேவை. உடை தேவை, இருப்பிடம் தேவை. எந்தளவுக்குத் தேவை, எந்த வகையில் தேவை. என்பதைப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் விரித்துரைக்க முடியும். இவற்றையெல்லாம் பெறுவதற்கு மனிதன் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பொருள் முதல் கண்ணோட்டம் சித்தரிக்க முடியும். போராட்டங்கள் தேவை. அரசுக்கெதிராக, முதலாளியத்துக்கு எதிராகப் போராடித்தான் மனிதன் தனக்கான உரிமைகளைப் பெறமுடியும் என்று பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் கூறமுடியும். மனிதனுக்கு ஏற்படும் மன நோய்களுக்கு ஆன சமூகச் சூழல் குறித்துப் பொருள் முதல்வாதம் கூறும். காமத்திற்குத் தீர்வு குறித்தும் பொருள் முதல் வாதம் சொல்ல முடியும்.கலை, இலக்கியங்கள் எதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் பொருள் முதல்வாதம் சொல்லலாம். வறுமை நிலையில் ஒருவன் திருடுகிறான்; பொய் சொல்லுகிறான் என்பதற்கான நியாயங்களைப் பொருள் முதல் வாதம் எடுத்துரைக்கும். இவ்வாறெல்லாம் புற நிலை ஆய்வுக்கு அழுத்தம் தரும் பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் மனிதரின் அகத்திற்குள் உரிமையோடு, உறுதியோடு, நம்பிக்கையோடு செல்ல முடியவதில்லை. புறத்தை விளக்குவதோடு உலகத்தை மாற்றுவது குறித்துப் பொருள் முதல்வாதம் உரத்துப்பேசும்.அகத்தினுள் நடைபெறும் எத்தனையோ அற்புதங் களைப் பொருள் முதல்வாதம் மறுக்கும் அல்லது குறைத்துப் பேசும். வள்ளலாரையோ, சித்தரையோ பொருள் முதல்வாதம் கண்டு

கொள்ளாது. தற்கொலை செய்து கொள்வது தேவை இல்லை என்றும் பொருள் முதல்வாதம் அதற்குள் ஆழ்ந்து செல்ல முடியும். வாழ்க்கைக்கு வசதிகள் தேவை என்ற வாதம் எளிய வாழ்க்கையை விளங்கிக் கொள்ளாது. அன்பையோ, அறத்தையோ பொருள் முதல் வாதம் முழுமையாகப் புரிந்து கொள்வதில்லை. ஒரு கலைஞனுக்குள் நிகழும் படைப்பியக்கம் இயக்கம் குறித்து பொருள் முதல்வாதத்திற்கு அதிகம் தெரியாது. தாய்மை, குழந்தமை குறித்துப் பொருள் முதல்வாதம் எதுவும் சொல்வதில்லை. இயற்கைக்குள் மனிதன் தான் கரைந்து விடுவது குறித்துப் பொருள் முதல்வாதத்திற்கு எதுவும் தெரியாது. தனக்குள் இறைவனைக் காணும் ஒரு பக்தனின் மனநிலை பொருள் முதல் வாதத்திற்குத் தெரியாது. அலோபதியைப் புரிந்து கொள்ளும் பொருள் முதல்வாதம் சித்தமருத்துவத்தைப் புரிந்து கொள்ளாது. ஆன்மா என்றோ, ஆன்மீகம் என்றோ ஒருவர் பேசுவதைப் பொருள் முதல்வாதம் ஏற்காது. இன்னும் இவைபோல ஆயிரம் விவரங்களை நாம் அடுக்கிச் சொல்லலாம்.

இவை எல்லாம் ஏன் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் அகப்படுவது இல்லை என்று முதன்மையான காரணம் இதற்கு மெய்யியல் பார்வை இல்லை என்பதுதான். புறத்திற்கு அழுத்தம் தரும் பொருள் முதல்வாதம், அகத்திற்கும் அழுத்தம் தந்து பார்ப்பதில்லை. நான் யார் என்ற கேள்வி மதவாதிகளின் கேள்வி என்று பொருள்வாதம் கருதுமே ஒழிய இதற்கு மார்க்சிய முறையிலான விடை தேடுவதில் பொருள் முதல்வாதம் ஆர்வம் கொள்வதில்லை. நவீன ஓவியம் என்பது குறித்துப் பொருள் முதல் வாதம் புரிந்து கொள்வதில்லை. இன்னொரு வரின் கருத்தியலுக்குள்ளும் அதற்கான காரணம் இருக்க முடியும் என்று இவன் நம்புவதில்லை. தனக்குள் இன்னொருவனை அனுமதிப்பதில்லை.

வாழ்வின் இயக்கத்தைப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்திற்குள் அடைத்துவிட இயலாது. வாழ்வின் இயக்கம் ஆழமானது. விரிவானது. வரலாற்றையோ, வாழ்வையோ இன்னும் தேவையான அளவுக்குக் கூட விளக்க முடியாத நிலையில் பல்வேறு கருத்தியல்களுக்கு இங்கு இடம் உண்டு என்பதைப் பொருள் முதல்வாதம் ஏற்க வேண்டும். அவற்றோடு உறவு கொண்டு உரையாட வேண்டும். எந்த ஒரு அறிவியலுக்குள்ளும் முற்றான அறிவு சேகரம் ஆவதில்லை. எந்த ஒரு பேருண்மையும் பொய்மையின் கூறுகளை உள்ளடக்கியே உள்ளன. எல்லாமே வரலாற்றுச் சூழலுக்குள்தான் இருக்கின்றன. இயங்குகின்றன. வரலாற்றுச் சூழல் முழுவதையும் எந்த ஒரு கருத்தியலும் வசப்படுத்திக் கொள்வதில்லை. ஒவ்வொன்றிலும் தனக்குரிய பாதையில் பணயம் செய்கின்றன. வரலாறு குறித்தும்,

வாழ்வியல் குறித்தும் மேலும் மேலும் உண்மைகள் கண்டறியப் படலாம். பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் கொண்டவன் தான் உண்மையாக வாழ்கிறான் என்று சொல்ல முடிவதில்லை. எந்த ஒரு மனிதனும் வாழ்வைச் சந்தித்தபடியே இருக்கிறான். துயரங்களும், சுமைகளும் வாழ்வியல் அனுபவங்கள், அடிப்பதும், அடிபடுவதும் அனுபவங்கள். வறுமையும் கூட ஒரு அனுபவம்தான். திருடுவதையும் ஒரு அனுபவமாகக் கொள்ள முடியும். என்னை நானே எவ்வளவு புரிந்து கொண்டேன் என்று சொல்வது சாத்தியமில்லை. என்னைத் தவிர இன்னொருவரை எவ்வளவு புரிந்து கொள்ள முடியும் என்பதும் கேள்வி. இப்படியே தான் வாழ்வு பற்றி நூறு திசைகளில் தேடிச் செல்ல வேண்டும். எனக்கு அகப்பட்டது தான் வாழ்க்கை என்றோ உலகம் என்றோ சொல்ல முடியாது. ஒன்றை இன்னொன்றுக்குப் பதிலாக இடம் மாற்றிக் கொள்ள இயலாது. சுரண்டல் இல்லாமல் எனக்கு வாழ்வில்லை. எனக்குள்ளும் எத்தனையோ ஒடுக்கு முறைக்கு இடம் கொடுத்துள்ளேன். எல்லாவற்றிலிருந்தும் என்னை விடுவித்துக் கொள்ள இயலவில்லை. போராடத்தான் செய்கிறேன். வெற்றியும், தோல்வியும் மாறி, மாறி வருகின்றன.

சிறு துளிக்குள் கடலைக் காண்கிறேன். எனக்குள் எத்தனையோ கனவுகள், காட்சிகள், இவை எல்லாம் பொருள் முதல்வாதத்திற்குள் அடங்குவதில்லை. ஆகவே ஒவ்வொரு கருத்தியலையும் கருத்து முதல்வாதம் என்று சொல்லி நம்மால் இகழ்ந்து விட முடியாது. அதற்குள் இன்னும் உயிரியக்கம் இருக்கிறது. இப்படி எல்லாம் பார்ப்பது மெய்யியல். பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தைக் கடந்து இப்படி மெய்யியல் இயங்க முடியும். மார்க்சியம் மனிதனை இப்படி விரிவாகப் பார்க்க முடியும். மெய்யியல் என்பது எல்லாவற்றையும் அதன் புறத்திலிருந்து மட்டுமல்லாமல் அதன் உள்ளிருந்தும் பார்க்கக் கூடியது. நேசம் மிகுந்த மனிதன் எல்லாவற்றினது உள்ளியக்கத்திலும் கவனம் கொள்வான். ஒரு குற்றவாளியை, ஒரு துறவியை, ஒரு முதலாளியை அவனுக்குள்ளிருந்து பார்க்கத்தான் வேண்டும். அப்புறம் அவனுக்காகவும் சேர்ந்து; அவனோடும் சேர்ந்து உலகத்தை மாற்ற வேண்டும். நட்பு முரணுக்கு மார்க்சியம் அழுத்தம் தரவேண்டும். பகை முரண்பாட்டிற்குள்ளேயும் தன்னை முடக்கிக் கொள்ள முடியாது. மார்க்சியத்திற்கு வானமும் வேண்டும்; பூமியும் வேண்டும்.

பெரியாரியம். மார்க்சியம், பெண்ணியம், தமிழியம், என்பனவற்றை இடைவிடாது வற்புறுத்தும் ஞானியின் கருத்துலகம் மிக விரிவானது. மனிதவிடுதலையை மையமாகக் கொண்ட ஞானியின் படைப்புகள் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ச் சிந்தனை உலகில் தன் முத்திரையைப் பதித்து வருகிறது.

தமிழகம் தழுவிய படைப்பாளிகள், சிந்தனையாளர்கள். திறனாய்வாளர் ஆகியவர்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் தமிழ்ப்பணி ஆற்றுவதில் தளர்ச்சியில்லாமல் செயல்பட்டு வருகிறார். அரசாள்பவரும் மாளிகை வாசிகளும் தமிழை மாற்றான் தாய் மனப்பான்மையோடு ஒதுக்கிவரும் இன்றைய நிலையில், ஞானி அவர்கள் போன்ற ஒரு சிலர் தமிழுக்காக உரத்த குரல் எழுப்பும் உள்ளங்களினால் தான் தமிழ் இன்றும் வாடாமல் புது மலர்ச்சி பெற்று வருகிறது என்பதில் அய்யமில்லை.

அபுதாபி தமிழ்ச் சங்கத்தின் முதல் வெளியீடாக மேலாண்மை பொன்னுசாமி அவர்களின் ‘மானாவாரிப்பூ’ சிறுகதைத் தொகுப்பு நல்ல வரவேற்பைப் பெற்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் ஞானி அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு அபுதாபி தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது வெளியீடு. கடல் கடந்து வந்து தமிழ்த்தாயைப் பிரிந்து ஏங்கிக் கிடக்கின்ற இலக்கிய அன்பர்களுக்கு இந்தக் கட்டுரைத் தொகுப்பு பாலைவனச் சோலையாய், சிந்தனைச் சுரங்கமாய் வாய்த்திருக்கிறது.